தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 28.

# சரபேந்திரர் வைத்ய முறைகள்.

## (சிரோரோக சிகிச்சை)

7 OCT 1974

Tested prescriptions
of
## RAJA SERFOJI
## E. N. & T.

TNSDA
07520

Madras Government Oriental Series XXXVII

- இரண்டாம் பதிப்பு -

1958

# Madras Government Oriental Series.

7 OCT 1974

Published under the authority
of The Madras Government.

(SECOND EDITION)

*General Editor*:

T. CHANDRASEKAHRAN, M. A., L. T.,
CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
MADRAS.

XXXVII

# சரபேந்திர வைத்ய முறைகள்

# (சிரோரோக சிகிச்சை)

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 28.

# சரபேந்திர வைத்ய முறைகள்

# (சிரோரோக சிகிச்சை)

★

[ இரண்டாம் பதிப்பு ]

7 OCT 1974

★

பதிப்பாசிரியர்கள் :

ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி B. A.,

ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதி மஹால்.

Dr. S. வெங்கடராஜன் L. I. M. (Regd.)

ஆயுர்வேத பண்டிதர், ஸரஸ்வதி மஹால்.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவக் காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

மகாலிங்கம் பவர் பிரஸ், தஞ்சை.

விலை ரூபா. 3—0—0.

1958

~~7520~~
7520

7 OCT 1974

# PREFACE.

The present publication is the fifth in the series of 18 books containing the tested recipes of Serfoji Rajah, known as "Sarabendra Vaidya Muraigal". How these recipes were chosen as a result of long and patient research by direct administration to patients in the hospital attached to the medical institute of Serfoji called "Dhanvantari Mahal", with the help and under the supervision of Indian and European Doctors, is so well-known to the public, that it is unnecessary to dwell on that aspect at any length.

The recipes contained in this book relate to the organs in the head, i. e., above the neck. They cover in fact, all the diseases of the E. N. & T. It is worthy of note that the Ayurvedic system of medicine has in its eightfold division of the medical science set apart one division called "URDHVANGA" for diseases of organs above the neck.

Charaka, the most ancient and authoritative exponent of nonsurgical medicine has devoted a separate chapter for diseases pertaining to the three "*Marmas*" or life-centres, namely, the head, the heart and the bladder, for the reason that they require special skill in treatment.

"The diseases of the ear, nose and throat are specially within the province of SALAKYA TANTRA

(surgery involving the use of the probe)", says CHARAKA, "and it will be trespassing on a province not one's own if I were to deal with the subject at full length". But the numerous recipes found in this book for practically all complaints, selected after actual test, provide many alternative cures to avoid surgery.

It is hoped that the recipes in this book will be found as unfailingly effective as those in the prior publications of this series have been reported to be. The rest of the series are also being edited and will soon be issued.

The editing has been done by the same set of editors who have already won the appreciation of the public by their work in the prior publications of this series, and they have bestowed the same care on this work as on the previous ones. Our thanks are due to them for their good service.

We are grateful to the Government of Madras for their liberal grants that have enabled us to publish this and other valuable manuscripts of our library.

Saraswathi Mahal,
Tanjore,
1—1—1958.

**S. Gopalan,**
Honorary Secretary.

7 OCT 1974

# GENERAL INTRODUCTION

## TO THE

# Madras Government Oriental Series.

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important manuscript libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10 Education, dated 4–4–1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are members of the Committee:

1. Sri T. M. Narayanaswami Pillai, M. A., B. L.,
2. „ R. P. Sethu Pillai, B. A., B. L.,
3. „ C. M. Ramachandra Chettiar, B. A., B. L.,
4. „ R. Krishnamoorthy, (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M. A., PH. D.,
6. Sri M. Ramanuja Rao Naidu, M. A., L. T.,
7. „ V. Prabhakara Sastri,
8. „ N. Venkata Rao, M. A.,
9. „ H. Sesha Ayyangar,
10. „ Masthi Venkatesa Ayyangar, M. A.,
11. „ M. Mariappa Bhat, M. A., L. T.,
12. Dr. C. Achyuta Menon, B. A., PH. D.,
13. „ C. Kunhan Raja, M. A., D. PHIL.,
14. „ A. Sankaran, M. A., PH. D., L. T.,
15. „ Sri P. S. Rama Sastri,
16. „ S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq. M. A., D. Phil. (Oxon),
18. Afzul-ul-Ulma Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. „ S. Gopalan, B. A., B. L.,
21. „ T. Chandrasekharan, M. A., L. T.,

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Marathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G. O. No. Mis. 2745 Education, dated 31—8—1949 and they decided to call these publications as the "**Madras Government Oriental Series**" and appointed the Curator, Government

Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.

The following manuscripts have been taken up for publication during the current year :

# "A" From the Government Oriental Manuscripts Library, Madras.

## TAMIL.

1. Kappal Sattiram
2. Anubhava Vaidya Murai
3. Attanakolahalam
4. Upadesa Kandam
5. Colan Purva Pattayam
6. Konga Desa Rajakkal
7. Sivajnana Dipam
8. Sadasiva Rupam, with commentary.

## TELUGU.

1. Sangitaratnakaramu
2. Aushadha Yogamulu
3. Vaidya Nighantuvu
4. Dhanurvidya Vilasamu
5. Yoga Darsana Vishayamu
6. Khadga Lakshana Siromani.

## SANSKRIT.

1. Vishanarayaniyam
2. Bhargava Nadika

3. Hariharacaturangam
4. Brahmasutravrtti—Mitaksara
5. Nyayasiddhanta Thattvamirtam.

## MALAYALAM.

1. Garbha Cikitsa
2. a. Vastulakshanam
   b. Silpasastram
   c. Silpavishayam
3. Mahasaram
4. Kanakkusaram
5. Kriyakramam

## KANNADA.

1. Lokopakara
2. Rattamata
3. Asvasastram
4. a. Aushadhagalu
   b. Vaidyavishaya
5. Sangitaratnakara
6. Supasastra.

## ISLAMIC LANGUAGES.

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat.

# "B" From the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore.

## TAMIL.

1. Sarabhendravaidya Murai (Diabetes)
2. Do (E. N. & T.)
3. Konkanarsarakku Vaippu
4. Tiruccirrambalakovaiyar with Padavurai
5. Sarabendra Vaidya Murai— (Anæmia & Jaundice)
6. Talasamudram
7. Bharatam
8. a. Pandikeli Vilasa Natakam
   b. Pururava Cakravarthi Natakam
   c. Madana Sundara Vilasa Natakam
9. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore
10. Ramaiyan Ammanai
11. Sarabhendra Vaidya Murai — (Asthma, Cough and other lung diseases)

## TELUGU

1. Kamandakanitisaramu
2. Taladasapranapradipika
3. Raghunatha Nayakabhyudayamu
4. Rajagopala Vilasamu
5. Ramayanamu by Katta Varadaraju

## MAHRATHI.

1. Natyasastrasangraha
2. a. Folk Songs

b. Dora Dharun Veni Paddhati
c. Asvasa Catula Dumani
3. Pratapasimhendra Tirthavali
4. Sarabhendra Tirthavali
b. Lavani
5. Devendra Kuravanji
6. Bhakta Vilasa
7. Sloka Baddha Ramayana

## SANSKRIT.

1. Asvasastra with Tricolour Illustrations
2. Rajamruganka
3. Ananda Kandam
4. Ayurvedamahodadhi
5. Gita Govinda Abhinaya
6. a. Colacampu
b. Sahendra Vilasam
7. Dharmakutam-Sundara Kanda
8. Jatakasara
9. Vishnutattvanirnaya Vyakhya
10. Sangita Darpanam
11. Bijapallavam

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brakets and correct

readings have been suggested in square brakets. When different readings are found, they have been given in the foot notes except in the case of a few books, in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in Selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

MADRAS, 1951.

T. CHANDRASEKHARAN,
*General Editor.*

# பொருளடக்கம்.

பக்கம்.


**முகவுரை.** [i–xxxii]

சிரோரோகங்கள் எவை ... [i]

காது நோய்களின் காரணங்களும், குறி குணங்களும் ... [ii]

நாசி ரோகங்களின் காரணங்களும், குறி குணங்களும், வகைகளும் ... [viii]

வாய் ரோகங்களின் குறிகள் ... [xiii]

" " காரணங்கள் ... "

உதடுகளின் ரோகங்கள் ... "

கன்னத்திலேற்படும் ரோக வகைகள் ... [xv]

பற்களின் ரோக வகைகள் ... "

ஈறைப்பற்றிய ரோகங்கள் ... [xvii]

நாக்கு வியாதிகளைப்பற்றிய குறி குணங்கள் ... [xix]

தாடையைப்பற்றிய நோயின் குறிகள் ... [xx]

தொண்டை ரோகங்கள் ... [xxii]

வாய்ரோகங்களின், வகைகளும் குறிகுணங்களும் ... [xxvi]

சிரோரோகங்களின் காரணங்களும், வகைகளும் குறிகுணங்களும் ... [xxviii]

கபாலத்தைப்பற்றிய ரோக வகைகள் ... [xxxi]

சரபேந்திர வைத்திய முறைகளின் அட்டவணை ... [xxxiii]

**சரபேந்திர வைத்திய சிரோரோக சிகிச்சை முறைகள் நெ. 1—266.** ... 1—240

**மருந்து முறைகளின் அட்டவணை.** ... 241—256

பிழை திருத்தம் ... 257

# சரபேந்திரர் வைத்திய முறைகள்
## (சிரோரோக சிகித்ஸை)

## முகவுரை.

நமது சரீரத்தில் உள்ள அங்கங்களில் மிகவும் முக்கிய மானது தலையேயாகும். ஐம்பொறிகளில் முக்கியமான கண்கள், காதுகள், நாக்கு, மூக்கு இந்நான்கும் தலையிலேயே இருக்கின்றன. மேலும் மனிதனையே தாங்கச்செய்யும் மூளை யும் அதற்குள்ளே பாதுகாக்கப்பட்டிருக்கிறது. "மரத்துக்கு வேர் ஆதாரமானதுபோல் மனிதனுக்குத் தலையே ஆதாரமானது. மனிதனை, வேர் மேலும் கிளைகள் கீழுமுள்ள ஓர் மரத்திற்கு ஒப்பிடலாம் என்று மகரிஷிகள் சொல்லி யிருக்கிறார்கள்[1]. ஆகவே, வேரை நாசம் செய்யும் ரோகங் களைச் சீக்கிரமே பரிஹரிக்க வேண்டும். மேலும் எல்லா இந்திரியங்களும், ப்ராணனும் சிரஸிலேயே வைக்கப்பட்டி ருப்பதனால், அந்த அங்கத்தை மிகச் சிரத்தையுடன் பாதுகாக்கவேண்டும்" என்றும் வாக்படர் கூறியிருக்கிறார்.

"சிரோரோகங்கள்" என்ற சொல் தனிப்பட்ட சிரோ ரோகங்களையன்றி, மூக்குநோய், வாய்நோய்கள், உதடு

1. தேகத்தையே நிலைநிறுத்தச் செய்ய ஆதாரமான மூளையை இவ் விடத்தில் வேராகக்கொள்ளவேண்டும். வேரிலிருந்து கிளைகள், இலை கள் முதலியவை மேலே கிளம்புகின்றன. ஆனால் தேகமாகிய மரத் திலோ மூளையான வேரிலிருந்து சாகைகள் (கைகால்கள்) மத்யபாகம் முதலான உறுப்புகள் கீழ்நோக்கியே செல்லுகின்றன. மேலும், தேகத்தின் பல பாகங்களிலும் உள்ள நரம்புகள் மூளையுடனே சம்பந் தப்பட்டுள்ளன. ஆகவே தேகத்தைத் தலைகீழாக உள்ள ஒரு மரத் திற்கு உபமானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அஷ்டாங்க ஹ்ருதயம்—உத்தரஸ்தானம், 24-வது அத்யாயம், சுலோ. 58, 59.

பற்களின் நோய்கள், காது நோய்கள், தொண்டையி லேற்படும் நோய்கள் முதலானவைகளையும் குறிக்கின்றன. அவைகளின் காரணங்களையும், குறிக்குணங்களையும், விளக்கிக் கூறுவோம்.

# காதுநோய்களின் காரணங்களும், குறி குணங்களும்.

**கர்ணசூலை (பொது)**

அடிக்கடி மூக்கிலிருந்து நீர் விழுதல், தண்ணீரில் வெகு நேரம் விளையாடுதல், காதுகளைக் காரணமின்றிச்சொரிந்து கொள்ளல், அதிகமான சப்தத்தைக்கேட்டல் அல்லது சப்தத் தையே கேட்காமலிருத்தல், முதலான காரணங்களினால் பிரகோபமடைந்த வாயு காதுகளின் சிரைகளை (இரத்தம் முதலியன செல்லும் குழாய்களை) அடைந்து, காது துவாரங் களிலும், உட்புறக்காதிலும் குத்துவலியோடு கூடிய கர்ண சூலை ரோகங்களை உண்டாக்குகிறது :—

**1. வாத கர்ண சூலை ரோகம் :—**

ஒருத்தலைவலி, குளிர்ச்சியில் விருப்பமின்மை, (உஷ்ண மான திரவபதார்த்தங்களைக் காதுகளில் விட ஹிதமாக இருக்கும்) முதலியவைகளுடன் காதுகளிலிருந்து நீர் கொஞ்சமாகக் கசியும். நாளடைவில் காதுகள் அழுன்று சிழ் வெளிப்படும். சில சமயங்களில் சப்தத்தைக் கேட்க இயலாது. மேலும், எறும்புகள் ஊறுவது போன்ற பிரமையும் உண்டாகும்.

**2. பித்தகர்ண சூலை ரோகம் :—**

காதுகளில் வலி, எரிச்சல், காதுப்பக்கங்களில் குளிர்ச்சி யான திரவங்களையோ எண்ணெய் வகைகளையோ ஊற்றிக்

கொள்ளுவதில் விருப்பம், காதுப்பக்கங்களில் வீக்கம், ஜ்வரம் இவைகள் உண்டாகும். வெகு எளிதில் பக்குவமாகி மஞ்சள் நிறமான திரவம் கசியும். அத்திரவம் எந்தந்த இடங்களில் படுகிறதோ அந்தந்த இடங்களில் புண்களுண்டாகும்.

### 3. கப கர்ண சூலே ரோகம்.

தலே, தாடை, கழுத்து முதலான இடங்களில் பார உணர்ச்சி, வீக்கம், உஷ்ணத்தில் இச்சை, முதலிய குறிகள் உண்டாகும். வீக்கம் பழுத்து உடைந்தால் அதிலிருந்து வெள்ளேயானதும் கெட்டியானதுமான சீழ் வடியும். வலி அதிகம் இராது.

### 4. ரத்த கர்ண சூலே ரோகம்.

அடிபடுதல் முதலியவைகளால் கோளாறடைந்த ரத்தம், காதுகளில் குத்துவலியையுண்டாக்கும். பித்த கர்ணரோகத்தில் காணப்படும் குறிகுணங்கள் முற்றிலுமோ அல்லது ஏற்றக்குறைவாகவோ காணப்படும்.

### 5. ஸந்நிபாத கர்ண சூலேரோகம்.

காதுகளில் வீக்கம், ஜ்வரம், பொறுக்கமுடியாத வலி இவை ஏற்படும். சில சமயங்களில் உஷ்ணத்தில் விருப்பமும் சிற்சில சமயங்களில் குளிர்ச்சியில் விருப்பமும் மாறி மாறி உண்டாகும். உடம்பில் மதமதப்பு ஏற்படும். காதுகளிலிருந்து துர்நீர்க்கசிவும் உண்டாகும். பழுத்து உடைந்தால் அதிலிருந்து, கறுப்பாகவோ, வெண்மையாகவோ அல்லது சிவப்பு நிறமாகவோ சீழ், தடிப்புடன் வெளிவரும்.

### 6. கர்ண நாதம்.
### (காதுகளில் அலே ஓசைபோன்ற சப்தம்)

சப்தவஹஸிரைகளில் வாயு பிரவேசிப்பதால் பற்பல விதமான சப்தங்களே அடிக்கடி, காரணமின்றி கேட்பான்.

அவை பேரி, மிருதங்கம், சங்கு, முதலியவைகளிலிருந்து எழும்பும் சப்தங்களைப் போன்று இருக்கும்.

## 7. பாதிர்யம் (செவிடு)

வாயு கபத்துடனே தொடர்ந்து உட்காதுகளை யடைந்தாலும் அல்லது கர்ணநாதம் என்ற ரோகத்திற்குத்தக்க சிகித்ஸை சய்யாவிட்டாலும், அது 'செவிட்டுத்தன்மை' யை உண்டாக்கும். மிகவும் உரக்கச்சொன்னாலன்றி காது கேட்காது.

## 8. ப்ரதீநாஹம்
## (காதடைப்பு)

வாயு அதிகமாவதால் கபம் குறைந்து, பித்தத்தினாலும், உஷ்ணத்தினாலும் வரண்டதாகச் செய்யப்பட்டு காதுகளின் துவாரங்களை யடைத்துக்கொள்ளும். அப்போது காதுகளில் அரிப்பு, வலி, பார உணர்ச்சி, அடைப்பு முதலியவைகளை உண்டாகும்.

## 9. கண்டூ, சோபங்கள்
## (அரிப்பும், வீக்கமும்)

கபத்தினால் காதுகளில் நிரந்தரமான அரிப்பும், வீக்கமும் உண்டாகும்.

## 10. பூதிகர்ணம் (சீழுள்ள காது)

கபம் பித்தத்தினால் தாபமடைந்து (கருகிப்போய்) வலியுடனோ அல்லது வலியில்லாமலோ, தடிப்புள்ள சீழை காதுகளிலிருந்து அதிகமாக வெளிப்படுத்தும்.

## 11. க்ருமி கர்ணம்
### (கிருமிகள் நிறைந்த காது)

வாதம் முதலான தோஷங்களினால் தூஷிக்கப்பட்ட காதுகளில் சிறுசிறு கிருமிகள் உண்டாகும். அவை அங்குள்ள அழுகிய மாம்ஸம், சீழ் முதலானவைகளைத் தின்று நன்றாக வளர்ந்து பொறுக்கமுடியாத வலியை உண்டாக்குகின்றன.

## 12. கர்ண வித்ரதி
### (காதுகளில் உண்டாகும் கட்டி)

காதுகளுக்குள் குச்சிகளை விட்டுக் குடைவதினாலோ அல்லது அடிபடுவதினாலோ இரணங்கள் உண்டாகி அவைகள் வித்ரதியாகும். தோஷாதிகளின் பிரகோபத்திற்குத்தக்கபடி மஞ்சள் நிறமானதோ, சிவப்பாகவோ, இரத்தம் போன்றோ நீர்க்கசிவு உண்டாகும்.

## 13. கர்ணகோபம்.

காதுகளுக்குள், வீக்கம் அதிகமாக உண்டானால் அது கர்ணசோப'மாகும்.

## 14. கர்ணார்சஸ், 15. கர்ணார்புதம்
### (எழுச்சிகள்)

இவ்விருநோய்களிலும் வலி அதிகமாக இருக்கும். சீழும் வெளிவரும். காது கேட்காது காதினுள் அதிகமான மாம்ஸ வளர்ச்சி உண்டாகி, எரிச்சலும் வலியும் ஏற்படும். இரத்தமும் வெளிவரும்.

## 16. கூசி கர்ணம் (காது சுருங்குதல்.)

சிசு கர்ப்பாசயத்திற்குள்ளிருக்கும்போதே, வாதம் அதன் காதுகளைத்தாக்கி உட்புறமாக வளையச்செய்கின்றது.

அது 'கூசிகர்ணம்' என்ற ரோகமாகும்.

## 17. கர்ண பிப்பிலி

### (காதுகளின் வெளிப்புறத்தில் மாம்ஸ வளர்ச்சி)

சிசு கர்ப்பாசயத்திற்குள்ளிருக்கும்போது அதன் காதுகளின்மேல் ஒன்று அல்லது அநேக மாம்ஸ வளர்ச்சிகள் உண்டாகின்றன. அவைகளில் வலி இராது.

## 18. கர்ணவிதாரி.

வாதம் முதலான மூன்று தோஷங்களும் ஒருமித்துப் பிரகோபமடைந்து காதுகளின் பக்கத்தில் வலியுடன் கூடிய வீக்கத்தையுண்டாக்கி அதன் நிறத்தையும் மாறுபாடடையச் செய்யும். அதற்குத்தக்க சிகித்ஸை செய்யாவிடில், அது பழுத்து உடையும். அதிலிருந்து கடுகெண்ணெயை யொத்த நீர்க்கசிவு உண்டாகும். அவ்வாறு ஏற்பட்ட விரணம் ஆறுவதற்கு நாளாகும். அதனால் காதுகளின் வெளிப்புறம் சுருங்கிவிடும். இதற்கு 'சஷ்குலி' என்ற பெயரும் உண்டு.

## 19. கர்ண பாலீசோஷம்.

### (வெளிக்காது வரட்சி)

காதிலுள்ள ஸிரைகளில் வாயு அதிகமாகச்செல்வதால் காதுகளின் விசிறி போன்ற வெளிப்புறம் வரண்டு விடுகிறது. இயற்கையாகவுள்ள எண்ணெய்ப்பசை இராது.

## 20. பாலீ தந்த்ரீ

### (வெளிக்காது கயிறு போலாதல்)

வாதத்தினால் வெளிக்காது சுருங்கி, மெலிந்து நூல் போலாகும்.

## 21. பாலீ பரிபோடம்
### வெளிக்காது வெடித்துப்போதல்)

வாதத்திஞல் காதுகளின் மிருதுவான பாகத்தில் வீக்கம் ஏற்பட்டு, அதற்குத்தக்க சிகித்ஸை செய்யப்படா விடில் வலி அதிகமாகி, சிவந்து வெடித்துப்போகும்.

## 22. கர்ணேத்பாதம்.
### (ஆபரணங்களிஞல் ஏற்படும் புண்)

வெகு பாரமுள்ள ஆபரணங்களிஞல் (காதுகள் கீழே இழுக்கப்பட்டு) காதுகளில் பித்தமும் இரத்தமும் கோளா றடைந்து, வலி, சிவப்பு நிறம், எரிச்சல், அழற்சி, இவைகளை உண்டாக்கும். அதிலிருந்து துர்நீர் கசியும். சிறு சிறு கொப்பளங்களும் ஏற்படும்.

## 23. கல்லீரம்
### (காதுகளில் நிலேயான வீக்கம்)

வாதத்திஞலும் கபத்திஞலும், வெளிக்காதுகளில் ஒரே சீரானதும், நிலேயானதுமாகிய வீக்கம் உண்டாகித் திமிர்த்து, வலியின்றி இருக்கும். வீக்கத்தில் நிறவேறுபாடு இராது. ஆஞல் அரிப்பு இருக்கும். இதற்கு 'உன்மந்தம்' என்ற பெயரும் உண்டு.

## 24. துக்கவர்த்தனம்.
### (நோய் அதிகமாதல்)

முறைதவறிக் குத்தப்பட்ட காதுகளை வளர்த்து வருவதால் அரிப்பு, எரிச்சல் முதலியவைகளுடன் அழற்சி யும் ஏற்படும். இது ஸந்நிபாத தோஷத்திஞலேற்படும்.

**25 பாலீ லேகீ**

**(காதின் விசிறி அழுகி விடுதல்)**

கபத்திலும், இரத்தத்திலும் சிற்சில நுண்ணிய கிருமிகள் உண்டாகி அவைகள் காதுகளில் அரிப்பையும் வலியையும் உண்டாக்கும். தக்க சிகித்ஸை செய்யாவிடில் அவை வெளிக்காதுகளையே தின்றுவிடும்.

ஆக 25 வகை ரோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

# நாசி ரோக வகைகளின் காரணங்களும் குறிகுணங்களும், வகைகளும்.

---

**காரணங்கள்.**

பனி, காற்று, புழுதி, முதலியவைகளாலும், வெகு நாழிகை பேசுவதனாலும், அதிகமாகத் தூங்குவதாலும், வெகுநேரம் கண் விழிப்பதாலும், அதிக உயரமாகவோ, அல்லது தாழ்வாகவோ தலையணைகளை உபயோகிப்பதாலும். அமிதமாக நீரைப் பருகுவதாலும், அமிதமான ஸ்த்ரீ ஸங்கத்தாலும், அதிகமாக வாந்திஎடுப்பதனாலும், கண்ணீரை அடக்குவதனாலும்.

வாதாதி தோஷங்கள் பிரகோபித்து மூக்கையடைத்து 'பிரதிச்யாய' (மூக்கிலிருந்து நீர் விழுதல்) ரோகத்தை உண்டாக்குகின்றன.

## 1. வாதப்பிரதிச்யாயம்

வாய் உலர்ந்துபோதல், அதிகமான தும்மல், மூக்கடைப்பு, மூக்குகளில் வலி, பற்கள், பொட்டு, தலை முதலானவிடங்களிலும் தாங்கமுடியாத வலி, புருவங்களைச் சுற்றிலும் பூச்சிகள் ஊருவன போன்ற உணர்ச்சி, குரல் கம்மல், வாய் வேக்காளம், அடிக்கடி கபம் வெளிவரல் முதலான பற்பல குறிகளுண்டாகும்.

## 2. பித்தப்பிரதிச்யாயம்

நாவரட்சி, ஜ்வரம், மூக்கில் சிறுசிறுகட்டிகளுண்டாதல், மயக்கம், மூக்கின் நுனி வேக்காளம், வரட்சியுள்ளதும் உஷ்ண மானதும், செம்பு நிறத்தையோ அல்லது மஞ்சள் நிறத்தையோ பெற்ற சளி முதலான குறிகள் காணப்படும்.

## 3. கபப்பிரதிச்யாயம்

இருமல், ருசியின்மை, ச்வாஸம், வாந்தி, உடம்பில் பார உணர்ச்சி, வாயில் இனிப்பு, அரிப்புடன் கூடியதும், பிசுபிசுப்புள் ளதும், வெண்மையானதும், தடிப்புள்ளதுமான சளி முதலானவை களுண்டாகும்.

## 4. ஸந்நிபாத பிரதிச்யாயம்

முன் சொன்ன பிரதிச்யாய ரோகங்களில் காணப்படும் எல்லாக் குறிகளும் காணப்படும். காரணமின்றி நோய் அதிகமாகவோ குறைவாகவோ ஆகும்.

## 5. ரக்தப் பிரதிச்யாயம்

இரத்தம் கோளாறடைந்து மூக்கிலுள்ள ஸிரைகளையடைந்து இந்நோயை உண்டாக்குகிறது. மார்பில் மதமதப்பு, கண்விழிகள் செம்பு நிறத்தையடைதல், மூச்சு விடுகையில் நாற்றம், காதுகள், கண்கள், மூக்கு முதலானவிடங்களில்

அரிப்பு, ஆகிய குறிகள் காணப்படும். மேலும் பித்தப் பிரதிச்யாயத்தின் குறிகளும் தோன்றும்.

## 6. துஷ்டப் பிரதிச்யாயம்

மேலே சொன்ன பிரதிச்யாய ரோகங்களுக்குத் தகுந்த சிகித்ஸை செய்யாமற்போனால் வாய் வரண்டுபோய் பித்தம் முதலான பிரதிச்யாய ரோகங்களில் காணப்படும் பற்பல குறிகளும் அதிகமாகும். கண்கள் முதலான பஞ்ச ஞானேந்திரியங்களையும் கெடுக்கும். அக்னி மாந்த்யம், ஜ்வரம், ச்வாஸம், காஸம், மார்பு விலா முதலிய இடங்களில் மாறி மாறி வலி உண்டாகும். வாயில் துர்நாற்றம் ஏற்படும். மூக்கிலிருந்து சீழைப்போன்ற நிறத்தையுடையதும், சிவப்பு நிறமுள்ளதுமான சளி ஒழுகும். நீளமானதும், வழவழப்புள்ளதும், வெண்மையானதும், அணுப் பிரமாணமுள்ள கிருமிகள் உண்டாகி நெளியும்.

மேற்கூறிய பிரதிச்யாய ரோகங்கள் பக்குவமானால் கீழ்க்கண்ட குறிகளுண்டாகும்:—

உடம்பு இலேசாகும், தும்மல் குறையும், சளி கெட்டியாகி மஞ்சள் நிறத்தையடையும். கொஞ்சம் கொஞ்சமாக வாஸனையை அறியும் சக்தியும் ஏற்படும்.

## 7. ப்ருச க்ஷவம். (அதிகத்தும்மல்)

காரமுள்ள, மிளகு, மிளகாய் போன்ற, வஸ்துக்களை முகருவதாலும், சூரிய கிரணங்களை மூக்கிற்குள் விழும்படி செய்வதாலும், திரி, நூல் முதலியவைகளை மூக்கினுள்ளே செலுத்துவதாலும், வாதத்தைப் பிரகோபிக்கச்செய்யும் வேறு காரணங்களாலும் பலமடைந்த வாதத்தினால், மூக்கினுள்ளிருக்கும் மெல்லிய எலும்புகள் தாக்கப்பட்டு அதனால் மறுபடியும் வாதம் மிகப் பலமுள்ளதாக ஆகி, ச்ருங்காடகம் (மூக்கின் நாற்சந்தி) என்ற ஸ்தானத்தை

யடைந்து மறுபடியும் கீழ்நோக்கித் திருப்பப்பட்டு அதிகமான தும்மல்களையுண்டாக்கும்.

## 8. நாஸிகா சோஷம்
## (நாசித்வாரம் வரண்டு விடுதல்)

வாதம் மூக்கிலுள்ள கபத்தையும், நாசித்துவாரத்திலுள்ள ம்ருதுவான மாம்ஸத்தையும் வளரச்செய்து மூக்கினுள்ளே சுணைகள் அடைத்துக்கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகும். சுவாசம் விடுவது சிரமமாக இருக்கும்.

## 9. நாஸானாஹம்
## (நாசித்துவாரங்கள் உப்புதல்)

கபத்தினல் தடைப்பட்ட வாயு மூக்கை அடைத்து அதை உப்பும்படி செய்கிறது.

## 10. க்ராண பாகம் (மூக்கின் அழற்சி)

பித்தம் அதிகரித்து மூக்கிலுள்ள மாம்ஸம், சருமம் இவைகளில் அழற்சியுண்டாக்கி எரிச்சலையும், வலியையும் உண்டாக்கும்.

## 11. க்ராண ஸ்ராவம் (சளி ஒழுகுதல்)

மூக்கிலிருந்து கபத்தைப்போலச் சளி எப்பொழுதும் ஒழுகும். இது வெண்மையாகவும், தண்ணீரைப்போலவும், இரவு நேரங்களில் அதிகமாகவும் உண்டாகும்.

## 12. அபீனஸம்

மூக்கினுள் கபம் அதிகமாகி நாசியிலுள்ள ஸ்ரோதஸ்களையடைத்து 'குர் குர்' என்ற சத்தத்துடன் ச்வாஸத்தை

உண்டாக்கும். பீனஸத்தைவிட அதிக வேதனையைத்தரும். செம்மறியாட்டின் மூக்கிலிருந்து ஒழுகும் சளியைப்போலத் தடிப்பான கபம் வெளியாகும்.

## 13. நாஸா தீப்தி

ரக்தம் கோளாறடைந்து மூக்கிற்குள்ளோ அல்லது வெளியிலோ தொடமுடியாத வலியையுண்டாக்கும். மூச்சு விடும்போது எரிச்சல் அதிகமாகும். ஆவியடிப்பது போன்ற உணர்ச்சியும் ஏற்படும்.

## 14. பூதிநாஸம்

தாடைகளினடியில் திரிதோஷங்கள் பிரகோபித்து வாயின் அடிப்புறத்திலிருந்தும், மூக்கிலிருந்தும் வாதத்தையும் கபத்தையும் துர்நாற்றத்துடன் வெளியுறச் செய்யும்.

## 15. பூய ரக்தம்

ஸந்நிபாத தோஷத்தினுலோ அல்லது அடிபடுவதனுலோ மூக்கிலிருந்து சீழும் இரத்தமும் ஒழுகும். தலைவலி, தலையில் எரிச்சல், முதலிய குறிகளும் காணப்படும்.

## 16. நாஸாபுடகம்

பித்தத்தினுலும் கபத்தினுலும் அடைபட்ட வாயு மூக்கிலுள்ள கபத்தை வளரச் செய்கிறது. அவை மூக்கின் உட்புறங்களில் ஒட்டிக்கொள்ளும்.

## 17. நாஸார்சஸ் 18. நாஸார்புதம் (எழுச்சிகள்)

இவைகளால் மூச்சுத்திணரல், மூக்கொழுகுதல், அடிக்கடி தும்மல், மூக்கினுல் பேசுதல், துர்நாற்றமுள்ள மூச்சு, தலைவலி இவைகள் அதிகமாகும்.

# வாய் ரோகங்களின் குறிகள்.

வாய் ரோகங்கள் என்று பொதுவாகக்கூறினுல் உதடு, பற்கள், கன்னம், ஈறு, நாக்கு, தொண்டை, தாடை, இவை களைப்பற்றிய நோய்களையும் குறிக்கும். ஆகவே அவைகளும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

## வாய் ரோகங்கள் ஏற்படக் காரணங்கள்.

மீன், எருமை, பன்றி இவைகளின் மாமிசத்தை யதிகமாகச் சாப்பிடுதல், இளம் முள்ளங்கி, உளுந்து, துவரை, கருப்பஞ்சாறு, பால், வெல்லம் இவைகளை அதிகமாகச் சாப்பிடுதல், எப்பொழுதும் குப்புறப்படுத்துக்கொள்ளுதல், பல் துலக்கல், தூமபானம், வாய் கொப்பளித்தல், வாந்தி எடுத்தல், ஸிராவ்யதம் (இரத்தம் எடுத்தல்) முதலியவைகளை முறைதவறிச் செய்து கொள்ளுதல் அல்லது செய்து கொள்ளாமலிருத்தல், இவைகளால் கபத்துடன் கூடிய திரிதோஷங்களும் கோளாறடைந்து வாய் ரோகங்களை உண்டாக்குகின்றன.

## உதடுகளின் ரோகங்கள்.

### 1. கண்டோஷ்டம்

வாதம் அதிகரிப்பதால் உதடுகளில் பிளவு உண்டாகும்.

### 2. ஓஷ்ட கோபம்

வாதம் அதிகரிப்பதால் இரு உதடுகளும் அசைவற்று வலி யேற்பட்டு, எரிச்சலும் உண்டாகும். உதடுகள் முறமுறப்பாகும். அவை கருமை நிறமடைந்து கடினமாகும்.

## 3. பித்தம் கோளாறடைந்தால் (அதாவது அதிகமானல்)

உஷ்ணமான பதார்த்தங்களின்மேல் வெறுப்பு, உதடுகளில் கடுகைப்போன்ற சிறு சிறு கட்டிகள், மஞ்சள் நிறம், இவை உண்டாகிக் கட்டிகளும் வெகு சீக்கிரத்தில் பழுத்து, உடைந்து துர்நீர்க்கசிவும் உண்டாகும்.

## 4. கபக்கோளாறினல்

குளிர்ச்சியான பதார்த்தங்களில் வெறுப்பு, உதடுகளில் கனத்த வீக்கம், வெண்மை நிறமுள்ள சிறு சிறு கொப்பளங்கள், முதலியவை உண்டாகும்.

## 5. ஸந்நிபாத உதட்டு ரோகங்கள்

பல நிறமுள்ள கொப்பளங்கள் உதடுகளில் உண்டாகும். கெட்ட நாற்றத்துடன் கொழ கொழப்பான நீர்க்கசிவு உண்டாகும். காரணமில்லாமல் உதடுகள் வீங்கித்தாளுகவே வடியும். ஆனல் பழுத்துவருவது நிலையில்லாமலிருக்கும்.

## 6. ஓஷ்டார்புதம்

இரத்தம் கோளாறடைவதால் உதடுகளிலிருந்து இரத்தம் கசியும். அவைகளும் சிவப்பு நிறத்தையடையும். இரத்தம் குறையக் குறைய பேரீச்சையளவுள்ள கொப்பளம் உண்டாகும்.

## 7. பிண்டோஷ்டம்

மாம்ஸம் கோளாறடைவதால் உதடுகளில் மாம்ஸ வளர்ச்சி உண்டாகி அதில் சிறுசிறு கிருமிகளும் நாளடைவில் உண்டாகும்.

## 8. மேதஸ் (கொழுப்பு) கோளாறடைவதால்

எண்ணெய் போன்ற கசிவு உதடுகளிலேற்பட்டு மிருதுவாகி, அரிப்புடன் கூடியவைகளாக இருக்கும்.

## 9. வாதகபக் கோளாறினல்

நீர்க்குமிழிகள் போன்ற சிற்சில கொப்பளங்கள் உதடுகளிலுண்டாகும். இதற்கு 'ஜலார்புதம்' என்றும் வேறு பெயர் உண்டு.

## 10. அடிபடுதல்

இதனல் உதடுகள் அறுபட்டு, குத்துவலியேற்படும். சிறு சிறு மாம்ஸ முளைகளும் காணப்படும். அவைகளில் அரிப்பு ஏற்படும்.

ஆக ரோகங்கள் 11.

# கன்னத்திலேற்படும் ரோக வகைகள்.

## கண்டாலஜி (பொன்னுக்கு வீங்கி)

கன்னத்தில் நிலையான வீக்கம் ஏற்பட்டு, ஜ்வரமும் எரிச்சலும் உண்டாகும்.

# பற்களின் ரோக வகைகள்.

## சீததந்த ரோகம்

வாததோஷம் கோளாறடைவதால் பற்களுக்கு இளஞ் சூடுள்ள பதார்த்தங்களின் மேல் விருப்பமும், குளிர்ச்சியினல் தாங்கமுடியாத வலியும் உண்டாகும். அவ்விடத்தில் குத்து வலியேற்படும்.

## தந்தஹர்ஷம்

புளிப்பான பதார்த்தங்களை அதிகமாக உபயோகிப்பதினால் பற்களில் கூச்சம் ஏற்படும். அதனால் காற்று, புளிப்பு, குளிர்ச்சியான பதார்த்தங்கள் முதலியவைகளைச் சகித்துக்கொள்ள முடியாது. மேலும் வலியுடன் பற்கள் ஆடி விழுவது போன்ற உணர்ச்சியும் உண்டாகும்.

## தந்தபேதம் (பல் வலி)

பற்களில் பிளக்கப்படுவதுபோன்ற கடுமையான வலி உண்டாகும்.

## தந்தசாலம் (பற்கள் அசைதல்)

இவை ஆரம்பத்தில் சிறு ஆட்டம் கண்டு நாளாவட்டத்தில் ஆட்டம் அதிகமாக ஏற்பட்டுப் பொறுக்க முடியாத வலியுண்டாகும்.

## கராளம் (பயங்கரமான பற்கள்)

பற்கள் வரிசையாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைக்கும்.

## அதி தந்தம்

ஒரு பல்லினடியில் வேறொரு பல் முளைக்கும். அப்போது பொறுக்கமுடியாத வலி ஏற்பட்டு முளைத்தபின் வலி சாந்தமாகும். இதற்குத் 'தந்த வர்த்த மானம்' என்றும் வேறு பெயர் உண்டு.

## தந்த சர்க்கரை

பற்கள் சரியானபடி தேய்க்கப்படாவிட்டால் அவைகளினூடே அழுக்கோ அல்லது கபமோ சேர்ந்து சில

நாட்கள் கழித்து வாயுவினுல் வரட்சி ஆகிப்பற்களில் தங்குகின்றன. அதிகமான துர்நாற்றம் ஏற்பட்டு, காரையும் அதிகமாகும்.

இந்நோய் வ்ருத்தியாகி நாளடைவில் 'கபாலிகா' என்ற ரோகமாக ஆகும்.

## ச்யாவதந்தம் (கருமை நிறமான பற்கள்)

இரத்தம், பித்தம், வாயு இம்மூன்றும் கோளாறடைவதனுல் பற்கள் கருநிறமாகின்றன.

## கிருமி தந்தம் (Caries Teeth)

வாயுவோடு கூடிய தோஷங்கள் பற்களின் வேர் பாகத்திலுள்ள உள்பாகத்தை நாசம் செய்து, துவாரத்தை உண்டாக்கும். சாப்பிடும் ஆகாரத்தின் அணுக்கள் அதில் புகுந்து, அழுகி நாளடைவில் சிறு சிறு கிருமிகளுண்டாகும். அதனுல் தீடீரென வலி அதிகமாகித் தானுகவே சாந்தமடையும். பற்கள் கருநிறமாகி, அவைகள் அசைய ஆரம்பிக்கும். அதிலிருந்து சீழும் இரத்தமும் கசியும்.

# ஈறைப்பற்றிய ரோகங்கள்

## 1. சீதாத ரோகம்

கபமும், இரக்தமும் கோளாறடைந்து வாய் நாற்றம் உண்டாகிக் காரணமின்றி இரத்தம் கசியும். மேலும் ஈறுகள் மிருதுவாகிப் பழுத்துக் கருமை நிறத்தையடையும். நாளடைவில் இவை சிதையும்.

## 2. உபகுசம் (ஈறுகள் பக்குவமடைதல்)

பித்தமும் இரக்தமும் கோளாறடைவதால் பற்களின் அடியிலுள்ள மாம்ஸம் தகிக்கப்பட்டுச் சிவப்பு நிறத்தையடைகிறது.

அவைகளில் அரிப்பு உண்டாகி இரத்தம் கசியும். வீக்கம் உண்டாகும். இரத்தம் வெளியாகாவிடில் ஈறு கொழுத்துவிடும். பற்கள் ஆட்டங்கண்டு வலியும் சுமாராக இருக்கும். வாய் நாற்றம் அதிகமாக இருக்கும்.

## 3. தந்த புப்புடம் (ஈறுகளின் கட்டி) (Gingivitis)

இரண்டு அல்லது மூன்று பற்களின் அடியிலுள்ள ஈறுகளில் இலந்தைக்கொட்டைப் பிரமாணம் வீக்கம் உண்டாகி, அது வெகு சீக்கிரத்தில் பழுத்து உடையும். அப்போது தாங்கமுடியாத வலியுண்டாகும்.

## 4. தந்த வித்ரதி (Gum Abscess)

வாதம், பித்தம் முதலான மூன்று தோஷங்களும், இரத்தமும் சேர்ந்து கோளாறடைந்து பற்களின் ஈறுகளுக்கு வெளியேயும், உள் பக்கத்திலும் பெரிய கட்டி உண்டாகும், அதிகமான வீக்கமும், வலியும் ஏற்பட்டு உடைந்து, அதிலிருந்து சீழும் இரத்தமும் பெருகும்.

## 5. ஸுஷிரம்

பற்களின் வேரில் வீக்கமேற்பட்டு, பித்தமும் இரத்தமும் கோளாறடைவதால், வலி அதிகமாகிச்சுரக்கும். ஈறுகளும் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதையும்.

## 6. மகாஸுஷிரம்

மேற்கூறிய குறிகளுடன், ஸந்நிபாதஜ்வரமும் உண்டாகும். அதிகமான இரத்தக் கசிவும், சீழும் வெளிவரும். பற்களின் வேரிலுள்ள சதையைச் சிதையச்செய்யும்.

## 7. அதிமாம்ஸகம்

பற்களின் அடியில் முளையைப்போன்ற ஒரு வளர்ச்சி ஏற்பட்டு அது கிரமமாக விருத்தியாகும். தாடை, காது முதலான

இடங்களில் சொல்லொணு வேதனையைத் தரும். ஆகாரத்தை விழுங்கவும் இயலாது. இது கபத்திஞலேற்படும் ரோகமாகும்.

## 8. விதர்ப ரோகம்

ஈறுகளைக் குச்சி முதலானவைகளைக்கொண்டு குத்துவதால் இடைவெளி உண்டாகிப் பற்கள் அதிகமாக ஆட ஆரம்பிக்கும். மேலும் அதிகமான வலியும் ஏற்படும். இது அடிபடுவதஞலேற்பட்ட ரோகமாகும்.

## (9-13) தந்தமாம்ஸகதி

மாம்ஸங்களை ஆச்ரயிக்கும் ரோகங்களுக்குத் தக்க சிகித்ஸை செய்யாமல் போஞல் அவை பற்களைத் துவாரம் செய்யும். ஈறு, பற்களின் வேர் முதலியவைகளைத் தின்று எலும்பையும் கெடுக்கும். அவை 5 வகைப்படும்.

# நாக்கு வியாதிகளைப்பற்றிய குறிகுணங்கள்.

## 1. வாதத்திஞல் தூஷிக்கப்பட்டால்

தேக்க இலைகளைப்போல் சொரசொரப்பாக இருக்கும். நாக்கில் மதமதப்பும், வெடிப்புகளும் காணப்படும்.

## 2. பித்தத்திஞல் தூஷிக்கப்பட்டால்

எரிச்சலும், அழற்சியும் உண்டாகிச் சிவந்த மாம்ஸ முளைகளால் சூழப்பட்டிருக்கும்.

## 3. கபதோஷம் மேலிட்டால்

நாக்கு மிகவும் கனத்து, இலவமுட்களையொத்த முளைகள் பல காணப்படும்.

## 4. அலஸகம்

கபமும் பித்தமும் கோளாறடைந்து, நாக்கின் கீழ் பாகத்தில் வீக்கத்தை உண்டாக்கும். ஆகையால் நாக்கை அசைக்கமுடியாது. நாளாவட்டத்தில் வீக்கம் பழுத்து உடைந்து நாக்கின் மாம்ஸமும் சிறுகச் சிறுகக்குறையும்.

## 5. அதிஜிஹ்வம்

நாக்கின் கீழுள்ள மாம்ஸ பாகத்தில் வீக்கம் ஏற்பட்டு அதிலிருந்து நுனிநாக்கைப்போன்ற சதை வெளியே தொங்கும். இது வாதாதி திரிதோஷங்களினுலும் ஏற்படும் ரோகம். அதிலிருந்து உமிழ்நீர் வடியும். நாக்கில் சுரசுரப்பும் அழற்சியும் உண்டாகி, நாக்கை அசைக்கவொட்டாமல் செய்யும். மேலும் வலி, அரிப்பு முதலியவைகளுடன் சாப்பிடமுடியாமல் செய்யும். பேசவும் முடியாது.

## 6. உபஜிஹ்வா

நாக்கிற்கு மேலுள்ள மாம்ஸ பாகம் அதாவது உள் நாக்கு வளர்ச்சியடைந்து முற்கூறிய குறிகளுண்டாகும்.

# தாடையைப்பற்றிய நோயின் குறிகள்.

## 1. தாலு பிடகைகள்

வாதம் கோளாறடைந்து தாடைகளிலுள்ள மாம்ஸத்தின் நடுவில் வலியுடன் முறமுறப்பான சிறுசிறு கட்டிகளேற்படும். அவைகள் மொத்தமான வேர்களையுள்ளதாகவும், துர்நீர்க்கசிவுள்ளதாகவும் இருக்கும்.

## 2. களசுண்டீ

தாடையினடியில் கபம், இரக்தம் இவ்விரு தோஷங்களும் கோளாறடைவதால் மீனின் வஸ்தியை (மூத்திரப்

பையை) யொத்துத்திரண்டு பருத்த கட்டியுண்டாகும். இவை மிருதுவாகவும் தொங்கக்கூடியவைகளாகவும் வழவழப்பாகவும் இருக்குமாதலால் தொண்டையையடைக்கும். வரட்சி, காஸம், வாந்தி இவைகளையுண்டாக்கும். ஆகாரம் நாசியின் வழியாகவே உட்செலுத்தவேண்டியிருக்கும்.

## 3. தாலுஸம்ஹதி

தாடையினுட்புறத்தில் திரண்டு வலியில்லாத மாம்ஸ வளர்ச்சி உண்டாகும்.

## 4. அர்புதம்

தாடையினுட் பாகத்தில் தாமரை மொட்டைப் போன்ற வீக்கம் உண்டாகும். இது ரத்ததோஷம் தூஷிப்பதனாலேற்படும் ரோகமாகும்.

## 5. கச்சபம்

ஆமையைப்போன்ற வீக்கம் தாடையில் ஏற்படும். இது கபக்கோளாறினாலுண்டாகும் ரோகம். இது நாளடைவில் சிறுகச்சிறுக விருத்தியாகும். வலி இராது.

## 6. தாலு புப்புடம்

கபமும் மேதஸும் கோளாறடைந்தால் வலியில்லாமல் இலந்தைக் கொட்டைப் பிரமாணமுள்ள, கடினமான வீக்கம் ஏற்படும்.

## 7. தாலு சோஷம்

வாதத்தினாலோ அல்லது பித்தத்தினாலோ, அல்லது ஜ்வரத்தினாலோ அல்லது இதர ச்ரமத்தைத்தரும் விஷயங்களினாலோ, தாடையின் மாம்ஸ பாகம் வரண்டுபோய் மெலிவாகும்.

## 8. தாலு பாகம்

பித்தம் கோளாறடைவதால், தாடையில் அழற்சியேற்பட்டு அதிலிருந்து துர்நீர்க்கசிவும் உண்டாகும். அதிகமான வலி யேற்படும்.

# தொண்டை ரோகங்கள்.

---

நாக்கின் அடிபாகத்தில் தொண்டையையடைக்கவல்ல பெரிய மாம்ஸ முளைகள் உண்டாகிச் சீக்கிரமாகப் பழுக்கும். தாங்க முடியாத வேதனை உண்டாகும். இதற்கு "**ரோகிணி**" என்று பெயர்:—

## 1. வாத தோஷக்கோளாறினாலுண்டானால்

தொண்டை, வாய் முதலான இடங்களில் வரட்சி ஏற்படும். முகவாய்க்கட்டை, காது முதலான இடங்களில் வலி ஏற்படும்.

## 2. பித்ததோஷம் (அதிகரித்து உண்டானால்)

ஜ்வரம், அழற்சி, நாவரட்சி, மயக்கம், தொண்டைப் புகைச்சல், முதலானவைகளேற்படும். இதுவும் வெகு எளிதில் பழுக்கும் தன்மையுள்ளது.

## 3. கபத்தினால் ஏற்படில்

வெண்மையாகவும், கொழகொழப்பாகவும் இருக்கும்.

## 4. இரத்தக் கோளாறினாலுண்டானால்

சிறு கொப்புளங்கள் பல சூழ்ந்திருக்கும். நெருப்புத் தணலைப் போலச் சிவப்பாகவும், காதுகளில் வலியைத்தரக்கூடியனவாகவும் இருக்கும்.

## 5. ஸந்நிபாத ரோகிணியில்

தொண்டையில் அழற்சி தோன்றும்.

## 6. சாலூகம் (Enlarged Tonsils)

கபத்தை முக்யமானதாகக் கொண்ட திரிதோஷங்கள் தொண்டையில் இலந்தைக் கொட்டைப் பிரமாணமுள்ள கட்டியை உண்டாக்கும். அது நாளடைவில் பெருத்துத் தொணடையை யடைக்கும். சுணையுள்ள முட்களால் சூழப்பட்டிருப்பதைப்போன்ற உருத்தலும் உண்டாகும்.

## 7. விருந்தம் (Tonsilitis)

தொண்டையின் இரு புறங்களிலும் உருண்டையான வீக்கம் உண்டாகும். அப்போது ஜ்வரமும், அழற்சியும் உண்டாகும்.

## 8. துண்டிகேரிகா (adenitis)

முகவாய்க்கட்டை க்கடியில் பருத்திக்கொட்டைப் பிரமாணமுள்ள வீக்கம் உண்டாகும். வலி அவ்வளவாக இராது. தொடுவதற்குக் கட்டியைப் போன்றிருக்கும்.

## 9. களோகம்.

கழுத்திற்கு வெளியிலும், தொண்டையிலும் வீக்கம் அதிகரித்து, ஆகாராதிகளை விழுங்க முடியாமல் தொண்டையை யடைக்கும். இதனல் தலை கனம், சோம்பல், ஜ்வரம், உமிழ்நீர்ப்பெருக்கு முதலிவைகளேற்படும்.

## 10 வலயம்.

மேல் சொன்ன குறிகளுடன் வீக்கம் அதிகமாகி வலியில்லாம லிருந்தால் அது வலயமாகும்.

## 11. களாயுகம்.

வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து தொண்டைக்குள்ளே ஒன்றோ அல்லது பற்பல முளைகளோ தோன்றும். ஆனால் அவைகளில் வலி இராது. மூச்சுவிடுவதற்கும், சாப்பிடுவதற்கும் தடையையுண்டுபண்ணும். அம்முளைகள் பலத்த வேரைப் பெற்றிருக்கும்.

## 12. சதக்னீ.

தொண்டைக்குள் முளைகள் காணப்படும். அவைகள் அதிகமான வரட்சியையும், ஜ்வரத்தையும், தலைவலியையும் உண்டாக்கும். அதிகமான வலியைத் தருவதனாலிதற்குச் 'சதக்னீ' என்று பெயர். இது ஸந்நிபாத தோஷத்தினாலுண்டாகும் வியாதி.

## 13. கள வித்ரதி.

தொண்டை முழுவதையும் அடைக்கவல்ல வீக்கம் ஏற்பட்டு, அதிகமான வலியைத்தரும். அதிசீக்கிரத்தில் பக்குவமடையும். அதிலிருந்து சீழையொத்த துர்நீர்க்கசிவும் உண்டாக்கும்.

## 14. களார்புதம்.

நாக்கின் கடைசியிலும், தொண்டையிலும் நிலையான வீக்கம் ஏற்படும். ஆனால் அது பழுக்கவும் பழுக்காது. வலியும் இராது. சிவப்பு நிறமாக இருக்கும். இது ஸந்நிபாத தோஷத்தினாலுண்டாகும் வியாதி.

## 15. களகண்டம்.

வாதம், கபம், மேதஸ் முதலியவைகள் கோளாறடைவதால் தொண்டைக்கு வெளியே தொங்கக்கூடிய ஒரு

7 OCT 1974

கட்டியை உண்டாக்குகிறது. இது சிறிது சிறிதாக வளரும் தன்மையையுடையது.

## 1. வாத களகண்ட குறிகள்.—

இது கறுப்பாகவோ, சிவப்பாகவோ, வலியுடனும், கறுப்புக் கோடுகளுடன் கூடியவைகளாகவோ இருக்கும். இது வளர வளரத் தொண்டையில் வரட்சியையும், அருசியையும் கொடுக்கும்.

## 2. கப களகண்டமானல்.

நிலையான வீக்கமுடையதாகவும், வெளுப்பாகவும், அரிப்புடன் கூடியதாகவும், குளிர்ச்சியான ஸ்பர்சத்துடனும், பெரிதாக வீக்கத்துடன் இருக்கும். இது விருத்தியானல் தொண்டையில் பிசுபிசுப்பைத்தரும். வாயிலுள்ள உமிழ் நீர் இனிப்பாக இருக்கும்.

## 3. மேதோ (கொழுப்பு) தோஷம் அதிகமாகில்.

கபகளகண்டத்திற்குண்டான குறிகளைப் பெற்றிருக்கும். சிற்சில சமயங்களில் தேகம் இளைக்கும். மற்ற சமயங்களில் பெருக்கும். தேகத்தின் நிலைக்குத்தக்கபடி நோயும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஆகும். குரல் கம்மலேற்படும்.

## 4. ஸ்வரக்னம். (குரலைக்கெடுப்பது)

கபம் கோளாறடைவதால் வாயு தடைப்பட்டுத் தொண்டையை வரளும்படி செய்து இந்நோயையுண்டாக்குகிறது. அடிக்கடி மயக்கம் ஏற்படும். சிரமத்துடனே மூச்சுவிடுவான். இந்நோய்க்கு வாத தோஷமே காரணமாக இருக்கிறது. இந்நோய்க்கு "ஸ்வரஹா" என்றும் பெயர் உண்டு.

# வாய்ரோகங்களின் வகைகளும் குறி குணங்களும்.

## ஆஸ்யபாகம் (வாய்வேக்காடு)

வாயு வாய்பூராவாகவும் பரவிச் சிறு சிறு புண்களை உண்டாக்கி, வாயில் சிவப்பையும், மொர மொரப்பையும் கொடுக்கும். மேலும் உதடுகளைத் தாம்ர வர்ணமாகவும் தோல் உரியும்படியும் செய் கிறது. நாக்கு தடித்தும், வெடித்தும், சிறு சிறு மாம்ஸ முளைகளை உடையதாகவும், குளிர்ச்சியைத் தாங்க முடியாததாகவும் ஆகும். வாயைச் சீக்கிரமாகத் திறக்க இயலாது.

## ஊர்த்வகத ரோகம்.

மூலம், குன்மம், கபம் முதலியவைகளினுல் வாயுவின் கீழ் நோக்கிய கதி தடைப்பட்டு, மேலே சென்று வாயில் துர்க்கந்தத் தைத் தரும்.

## பித்தமுகபாகம்.

பித்தத்தினுலுண்டான முகபாவத்தில் எரிச்சலும். ஆவியெழும் புதலும் உண்டாகி, வாயில் கைப்புச் சுவையைத் தருகிறது. சுண்ணும்பு தெளிப்பதனுல் ஏற்படும் இரணங்களைப்போல் ஆங் காங்கு சிறு சிறு கொப்புளங்களேற்படும். வலி அதிகமாக இருக்கும்.

## ரக்தமுகபாகம்.

பித்த முகபாகத்தைப்போலவே குறிகள் காணப்படும்.

## கபமுகபாகம்.

வாயில் இனிப்புச்சுவை, அரிப்பு, கொழ கொழப்பு முதலான குறிகளேற்படும்.

## அர்புதம்.

கபம் கோளாறடைந்து, தாடையின் உட்புறத்தைத் தாக்குவதால், கறுப்பும் வெளுப்பும் கலந்த ஒரு வீக்கத்தை உண்டாக்கும். அதை அறுத்தாலும், உடைத்தாலும், நசுக்கினுலும் முன்போலத் திரும்பத்திரும்ப வளரும்.

## முகபாகம். (ஸந்நிபாதம்)

வாதாதி தோஷங்கள், இரத்தத்துடன் சேர்ந்து கோளாறடைவதால் எல்லாவித முகபாகங்களின் குறிகளையும் பெற்றிருக்கும்.

## பூதி வக்த்ரம்.

பல்பொடி, பல்குச்சி முதலானவைகளைக்கொண்டு பற்களைச் சுத்தம் செய்யாவிடில், வாயில் அழுக்கு சேர்ந்து, இந்நோய் உண்டாகும்.

ஆக வாயிலுள்ள அங்கங்களில் ஏற்படும் ரோகங்கள் 75. அவைகளாவன :—

| | |
|---|---|
| உதடு—11. | ஈறு—13. |
| கன்னம்—1. | நாக்கு—6 |
| பற்கள்—10. | தாடை—8. |
| தொண்டை—18. | வாய்—8. |

# சிரோரோகங்களின் காரணங்களும், வகைகளும், குறிகுணங்களும்.

புகை, வெய்யில், தண்ணீரில் அதிக நேரம் விளையாடுதல், பனி, அதிகமான தூக்கம், அதிகமான கண் விழிப்பு, அமிதமான ஸ்வேத சிகித்ஸை, (வேது பிடித்தல்,) கீழ்திசைக் காற்று, கண்ணீரை அடக்குதல், அதிகமாகத் தண்ணீரையோ மது வகைகளையோ உட்கொள்ளுதல், சிரசில் கிருமி சேருதல், தும்மல் ஏப்பம் முதலான 14 வித வேகங்களையும்[1] அடக்குதல், உயரமான தலையணை உடம்பு தேய்த்துக்கொள்ளுதல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் முதலான காரியங்களை விலக்குதல், எப்பொழுதும் கவிழ்ந்த முகமாகவே பார்த்தல், உடம்பிற்கு ஏற்றதல்லாத வாஸனைகளை முகர்தல், உடம்பிற்கு அஹிதமான ஆகாரங்களைச் சாப்பிடுதல், முதலான காரணங்களினால் சிரஸிலுள்ள தோஷங்கள் கோளாறடைந்து சிரோரோகங்களை உண்டாக்குகின்றன, அவை வருமாறு:—

## வாத சிரஸ்தாபரோகம்.

பொட்டுகளில் தாங்கமுடியாத வலியும், புருவங்களுக்கு மத்தி, நெற்றி முதலான பாகங்களில் கீழே விழுந்து விடுவதைப் போன்ற வலியும் உண்டாகும். காதுகளில் இரைச்சல், கண்களை வலித்து ஒரு பக்கமாக இழுத்துக்கொள்ளுதல் போன்ற உணர்ச்சி, தலைச்சுழலல், மூட்டுகள் விலகுதல் போன்ற பிரமை, முதலியவைகளேற்படும். தலையிலுள்ள நரம்புகளனைத்தும் துடிக்கும்.

[1] 14 வேகங்கள் பின்வருமாறு:— வாயுப்பறிதல், ஏப்பம், மலம், மூத்திரம், தும்மல், தாகம், பசி, தூக்கம், இருமல், ஆயாசத்தினால் ஏற்படும் மூச்சு, கொட்டாவி, கண்ணீர், வாந்தி, சுக்கிலம்.

கழுத்தையும், வாயையும் அசைக்க முடியாது. வெளிச்சத்தைப் பார்க்க இயலாது. மூக்கிலிருந்து சளி ஒழுகும். சிற்சில சமயங்களில் மூக்கினுள் வலியேற்பட்டுத் தணியும். பிடித்து விடுவது, எண்ணெய் பூசுவது, வியர்க்கும்படி செய்வது அல்லது துணியினுல் இறுகக் கட்டுவது முதலான காரியங்களினுல் வலி, சற்றுக் குறையும்.

## அர்த்தாவபேதகம்.

தலையினெரு பக்கத்தில் பிளப்பதுபோன்ற குத்துவலி உண்டாகும். இந்த நோய் பதினைந்து நாட்களுக்கொரு முறையோ அல்லது ஒரு மாதத்திற்கொருமுறையோ உண்டாகித் தானுகவே குறைகிறது. இதற்குத் தகுந்த சிகித்ஸை செய்யப்படாவிட்டால் அது கண்களையோ அல்லது காதுகளையோ நாசமாக்கும்.

## பித்தசிரஸ்தாபம்.

தலையிலிருந்து ஆவியெழும்புதல்போன்ற உணர்ச்சி, ஜ்வரம், வியர்வை, கண்ணெரிச்சல், மயக்கம் முதலியவைகளுண்டாகும். இந்நோய் சீதோபசாரங்களினுல் தணிவடையும். இரவு நேரங்களில் வேதனை அதிகமிராது.

## கப சிரஸ்தாபம்.

ருசியின்மை, தலைபாரம், மதமதப்பு, தலையில் குளிர்ச்சி, முதலியவைகளுண்டாகும். மேலும் தலையிலுள்ள நரம்புகள் துடிக்கும். அதிகச் சோம்பலுண்டாகும். பகல் நேரங்களில் இந்நோய் தணிவடைந்து, இரவு வேளைகளில் அதிகப்படும். கண்களைச் சுற்றிலும் வீக்கம், காதுகளில் அரிப்பு, வாந்தி, முதலியவைகளேற்படும்.

## ரக்த சிரஸ்தாபம்.

பித்த சிரஸ்தாபத்தில் காணப்படும் குறிகளுடன், தலையில் அதிகமான வலியேற்படும்.

## ஸந்நிபாத சிரஸ்தாபம்.

மேலே சொன்ன எல்லா வகைகளிலும் காணப்படும் குறிகளும் சேர்ந்து காணும்.

## கிருமிகளினுலுண்டாகும் சிரோரோகம்.

பலவிதமான ஆகாராதிகளையுட்கொள்வதால், சிரஸிலிருக்கும் மாம்ஸமும், இரத்தமும் கோளாறடைந்து அதனதன் நிலைமை கெட்டு, வாதாதி த்ரிதோஷங்களுடனே ஒன்று சேர்ந்து, சிறு சிறு க்ருமிகளை உண்டாக்குகின்றன. அவை தலையிலுள்ள இரத்தத்தை உறுஞ்சி, தாங்கமுடியாத வலியைக் கொடுக்கின்றன. மனது ஒரே நிலையில் இராது. ஜ்வரம், இருமல், பலக்குறைவு முதலானவைகளேற்படும். மண்டையில் வரட்சி, வீக்கம், பிளக்கப் படுவதைப்போன்ற வலி, தலை முதல் உடம்பு முழுவதும் செதில் செதிலாக உரிதல், அரிப்பு, மதமதப்பு முதலியவைகளுடன் காதில் இரைச்சல், சிவப்பு நிறமுள்ள சளி இவைகளும் ஏற்படும்.

## சிரக் கம்ப ரோகம்.

வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து, தலையை நடுங்கச் செய்யும்.

## சங்ககம்.

வாதாதி தோஷங்கள் பித்தத்துடனும், இரத்தத்துடனும் சேர்ந்து, பொட்டுகளின் பக்கங்களில் வீக்கத்தை உண்டாக்குகிறது. அவ்விடத்தில் தாங்கமுடியாத அழற்சியும், வலியும், நிற வேறு

பாடும் உண்டாவதுடன் ஜ்வரம், நாவரட்சி, மயக்கம் முதலியவைகளும் ஏற்படும். வாயில் கசப்பு ஏற்படும். முகம் பசுமை நிறமடையும். தக்க சிகித்ஸை செய்யப்படாவிடில் அதிசீக்கிரத்தில் (3 நாட்களுக்குள்) உயிரைப் போக்கும். தக்க சிகித்ஸையினுல் நிவர்த்தி செய்யக்கூடியது.

## ஸூர்யாவர்த்தம்.

வாயு பிடித்தத்துடனே கூடி பொட்டு, கண்கள், புருவம், நெற்றி முதலான இடங்களில் பொறுக்கமுடியாத வலியை உண்டாக்கும். அதிகாலையில் ஆரம்பித்து நடுப்பகல் வரை கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியாகும். பின்பு தானுகவே தணிவடையும். பசியுடனிருந்தால் வலி அதிகமாகும். சீதோபசாரங்களினுலும் உஷ்ணேபசாரங்களினுலும் குணம் கிடைக்காது.

ஆக நோய்கள் — 10.

# கபாலத்தைப்பற்றிய ரோக வகைகள்.

---

## உபசீர்ஷகம்.

இது சிசுக்களுக்கு ஏற்படும் ரோகமாகும். கபாலத்திலுள்ள வாயு பிரகோபமடைந்து, கர்பத்திலுள்ள சிசுவின் தலையில் நிற மாறுபாடும், வலியும் இல்லாத ஒரு வீக்கம் உண்டாகும்.

**கபால பிடகா,**
**கபால அர்புதம்,**
**கபால வித்ரதி,**

இவைகள் தலையிலேற்படும் கட்டிகளின் வகைகள்.

### அருமஷிகா.

கபாலத்தில் பித்தம், இரத்தம், கபம், கிருமி முதலியவை களினுல், நீர் நிரம்பிய சிறுசிறு கொப்புளங்களேற்படும். இக் கொப்புளங்கள், கடுகு, சோளதான்யம் முதலியவைகளின் பரிமாண முள்ளவை.

### தாருணகம்.

மண்டையில் அரிப்பு, மயிருதிர்தல், மதமதப்பு, வரட்சி, முத லியவைகளுடன் மண்டைத் தோலில் சிறு சுறு வெடிப்புகளும் ஏற்படும். இது கபமும் வாதமும் கோளாறடைவதனுலுண்டாகும் ரோகமாகும்.

### இந்திரலுப்தம். (சொட்டை)

பித்தமும் இரத்தமும் கோளாறடைந்து, மயிர்க்கால்களி லுள்ள மயிர்களை உதிரச்செய்கின்றன. பின்பு அத்துவாரங்களில் இரத்தத்துடன் சேர்ந்த கபம் அடைத்துவிடுவதால் சொட்டை ஏற்பட்டு மயிர் வளர்வதில்லை. இதற்குச் "சாசம்" என்றும் பெயருண்டு.

### கலிதி. (வழுக்கை)

மேலே சொல்லப்பட்ட காரணங்களினுலுண்டான சொட்டை நாளடைவில் விருத்தியாகி வழுக்கையை உண்டாக்குகிறது. இந் நோய் வாதப்பிரகோபத்தினுலேற்படிலவைகள் நெருப்புச் சுட்ட புண்களைப்போல் காணும். பித்தத்தாலுண்டானுல் அவ்விடங்கள் பழுக்கும். கபப்பிரகோபமானுல் அந்த இடத்திலுள்ள சருமம் தடித்துவிடும். அங்குள்ள நிறம் தோஷாதிகளின் பிரகோபங் களுக்கேற்றபடியிருக்கும். (வாதம் — கருப்பு; பித்தம் — மஞ்சள்; கபம் — வெண்மை.) நாகத்தின் நிறத்தையொத்த வழுக்கை

ரோகமும், நெருப்புச் சுட்டதைப்போன்ற வழுக்கையும், அழற்சியுடன் கூடியதும் அசாத்யமாகும்.

## பலிதம் (நரை)

வருத்தம், ச்ரமம், கோபம் முதலானவைகளினுலேற்படும் சரீரதாபம் தலையையடைந்து அங்குள்ள வாதாதி தோஷங்களுடனே கூடி, மயிரைப் பக்குவம் செய்து நரையையுண்டாக்குகிறது.

## வாததோஷம் மேலிட்டால்.

மயிர் பொடிப்பொடியாகும். கருமை நிறமாகவும், கொரகொரப்பாகவும், எண்ணெய்ப் பசையற்றதாகவும் ஆகும்.

## பித்த தோஷத்தினுலுண்டானுல்.

எரிச்சலுடன், மஞ்சள் நிறமும் ஏற்படும்.

## கப தோஷத்தினுலுண்டானுல்.

மயிர் கனத்தும், எண்ணெய்ப் பசையுடன் கூடியதாகவும் இருக்கும்.

## ஸந்நிபாத பலிதத்தில்.

ஸகல குறிகளும் இருக்கும்.

## (உபத்ரவ) பலிதம்.

கடுமையான தலைவலி அடிக்கடி ஏற்படுவதனுல் அகால நரை உண்டாகி வலியும் அதிகமாகும்.

# சிரோரோக
# வைத்திய முறைகளின் மருந்து முறைகளுக்கு
# அட்டவணை.


| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
| --- | --- | --- |
| | **1. சூரண வகைகள்.** | |
| 1 | *(அசமோதாதி)ச் சூரணம் (பீனஸத்திற்கு) ... | 54 |
| 2 | அன்னபேதிச்சூரணம் (பல் நோய், பல் புழுவிற்கு) ... | 103 |
| 3 | (ஏலாதிச்)சூரணம் (பீனிசம், சிரப்பயித்தியம், குஷ்டம், சங்கிராணிச் சூலைக்கு) ... | 49 |
| 4 | (கடுகரோகிணி யாதி)ச்சூரணம் (வாதரோகம் பீனிஸத்திற்கு) ... | 119 |
| 5 | (கருஞ்சீரகாதிச்)சூரணம் (சலதோஷத்திற்கு) ... | 117 |
| 6 | (சுக்காதிச்) சூரணம் (பீனிசத்திற்கு) ... | 39 |
| 7 | (சுக்காதி)ச் சூரணம் (தந்தவாயு, தந்தவலிக்கு) ... | 97 |
| 8 | (பொன்னுங்காணி) மிளகு (பித்தத்தால் தலை திரும்புகிறதற்கு, தலைவலிக்கு) ... | 218 |
| | **2. எண்ணெய் வகைகள்.** | |
| 1 | அசுவகந்தி எண்ணெய் (காது செவிடுக்கு) ... | 7 |
| 2 | அதனவில்வாதித் தைலம் (பீனஸம், சிரோவாயு முதலிய மண்டை வியாதிகளுக்கு) ... | 120 |
| 3 | அத்தி எண்ணெய் (சிரநோய், கண்ணோய், செவி நோய், உடம்பு வற்றல், உடம்புக் கடுப்பு, சலக்கழிச்சல், உஷ்ணத்திற்கு) ... | 17 |


* பிறைக்குறிகளுள் காணப்படும் பெயர்கள் முறையே மருந்தின் முதற்சரக்கைக் குறிப்பன.

| எண் | மருந்துகளின் பெயர் | | பக்கம். |
|---|---|---|---|
| 4 | அமுக்கிராத்தைலம் (காது நோய்க்கு) | ... | 19 |
| 5 | அமுதகலையெண்ணெய் (பித்தரோகம், கபால தோஷம், பீனஸம், துர்வரட்சி முதலானவைகளுக்கு உள்ளுக்கு) | ... | 133 |
| 6 | அரிமேதாதித்தைலம் (பற்களினசைவு, பற்களில் இரணம், முகரோகம், துர் வாசனைக்கு) | ... | 80 |
| 7 | (அலரித்தைலம்) (மண்டைக்குத்தலுக்கு நஸ்யமிட) | ... | 205 |
| 8 | (அழிஞ்சில் வேர்த்)தைலம் (பீனஸத்திற்கு மூழ்க) | ... | 51 |
| 9 | ஆடுதீண்டாப்பாளைத் தைலம் (கபால வாயுவிற்கு மூழ்க) | ... | 155 |
| 10 | ஆதண்டைத்தைலம் (பீனஸத்திற்கு மூழ்க) | ... | 124 |
| 11 | ஆதண்டைத்தைலம் (தலைவலிக்கெல்லாம் மூழ்க) | ... | 183 |
| 12 | ஆதண்டைத்தைலம் (தலைவலிக்கு) (வேறு) | ... | 183 |
| 13 | ஆமலகத் தைலம் (மயிர் வளர) | ... | 149 |
| 14 | ஆயில்ய எண்ணெய் (பல்லசைவு, பல் வீக்கத்திற்குக் கொப்பளிக்க) | ... | 96 |
| 15 | ஆயில்ய எண்ணெய் (சிரோ வியாதி பீனசங்களுக்கு) | ... | 165 |
| 16 | (ஆலம் மொட்டு)த்தைலம் (தலைமயிர் சுருட்டை செம்பட்டைக்கு) | ... | 148 |
| 17 | ஆலம்பட்டைத்தைலம் (காதில் சீழ் வருகிறதற்கு) | ... | 26 |
| 18 | (இஞ்சித்) தைலம் (பீனஸம், நாஸிகாரோகத்திற்கு) | ... | 62 |
| 19 | (ஊமத்தை யிலை) எண்ணெய் (தலைத் தினவு, கபால குஷ்டத்திற்கு மூழ்க) | ... | 186 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 20 | (எருக்கிலை) எண்ணெய் (காதில் சீழ் வடிகிறதற்கு) ... | 24 |
| 21 | (எருக்கம்பா) லெண்ணெய் (உடன் வந்த உள் நாக்கிற்கு உச்சியிலிட) ... | 135 |
| 22 | (எலுமிச்சைத்) தைலம் (நாசியில் நீர் ஒழுகுதல், பீனிசம், கபால சூலைக்கு) ... | 154 |
| 23 | எலுமிச்சைத் தைலம் (சிரோ வாயு, கபால சூலை, பித்தம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், பீனஸத்திற்கு வேறு) ... | 159 |
| 24 | (எலுமிச்சை) யெண்ணெய் (ஒருத்தலை வலிக்கு மூழ்க) ... | 222 |
| 25 | (எலுமிச்சை) எண்ணெய் (மண்டைச் சூலைக்கு) ... | 205 |
| 26 | (எலுமிச்சை) எண்ணெய் (தலைவலிக்கு மூழ்க) ... | 184 |
| 27 | ஏலாதித்தைலம் (ஒருத்தலைநோய்க்கு மூழ்க) ... | 177 |
| 28 | (கடுகரோகிணி) எண்ணெய் (காது செவிடிற்கு) ... | 5 |
| 29 | (கடுகு) எண்ணெய் (காது செவிடிற்கும் காதிரைச்சலுக்கும்) ... | 12 |
| 30 | (கடுக்கா) யெண்ணெய் (காது செவிட்டிற்கு) ... | 7 |
| 31 | (கண்டங்கத்திரி) எண்ணெய் (பல் வலி, பல் குத்தல், முதலியவைகளுக்கு முழங்காலில் தடவ) ... | 87 |
| 32 | (கண்டங்கத்திரித்) தைலம் (பீனசத்தாலேற்பட்ட தலை நோய்க்கு மூழ்க) ... | 58 |
| 33 | (கண்டங்கத்திரியாதி) எண்ணெய் (நாசிகா ரோகத்திற்கு நசியம் செய்ய) ... | 64 |
| 34 | (கருவேலம்பட்டைத்) தைலம் (சிரநோய், கண்ணோய், செவிநோய், கடுப்பு, உடம்பு வற்றல், சலக்கழிச்சலுக்கு) ... | 15 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 35 | (கலப்பைக்கிழங்கு) எண்ணெய் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) ... | 174 |
| 36 | (காக்கைமாரிப் பருப்பு எண்ணெய்) (காதில் ஈ புகுந்தால்) ... | 30 |
| 37 | (குடூச்யாதி) தைலம் (வாதசோணிதம், பித்தம். தலைவலி, கபால சூலை, நாசி வியாதிகளுக்கு மூழ்க) ... | 157 |
| 38 | (குதிரை லெத்தி) எண்ணெய் (செவியடைப்பிற்கு) ... | 5 |
| 39 | (குப்பைமேனி) எண்ணெய் (காதில் சீழ் வருகிறதற்கு) ... | 25 |
| 40 | (குப்பைமேனி) மருந்து (பல் புழுவிற்கு, வலிக்கு) ... | 96 |
| 41 | (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்திற்கு மூழ்க) ... | 119 |
| 42 | (கையாந்தகரைத்) தைலம் (பீனிசம், மண்டை வலி, நீர் விழுதலுக்கு மூழ்க) ... | 130 |
| 43 | (கையாந்தகரைத்) தைலம் (கபாலத் தினவு, மயிர் வெட்டிற்டு மூழ்க) ... | 156 |
| 44 | (கையாந்தகரைத்) தைலம் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) ... | 172 |
| 45 | (கையாந்தகரை) எண்ணைய் (மண்டை வியாதிகளுக்கெல்லாம் மூழ்க) ... | 187 |
| 46 | (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்திற்கு மூழ்க) ... | 53 |
| 47 | (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்தினால் நீர் விழுதல், தும்மலுக்கு) ... | 47 |
| 48 | (கோடகசாலை) எண்ணெய் (காதில் சீழ் விழுகிறதற்கு) ... | 23 |
| 49 | (சடைச்சி) எண்ணெய் (காது செவிடு, வலி, வாயு முதலியவைதீர) ... | 8 |

| எண் | மருந்துகளின் பெயர் | | பக்கம். |
|---|---|---|---|
| 50 | சாசித் தைலம் (உதிரும் மயிர் வளர) | ... | 145 |
| 51 | (சாதீபலாதி) தைலம் (பீனசம் ஒன்பதற்கும் மூழ்க) | ... | 115 |
| 52 | (சித்ரகாதி)த் தைலம் (மயிர் உதிர்கிறதற்கு) | ... | 114 |
| 53 | சிற்றுமுட்டித் தைலம் (மூக்கு நீர்ப் பாய்ச்சலுக்கு உள்ளுக்கு) | ... | 110 |
| 54 | சிற்றுமணக்கெண்ணெய் (காதில் சீழ் விழுதலுக்கும், செவிடிற்கும்) | ... | 28 |
| 55 | (சீந்தில்கொடி)த் தைலம் (மூக்கடைப்பு, நீர்ப் பாய்ச்சல், மூக்குத் தினவிற்கு) | ... | 196 |
| 56 | (சீரகாதி)த் தைலம் (குன்மம் 8, குஷ்டம், வாந்தி, பித்தம், சிறுகிறுப்பு. உஷ்ணம், சோகை, பாண்டு, தசவாயு, கணம், கபாலசூலை, நீர் முதலிய நோய்களுக்கு) | ... | 160 |
| 57 | தசமூல எண்ணெய் (காது செவிட்டிற்கு | ... | 11 |
| 58 | தசமூல தைலம் (காது குத்தல், இரைச்சலுக்கு) | ... | 38 |
| 59 | (தாழை விழுதுத்) தைலம் (பீனசத்திற்கு மூழ்க) | ... | 122 |
| 60 | திரிபலையெண்ணெய் (தலைப் பொடுகிற்கு) | ... | 188 |
| 61 | திரிகுடாதித் தைலம் (காதில் சீழ் வழிகிறது, காது மந்தநோய் கபாலக் குரிசிலுக்கு) | ... | 14 |
| 62 | (திப்பிலியாதி)ப் பூச்சு எண்ணெய் (பற்களில் வாயிலேற்படும் வலி, வீக்கத்திற்கு) | ... | 76 |
| 63 | (துளசி) எண்ணெய் (மூக்கினால் சீழ்விழுதல், நீர் விழுதல், தலைத் திகைப்பு, முகரோகத்திற்கு ஆச்சியம்) | ... | 108 |
| 64 | (பிரமியிலைத்) தைலம் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) | ... | 171 |
| 65 | பிருங்காமலக தைலம் (நரைதிரை மாற) | ... | 153 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 66 | புளியாரைத் தைலம் (காதிரைச்சல், சீழுக்கு) ... | 21 |
| 67 | (புளியிலை) எண்ணெய் (தலைத்தினவு, பொடுகு, சூடு, மீன் சிலம்புபோலுதிர்தல், கடி விஷம், தலைப்புற்று, மயிருதிர்தல், புழு வெட்டிற்கு மூழ்க) ... | 163 |
| 68 | (பெருங்காய) எண்ணெய் (காதில் சீழ் வடிதல் நிற்க) ... | 28 |
| 69 | (பெருங்குருத்து) எண்ணெய் (மண்டை வியாதிக்கு மூழ்க) ... | 166 |
| 70 | (பேய்க்கொமட்டி) எண்ணெய் (ஒருத்தலை வலிக்கு மூழ்க) ... | 178 |
| 71 | (பொன்னுங்காணித்) தைலம் (பைத்தியத்திற்கு மூழ்க) ... | 169 |
| 72 | மருள் எண்ணெய் (காதுமந்தம். வாயுவிற்கு) ... | 12 |
| 73 | (மாசிக்கா) யெண்ணெய் (பல்லசைவு, பல் வலிக்கு மேல் பூச) ... | 94 |
| 74 | (மாதுளம்பூ) த்தைலம் (பீனிசம் சகலத்திற்கும்) | 51 |
| 75 | (மிளகு) த் தைலம் (பீனசம் பதினெட்டிற்கும் நஸ்யமிட) ... | 39 |
| 76 | (மிளகுத்தைலம்) (பீனிஸத்திற்கு) ... | 126 |
| 77 | (மிளகு) கோரோசனை)த் தைலம் (கபால வலிக்கு மூழ்க) ... | 162 |
| 78 | முக்கூட்டெண்ணெய் (செவியடைப்பு, தலை நோய் செவியிரைச்சல், மந்தக்காய்ச்சல் முதலானதற்கு) ... | 2 |
| 79 | முக்கூட்டெண்ணெய் (சகல பீனிசங்களுக்கும் மூழ்க) ... | 55 |
| 80 | முக்கூட்டெண்ணெய் (தலைவலி, கழுத்திசிவு கண்ணெரிவிற்கு மூழ்க) ... | 176 |
| 81 | முள்ளி யெண்ணெய் (காதின் நோய்க்கும் சீழ் விழுகிறதற்கும்) ... | 20 |

| எண் | மருந்துகளின் பெயர் | | பக்கம். |
|---|---|---|---|
| 82 | முள்ளி யெண்ணெய் (காதின் நோய்க்கும், சீழுக்கும்) | ... | 22 |
| 83 | (முள்ளுக்கத்தரித்) தைலம் (பீனிசத்திற்கு நசியமிட) | ... | 58 |
| 84 | மூதண்டத் தைலம் (பீனிசத்திற்கு மூழ்கவும், நஸ்யமிடவும்) | ... | 125 |
| 85 | வாதமடக்கி முக்கூட்டெண்ணெய் (தலைவலி, கபாலச்சூலை, சிரோரோகத்திற்கு மூழ்க) | ... | 237 |
| 86 | (வில்வாதி)த்தைலம் (நீர்ப்பீனிசம், வாய்ப்பீனிசம், சிருய்ப்பீனிசம், இரத்தபீனிசத்திற்கு) | ... | 55 |
| 87 | (வெங்காய எண்ணெய்) (ஒருத்தலைவலிக்கு நஸ்யம்) | ... | 213 |
| 88 | (வெள்ளாட்டுப்பால்) தைலம் (பீனிசத்தால் வரும் சிரோரோகம் நாஸிகாரோகங்களுக்கு நஸ்யமிட) | ... | 59 |
| 89 | தேங்காய்ப்பாலெண்ணெய் (மண்டையூனத்திற்கு நஸ்யம்) | ... | 210 |
| 90 | தேங்காய்ப்பாலெண்ணெய் (பல்லசைவு, பல்கூச்சம், பல்வாயுவுக்குக் கொப்பளிக்க) | ... | 98 |
| 91 | (நஞ்சறப்பாய்ந்தான்) எண்ணெய் (மண்டை வியாதிகளுக்கெல்லாம் மூழ்க) | ... | 162 |
| 92 | நாயுருவி விதைத்தைலம் (வாதத்தால், பித்தத்தால், உஷ்ணதிக்கத்தாலுண்டான தலைவலிக்கு நஸ்யமிட) | ... | 212 |
| 93 | நாயுருவி எண்ணெய் (ஒருத்தலைவலிக்கு நஸ்யமிட) | ... | 223 |
| 94 | (நாய்வேளை)த்தைலம் (பீனசம் 18க்கும்) | ... | 44 |
| 95 | நிர்குண்டித்தைலம் (உள் நாக்கு வளர்ச்சி, முகரோகத்திற்கு மூழ்க) | ... | 139 |
| 96 | நொச்சியெண்ணெய் (செவியடைப்பிற்கு) | ... | 4 |
| 97 | நொச்சியெண்ணெய் (காது செவிடிற்கு) | ... | 10 |

| எண் | மருந்துகளின் பெயர் | | பக்கம். |
|---|---|---|---|
| 98 | நொச்சியெண்ணெய் (காது வலிக்கு) | ... | 36 |
| 99 | நொச்சியெண்ணெய் (உச்சியிடி, தலைக்குத் திற்கு) | ... | 168 |
| 100 | பருத்திப்பிஞ்சு எண்ணெய் (காதில் சீழ்விழுகிற தற்கு) | ... | 29 |
| 101 | பழந்தின்னி வெளவால் தைலம் (மயிர் சுருட் டைக்கும், மயிர் வளரவும்) | ... | 149 |
| 102 | (வெள்ளைப்பூண்டுத்) தைலம் (ஒருத்தலை வலிக்கு நஸ்யம்) | ... | 216 |
| 103 | (வேர்க்கொம்பு) எண்ணெய் (காது வலிக்கு) | ... | 13 |
| 104 | (வேர்க்கொம்பு) எண்ணெய் (காது வலிக்கு) | ... | 35 |
| 105 | வேர்க்கொம்புத்தைலம் (காது செவிடிற்கு | ... | 6 |
| 106 | வேளை எண்ணெய் (காதில் சீழ் விழுதல், குத்தலுக்கு) | ... | 23 |
| | **3. மாத்திரை வகைகள்.** | | |
| 1 | அக்கிராக் காராதி மருந்து (உதடு வெள்ளைக்கு) | ... | 143 |
| 2 | (அரப்பொடி) உருண்டை (பல்லசைவிற்கு) | ... | 82 |
| 3 | (அரப்பொடி) மருந்து (பல்லசைவிற்கு) | ... | 91 |
| 4 | அரிமேதாதி உருண்டை (தந்தரோகத்திற்கு) | ... | 77 |
| 5 | (ஆவாரை விடத்தேரி) உருண்டை (சலதோஷத்திற்கு) | ... | 217 |
| 6 | (இந்துப்பாதி) உருண்டை (வாயுவிற்கு) | ... | 208 |
| 7 | (உவர்மண்) உருண்டை (உண்ணாக்கிற்குத் தடவ) | ... | 140 |
| 8 | (சுக்காதி) உருண்டை (காய்ச்சல். குளிர், தலை, வலி, செரியாக்குன்மம், பேய்க்கு) | ... | 218 |
| 9 | (பெருங்காய) உருண்டை (பல் வீக்கம், பல் லசைவு, பல் புழுவிற்கு) | ... | 102 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 10 | (மரிசாதி) வடகம் (நாவிலெழுவியாதிகட்கு வாயிலடக்க ... | 75 |
| | **4. பூச்சு மருந்துகளும், பத்து வகைகளும்,** | |
| 1 | அருகம்வேர்ப்பூச்சு மருந்து (தலைவலிக்கு) ... | 236 |
| 2 | (இலைக்கள்ளி) வேர்ப்பட்டை மருந்து (நீர்க் கோர்வைக்கு) ... | 113 |
| 3 | ஈச்வரமூலி மருந்து (வேறு) ... | 225 |
| 4 | (உத்தாமணிப்) பத்து ... | 219 |
| 5 | எருக்கம்வேர்க்கடுகுப் பத்து (பெருந்தலைவலிக்கு) ... | 240 |
| 6 | (எருக்கம்பால்) தொடு மருந்து (நெடுநாள்வந்த உள்நாக்கிற்கு) ... | 136 |
| 7 | (ஓடுவியிலை) மருந்து (உதட்டுப்புண்களுக்கு) ... | 140 |
| 8 | (ஓமாதிப்)பத்து (தலைவலிக்கு) ... | 203 |
| 9 | (கோவையிலைப்)பத்து (பீனிசத்திற்கு) ... | 72 |
| 10 | (சிறுகீரைப்பத்து) (தலைவலிக்கு) ... | 204 |
| 11 | (சுண்ணும்புத்) தொடுமருந்து (உள்நாக்கிற்கு) ... | 137 |
| 12 | (சுண்ணும்புத்) தொடுமருந்து (உள்நாக்கிற்கு) வேறு ... | 137 |
| 13 | (சுண்ணும்பு) மருந்து (உள்நாக்கிற்குத்தடவ) ... | 138 |
| 14 | (சேராங்கொட்டைத்) தேய்மருந்து (மயிர் உதிர்தல் நிற்க) ... | 151 |
| 15 | (மாங்கொட்டையாதி)ப்பத்தும், நஸ்யமும் (மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு) ... | 107 |
| 16 | (வில்வக் குடுக்கைப்) பூச்சு மருந்து (உதட்டின் புண், வெடிப்பு, வெள்ளைக்கு) ... | 143 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| | **5. நெய் வகைகள்.** | |
| 1 | (அதிமதுர) நெய் (தலைவலி, கபால வலிக்கு நஸ்யமிட) ... | 200 |
| 2 | (ஆலம் விழுது) நெய் (நாசியால் வரும் இரத்தக் கிருமிக்கு நஸ்யம்) ... | 105 |
| 3 | (கருநொச்சி) நெய் (பதினெண் பீனிசம், நீர்ப் பாய்ச்சல், மண்டைச்சூலை, காதிரைச்சல், தும்மல், தந்தசூலை, நேத்திர ரோகம் முதலானதற்கு) ... | 128 |
| 4 | (சரபேந்திர) கிருதம் (பீனிசம், சிரோ வாய் விற்கு) ... | 117 |
| 5 | (சீந்தில்) நெய் (பீனிசத்திற்கு) ... | 65 |
| 6 | (பேய்ப்புடல்) நெய் (ஒருத்தலை நோய்க்கு நஸ்ய மிட) ... | 234 |
| 7 | வலம்புரிக்காய் நெய் (காது வலிக்கு) ... | 37 |
| | **6. கஷாய வகைகள்.** | |
| 1 | (கருவேலம்பட்டை)க் கஷாயம் (பல் வலிக்கு, பல் வீக்கத்திற்குக் கொப்பளிக்க) ... | 88 |
| 2 | (கருங்காலிக்) கஷாயம் (பல் வலிக்குக் கொப் பளிக்க) ... | 85 |
| 3 | (கருங்காலிப்பட்டை) நீர் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க) ... | 91 |
| 4 | (தசமூலாதி) கஷாயம் (சலதோஷத்திற்கு) ... | 114 |
| 5 | (புகையிலைக்) கஷாயம் (பல்வலிக்குக் கொப் பளிக்க ... | 99 |
| 6 | (மருதம்பட்டைக்) கஷாயம் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க) ... | 93 |
| 7 | (மண்டூராதி)க் கஷாயம் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க) ... | 100 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 8 | (வெள்ளெருக்கம்பட்டைக்) கஷாயம் (பல் புழு விழ மருந்து) ... | 100 |
| 9 | (வேம்பாதிக்) கஷாயம் (சிரோவியாதிகளுக்கு) ... | 241 |
| | **7. நஸ்ய வகைகள்.** | |
| 1 | (அகத்திப் பழுப்புச்சாறு) நஸ்யம் (ஒருத்தலை வலிக்கு) ... | 181 |
| 2 | அடப்பம் விதை நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) ... | 224 |
| 3 | (அரளி, கருஞ்சீரகம்) முகரமருந்து (தலைவலிக்கு முகர) ... | 234 |
| 4 | (அருகம்புல்) நஸ்யம் (நாசியினுல் இரத்தம் விழுகிறதற்கு) ... | 104 |
| 5 | (இஞ்சிச்சாறு) நஸ்யம் (ஒருத்தலைவலி, பீனஸம் கபால வலிக்கு நஸ்யமிட) ... | 195 |
| 6 | (ஈச்வரமூலி) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 225 |
| 7 | (எருக்கம்பழுப்பு) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 179 |
| 8 | (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) ... | 48 |
| 9 | (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) ... | 52 |
| 10 | (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) ... | 57 |
| 11 | (குங்குமாதி) நெய் (இரத்த பீனிசம், சிராய் பீனிசம், சலப்பீனிசம், சுக்கில பீனிசத்திற்கு நஸ்யமிட) ... | 197 |
| 12 | (குப்பைமேனியாதி) நஸ்யம் (ஒருத்தலைவலி நோய்க்கு) ... | 233 |
| 13 | (கோவையிலைச்) சாறு நஸ்யம் (தலைவலிக்கு) ... | 180 |
| 14 | (சமுத்திராப்பழ) நஸ்யம் (தலைவலிக்கு) ... | 203 |
| 15 | சமுத்திராப்பழ நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 220 |
| 16 | சமுத்திராப்பழ நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 221 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 17 | (சாரணை வேர்) நஸ்யம் (பீனிசத்திற்கு) ... | 60 |
| 18 | (சாரணைக்கிழங்கு) நஸ்யம் (நாசியில் நீர் விழுதல், அடைப்பு, தினவிற்கு) ... | 112 |
| 19 | (சாரணைக்கிழங்கு) நஸ்யம் (மூக்கடைப்பு, நீர்ப் பாய்ச்சல், மூக்குத்தினவிற்கு நஸ்யம்) ... | 196 |
| 20 | (சிறுகீரை) நஸ்யம் (பீனசத்திற்கு) ... | 72 |
| 21 | (சிகைக்காய் கொழுந்து) நஸ்யம் (தலைவலிக்கு) ... | 215 |
| 22 | (சமுத்திராப்பழ) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) வேறு ... | 221 |
| 23 | (சமுத்திராப்பழ) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 229 |
| 24 | (சுக்காதி) நஸ்யம் (ஒருத்தலைவலி, இருத்தலை வலிகளுக்கு) ... | 180 |
| 25 | (சுண்டையிலை) நஸ்யம் (நாசியில் இரத்தம் விழுகிறதற்கு) ... | 107 |
| 26 | (செவ்வகத்தியிலை) நஸ்யம் (தலைநோய்க்கு) ... | 228 |
| 27 | (தேங்காய்ப்பால்) நஸ்யம் (பீனஸம், மூக்கடைப்பு, காதடைப்பிற்கு) ... | 56 |
| 28 | (தேற்றும்வேர்) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) ... | 229 |
| 29 | (நவச்சார) முகரும் மருந்து (தலைவலிக்கு முகர) ... | 215 |
| 30 | (நாயுருவிச்சாறு) நஸ்யம் (கபால சூலைக்கு) ... | 200 |
| 31 | (பூசினிச்சாறு) நஸ்யம் (கபால சூலைக்கு) ... | 228 |
| 32 | (பொன்னுங்காணிச்சாறு) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) ... | 225 |
| 33 | (பொன்னுங்காணிச்சாறு) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) ... | 228 |
| 34 | (மகிழம்வித்து) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) ... | 199 |
| 35 | (மருதம் வித்து) நஸ்யம் (தலைநோய்க்கு) ... | 201 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 36 | (மாங்கொட்டை) நஸ்யம் (மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு) ... | 106 |
| 37 | (வசம்பு, வேளை) நஸ்யம் (தலைவலி, தலை பாரத்திற்கு) ... | 202 |
| 38 | (வெங்காய) நஸ்யம் (மூக்கினால் இரத்தம் வீழ்வதற்கு) ... | 73 |
| 39 | (வெள்ளாட்டுப்பால்) நஸ்யம் (நாசியால் இரத்தம் வீழ்கிறதற்கு) ... | 71 |
| | **8. பச்சிலை மருந்துகள்.** | |
| 1 | (ஊமத்தை) மருந்து (பல்லீறுகளில் வீக்கம், பல் வலிக்கு) ... | 75 |
| 2 | (எட்டிக்கொட்டைக்) கல்பம் (நரை, திரைமாற) ... | 152 |
| 3 | (கரந்தை)க் கல்பம் (நரை, திரை மாற) ... | 147 |
| 4 | (கீழாநெல்லிக்) குளிசம் (ஒருத்தலைவலிக்கு) ... | 192 |
| 5 | (கீழாநெல்லி) மருந்து (பல் வலிக்கு) ... | 93 |
| 6 | (கையாந்தகரைக்) கல்பம் (நரை, திரை மாற) ... | 146 |
| 7 | (கொத்தமல்லி) மருந்து (பல் வியாதிகளுக்குக் கொப்பளிக்க) ... | 74 |
| 8 | (கொன்றைப்பட்டை) மருந்து (பல்லசைவு, பல் நோய்க்குக் கொப்பளிக்க) ... | 87 |
| 9 | (சங்கிலை) மருந்து (ஒருத்தலைவலிக்கு உள்ளுக்கு) ... | 194 |
| 10 | (செம்பை முள்ளி) மருந்து (பல்லசைவிற்கு வாயிலடக்க) ... | 83 |
| 11 | (சுக்காதி) மருந்து (ஒருத்தலைவலிக்கு) உள்ளுக்கு) ... | 194 |
| 12 | (தும்பையிலைப்) பிழிமருந்து (தலைநோய்களுக்குக் காதில் பிழிய) ... | 194 |
| 13 | (துளசி வேர்) மருந்து (மூக்கிலே இரத்தம் கட்டியாய் விழுகிறதற்கு) ... | 72 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
| --- | --- | --- |
| 14 | (மகிழமரப்பட்டை) மருந்து (பல் வலிக்கு) ... | 86 |
| 15 | (முக்காவேளை) மருந்து (தந்த அசைவிற்கு வாயிலடக்க) ... | 83 |
| 16 | (வெள்ளைப்பூண்டு, நாயுருவி) மருந்து (பற்களில் வலி, பல்லரணைக்கு) ... | 84 |
| 17 | (வேப்பிலைப்பஞ்சாங்க)க் காயகல்பம் ... | 147 |
| 18 | (வேளை) மருந்து (பல்வலிக்கு வாயிலடக்க) ... | 95 |
| 19 | (வேளை) மருந்து (தலைவலிக்கு நஸ்யம்) ... | 201 |
| 20 | (வேளைக்)குளிசம் (தலைவலிக்குக்கட்ட) ... | 204 |
| | **9. செந்தூரம்.** | |
| 1 | வங்கச்செந்தூரம் (சலக்கோர்வைக்கு) ... | 111 |
| | **10. பற்ப வகைகள்.** | |
| 1 | கல்நார் பற்பம் (தந்தரோகம், சயம், இருமல் சேத்துமகாசம், சுவாசகாசம், மந்தார காசத்திற்கு) ... | 79 |
| | **11. கலிக்கம்.** | |
| 1 | (மஞ்சள்) மருந்து (நேத்திரத்தில் புண்ணிற்கு) ... | 224 |
| 2 | மோதிரம் (ஒருத்தலைநோய், சுளுக்கு, கண்ணோய் பேய், விப்புருதி, முகமறியா வீக்கத்திற்கும்) ... | 230 |
| | **12. குழம்பு வகைகள்.** | |
| 1 | (ஆலம்பட்டை)க் குழம்பு (வாய்க்கோணல், கபால வலிப்பிற்கு) ... | 209 |
| 2 | (கடுகரோகிணித்) தேன் (மண்டைவலி, நீர்ப் பாய்ச்சல், பீனசத்திற்கு நசியமிட) ... | 197 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 3 | காடிக்குழம்பு (தலைவலிக்குப்பத்து) ... | 212 |
| 4 | (ரஸாதிக்) களிம்பு (உதடு வெடிப்பிற்கும், பல் கிரந்திக்கும் பூச) ... | 141 |
| | **13. சாறு வகைகள்.** | |
| 1 | (அந்தரத்தாமரைச்) சாறு மருந்து (மயிர் வளர) ... | 144 |
| 2 | அவுரி இலைச்சாறு மருந்து (உதட்டின் புண்ணிற்கும், வெள்ளைக்கும், புழுவிற்கும் பூச்சு) ... | 142 |
| 3 | (ஆடைதோடைச்சாறு) மருந்து (நாசியால் இரத்தம் விழுகிறதற்குக் குடிமருந்து) ... | 105 |
| 4 | (ஆமணக்கம் புஷ்பச்சாறு) மருந்து (காதிரைச்சல், புழுவிற்கு) ... | 31 |
| 5 | (ஆம்பல் மலர்) மருந்து (மூக்கிலிருந்து இரத்தம் கட்டியாக விழுகிறதற்கு) ... | 72 |
| 6 | (இஞ்சிச்சாறு) மருந்து (காது வலிக்கு) ... | 34 |
| 7 | (எருக்கிலைச்சாறு) மருந்து (காது வலிக்கு) ... | 32 |
| 8 | (எலுமிச்சை) மருந்து (காதில்சீழ் வடிதலுக்கு) ... | 27 |
| 9 | (சீந்திலிலைத்) தேய் மருந்து (மயிர் கறுக்க) ... | 151 |
| 10 | (நண்டுச்சாறு) மருந்து (காது செவிடிற்கு) ... | 32 |
| 11 | (நாயுருவிச்சாறு) மருந்து (காது சீழுக்கு) ... | 30 |
| 12 | (நாயுருவிச்சாறு) மருந்து (பல் வலி, பல் புழு, பல்லசைவிற்கு) ... | 101 |
| 13 | (நாயுருவி) மருந்து (பல் சொத்தைக்கு) ... | 102 |
| 14 | (நெருஞ்சிவேர்ப்) பிழி மருந்து (தலைநோய்க்குக் கண்களிலிட) ... | 226 |
| 15 | (மருக்காரைப்பழ) மருந்து (பல்லசைவு, பல் வலிக்கு அடக்கிக்கொள்ள) ... | 90 |

| எண் | மருந்துகளின் பெயர் | | பக்கம். |
|---|---|---|---|
| 16 | (மிளகாதிப்) பிழிமருந்து (ஒருத்தலைவலிக்குக் கர்ணபூரணம்) | ... | 193 |
| 17 | (முத்தெருக்கஞ் செவிச்சாறு) மருந்து (காதில் புழுவிற்கு) | ... | 33 |
| 18 | (முருங்கையிலை) மருந்து (காது செவிடிற்கு) | ... | 9 |
| 19 | (விளாம்பழச்சாறு) மருந்து (காது வலிக்கு) | ... | 34 |
| 20 | (வெங்காயச்சாறு) மருந்து (பல்லில், நாவில் வரும் வியாதிகட்கு) | ... | 74 |
| 21 | (வெள்ளை வெங்காயச்சாறு) மருந்து (ஒருத்தலை நோய்க்குக் காதுகளிலிட) | ... | 238 |
| | **14. புகை வகைகள்.** | | |
| 1 | (ஊமத்தைப்) புகை (பீனிசத்திற்கு) | ... | 43 |
| 2 | (எருக்கங்கோல்) புகை (பீனிசத்திற்கு) | ... | 70 |
| 3 | ஏலாதிப்புகை (ஒருத்தலைவலிக்கு முகர) | ... | 222 |
| 4 | (கண்டங்கத்திரி) விதைப்புகை (பல் வலிக்கு, புழுவிற்கு) | ... | 88 |
| 5 | (கண்டங்கத்திரி) விதைப்புகை (பல் வலிக்கு பல் புழுவிற்கு) | ... | 89 |
| 6 | (கண்டங்கத்திரி)ப் புகை (பல் வலிக்கு) | ... | 99 |
| 7 | கருஞ்சீரகாதிப்புகை (தலைவலிக்கு) | ... | 182 |
| 8 | (குப்பைமேனிச்சாறு) புகை (பீனிசத்திற்கு) | — | 129 |
| 9 | (குரட்டைப்பழப்) புகை (பீனிசத்திற்கு) | — | 41 |
| 10 | (கெந்தகாதிப்)புகை (நீர்ப்பீனிசத்திற்கு) | — | 113 |
| 11 | (சந்தனாதிப்) புகை (தலைவலிக்கு) | — | 235 |
| 12 | (நாகணந்தி)ப்புகை (பீனிசத்திற்கு) | — | 131 |
| 13 | (பாம்பு வஸாதிப்) புகை (ஒருக்காலுந்தீராத ஒருத்தலைவலிக்கு) | — | 232 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம். |
|---|---|---|
| 14 | (புகையிலைப்) புகை (பல்வலிக்கு) ... | 99 |
| 15 | (பெருங்காயப்) புகை (கபால வாயுவிற்கு) ... | 190 |
| 16 | (பெருங்காயப்) புகை (ஒருத்தலைவலிக்கு) ... | 192 |
| 17 | (பேய்கொமட்டிப்) புகை (சொத்தைப்பல், பல் பூச்சி, பல் வலிக்கு) ... | 104 |
| 18 | (மஞ்சளாதிப்) புகை (ஒருத்தலை நோய், மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு) ... | 227 |
| 19 | (மருக்காரைப்) புகை (பீனசத்திற்கும், துர் நாற்றத்திற்கும்) ... | 42 |
| 20 | (ரஸாதிப்) புகை (பீனிசத்திற்கு) ... | 43 |
| 21 | (ரஸாதிப்) புகை (பீனிசத்திற்கு நஸ்யமாக உபயோகிக்க பத்தியத்துடன்) ... | 67 |
| 22 | (ரஸாதிப்) புகை (கபாலச்சூலை, மார்பில் புண், ஈளை, இருமலிற்கு) ... | 189 |
| 23 | (வெற்றிலைச்சாறு மிளகுப்) புகை (பீனிசத் திற்கு) ... | 69 |
| 24 | (வெள்ளெருக்கம்) புகை (தலைவலிக்கெல்லாம்) ... | 213 |
| 25 | (வெள்ளைப்பூண்டுச்) சாறுத்திரி (சிரோபாரம், சிரசில் வலிக்கு) ... | 191 |
| | **15. பொட்டண வகைகள்.** | |
| 1 | (திப்பிலியாதிப்)பொட்டணம் (பீனிசத்திற்கு) ... | 70 |
| | **16. வேது வகைகள்.** | |
| 1 | (கடலடம்பாதி) வேது (தலைவலிக்கு) ... | 235 |

உ

# சரபேந்திரர் வைத்திய முறைகள்
## (சிரோரோக சிகிச்சை)

---

### காப்பு.

திங்கள் கதிருலவு தஞ்சை நகரையாளுந்
தீரன்துள சேந்திரமகா ராசனீன்ற
துங்கன்சர போஜிரா சாதி ராசன்
சுகரகத்தியர் போகர்சட்டை நாதரும் சூதர்
கொங்கணவர் பிருங்கர்கரு வூரரெல்லோரும்
கூறும்வைத் தியநூலை யுணர்ந்தா ராய்ந்து
பங்கமிலா மலுலகி னுக்காய்ச்செய்யுள்
பாடமத முகவனிரு பாதங் காப்பாம்.

மதமுகவன் தம்பி யறுமுகவன் கந்தன்
மலர்ப்பாதந் தனைப்போற்றி வையகத்தோர்க்
கிதமுறவொன் ருரோக்கிய சாலையொன்று
ஏற்படுத்தி முன்முனிவர் சித்தர்யோக
பதமுறவே சொல்லியநூ றன்னையெல்லாம்
பார்த்துணர்ந்து நாள்தோறுஞ் சரபபூப
முதல்வனிச்ச யித்தபடி சிரோரோகந்தான்
மொழியவயன் றேவிகலை வாணி காப்பாம்.

சிரோரோக முகரோகம் நாவின் ரோகஞ்
செவிரோகம் பல்ரோக கன்மந் தன்னால்
வருரோக மதனலே யுலகமாக்கள்
வாடும்வகை யறிந்துபுவி மன்னர் மன்னன்
சரபேந்திர னுற்பவித்து பகீரதன் போல்
தரணியுப காரமதற் காகவேண்டி
உரமான கடாயமுத லவுடதங்கள்
உரைக்கச்சச் சிதானந்தக் கடவுள் காப்பாம்.

# 1. செவியடைப்பு. தலைநோய், செவியிரைச்சல், மந்தக்காய்ச்சல், முதலானதற்கு முக்கூட்டெண்ணெய்.

செவியடைப்புத் தலைநோவி ரைச்சல்,மந்தஞ்
சேர்ந்ததொரு காய்ச்சலுக் கெண்ணெய்சொல்வேன்
புவியதனிலிலுப்பை சிற்றாமணக் கெள்ளு
புரிந்தயெண்ணெ யது வகைக்கோர் நாழிகூட்டி
நவிலுநொச்சிச் சாறடைத் திராயி ஞேடே
நல்லவுத்தா மணித்தாளி வகைக்கு நாழி
அவுரிமுடக் கொத்தான் கசகசா குறிஞ்சா
னன்பான கருநொச்சிக் கிலுகிலுப்பை. (க)

சங்குகூவ ளைதிராய்கு திரைவாலிச்
சாறடைவெந் நிலக்குமிழும் நத்தைச்சூரி
புங்குஉத்த மதாளி குன்றிக் கூட
புதியாசு ரமூலி வகையீரெட்டும்
தங்குமொவ்வோர் கழஞ்சிதற்குக் கடைச்சரக்குச்
சதகுப்பை யரத்தை மஞ்சள் தேவதாரம்
இங்கிதமாஞ் சாதிக்காய் பெருங்குரும்பை
யிலவங்கம் கடுகுரோக ணியுங் கூட்டே. (உ)

ஏலமுடன் வெளுத்தபிசின் வெள்வெங்காய
மினியகருஞ் சீரகமும் வசம்புசுக்கு
சீலத்திப் பிலிகிராம்பு மிளகு தானும்
செப்பும்வகைக் கோரோர்க ழஞ்சரைத்து
சாலவிந்த முறையதனைப் பிசகாமல்தான்
தைலப்பதத் திறக்கியுச்சி தனில்மத் தித்து
வாலையுட பதம்போற்றி மறுநாள் மூழ்கு
மறுமூன்று நாளுமதை நசியஞ் செய்யே. (ங)

முக்கூட்டு யெண்ணையிதை மூழ்க மூழ்க
முதிர்ந்தமந்தக் காய்ச்சல்போஞ் செவியடைப்பு
நிற்காது தலைநோயும் போகுங் காதில்
நீள்கடலைப் போலிரைச்சல் தீரும் தீரும்

பக்குவமாய்த் தஞ்சைநக ராளும் யோக்கிய
பார்த்தன்சர போசிரா சேந்திரனுரும்
திக்குமனு வோர்களுக்கா யுணர்ந்தா ராய்ந்த
திறமிதுவென் றேபுலவர் செப்பினுரே. (௪)

(இதன் பொருள்)

| | | | |
|---|---|---|---|
| இலுப்பையெண்ணெய் | 1 நாழி | சாறடைச்சாறு ... | 1 நாழி. |
| சிற்றுமணக்கெண்ணெய் | 1 ,, | திராயின்சாறு ... | 1 ,, |
| எள்ளெண்ணெய் | ,, | உத்தாமணிச்சாறு | 1 ,, |
| நொச்சிச்சாறு | ,, | | |

இச்சாறு வகைகளையும், எண்ணெய் வகைகளையும் ஒன்று கூட்டி,

அவுரி
முடக்கொத்தான்
கசகசா
சிறுகுறிஞ்சான்
கருநொச்சி
கிலுகிலுப்பை
சங்கு
வில்வம்
திராய்
குதிரைவாலி (முதியார் கூந்தல்)
சாறடை
நிலக்குமிழ்
நத்தைச்சூரி
புங்கு
உத்தாமணி
குன்றி
ஈச்வரமூலி(பெருமருந்து)

இம் மூலிகைகளின் கொழுந்து வகைக்கு ஒரு கழஞ்சு (1¼ விராகனெடை) எடுத்து, இதனுடன்

சதகுப்பை
சிற்றரத்தை
மஞ்சள்
தேவதாரம்
சாதிக்காய்
பெருங்குரும்பை
இலவங்கப்பத்திரி
கடுகரோகிணி
ஏலக்காய்
வெளிச்சைப்பிசின்,
பூண்டு
கருஞ்சீரகம்
வசம்பு
சுக்கு
திப்பிலி
கிராம்பு
மிளகு

இக்கடைச் சரக்கு வகைகளையும் வகைக்கு ஒரு கழஞ்சு வீத மெடுத்துப் பச்சிலைகளுடனே ஒன்று கூட்டிப் (பால் விட்டு) அரைத்துச் சாறுகூட்டிய எண்ணெய்'' வகையுடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவமாக வடிக்கவும்.

இத்தைலத்தைச் சிரஸில் தேய்த்து மூன்று நாளைக்கு மூழ்கவும். மறு மூன்று நாளிதை நஸ்யம் செய்யவும் (மூக்கிலிடவும்.) இதன் பெயர் "முக்கூட்டெண்ணெய்" ஆகும். இதனைத் தினசரி ஸ்நானம் செய்ய நாட்பட்டமந்தக் காய்ச்சல், காதடைப்பு, தலை நோய்கள், சமுத்திரத்தின் அலை ஓசை போன்ற காதின் இரைச்சல், இம்மாதிரியான பற்பல ரோகங்கள் தீரும்.

---

# 2. செவியடைப்புக்கு நொச்சி யெண்ணெய்.

காதடைப்பென் கின்றதொரு நோய்தனக்குக்
கருதுகிறே னொச்சியெண்ணெய் மனுவுக்காகச்
சாதகமாய் நொச்சிச்சா றெண்ணெய்கூட
சமனாகச் சேர்த்துபிழி செவியதன்னில்
நாதனரு ளாலேசெவி யடைப்புத் தீரும்
நல்லபெரி யோர்கள்முனி வோர்கள் சொன்ன
நீதமது தப்பாமற் சொன்னேமைந்த
நிமலனரு ளாலென்றே யுரைத்திட்டோமே. (ரு)

(இ—ள்)

கரு நொச்சிச்சாறு
சுத்தமான நல்லெண்ணெய்

இவ்விரண்டையும் சமனாக எடுத்து ஒன்றுகூட்டித் தினம் மூன்று துளிகள்வீதம் இருகாதுகளிலும் விட்டுவரச் செவியடைப்புத் தீரும்.

---

# 3. செவியடைப்புக்கு.

இஞ்சிச்சாறு வெண்குதிரை லெத்திச்சாறும்
இரண்டுமொன்ருய்ச் சேர்த்துப்பிழி செவியதன்னில்
மிஞ்சுங்கா தடைப்பென்ப துடனேதீரும்
விசாகனரி மருகன்குகன் றன்னையீன்றும்
பஞ்சபா ணன்றன்னை வென்றஆதிப்
பரமசிவ னருளாலே பெரியோர்சொன்ன
செஞ்சொல்மொழி யுலகத்தோர் கருத்துட்கொண்டு
செவிமருந்து இதைநீயுஞ் செய்துபாரே. (சு)

(இ-ள்)

இஞ்சிச் சாறு
வெளுப்பு நிறமுள்ள குதிரையின் லத்திச்சாறு

இவ்விரண்டையு மொன்ருகச் சேர்த்துக்குலுக்கி 4 துளிகள் வீதமிருகாதுகளிலும் விட்டுவரக் காதடைப்பு உடனே தீரும்.

---

# 4. காது செவிட்டுக்குக் கடுகு ரோகிணி யெண்ணெய்.

காதுசெவி டாகியதுக் கோர்பிரயோகம்
கடுகுரோ கிணியெண்ணெய் சொல்வேன்கேளு
சாதகமாய்க் கடுகுரோ கிணிபுங்கந்தோல்,
சதிரான அவுரியிலை கொன்றைத் தோலும்
பேதகமில் லாமலெண்ணெய் தனிலேகாய்ச்சிப்
பிழியிரண்டு காதினிலு முடனேகேட்கும்
நீதர்குரு நாதர்முதல் வேதமூர்த்தி
நிச்சயமாய்ச் சொன்னமுறை தப்பாதின்றே. (எ)

(இ-ள்)

கடுகுரோகிணி
புங்கந்தோல் (பட்டை)

அவுரி இலை
கொன்றைத்தோல் (பட்டை)

இவைகளைச் சமமாக (வகைக்கு 1 விராகனெடை) எடுத்து நல்லெண்ணெயில் (¼ சேரில்) போட்டு அடுப்பின்மேலேற்றிக் காய்ச்சவும். பக்குவத்திலிறக்கி இருகாதுகளிலும் இத்தைலத்தை விட்டுவரச் செவிடு தீரும்.

---

## 5. காது செவிட்டுக்கு வேர்க்கொம்புத் தைலம்.

வேர்க்கொம்புத் தைலமொன் றுசிதமாக
விளம்புகிறேன் சுக்குத்திப் பிலியுங்கூட
சேர்க்குமஞ்சள் கோடகச் சாலைநான்குஞ்
சரியாகக் கூட்டியெண்ணெய் தனிலேகாய்ச்சி
தீர்க்கமுடன் துணியதனில் தோய்த்துத் தோய்த்துச்
செவியதனிற் பிழிந்துபா ரெண்ணெயைத்தான்
யார்க்குமிது செவிகேட்கு மென்றேயந்த
அருந்தவத்தோர் சொன்னமுறை யதுதப்பாதே. (அ)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
மஞ்சள்
கோடகசாலை

இந்நான்கு சரக்குகளையும் (1 வராகனெடை) எடுத்துச் சுத்தமான நல்லெண்ணெயிலிட்டு (½ சேரில்) சிவக்கக் காய்ச்சிப் பதமாக இறக்கவும். இவ்வெண்ணெயைத் துணியில் நனைத்து இருகாதுகளிலும் பிழியவும். காது செவிடு தீரும்.

குறிப்பு :— வேர்க்கொம்பு—சுக்கு.

---

# 6. காது செவிட்டுக்குக் கடுக்காயெண்ணெய்.

கடுக்காயி னெண்ணெய்சொல்வேன் வயணமாகக்
காதுசெவி டென்றுமந்த நோய்தனக்கு
கடுக்காயின் தோலுடனே வெல்லங்கூடக்
கருப்புட்டி மூன்றுமெண்ணெய் தனிலேபோட்டு
அடுப்பேற்றி யெரித்திறக்கி வடித்துக்கொண்டு
அன்புடனே காதுதனிற் பிழிந்துபாரு
துடிப்பான செவிடும்போம் காதுங்கேட்கும்
சொன்னதொன்றும் பொய்யாது செய்துபாரே. (கூ)

(இ—ள்)

கடுக்காய்த்தோல்
வெல்லம்
கருப்புட்டி (பனை வெல்லம்)

இம்மூன்றையும் சமனெடை (1 விராகனெடை) எடுத்து நல்லெண்ணெயிலிட்டு (1 சேர்), அடுப்பிலேற்றிக் காய்ச்சி வடிக்கவும். ஒருசிறு துணியை இத்தைலத்தில் நனைத்துக் காதுகளில் பிழியக் காது செவிடு தீரும்.

---

# 7. காது செவிட்டுக்கு அசுவகெந்தி யெண்ணெய்.

அசுவகெந்தி யெண்ணெயொன்று சொல்லக்கேளு
அமுக்கிராக்கி ழங்குடனே வசம்புவுள்ளி
நிசமாக நல்லெண்ணெய் தனிலேகாய்ச்சி
நீயிரண்டு வேளைபத்து நாளுங்குத்து
பிசகாமல் மிளகுபொடி யெண்ணெய் ஊற்றி
பிசறித்த லைதனில்தா னிட்டுக்கொண்டால்
நிசமாக செவிடறும்நீ செய்து பாரு
நிமலனரு ளதைநம்பிச் செய்திடாயே (ய)

(இ—ள்)

அமுக்கிராக்கிழங்கு
வசம்பு
பூண்டு

இம்மூன்றையும் சமனெடை யெடுத்து நல்லெண்ணெயி லிட்டுக் காய்ச்சிப் பதமாக வடிக்கவும். இத்தைலத்தைத் தினந் தோறும் (காலை, மாலை) இரண்டு வேளைகளிலும் காதிலூற்றி வரவும். 10 நாளைக்கு உபயோகிக்கவும். தலைக்கு மிளகு கூட்டிய எண்ணெயைத் தேய்த்து வரவும். செவிட்டு ரோகம் நிச்சயமாகத் தீரும்.

---

# 8. காது செவிட்டுக்குச் சடைச்சி யெண்ணெய் (வலி வாயு தீரும்)

சடைச்சியெருக் கம்பழுப்பு நொச்சி கையாந்
தகரைவா ழைக்கிழங்கு முருங்கைப்பட்டை
வடித்தபருத் திதுளசி யிஞ்சியுள்ளி
வாகான பாகல்வகை பதினொன்றுந்தான்
இடித்திதைவ கைக்குழக்குச் சாறுவாங்கி
எள்ளெண்ணெய்ப் படிகாலு மதிலேயூற்றிக்
கடைச்சரக்கிந் துப்புமஞ்சள் கடுகுகாயங்
காட்டுச்சீ ரகம்வகைக்கு வராகனிடை சேரே (௰௧)

சேரிது முன்சாறு விட்டரைத்துச்
சீருடனே கலந்திதையு மடுப்பிலேற்றி
நேருடனே மெழுகுபதத் திறக்கிவைத்து
நெடுங்காதில் விடுரெண்டு நேரந்தானுஞ்
சாரும்வலி கடுப்புவாய் வெல்லாந்தீருஞ்
சடைச்சியெண் ணெய்செய்து பார்க்கத்தானே
சீருலவும் விபுக்கவிதை யுணர்ந்தாராய்ந்து
செப்புமுறை தப்பாது செய்து பாரே. (௰௨)

இ.ள்.)

| | |
|---|---|
| சடைச்சி | துளசி |
| கையாந்தகரை | பாகல் |
| பருத்தி | நொச்சி |
| பூண்டு | முருங்கைப்பட்டை |
| எருக்கம்பழுப்பு | இஞ்சி |
| வாழைக்கிழங்கு | |

இச்சரக்குகளைத் தனித்தனியே இடித்த சாறு வகைக்கு ஒரு உழக்கு எடுத்து இதனுடன், சுத்தமான நல்லெண்ணெய் ¼-படி சேர்த்து

இந்துப்பு
பெருங்காயம்
மஞ்சள்
காட்டுச்சீரகம்
கடுகு

இச்சரக்குகள் வகைக்கு 1 வராகனெடை யெடுத்து, முன் சொன்ன சாறுவகை ஏதேனுமொன்றினல், நன்ருக அம்மியிலிட்டரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து மெழுகு பதத்திலிறக்கவும்.

இத்தைலத்தைத் தினந்தோறும், 4 துளி வீதம் இரு வேளை காதுகளில் விட்டுவர,

காதுவலி, கடுப்பு, வாயு, முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 9. காது செவிட்டுக்கு மருந்து.

காதுசெவிடானதற்கு மருந்து கேளு
கனமான முருங்கையிலை முருங்கை வேருஞ்

சாதகமாய்க் கொன்றையின்றன் பட்டை கூடச்
சதிராக நறுக்கியதைத் துணியிற் போட்டு
காதுதனிற் பிழிரெண்டு வேளையுந்தான்
கைகண்ட திதுசெவிடு முடனே தீரும்
நீதிசர பேந்திரனிதை யுணர்ந்தா ராய்ந்து
நிர்ணயித்த முறையிதுவே செய்து பாரே. (௰௩)

(இ.ள்.)

முருங்கை இலை
முருங்கை வேர்
கொன்றைப்பட்டை

இவைகளை ஒன்றுசேர்த்துப் பஞ்சுபோலிடித்து, ஒரு துணியி லிட்டு இரு காதுகளிலுமிதன்சாற்றை காலையிலும், மாலையிலும் பிழிந்து வரவும். செவிடு தீரும். கை கண்டது.

---

# 10. காது செவிட்டுக்கு நொச்சியெண்ணெய்.

நொச்சிச்சா றுடனெருக்கம் பழுப்புச் சாறும்
நுவலுமெண்ணெய் தனிலெரித்துக் காதிற்குத்து
உச்சிதமாய்ச் செவிடுடனே தீருங் கண்டாய்
உலகத்தின் மானிடர்க்கா யுரைத்ததிந்த
நிச்சயத்தை மனதினம் பிக்கையோடே
நினைந்து செல்வாய் சராசரத்துக்கொருவரான
சச்சிதா னந்தர்தரும் அருளே பெற்ற
சரபேந்திர னிச்சயித்த தருமந்தானே. (௰௪)

(இ.ள்)

நொச்சிச் சாறு
எருக்கம் பழுப்புச் சாறு

இவைகளைச் சமமெடுத்து இதனுடன் நல்லெண்ணெய் சரி கலந்துஅடுப்பின்மேலேற்றி, எரித்துப் பதத்தில் வடித்து, இரு செவிகளிலும் ஊற்றிவரச் செவிடு உடனே தீரும்.

---

# 11. காது செவிட்டுக்குத் தசமூல எண்ணெய்.

தசமூலக் கஷாயம் படிரெண்டெண்ணெய்
    தக்கபடி யரைசுக்குத் தும்புரு காயம்
நிசமாகப் பொடிசெய்து போட்டுக் காய்ச்சி
    நீதைலப் பதத்தில்வடித் தெடுத்துக்கொண்டு
தசமூல யெண்ணெயிது காதிற் குத்து
    தவிராது செவிடுடனே தீருங்கண்டாய்
சசிகொன்றை கங்கையர வணியுகின்ற
    சச்சிதா னந்தபதம் நம்பிச்செய்யே. (டுரு)

(இ.ள்.)

தசமூலக் கஷாயம் — 2 படி }
சுத்தமான நல்லெண்ணெய் — ½ படி, } இவைகளுடன்

சுக்கு
பெருங்காயம்
தும்புரு

இம்மூன்றையும் பொடிசெய்து போட்டுக் காய்ச்சிப் பதமாக வடிக்கவும். இவ்வெண்ணெயைக் காதுகளிலிடச் செவிடு நீங்கும்.

**குறிப்பு :-**

தசமூலமாவன :.

(1) வில்வம்
பாதிரி
வாகை
முன்னை
பெருங்குமிழ்

வழுதலை (பெரு முள்கத்திரி)
நெருஞ்சில்
சிறுமல்லி
பெருமல்லி
கண்டங்கத்திரி

(2) பெருங்காயத்தைப் பொரித்துக்கொள்ளவும்.
(3) 'தும்புரு' என்பது தும்பராஷ்டம் அல்லது பேரரத்தை.

---

# 12. காது செவிட்டுக்கும், காதிரைச்சலுக்கும் கடுகெண்ணெய்.

கடுகெண்ணெய் படியரையூ மத்தஞ்சாறு
கணிதபடி ரெண்டுமஞ்சள் பலமோரொன்று
திடமான யெள்பலமொன் றரைத்துப் போட்டுச்
செய்தைலம் பக்குவமாய்க் காய்ச்சிக் கொண்டு
அடவுடனே யிருநேரங் காதிற் குத்து
அடராது செவிடுகா திரைச்சல் போகும்
திடமான யெண்ணெயிது அன்பினோடே
செய்துபார் பொய்யாது திறமதாமே. (டுசு)

(இ-ள்.)

| | |
|---|---|
| கடுகெண்ணெய் | — ½ படி |
| ஊமத்தையிலைச் சாறு | — 2 படி |

இவைகளை ஒன்று சேர்த்து; மஞ்சள், எள்ளு இவை இரண்டும் வகைக்கு 1 பலமெடுத்து, ஊமத்தையிலைச் சாறு விட்டரைத்து, எண்ணெயுடனே குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக வடித்து, இரு காதுகளிலும் தினமிருவேளை ஊற்றி வரக் காதிரைச்சல், செவிடு முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 13. காதுமந்தம், வாயுவுக்கு மருள் எண்ணெய்.

மருள்வேரும் நல்லெண்ணெய் வகைசேரொன்று
வசம்புசுக்குக் காசிடையே மிளகு வுள்ளி
திறமாயிவ் வகைக்கொவ்வோர் பலத்தைப் போட்டு
செம்மையா யெரித்துபதத் திறக்கிக் கொண்டு

சிரமீது தேய்த்துநீ முழுகி வந்தால்
தீருமே காதுமந்தம் வாயு வெல்லாம்
உரமான மருள்தைலஞ் சொன்னே மிந்த
வுலகிலுள்ள மனிதருக்கா யுண்மைதானே. (௰எ)

(இ.ள்.)

| | |
|---|---|
| மருள் வேர் (சாறு) | 1 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

இவைகளை ஒன்றுசேர்த்து,

| | |
|---|---|
| வசம்பு | — 1 காசெடை |
| சுக்கு | — 1 காசெடை |
| மிளகு | — 1 பலம் |
| பூண்டு | — 1 பலம் |

இவைகளை இடித்து எண்ணெயுடன் கலந்து சிவக்கும்படி எரித்துப் பதத்திலிறக்கிக்கொண்டு, தலையில் தேய்த்துத் தினந்தோறும் ஸ்நாநம் செய்துவந்தால்

காதுமந்தம், வாயு முதலியவை தீரும்:

---

# 14. காதுவலிக்கு வேர்க்கொம்பு யெண்ணெய்.

சுக்குகோ ரைக்கிழங்கு வுள்ளி கோஷ்டம்
சுகமான செங்கழுநீர் வசம்பிந்துப்பு
பக்குவத்திப் பிலியிந்த வகையோ ரெட்டும்
பார்ச்சமனுய்ச் சேர்த்தெருக்கம் பூச் சாறுதன்னை
ஒக்கவே விட்டரைத்து நல்லெண் ணெயின்
உடன்கலந்து எரித்துபதத் திறக்கிக் கொண்டு
இக்குவல யத்தில்வேர்க் கொம்பு யெண்ணெ
யிதைக்காதில் விடுசெவிநோய் தீருந்தானே. (௰அ)

(இ.ள்.)

| | |
|---|---|
| சுக்கு | வசம்பு |
| கோரைக்கிழங்கு | இந்துப்பு |
| பூண்டு | திப்பிலி |
| கோஷ்டம் | |
| செழுங்கழுநீர்க்கிழங்கு | |

இவ்வெட்டு சரக்குகளையும், சமனாக எடுத்து, எருக்கம்பூச் சாறு போதுமான அளவு விட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெயில் குழப்பி, அடுப்பின்மேல் வைத்தெரித்துப் பக்குவத்தில் வடிக்கவும். ஒருசேரெண்ணெய்க்கு ½ பலம் கல்கம் கூட்டவும்.

இதைக் காதில்விடச் செவிடு தீரும்.

---

# 15. காதிற் சீழ்வடிகிறது, காது மந்தநோய், கபாலக்குரிசிலுக்குத் திரிகுடாதித்தைலம்.

பருத்தியிலை மஞ்சள்பிரண் டைக்கிழங்கு
பக்குவமாந் திரிகடுகு சித்திரமூலம்
உருக்கசெவ் வியமுருங்கைப் பட்டைகோஷ்ட
முற்றகற்க டசிங்கு தேவதாரம்
வருக்கநறும் பிசினுமிந் துப்புக்கூட
வசம்புமிஞ்சிச் சாறுமிப்ப தின்மூன் றுந்தான்
திருத்தியே யரைத்துநல் லெண்ணெய்நாழி
திறமாகக் கலந்ததையு மடுப்பிலேற்றே. (௰௬)

ஏற்றியெரித் தேதைல பாகந் தன்னி
லிறக்கிவடித் தந்திசந்தி செவியதன்னில்
வார்த்தடைநீ கபாலக் குரிசிலுஞ் சீழ்
வடிகிறதுஞ் செவிமந்தம் வலியும் போகும்
சாத்திரத்தை யுணர்ந்துணர்ந்து தெளிந்தாராய்ந்த
சரபேந்திரன் நிர்ணயித்த திரிகுடாதி,

போற்றி யரன் பாதமதைப் பணிந்து மிந்தப்
பூதலத்திற் செய்செவிநோய் போகுந்தானே. (உ௰)

(இ.ள்.)

| | |
|---|---|
| பருத்தி இலை | கற்கடசிங்கி |
| மஞ்சள் | இந்துப்பு |
| கொடிவேலிவேர் | சுக்கு |
| கோஷ்டம் | மிளகு |
| நறும்பிசின் | முருங்கைப்பட்டை |
| பிரண்டைக்கிழங்கு | தேவதாரு |
| திப்பிலி | இஞ்சி |
| சவ்வியம் | |
| வசம்பு | |

இச்சரக்குகளைத் தனித்தனி சமனெடை (வகைக்குக் கால் பலம்) எடுத்து, இடித்து நல்லெண்ணெய் ஒரு நாழியில் (பட்டணம் படி $\frac{1}{2}$) கலந்து அடுப்பிலேற்றி எரிக்கவும். இதைப் பக்குவமாக வடித்துக் காலை, மாலை யிருவேளையிலும் காதுகளில் விட்டுவர, கபாலக்குரிசில், காதுமந்தம், சீழ்வடிதல், காதுவலி முதலிய ரோகங்கள் தீரும்.

இதன் பெயர் திரிகுடாதித் தைலம்.

---

# 16. சிரநோய், கண்ணோய், செவிநோய், கடுப்பு, உடம்புவற்றல், சலக்கழிச்சலுக்குக் கருவேலம்பட்டைத் தைலம்.

கருவேலம் பட்டைபலம் நற்பதாகுங்
கற்றாழை மடல்சோறும் பலமும்நாற்ப
திருமருந்தி லொருமருந்தை நறுக்கிப்பானை
யினிற்போட்டுக் குறுணிதண்ணீ ரதனிலூற்றித்
திறமாக வெட்டொன்றாய்ச் சுண்டக்காய்ச்சிச்
சீருடனே பிசைந்ததைவ டித்துக்கொண்டு

உரமான இளநீர்நல் லெண்ணெய் பாலு
மொவ்வொரு வகைக்குமொவ்வோர் படியுங்கூட்டே. (உக)

கொத்தமல்லி வாலுளுவை யரிசியேலங்
கோஷ்டமுடன் சந்தனம்நன் னரிவேரு
முத்தக்கா சதிமதுரம் பச்சிலைச்சிறு
மூலகம்வி ளாம்பிசினும் விளாவின் வேருஞ்
சித்தமட்டி லவங்கஞ் சாதிக்காயுஞ்
செவ்வல்லிக் கொடியகிலுங் கர்ப்பூரந்தான்
ஒத்தசெஞ் சந்தனம்பத் தொன்பதுந்தான்
ஒவ்வொருக ளஞ்சரைத்துக் கரைத்திடாயே. (உஉ)

கரைத்தடுப்பி லேமூன்று நாள்வெச்சென்று
காய்ச்சிநா லாநாளிற் பதத்திலேதான்
இறக்கியதை வடித்தெடுத்து மூழ்குமூழ்கு
இதுகருவே லம்பட்டைத் தைலமாகும்
சிரத்தின்நோய் கண்ணோ யுஷ்ணங்கழிச்சல்
செவிநோயுங் கடுப்புடம்பு வற்றல் போகுந்
தரைக்குளிந்த வைத்தியத்தை யாய்ந்த தஞ்சை
சரபேந்திர னிர்ணயித்த தன்மை தானே. (உ௩)

(இ.ள்.)

| | | |
|---|---|---|
| கருவேலம்பட்டை | — 40 பலம் |
| கற்றாழையிலுள்ள சோறு | — 40 பலம் |

இவ்விரண்டையுமொன்றுகலந்தொரு பானையில் போட்டு தண்ணீரொருமரக்கால் விட்டு, அடுப்பின்மேல் வைத்து எட்டி லொன்றாகக் காய்ச்சி, நன்றாகப் பிசைந்து அக்கஷாயத்தை யிறுத்துக்கொள்ளவும். அதனுடன்

| | |
|---|---|
| இளநீர் | — 1 படி |
| நல்லெண்ணெய் | — 1 படி |
| பசுவின் பால் | — 1 படி |

இவைகளை ஒன்று கூட்டி,

| | |
|---|---|
| கொத்தமல்லி | விளாம்பிசின் |
| கோஷ்டம் | கிராம்பு |
| கோரைக்கிழங்கு | அகில்கட்டை |
| சிறுமூலகம் (சிறுமுள்ளங்கி விதை) | ஏலக்காய் |
| சிற்ருமுட்டி | நன்ஞரிவேர் |
| செவ்வல்லிக்கொடி | பச்சிலே |
| வாலுளுவையரிசி | விளாவேர் |
| சந்தனம் | சாதிக்காய் |
| அதிமதுரம் | செஞ்சந்தனம் |

இச்சரக்குகள் வகைக்கு ஒரு கழஞ்செடுத்துப் பால்விட்டரைத்து மேல்கூறிய கஷாயம் கூட்டிய எண்ணெயுடன் கலந்து, மூன்றுநாள் வரை சிறுகச்சிறுக எரித்து நான்காவது நாளில் பக்குவமாக அடுப்பினின்று இறக்கி வடித்தெடுத்துக்கொள்ளவும். பின்பு பச்சைக் கர்ப்பூரம் ஒரு கழஞ்சை நுண்ணிய தூளாக்கித் தைலத்தில் தூவி வைத்துக்கொள்ளவும். இதனுல் தினந்தோறும் தலேமுழுகிவரத் தலேநோய், கண்நோய்கள், அதிக உஷ்ணம், கழிச்சல், காது நோய்கள், உடம்புக் கடுப்பு, உடம்பு உலர்ந்து போதல் முதலிய பற்பல நோய்கள் தீரும்.

---

# 17. சிரநோவு, கண்ணோவு, செவிநோவு, உடம்புவற்றல், உடம்புக்கடுப்பு, சலக் கழிச்சல், உஷ்ணத்திற்கு அத்தி யெண்ணெய்.

அத்தியிச்சில் அரசாலுமாவின் பட்டை
ஐந்திலொவ்வோர் வகைக்குமிரு பதுபலந்தான்
சுத்தமுடன் இடித்துப்பத்துப் படியுந் தண்ணீர்
கூடவெரித்து வொருபடியா யிறுத்துக்கொண்டு
நித்தியமா யெண்ணெய்யொரு படியும் விட்டு
நெய்தலுப்பு ஒருபலமு மதிலேபோட்டு

வெத்தியுள்ள நன்னாரி வேர்த்தோலேலம்
மெய்யான கோஷ்டம்நெல்லிப் பருப்புங் கூட்டே (உச)

பச்சிலைசந் தனமரத்தை தேவதாரம்
பாங்குஅதி மதுரமில வங்கங்குக்கில்
உச்சிதகோ ரைக்கிழங்குந் தான்றிக்காயு
முயர்ந்தசடா மாஞ்சில்கஸ் தூரிமஞ்சள்
நிச்சயமாங் கடுகுரோ கிணியினாடே
நிசமான வகையிப் பதினேழுந்தான்
இச்சையுடன் வராகனிடை வகைக்குக் கூட்டி
யிதையரைத்துக் கலந்துநன்று யடுப்பிலேற்றே. (உரு)

அடவுடன்வெச் சன்ன வைத்து நாலுநாளும்
ஐந்தாநா ளிறக்கியே வடித்துக்கொண்டு
வடிவுடைய யத்தியெண்ணெ யிதுவேயாகும்
வாலையுட பதம்போற்றி மூழ்கமூழ்க
முடிநோவு கண்ணோவு செவியினோவு
முடம்புவற்றல் கடுப்புசலக் கழிச்ச லுஷ்ணம்
அடராது சொன்னநோ யெல்லாந்தீரும்
அருந்தவத்தோர் விபுக்களுரை தப்பாதின்றே. (உசா)

(இ.ள்.)

| | | |
|---|---|---|
| அத்திப்பட்டை | — | 20 பலம் |
| இச்சிப்பட்டை | — | 20 பலம் |
| அரசம்பட்டை | — | 20 பலம் |
| ஆலம்பட்டை | — | 20 பலம் |
| மாம்பட்டை | — | 20 பலம் |

இப்பட்டை வகைகளை நறுக்கிக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பானையில் போட்டு 10 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி 1 படியாகும்வரை சுண்டக்காய்ச்சி வடிக்கட்டிக்கொண்டு, அதனுடன்

நல்லெண்ணெய் 1 படி விட்டு

நெய்தல்
இந்துப்பு

இவ்விரண்டையும் வகைக்கு ஒருபலம் போட்டு,

நன்னாரி வேர்த்தோல்
நெல்லிப் பருப்பு
பேரரத்தை
கிராம்பு
தான்றிக்காய்
கடுகரோகிணி
ஏலக்காய்
பச்சிலை
தேவதாரு
குக்கில்
சடாமாஞ்சில்
சீவை (சீயக்காய்)
கோஷ்டம்
சந்தனம்
அதிமதுரம்
கோரைக்கிழங்கு
கஸ்தூரி மஞ்சள்

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துக் கஷாயம்விட்டு நன்ருக அரைத்து, கஷாயம் கலந்த எண்ணெயில் குழப்பி அடுப்பின்மேலேற்றிக் கிரமமாக நான்குநாளெரித்து, ஐந்தாவது நாளன்று பக்குவமாக்கி இறக்கி வடித்துக்கொள்ளவும். இத்தைலத்திஞல் தலைமுழுகிவர மேலே சொன்ன பலவித நோய்கள் தீரும்.

---

# 18. காதுநோவுக்கு அமுக்கிராத் தைலம்.

செவிநோய்க்கு அமுக்கிராத் தைலமொன்று
செய்யமுக்கி ராவிலையுஞ் சிவஞர் வேம்பும்
புவியிலுத்தா மணியிவைகள் மூன்றிலுந்தான்
பிடுங்கிவா வகைக்கொரு பிடியுந்தானும்
நலமாக விடித்துமிதைப் பிழிந்துகொண்டு
நல்லெண்ணெய் படியரைக்கா லதிலே யூற்றித்
தவராமற் பெருங்காயம் பலமோவீசந்
தானதிலே போட்டடுப்பி லேற்றிடரே. (உஎ)

ஏற்றியெரித் தேபதத்தி லிறக்கிக்கொண்டு
இறுத்துமந்தத் தைலமதைப் பத்துநாள்தான்
வார்த்தடைநீ காதினிலே யிரண்டுநேரம்
வாகான காதின்வலி வாய்வுந்தீருஞ்
சாத்திரத்தை யுணர்ந்துணர்ந்து வெற்றிபெற்ற
சரபேந்திர னிச்சயிக்குந் தகைமைகாதுக்
கேற்றபிரயோகமிது தப்பாதென்றே
இவ்வுலகத் தோர்கள்செய்வீ ரிதமதாமே. (௩அ)

(இ.ள்.)

| | |
|---|---|
| அமுக்கிரா இலை | — ஒருபிடி |
| சிவனார் வேம்புச் சமூலம் | — ,, |
| உத்தாமணிச் சமூலம் | — ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்துச் சாறு பிழிந்து கொண்டு, நல்லெண்ணெய் $\frac{1}{8}$ படி விட்டு, அதில் வீசம் பலம் பெருங்காயத்தைப் போட்டு, அடுப்பின்மேல்வைத்துப் பக்குவமாக எரித்து, வடிக்கட்டிக்கொண்டு, இரு செவிகளிலும் தினம் 2 வேளை ஊற்றிவரப் பத்து நாளில் காதுவலி, வாயு முதலிய ரோகங்கள் தீரும்.

---

# 19. காதில் நோய்க்கும், சீழ்விழுகிறதற்கும் முள்ளி யெண்ணெய்.

முள்ளிவேர் முருங்கைப் பட்டை
முதிரெருக்கம் வேர்ப்பட்டை
கள்ளியின் சார் வசம்பு
கடுகுடன் வகையோ ராறும்
தெள்ளியே வகைக்கொருகா
சிடையரைத் துழக்கு எண்ணெய்
யுள்ளினி லெரித்துக் காதி
லூற்றநோய் சீழும் போமே. (உக)

(இ.ள்.)

முள்ளிவேர்
கள்ளி
முருங்கைப்பட்டை
வசம்பு
முற்றிய எருக்கம்பட்டை
கடுகு

இவ்வாறு சரக்குகளையும் வகைக்கு ஒரு காசிடை எடுத்து நன்ருக அரைத்து நல்லெண்ணெய் ஒரு உழக்கில் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பதத்திலிறக்கிக்கொண்டு காதிலூற்றிவரக் காது சீழும் மற்ற நோய்களும் தீரும்.

---

# 20. காதிரைச்சல் நோய்க்கும், சீழுக்கும் புளியாரைத் தைலம்.

புளியாரைச் சிறுகீரை யிருவகைச்சாறு
புரியுழக்கு வேப்பெண்ணெய் யுரியுங்கூட்டி
களவில்லா வெளிச்சைபிசின் வசம்புவுள்ளி
கனக்கவொவ்வோர் வராகனிடை யரைத்துப்போட்டு
வளுவில்லா மற்காய்ச்சி யிறக்கிவைத்து
வடித்துமிதைப் புளியாரைத் தைலமென்றே
உளமகிழ்ந்து காதினிலே குத்திப்பாரு
உடனேகா தின்னோய்சீழ் தீருந்தானே. (நல)

(இ.ள்.)

| | | |
|---|---|---|
| புளியாரைச்சாறு | — | 1 உழக்கு |
| சிறுகீரைச்சாறு | — | 1 உழக்கு |
| வேப்பெண்ணெய் | — | ½ படி |

இவைகளுடன்

வெளிச்சைப்பிசின்
வசம்பு
பூண்டு

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை யரைத்துப் போட்டு அடுப்பிலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இத்தைலத்தில் சிறிதளவெடுத்துக் காதிலூற்றிவரக் காது நோய், சீழ் முதலியவை தீரும்.

---

# 21. காதின்நோய்க்கும், சீழுக்கு முள்ளி யெண்ணெய்.

முள்ளியெண்ணெய் செவிநோய்க்கு முரைக்கக்கேளு
முள்ளியின்வேர் முருங்கைவேர்ப் பட்டையூடே
விள்ளெருக்கம் வேர்வசம்பு சமனாய் நாலு
மெள்ளவெருக் கலம் பழச் சாறுதன்னை
அள்ளியே விட்டரைத்து யெருக்கிலைச்சா
றதுவுங்கள் ளிப்பால்நல் லெண்ணெய் கூட்டி
மெள்ளவே வடித்துசெவி தன்னிலூற்று
வெண்சீழுங் காதிநோ யெல்லாம் போமே (கக)

(இ.ள்.)

முள்ளிவேர்
வசம்பு
முருங்கைவேர்ப்பட்டை
வெள்ளெருக்கம்வேர்

இந்நான்கு சரக்குகளையும் சமனாக எடுத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து, அதை

எருக்கிலைச்சாறு
கள்ளிப்பால்
நல்லெண்ணெய்

இவைகளுடன் ஒன்றுகூட்டி அடுப்பின்மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி வடித்துக் காதுகளில் விடவும்.

காது சீழ், காது நோய்கள் முதலியவை குணமாகும்.

---

## 22. காதில் சீழ் விழுகிறதற்குக் கோடகச்சாலை யெண்ணெய்.

நாட்டிற்கோ டகசாலை யிலையுங்கூட
நல்லமல்லி கையிரண்டும் பறித்து வந்து
கூட்டியே நல்லெண்ணெய் யதனிலூற்றிக்
கொண்டிருக்கிப் பிழிந்தந்தி சந்திகுத்த
யோட்டுமே காதினிற்சீ ழுடனேபோகு
முண்மையிது விபுக்கள்சொன்ன முறையிதாமே
பாட்டினிசைக் காய்நடன மாடும்பாதப்
பரமனருள் தனைநம்பிச் செய்துபாரே (௲௨)

(இ.ள்.)

கோடகசாலை இலை
மல்லிகை இலை

இவ்விரண்டையும் பறித்து வந்து 4 சொட்டு நல்லெண்ணெ யுடன் கலந்து இடித்துப் பிழிந்த சாற்றை இரு காதுகளிலும் அந்தி சந்தி விட்டுவரக் காது சீழ் உடனே தீரும்.

---

## 23 காதிற் சீழ் விழுகிறதற்கும் குத்தலுக்கும் வேளை யெண்ணெய்.

வேளைவேர் மாந்தோர்ல் வசம்பு வுள்ளி
வேலையாங் கடலினுரை ஐந்தினில்
சூனுமொவ் வொன்றுக் கொவ்வொரு காசிடை
தூக்குப்பேய்க்கருப்பஞ்சாறு மருள்சாரும்

ஆளுஞ்சே ரதினல் அரைச்சே ரெண்ணெய்
அதிலெரித் தந்திகா லமேகுத்திட
கோளைபோல்சீழ் வீழ்கிறதுங் காதிற்
குத்தலும் போகுமேயிது வுண்மையே (௩௫)

(இ.ள்.)

வேளைவேர்
பூண்டு
மாந்தோல்
கடல்நுரை
வசம்பு

இவைகளை வகைக்கு ஒரு காசெடை யெடுத்துப் பொடித்து, அதனுடன்

| | | |
|---|---|---|
| பேய்க்கருப்பஞ்சாறு | — 1 சேர் | |
| மருள் சாறு | — 1 சேர் | |
| நல்லெண்ணெய் | — ½ சேரும் விட்டு | |

அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாகக் காய்ச்சி வடித்துக் காலை, மாலை சீழ்வரும் காதில் விட்டுவரக் காது குணப்படும். காது குத்தலும் தீரும்.

---

# 24. காதிற் சீழ் வடிகிறதற்கு எருக்கிலை யெண்ணெய்.

எருக்கிலைசாறு கால்சேரு வெள்ளாட்டுக்கோ
மியங்கால்சே ரெண்ணெயொரு சேரதாகுந்
திரச்சுக்குப் பெருங்காய மிளகுமஞ்சள்
தேவதார முள்ளி வசம்பிந்துப்பு
திரிசூலி சதகுப்பைக் கொன்றைக் காயுஞ்
சேர்ந்தபதி ஞென்றைவரா கனெடை கூட்டி
எருக்கிலையி னெண்ணெய்தனை யடுப்பிலேற்றி
யிதமாகவே பதத்திலதை யிறுத்துக்கொள்ளே (௩௬)

கொண்டுபத்து நாள்மூன்று துளியுந்தானுங்
குத்துசெவி தனிலிரண்டு வேளைமூக்கில்
ரெண்டுதுளி நசியஞ்செய் காதினிற்சீ
நில்லாது தரணிதன்னில் மானிடர்க்கா
யுண்டுசெய்த பிரயோகந் தப்பாதிந்த
யுண்மையறிந் தேமுனிவ ருரைத்தவாய்மை
கண்டுகொள்ளு யிம்மருந்தை நீநன்ருகக்
காதினிலே குத்தபலன் காணலாமே. (௩எ)

(இ-ள்.)

| | |
|---|---|
| எருக்கிலைச்சாறு | — $\frac{1}{4}$ சேர் |
| வெள்ளாட்டு மூத்திரம் | — $\frac{1}{4}$ சேர் |
| நல்லெண்ணெய் | — 1 சேர் |

இதனுடன்

| | |
|---|---|
| சுக்கு | இந்துப்பு |
| மஞ்சள் | கொன்றைக்காய் |
| வசம்பு | மிளகு |
| சதகுப்பை | பூண்டு |
| பெருங்காயம் | திரிசூலி |
| தேவதாரம் | |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துச் சாறு விட்டு அரைத்து ஒன்ருகக் குழப்பி அடுப்பிலேற்றி எரித்துப் பதத்திலிறக்கி வடித்துக்கொண்டு காதில் காலை மாலை இருவேளைகளிலும் 3 துளிகள் வீதம் பத்து நாளைக்கு விட்டுத், தினம் 2 துளி வீதம் மூக்கிலிட்டு நஸ்யமிடவும். காது சீழ் தீரும்.

## 25. காதிற் சீழ்விழுகிறதற்குக் குப்பைமேனி யெண்ணெய்.

குப்பைமேனியின்வேரு மதினுடக் கொழுந்தும்
ஆடுதின்னுப்பாளை வேர்க்கொழுந்

தப்பவே கழற்சிக்கா யளவரைத்
தநுவுங் குங்கிலியமு மிளகிவை
செப்பமாக வராகனிடை யொன்று
சேரவே யெண்ணெய்கால் சேரினிற்கூட்டி
தப்பிலாமலே காய்ச்சியே பத்துநாள்
தானேகுத்திடச் சீயறுமுண்மையே. (௩அ)

(இ-ள்.)

குப்பைமேனி வேர்
குப்பைமேனிக் கொழுந்து
ஆடுதீண்டாப்பாளை வேர்
ஆடுதீண்டாப்பாளைக் கொழுந்து

இவைகள் வகைக்கு ஒரு கழற்சிக்காய்ப் பிரமாணம் எடுத்து அரைத்து,

| | | |
|---|---|---|
| குங்கிலியம் | — | 1 வராகனெடை |
| மிளகு | — | ,, |

இவைகளையும் ஒன்றுகூட்டி அரைத்து, நல்லெண்ணெய் ¼ சேரில் குழப்பி அடுப்பின்மேல் வைத்துப் பதமாகக் காய்ச்சி வடித்து, 10 நாட்களுக்குக் காதில் விட்டுவரச் சீழ் வருதல் நிற்கும்.

---

# 26. காதிற் சீழ்விழுகிறதற்கு ஆலம்பட்டைத் தைலம்.

ஆலம்பட்டை எருக்கலம் பட்டையும்
அரத்தையுள்ளி வசம்பு கம்பிப்பிசின்
கோலமாந் தேவதார மிவைவகைக்
கொன்றிரண்டு வராக னெடையது
சீலமான நல்லெண்ணெ யரைச்சேருஞ்
சேர்த்ததை யரைத்துப் பத்துநாளுந்தான்
காலமே யந்தியு மூன்று துளியுங்
காதிற்குத்திடச் சீயும்போகு முண்மையே. (௩௯)

(இ.ள்.)

ஆலம்பட்டை
சிற்றரத்தை
கம்பிப்பிசின்
எருக்கம்பட்டை
வசம்பு
தேவதாரம்
பூண்டு

இவைகள் வகைக்கு 2 வராகனெடை எடுத்து அரைத்து நல்லெண்ணெய் ½ சேரில் குழப்பிப் பதமாக எரித்து தினம் காலையும் மாலையும் 3 துளிகள் வீதம் காதுகளில் பத்து நாளைக்கு விட்டுவரச் சீழ் தீரும்.

---

# 27. காதிற் சீழ்விழுகிறதற்கு மருந்து.

எலுமிச்சம் பழச்சாறு கால்படிதான்
இனியதொரு துரிசு வராகனெடைபோட்டு
பலமான ரவிதனிலே வைத்துவைத்துப்
பேதகமி லாமலந்தி சந்தியுந்தான்
நலமாக மூன்றுதுளி காதிற்பத்து
நாள்குத்து அந்திசந்தி காதிற்சீயும்
விலகிப்போம் சொன்னமுறை யதுதப்பாது
விபுக்கள்பிர மாணித்த முறையிதாமே. (சஎ)

(இ.ள்.)

எலுமிச்சம்பழச்சாறு — ¼ படியில்
துரிசு — 1 வராகனெடை

போட்டுக் கடும் வெயிலில் வைத்து, அந்தச் சாற்றைக் காலையும் மாலையும் மூன்று துளிகள்வீதம் காதுகளில் பத்துநாள் குத்தி வரவும். சீழ் வருதல் நிற்கும்.

---

## 28. காதிற் சீழ் ஓடுகிறது நிற்கப் பெருங்காய யெண்ணெய்.

சீயோடுங் காதினுக்கு எண்ணெயொன்று
செயமனுக்கா யசுவனிதே வதைகள்சொல்லு
பாயமிது பெருங்காயம் வசம்புவுள்ளி
பக்குவமாய் வகைக்கோர்வரா கனெடைபோட்டு
தாயகமாய் வேப்பெண்ணெய் காற்சேர்கூட்டி
சதிராக யெரித்திரண்டு வேளைகாதில்
நீயதைகா திற்குத்தச் சீயும்நோயும்
நில்லாது செவிநோயுந் தீருந்தானே. (சக)

(இ.ள்.)

பெருங்காயம்
பூண்டு
வசம்பு

இவை வகைக்கு 1 வராகனெடை போட்டு, நன்கு அரைத்து வேப்பெண்ணெய் ¼ சேரில் குழப்பி அடுப்பின்மேல் வைத்தெரித்து, தினமிருவேளை காதில் விட்டுவரச் சீழ், காது நோய்கள் குணமாகும்.

---

## 29. காதிற் சீழ் விழுகிறதற்குஞ் செவிட்டுக்குமெண்ணெய்.

சித்தாமணக்கங் காய்பத்துத்
திறமாய் வசம்பு குப்பைமேனி
சத்தாயுள்ளி யிதுநாலுஞ்
சமனாய்யெண்ணெ யதுவுங்கால்சேர்

ஒத்தே யெரித்துக் காதில்விடு
　　முடனே செவிடுஞ் சீழ்மாறும்
இத்தாரணியான் சரபேந்திரன்
　　இதவாயுணர்ந்த திம்முறையே. (சஉ)

(இ.ள்.)

சிற்றாமணக்கங்காய் — 10
வசம்பு
குப்பைமேனி
பூண்டு

இவைகளைச் சரிஎடையெடுத்து அரைத்து, நல்லெண்ணெய் ¼ சேரில் குழப்பி எரித்துப் பதத்தில் வடித்துக் காதிலிடக் காது நோய்கள், செவிடு, சீழ் முதலியவைகள் மாறும்.

---

## 30. காதிற் சீழ் விழுகிறதற்குப் பருத்திப்பிஞ்சு எண்ணெய்.

பருத்திப்பிஞ் சிலவம்விதை வலம்புரிக்காய்
　　பாரதனிற் பீனிசப்புல் மாந்தோல் மஞ்சள்
அரைத்தாறை யெண்ணெய்யரைச் சேரிலேதான்
　　அதையரைத்துக் காதில்விடச் சீழ்கள்மாறுந்
தரைக்குள் வைத்தியநூல் உணர்ந்தாராய்ந்த
　　சரபேந்திர னிர்ணயித்தத் தைலமீதே
உரைக்குமொழி தப்பாதுநம்பிச் செய்நீ
　　ஒருக்காலுங் காதினிற்சீ ழுங்காணுதே. (சங)

(இ.ள்.)

பருத்திப்பிஞ்சு　　வலம்புரிக்காய்
இலவம் விதை　　பீனசப்புல்
மாந்தோல்　　மஞ்சள்

இவ்வாறு வகைச் சரக்குகளையும் அரைத்து, நல்லெண்

ணெய் ½ சேரில் குழப்பி, அடுப்பின்மேல் வைத்தெரித்துக் காதில் விடச் சீழ், காது நோய்கள் தீரும்.

---

## 31. காதினிற் சீழ் ஒழுகுவதற்கு மருந்து,

தாயகச் செவி தன்னிலேநோயினுற்
சீயதுதிர ளாகயொழுகிடில்
நாயுருவியின் சாறுபிழிந்திட
நோயுஞ்சீயும் நிலாதறிவீர்களே. (சுசு)

(இ.ள்.)

காதில் சீழ் ஒழுகுவதைக் கண்டால் நாயுருவி இலைச் சாற்றைக் காதில் பிழிந்திடச் சீழ் நோய் தீரும்.

---

## 31. காதிலீப்புகுந்தால் காக்கைமாரிப் பருப்பெண்ணெய்.

காதினிலே ஈப்புகுதில் மருந்தொன்றுண்டு
காக்கைமா ரிவிதையின் பருப்பினோடே
ஓதியக்காக் கரட்டானு மிவையிரண்டில்
ஒவ்வொரு வராகனெடை யெண்ணெய்கால்சேர்
ஊதியதைக் கொதிக்கவைத்தீப் புகுந்தகாதி
லூற்றியுச்சி யிலுந்தேய்த்து நசியஞ்செய்தால்
வாதையுட னீச்செத்து விழுங்கண்டாயே
மயங்காமல் நீயுமதைச் செய்துபாரே (சரு)

(இ.ள்.)

காதில் ஈ புகுந்திடில்

காக்கைமாரிவிதையினுட்பருப்பு — 1 வராகனெடை
காக்கரட்டான் விதை — 1 வராகனெடை

நல்லெண்ணெய் — ¼ சேர்

இவைகளை அடுப்பின்மேல் வைத்துக் கொதிக்கவைத்துப் பதத்திலிறக்கவும். இதை ஈ புகுந்த காதிலூற்றித், தலையிலும் தேய்த்து, மூக்கிலிட்டு நசியமும் செய்யவும். ஈ இறந்து வெளிப் படும்.

**குறிப்பு :—**

காக்கைமாரி என்பது காக்கைக்கொல்லி விதை. இதையே 'பேன்குத்தி விதை' என்றும் வழங்குவர்.

---

# 32. காதினில் புழுவுக்கு மருந்து.

ஆமணக்கம் பூச்செருந்து வசம்புமுள்ளி
யதுநாலும் நறுக்கித்துணி தனிலேபோட்டு
நீமனத்தோ டேகுத்திப் பாருபாரு
நில்லாது செவிப்புழுவுஞ் செத்துவீழும்
நாமினிச்சொன் னேமுனிவ ருரைத்தநீதி
நாவலர்கள் திறமையறிந் திலங்குதஞ்சை
பூமியைச்செங் கோல்செலுத்துஞ் சரபோசேந்திர
பூபதிநிர் ணயித்த புனிதமீதே. (௬௬)

(இ.ள்.)

ஆமணக்கின் புஷ்பம்
வசம்பு
செருந்து
முள்ளி (உள்ளி ?)

இவைகளை நசுக்கி வஸ்திரத்திலிட்டுப் புழுவுள்ள காதினில் பிழியப் புழு இறந்து வெளிப்படும்.

குறிப்பு :-

செருந்து என்பது மணத்தக்காளி.

---

## 33. காதுச் செவிட்டுக்கு மருந்து.

நண்டைக்கால் போக்கியுடம் போடரைத்து
நல்லுப்புச் சுக்குவசம் பிவைகள்மூன்றுங்
கண்டிதமா யொருவராக னெடைபோட்டுக்
கடுகவே நறுக்கியிதைக் காதிற்குத்து
ரெண்டுவேளை யும்பஞ்சிட் டடைத்துவைத்து
நீயிதையும் பத்துநா ளந்திசந்தி
கண்டுசெய் வாயுறுதி யாகத்தானே
காதினிலே செவிடுடனே தீருந்தானே. (சஎ)

(இ.ள்.)

வயல் நண்டைக் கொண்டுவந்து கால்களை நீக்கி அதனுடம்புடன், வசம்பு, இந்துப்பு இவைகள் தனித்தனி ஒரு வராகனெடை யெடுத்து, அம்மியிலிட்டு நசுக்கி துணியில் முடிந்து காதுகளில் பிழியவும். தினம் 2 வேளை பிழிந்து, பஞ்சினால் காதுகளை அடைக்கவும். இம்மாதிரி 10 நாளைக்கு ஊற்றிவரச் செவிடு தீரும்.

---

## 34. காது வலிக்கு மருந்து.

எருக்கிலைவாட் டிச்சாறு பிழிந்துகொள்ளு
இதினுடனே கள்ளிச்சா றிவையிரண்டும்
உருக்கமுடன் சரிகூட்டிக் கொதிக்கவைத்து
ஒவ்வொருநா ளுக்கிரண்டு நேரந்தானும்

வருக்கமுடன் மூன்றுதுள்ளி காதிற்குத்து
மானிடற்கு மேயவர்க ளாற்சகிக்கப்
பொறுக்கமுடி யாவலியுந் தீருந்தீரும்
பொய்யாது செவிநோய்கள் போகுந்தானே (சஅ)

(இ.ள்.)

எருக்கிலைச் சாறு
கள்ளிச்சாறு

இவ்விரண்டையும் சரி அளவெடுத்துக் கொதிக்கவைத்து தினம் இரண்டுவேளை மும்மூன்று துளிகள் வீதம் விட்டுவரப் பொறுக்கமுடியாத காதுக்குத்தல் நிச்சயமாய் தீரும. செவி நோய் களும் போகும்.

---

## 35. காதில் புழுவுக்கு மருந்து.

உத்ததொரு காதிலே புழுவிருந்தால்
ஓர்மருந்து யுண்மையதா யோதக்கேளு
முத்திருக்கஞ் செவிமருள்கா யும்வசம்பும்
உள்ளிசம னெடுத்ததையும் நறுக்கிக்காதில்
குத்துஅந்தி சந்தியுமே செவியினில்தான்
குலைந்துபுழுச் செத்துவிழுந் தப்பாமற்றுன்
உத்ததொரு முறையிதுவென் றருந்தவத்தோர்
உரைத்ததுவுந் தப்பாது உண்மைதானே. (சகூ)

(இ.ள்.)

முத்திருக்கன்செவிப்பூண்டு
மருளங்காய்
வசம்பு
வெள்ளைப்பூண்டு

இவைகளைச் சமமெடுத்து நசுக்கித் துணியிலிட்டுத் தினம்

இரண்டுவேளை காதுகளில் பிழிந்துவந்தால் காதுப்புழு இறந்து விழும்.

---

## 36. காது வலிக்கு மருந்து.

காதுவலிக் கோர்மருந்து விளாம்பழச்சார்
கந்தஇருங் கொம்மட்டிப் பழச்சாறுகூட
மாதுளம்ப ழச்சாறு மிஞ்சிச்சாறும்
வகைதாலுஞ் சரியாகச் சேர்த்துக்கொண்டு
ஊதியெரித் தேசுடலிட் டிறக்கிக்கொண்டு
வுறுதியா யந்திசந்தி குத்துகுத்து
காதுவலி யுந்தீரு முண்மையாகக்
கருத்துடனே யிம்மருந்தைச் செய்துபாரு. (௩௰)

(இ.ள்.)

விளாம்பழச்சாறு
மாதுளம் பழச்சாறு
பேய்க்கொம்மட்டிப் பழச்சாறு
இஞ்சிச்சாறு

இவைகளை ஒன்றுகலந்து அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாக இறக்கவும். இதைத் தினந்தோறும் காலைமாலை காதில் விட்டுவரக்

காதுக் குத்தல், வலி முதலியவை தீரும்.

---

## 37. காது வலிக்கு மருந்து.

அஞ்சக்காதினி லாகும்வலியதற்
கிஞ்சிச்சாற்றினி லிந்துப்புத்தேன்கூட்டி

உஞ்சச்சுடவைத் துடன்காதினில்விட
மிஞ்சும்வலியது மீளுமிதுண்மையே. (ருக)

(இ.ள்.)

இஞ்சியை நசுக்கிச் சாறெடுத்து, அதனுடன் இந்துப்பும் தேனும் விட்டுச் சிறிது சுடவைத்துக் காதுகளில் விடக் காது வலி தீரும்.

---

# 38. காது வலிக்கு வேர்க்கொம்பெண்ணெய்.

சுக்கெண்ணெ யொன்றுகா தின்வலிக்குச்
சுக்குத்திப் பிலிகாய முத்தக்காசு
தக்கவசம் புள்ளியிந் துப்புவேழும்
சரியாகப் பொடிசெய்தெருக் கம்பழுப்பு
ஒக்கவேசாறு நாலுபல முமெண்ணெய்
யோர்பங்குங் கூட்டியெரித் தந்திசந்தி
பக்குவமாய்ப் பத்துநாள் குத்துகுத்து
பாருடனே செவிநோவு பறக்குந்தானே. (ருஉ)

(இ.ள்.)

சுக்கு
கோரைக்கிழங்கு
இந்துப்பு
திப்பிலி
வசம்பு
பெருங்காயம்
பூண்டு

இச்சரக்குகளைச் சமனளவெடுத்துப் பொடிசெய்து எருக்கம் பழுப்புச்சாறு 4 பலமெடுத்து நல்லெண்ணெய் ஒருபங்கு (சேர்) விட்டு, அதில் பொடியைப்போட்டு, எரித்துப் பதத்திலிறக்கித்

தினமிருவேளை காலையிலும் மாலையிலும் 10 நாளைக்குக் காதிற்குள் ஊற்றிவரவும். காது நோய் தீரும்.

---

# 39. காது வலிக்கு நொச்சி யெண்ணெய்.

நொச்சியிலைக் கரிசாரங் கண்ணிபாகல்
நுவலரிய கள்ளியிலை வகைகள்நாலும்
உச்சிதமாய் வகைக்குழக்கு எண்ணெய்நாழி
யுடன்பசும்பா லிருநாழி வசம்பு சுக்கு
அச்சமில்லா மிளகுதிப் பிலியுமல்லி
அதிமதுரம் வாய்விளங்க மகிலுமேலம்
இச்சையில வங்கமிந் துப்புக்காய
மிதுபனிரெண் டுங்காசி னிடைகள்கூட்டே (ருரு)

கூட்டியரைத் தேதூளா யெண்ணெய்தன்னிற்
குழப்பியே யடுப்பேற்றிச் சிறுதீயிட்டு
நாட்டமா யெரித்துப்பதத் திறக்கிக்கொண்டு
நன்ருக வடித்தெடுத்து அந்திசந்தி
போட்டுவா காததனிற் றப்பாமல்தான்
புதன்கிழமை சனிக்கிழமை தைலமிட்டு
வாட்டமில் லாமல்தலை முழுகினலே
வாய்வுகாதி ரைச்சலெல்லாம் போகுந்தானே. (ருசு)

(இ-ள்)

நொச்சியிலைச்சாறு
பாகலிலைச்சாறு
காரிசாரங்கண்ணிச்சாறு
கள்ளியிலைச்சாறு

இவைகள் வகைக்கு ஒரு உழக்குடன்,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | — 1 படி |
| பசுவின்பால் | — 2 படி |

இவற்றைச் சேர்த்து,

| | |
|---|---|
| வசம்பு | அகில்கட்டை |
| திப்பிலி | இந்துப்பு |
| வாய்விடங்கம் | மிளகு |
| கிராம்பு | அதிமதுரம் |
| சுக்கு | ஏலக்காய் |
| கொத்தமல்லி விதை | பெருங்காயம் |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு காசெடை யெடுத்து நன்றாக இடித்துத் தூளாக்கி எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின்மேல் வைத்து, சிறு தீயினால் பதமாக எரிக்கவும். இதை வடித்துக் காலையிலும் மாலையிலும் தினந்தோறும் காதுகளில் ஊற்றி வரவும்.

இத்தைலத்தையே புதன்கிழமைகளிலும், சனிக்கிழமையிலும் விடாமல் தலையில் தேய்த்து ஸ்நாநம் செய்துவர

வாயு காதிரைச்சல் தீரும்.

---

# 40 காது வலிக்கு வலம்புரிக்காய் நெய்.

வலம்புரிக்காய் நெய்யொன்று சொல்வேன் காது
வலியெல்லாம் போகுதற்கு வயணமாக
வலம்புரிக்கா யுடன்கடலி னுரைவசம்பு
வகையொன்றுக் குப்பலங்கால் தட்டிக்கொண்டு
பலமான பன்றிநெய்சேர் அரையில்போட்டு
பதத்தினிற் காதினிற்குத்த வலியெல்லாம்போம்
அலங்கலணி திருமார்பன் சரபோசேந்திர
னனுமதியாற் கைகண்ட முறையிதாமே. (௫௫)

(இ.ள்.)

வலம்புரிக்காய்

வசம்பு
கடல்நுரை

இவை வகைக்குக் கால் பலமெடுத்து, பன்றியின் நெய் ½ சேரிலிட்டுக் குழப்பி, அடுப்பின்மேல் வைத்துப் பதமாக எரித்து வடிக்கவும். இதைக் காதில்விட வலி தீரும்.

---

# 41. காது குத்தலிரைச்சலுக்குத் தசமூலத் தைலம்.

தசமூலக் கஷாயம்படி யிரண்டதாகும்
தரும்படியா லரைப்படியால் கடுகினெண்ணெய்
நிசமாந்தும் பிருஷ்டமுடன் சுக்குக்காயம்
நிறையில்லோர் வராகனெடை பொடிகள்பண்ணி
வசமாகப் போட்டுவதைத் தைலமாக்கி
வடித்துக்கா தினிற்குத்தக் காதிரைச்சல்
பிசகாமல் செவிக்குமுப வலிகள்தீரும்
பின்னென்றும் பேசாதே செய்துபாரே (ருசு)

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| தசமூல கஷாயம் | — 2 படி | இவற்றைச் சேர்த்து |
| கடுகெண்ணெய் | — ½ படி | |

பேரரத்தை
சுக்கு
பெருங்காயம்

இம்மூன்றையும் வகைக்கு வராகனெடை யெடுத்துத் தூள் செய்து ஷை எண்ணெயில் போட்டுப் பதமாக எரித்து வடிக்கவும். இதைக் காதிலூற்றக் காதிரைச்சல், காதுவலி முதலியனவைகள் தீரும்.

---

## 42. பீனிசத்துக்கு சுக்காதிச் சூரணம்.

சுக்குதிப் பிலிகடுக்காய் தான்றிக்காயுந்
 தூதளையும் பேய்ப்பீர்க்கம் விரையுந்தன்றே
டொக்ககருஞ் சீரகம்வே லிப்பருத்தி
 யுடவேரு மெட்டுவகைக் கொவ்வொன்றுக்குத்
தக்ககழஞ் செடுத்திரவி தன்னிலேயுந்
 தான்காயப் போட்டுச்சூ ரணமதாக்கிப்
பக்குவமாய் நெய்கலந்து தின்றுபாரு
 பலபீனி சமுமீளை யிருமல்போமே (ருஎ)

இ.ள்.)

| | |
|---|---|
| சுக்கு | தூதுவளைவேர் |
| தான்றித்தோல் | வேலிப்பருத்தி வேர் |
| கருஞ்சீரகம் | கடுக்காய்த்தோல் |
| திப்பிலி | பேய்ப்பீர்க்கம் விதை |

இவைகளை வகைக்கு 1 கழஞ்செடுத்து (1¼ வராகனெடை) நன்ருக உலர்த்திக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணஞ் செய்யவும். இதை நெய்யில் குழைத்து (1 வெருகடிவீதம்) சாப்பிட்டுவரப்

பீனிசம், ஈளை, இருமல் முதலியவை தீரும்.

---

## 43 பீனிசம் பதினெட்டுக்கும் நசியம்.

படியெண்ணெய்க் குமிளகு தானரைக்கால்
 படிவீதந் தசநாள்முன் தட்டிப்போட்டு,
முடிமீதிற் றேய்த்துநீ முதனுள்தானே,
 மூழ்கிமறு நாள்செய்யும் வகையைக்கேளு
துடியால முகிளவிடத் தரைவேர்ப்பட்டை
 சொல்லுமிவை யிரண்டுக்கொவ் வோர்வகைக்கு

அடவுடனே நன்குளலு மிச்சங்காயின்
அளவரைத்து நெய்யொரு படியதாமே (ருஅ)

ஆமதிலே அபின்கழஞ்சு அதிற்கலந்து
அதைக்காய்ச்சி வடித்தெடுத்து வைத்துக்கொண்டு
நீமனதோ டந்திசந்தி ரெண்டுநாள்தான்
நிறுத்திப்பார் மூன்றுதுள்ளி நாசிதன்னில்
நாமணக்கு நசியஞ்செய் திட்டாயானல்
நாடாது பதினெட்டுப் பீனிசந்தான்
போமதுக்குத் தலைவலிக ளென்பதெல்லாம்
புதுமையா யிதற்குப்பத் தியங்கள்கேளே (ருகூ)

பத்தியமா வின்பாலு நெய்யதாகும்
பாரிளங் கீரைபொரி மாவைப் போட்டு
உத்துநீ தின்னுபின் னென்றுமாகா
துப்புப்புளிப் புதுவற்புக் கசப்பினிப்பு
மத்துமொன்று மாகாது கடினபத்திய
மாகுமிப் படிச்செய்தால் வாங்கும்வியாதி
நத்திச்செய் துபெரியோ ருலகுக்காக
நவிலுமுறை தப்பாது நாடிப்பாரே. (சூம)

(இ.ள்.)

ஒரு படி நல்லெண்ணெயில் $1/8$ படி மிளகை நுணுக்கிப் போட்டு 10 நாளைக்கு ஊறவைக்கவும். பின்பு அதைத் தலையில் தேய்த்து ஸ்நாநம் செய்யவும். மறுநாள்,

ஆலம் மொட்டு
விடத்தேரை வேர்ப்பட்டை

இவையிரண்டையும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து நன்ருக அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் குழப்பி அபினி 1 கழஞ்சும் கூட்டிப் பக்குவமாகக் காய்ச்சி வடிக்கவும். இதைத் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் 3 துளிகள் வீதம் மூக்கில் நஸ்யம்செய்ய 18 வகைப் பீனஸ ரோகங்களும் தீரும். பலவிதத் தலைவலிகளும் தீரும்.

**பத்தியம் :—**

பசுவின் பால், பசுவின் நெய், இளங்கீரை, பொரிமாவு இவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். புளிப்பு, துவர்ப்பு, கைப்பு, தித்திப்புப் பதார்த்தங்களைத் தள்ளவும். கடும் பத்தியமிருக்க வேண்டும்.

---

## 44. பீனிசத்துக்குக் குறட்டைப் பழப் புகை.

குறட்டையுட கனியதனைப் பத்தெட்டுக்
கொண்டுவந்து சாணகலச் சேலைதன்னில்
பிறட்டியந்தச் சாறதனைக் காயவைத்துப்
பின்புமந்தச் சாறதனை யூட்டியூட்டி
மறப்பில்லாப் பதமாக்கி நோயினோடே
வலுவறிந்து அந்திசந்தி ரெண்டுநேரம்
திறத்துடனே மூன்றுநா ளஞ்சாயேழுஞ்
சேரெட்டு நாள்புகையு மூக்கிற்கொள்ளே. (கூக)

திரிசெய்து கொளுத்தியவித் தேதானந்தத்
திரிப்புகையை மூக்கிலே கொள்ளக்கொள்ள
சிரநோவு மண்டைப்புண் தும்மித்தும்மிச்
சேருநாசி தன்னில்தண்ணீர் வீழ்தல்குத்தல்
தரியாது பதினெட்டுப் பீனிசங்கள்
தரையோர்க்காய் வைத்தியத்தை யாய்ந்தாராய்ந்த
சரபேந்திர பூபதியும் பிரமாணித்த
தலைகமையிது கைகண்ட முறையதாமே. (கூஉ)

(இ-ள்.)

பத்து அல்லது எட்டுக் குறட்டைப் பழத்தைச் சாறுபிழிந்து, ஒரு சாண் அகலமுள்ள துணியில் நனைத்துக் காயவைத்து மறுபடியும் சாற்றில் துவைத்துக் காயவைக்கவும். இம்மாதிரி திரும்பத்திரும்பச் சாற்றில் நனைத்து உலர்த்தி வரவும். பின்பு

இத்திரியைக் கொளுத்தி அவித்துவிட்டு அதினின்றெழும் புகையை நன்ருக முகரவும். நோயின் பலமறிந்து காலை, மாலை, இருநேரமும் 3 நாள், 5 நாள், 6 நாள், 7-வதுநாள், 8-வது நாளிலும் புகையைக்கொள்ளவும்.

தீரும் நோய்கள் :—

சிரநோய்கள், மண்டையிடி, மண்டைப்புண், தும்மிதும்மிச் சளிவிழுதல், குத்தல், 18 வகை பீனசங்கள் முதலியவை தீரும்.

---

# 45. பீனிசத்துக்கும், துர்நாற்றத்திற்கும் மருக்காரைப் புகை.

மருக்காரைப் பழஞ்சிலது கொண்டுவந்து
மதன்சாற்றைச் சேலைதன்னிற் ருேய்த்துலர்த்தி
மருக்காலப் படிமூன்று விசையுஞ்செய்து
வகைத்திரியாய்ச் செய்துநெருப் பினிற்கொளுத்தி,
சுருக்காக நாசியினிற் புகைபிடிக்கத்
துடிப்பான தலைவலிதுர் நாற்றமெல்லாம்
ஒருக்காலும் வாராது அந்திசந்தி
யும்புகைகொள் பீனிசமெல் லாம்போந்தானே. (சுரு)

(இ-ள்.)

மருக்காரைப் பழங்கள் சில கொண்டுவந்து அதன் சாற்றில் ஒரு வெண்மையான துணியைத் தோய்த்து உலர்த்தி, இவ்விதம் மூன்றுதடவை செய்து அத்துணியைத் திரியாகச் செய்து கொளுத்தி அவித்து அதிலிருந்து எழும் புகையை நாசியில் பிடித்தால் கடுமையான தலைவலி, துர்நாற்றம், இவை போகும். காலையிலும், மாலையிலும் நாசியில் பிடிக்க எல்லாவகைப் பீனிசமும் போம்.

---

## 46. பீனிசத்துக்கு ஊமத்தைப் புகை.

ஊமத்தைக் காய்ப்பூவேரி லையுந்தண்டோ
டுடன்பிடுங்கி வந்ததைக் காயப்போட்டு
ஆமத்தை யிடித்துபுகை யிலையுங்கூட்டி
யக்கினியிட் டேகுடிக்கக் கபாலப்புத்து
சாமத்தை யும்புகலு மிருமலீளை
தலைவலிமூக் கால்தண்ணீர் வீழ்தல்தீரும்
நாமித்தை யுலகுக்கா யுண்மைசொன்னேம்
நம்பிச்செய் சுரபீனி சங்கள்போமே. (சுச)

(இ.ள்.)

ஊமத்தைச் செடியை காய், பூ, வேர், இலை, தண்டு இவற்றுடன் பிடுங்கிவந்து அதை நன்றாகக் காயப்போட்டு, அதைக் கல்லுரலி லிட்டிடித்துப், புகையிலையையும் கூடச்சேர்த்துக் காகிதத்தில் சுருட்டிக் கொளுத்தி அதன் புகையைக் குடிக்கக் கபாலப்புத்து, இருமல், ஈளை, தலைவலி, மூக்கினின்று நீரொழுகல், இவை தீரும். சுரமும், பீனிசமும் தீரும்.

---

## 47. பீனிசத்துக்குப் புகை.

பீனிசத்துக்குப் புகைகேள் ரசமுஞ்சங்கும்
பலமான குந்திருக்கம் பிசினபினு
மூனமிலாக் கெந்தகமு மரிதாரமும்
முடிக்கார மேழுஞ்சமன் சேர்த்ததற்கு
ஆனபசு வின்நெய்யை விட்டுவிட்டு
அரைத்திட்டுச் சேலையிலூட் டியுலர்த்தி
நீநுணுக்க மாகதிரி செய்துவாவின்
நெய்தோய்த்துக் கொளுத்தியதை நூத்துப்போடே. (சுரு)

நூத்துக்கொருக் காய்க்குழாய் வழியேமூக்கில்
நுட்பமாய்ப் புகைகொள்ளு அந்திசந்தி

யேத்தபுகை யைக்கொண்டால் பீனிசங்க
ளென்பதெல்லாம் முறிந்தோடு மிதற்குப்பத்தியம்
வாத்துறு வின்பால்நெய் கோழிமுட்டை
வகையான முருங்கையிலைக் காயிமாமே
சாத்திரத்தை யாய்ந்துணர்ந்து அருளேபெற்ற
சரபேந்திர பூபதிநிச் சயித்ததாமே. (சுசு)

(இ.ள்.)

ரஸம்
அபின்
முடிக்காரம்
சங்கு
கெந்தகம்
குந்துருக்கம்பிசின்
தாளகம்

இச்சரக்குகளைச் சமனெடுத்து பசுவின் நெய்யினுலரைத்துத் துணியிலூட்டி உலர்த்தித் திரியாகச் செய்துகொண்டு நெய்யில் தேய்த்துக் கொளுத்தி அணைத்துவிட்டு, ஒரு கொருக்காய்த் தட்டைக் குழாய் வழியாகப் புகையை வரும்படி செய்து ஜாக்கிரதையாக மூக்கினுள் அப்புகையைக் காலை, மாலை கொள்ளவும். எல்லா வகைப் பீனிசங்களும் தீரும்.

**பத்தியம் :—**

பால்சாதம், நெய், கோழிமுட்டை, முருங்கையிலை, முருங்கைக் காய் இவை சேர்க்கவும்.

---

## 48. பீனிசம் பதினெட்டுக்கும் தைலம்.

முருக்குநாய் வேளையுடன் குறுந்தூமத்தை
முதிர்ந்தநொச்சி யவுரிநல்ல துளசிதானும்

எருக்கிலையு மெட்டில்வகைக் குச்சேர்கால்
இஞ்சிச்சாறு பனங்காய்ச்சாறு வகைக்கரைச்சேர்
பருத்தவிளா வழுக்கிரு வவுரிவீழி
பண்பான வெண்துத்தி வேர்களஞ்சும்
அரைத்தவிழு தரைப்பலமா மின்னஞ்சாறு
வன்பான பசுமஞ்சள் சாறதாமே. (சுஎ)

மஞ்சள்முசு முசுக்கைவா ழைக்கிழங்கு
வனதூது வளம்பழம்வெத் திலையினோடே
அஞ்சு வேர்(று?)வகைச் சாற்றில்வகை யதுக்குச்சேர்கா
லன்பாமே லங்கழற்கொ டிப்பருப்பே
ரஞ்சிதகோஷ் டமுடனே செண்பகப்பூ
நாலுவகைக் கொவ்வோர்வரா கனெடைகூட்டி
விஞ்சைமிகு வலம்புரிக்காய் சமுத்திரசோகி
விரண்டில்வகைக் குவராக னெடைகூட்டே (சுஅ)

கூட்டுப்பச்சைக் கர்ப்பூரம் காசிடைக்கால்
கொண்டுநல் லெண்ணெயுஞ்சேர் நாலுங்கொண்டு
வாட்டமில்லா மற்சாறு வீழுந்தூளும்
வளமாகக் கலந்ததையு மடுப்பிலேற்றே
காஷ்டமிட் டெரித்துப்பதத் திறக்கிமுழ்கு
கனமான பீனிசமு வாறுமேகும்
நாட்டில்விபு வுணர்ந்தமுறை யிதுதப்பாது
நன்றாகச் செய்பீனி சங்கள்போமே (சுகூ)

(இ.ள்.)

| | |
|---|---|
| கல்யாணமுருங்கை | நொச்சி |
| ஊமத்தை | எருக்கு |
| நல்ல துளசி | குறுந்து |
| நாய்வேளை | அவுரி |

இவைகளின் சாறு வகைக்கு — $\frac{1}{4}$ சேர்

இஞ்சிச் சாறு — $\frac{1}{2}$ சேர்

| | |
|---|---|
| பனங்காய்ச்சாறு | — $\frac{1}{2}$ சேர் |
| பசுமஞ்சள் சாறு | — $\frac{1}{4}$ சேர் |
| முசுமுசுக்கைச்சாறு | — $\frac{1}{4}$ சேர் |
| வாழைக்கிழங்குச் சாறு | — $\frac{1}{4}$ சேர் |
| தூதுவளம் பழச்சாறு | — $\frac{1}{4}$ சேர் |
| வெற்றிலைச்சாறு | — $\frac{1}{4}$ சேர் |

விளாவேர்
வீழிவேர்
அமுக்கிராக்கிழங்கு
வெண்துத்திவேர்
அவுரிவேர்

இவைகளின் அரைத்த விழுது வகைக்கு — $\frac{1}{2}$ பலம்

ஏலக்காய்
சண்பகப்பூ
கழற்சிக்காய்ப் பருப்பு
வலம்புரிக்காய்
கோஷ்டம்
சமுத்திரசோகி (சோழி)
சமுத்திரசோகி (கடல்பாலைவிதை)

இவை வகைக்கு ஒரு வராகனெடை கூட்டி,

பச்சைக் கர்ப்பூரம் — $\frac{1}{4}$ காசெடை
சுத்தமான நல்லெண்ணெய்— 4 சேர்

விழுது, சாறு, தூள் இவைகள் எல்லாவற்றையும் எண்ணெயிற் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கித் தினந்தோறும் தலை முழுகிவர நாள்பட்ட 18 வகைப் பீனிசங் களுந் தீரும்.

# 49. பீனிசந்திஞல் நீர்வீழ்தல், தும்மலுக்குத் தைலம்.

சகலபீனி சங்களுக்கோர் தைலங்கேளு
தருங்கையாந் தகரைநாய்த் துளசியிஞ்சி
வகையான ஈரவெங் காயம்பச்சை
மஞ்சளுடன் நெருஞ்சிமுள்ளிப் பழச்சாறுநன்ருய்
திகழ்நாரத் தம்பழச்சார் துளசியொன்ப
தினில்வகைக்கோர் சேர்காலும் பிழிந்துகொண்டு
அகமகிழ வேநல்லெண் ணெய்நாற்சேர்
அதிற்கலந்து அடுப்பேற்றி யெரித்திடாயே (எஎ)

எரித்துப்பதத் தில்வரத்திப் பிலியுங்கோஷ்ட
மிதமான செங்கழுநீ ரிதுகள்மூன் றில்
சரியாக வகைக்கொருப லந்தூளாக்கித்
தைலத்தில் போட்டுவெரித் தேவடித்து
அரிதான தைலமிது மூழ்கபீனி
சத்தில்நா சித்தண்ணீர் வீழ்தல்தும்மல்
தரியாது பத்தியந்தான் புளிப்புக்கைப்புத்
தவிருபுகை யிலேகூடத் தள்ளிடாயே. (எக)

இ.ள்.)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | நார்த்தம்பழச்சாறு |
| ஈரவெங்காயச்சாறு | இஞ்சிச்சாறு |
| முள்ளிப்பழச்சாறு | நெருஞ்சிச்சாறு |
| நாய்த்துளசிச் சாறு | துளசிச்சாறு |
| பசுமஞ்சள் சாறு | |

| | |
|---|---|
| இச்சாறு வகைகள் வகைக்கு | — $\frac{1}{4}$ சேர் |
| நல்லெண்ணெய் | — 4 சேர் |

இவையெல்லாவற்றையும் ஒன்றுகலந்து அடுப்பின் மேல் வைத்தெரித்துப் பதமாக வரும்போது

| | |
|---|---|
| திப்பிலி | — 1 பலம் |
| செங்கழுநீர்க் கிழங்கு | — 1 பலம் |
| கோஷ்டம் | — 1 பலம் |

இவற்றைத் தூளாக்கித் தைலத்தில் போட்டுப் பதமாக எரித்து வடித்து, இத்தைலத்தினுல் தலைமுழுகிவர

பீனஸம், மூக்கிலிருந்து ஜலம் வருதல், தும்மல் இவை தீரும்.

**பத்தியம் :—**

புளிப்பு, கைப்பு, பதார்த்தங்களை நீக்கவும். புகையிலையையும் நீக்கவும்.

---

# 50. பீனிசத்துக்கு நசியம்.

குங்குமப்பூ மிளகுதிப் பிலியுஞ்சுக்குங்
கூட்டுநால் வகைக்கோர்வரா கனெடைதானு
மங்கையாந் தகரைகுப்பை மேனிநொச்சில்
ஆதண்டை கழற்கோடி முசுமுசுக்கைப்
பங்கமிலாச் சாறடையிவ் வேழில்சேர்கால்
பண்பாகக் கல்வத்தி லிட்டரைத்துப்
பொங்கமா யுருட்டியதைப் பதினேருண்டை
போட்டுவதை நிழலுலர்த்த லாயுலர்த்தே (எஉ)

உலர்த்திவைத்துக் கொண்டுவந்த வுண்டைதன்னில்
ஒன்றெடுத்து மூன்றிலொரு பங்குநோயின்
குணமறிந்து விளவெந்நீ ிற்கரைத்துக்
கொண்டுவந்தி சந்திரெண்டு நேரமந்த
க்ஷணந்தனிலே மூன்றுதுள்ளி மூக்கில்நசியஞ்
செய்துபார் பீனிசங்க ளுடனேதீரும்
நுணுக்கமிது மானுக்கள் பிரமாணித்த
நுட்பமிது தப்பாது செய்துபாரே (எங)

**(இ.ள்.)**

குங்குமப்பூ

திப்பிலி
மிளகு
சுக்கு

இச்சரக்குகள் வகைக்கு 1 வராகனெடை எடுத்து, இடித்துக்

கையாந்தகரைச் சாறு
நொச்சில் சாறு
கழற்சிக்கொடிச் சாறு
சாறடைச் சாறு
குப்பைமேனிச் சாறு
ஆதண்டைச் சாறு
முசுமுசுக்கைச் சாறு

இவைகள் வகைக்குக் கால்சேர் வீதமெடுத்துச் சூரணவகைகளுடன் கல்வத்திலிட்டு ஒவ்வொரு சாருகவிட்டு நன்ருக அரைத்து, அவ்விழுதை 11 உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இவ்வுருண்டையிலொன்றை எடுத்து அதை மூன்றிலொருபங்கு செய்து வெந்நீரில் கரைத்து, காலே, சாயங்காலம் இருவேளைகளிலும் மூன்று துளிகள் வீதம் மூக்கில் நசியம் செய்யவும்.

பீனிசங்கள் தீரும்.

---

## 51. பீனிசம், சிரப்பயித்தியம், குஷ்டம், சங்கிராணி சூலேக்குச் சூரணம்.

ஏலஞ்சித் திரமூல மாங்கொட்டை
யிலவங்கப் பத்திரியிலவங் கப்பட்டையுங்
கோலத்திப் பிலிகிராம் புடனே நல்ல
கொத்தமல் லிக்கடுகு மிளகுடன்
சீலதா ளிசபத்திரி யோமமுந்
திப்பிலி மூலமுஞ்சேரம் லவணமுஞ்

சால மாதளம்பிஞ்சுடனே சுக்கு
தன்னுடன் புளியங்கொட்டைத் தோலதே. (எச)

சரக்கெல்லாஞ் சரியாகவுந் தூக்கியே
தானரைத்துத் தூளாக்கி வடிக்கட்டி
வெருகடித்தூ ளெடுத்தெரு மைத்தயிரில்
மேன்மையே மிகுந்தேனி லுங்கொண்டிடச்
சிரப்பயித்தியம் பீனசங் குஷ்டமுஞ்
சேர்ந்த சங்கிராணியுஞ் சூலையுஞ்
பறக்குமே யிதுகைகண்ட சூரணம்
பாரிலோ ரிதைச்செய்து பரிந்துண்ணே. (எரு)

(இ.ள்.)

| | |
|---|---|
| ஏலக்காய் | சித்திரமூலம் |
| மாங்கொட்டை | லவங்கப்பத்திரி |
| லவங்கப்பட்டை | திப்பிலி |
| கிராம்பு | கொத்தமல்லி விதை |
| கடுகு | மிளகு |
| தாளீசபத்திரி | ஓமம் |
| திப்பிலி மூலம் | இந்துப்பு |
| மாதுளம் பிஞ்சு | சுக்கு |
| புளியங்கொட்டைத்தோல் | |

இச்சரக்கு வகைகளைச் சரியெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்ருக இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஒரு வேளைக்கு வெருகடியளவெடுத்து எருமைத் தயிரில் சாப்பிட்டாலும் அல்லது தேனில் குழைத்துச் சாப்பிட்டாலும்

சிரசிலுள்ள பித்தம், பீனஸம், குஷ்டம், சங்கிராணி (ஸங்கிரஹணி அல்லது வயிற்றுளைவு) சூலை இவைகள் தீரும்.

கைகண்டது.

# 52. பீனிசத்திற்கு மூழ்கத் தைலம். (வேறு)

படியெண்ணெய் தனிலழிஞ்சி வடக்குவேராய்ப்
பார்த்துவெட்டிக் கொண்டுவந்து வரைத்துநன்ருய்
துடியெலுமிச் சங்காயி னளவரைத்துத்
துரிதான மஞ்சாடி யபினுங்கூட்டி
அடவுடனே யெரித்துதலை மூழ்கிதற்கு
அற்புதத்தண் ணீர்காய்ச்சி மூழ்கினுலே
கடிதான பீனிசங்கள் தீரும்நன்ருய்க்
கற்றறிந்தோ ருரைப்படியீ தாகுந்தானே (எசூ)

(இ.ள்.)

வடக்கே நோக்கிப் போகிற அழிஞ்சில் வேரைப் பார்த்து வெட்டிக்கொண்டுவந்து, தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து, அதன் விழுதில் எலுமிச்சங்காய் பிரமாணம் எடுத்து ஒரு படி நல்லெண்ணெயில் குழப்பி, அபின் இரு குன்றியளவும் கூட்டி, இம் மூன்றையும் அடுப்பின்மேலேற்றிப் பதமாக எரித்து வடிக் கவும். தினந்தோறும் இதனுல் தலைமுழுகிவரத் தீராத பீனி சங்கள் தீரும்.

---

# 53. பீனிசஞ் சகலத்துக்குந் தைலம்.

எல்லாப்பீ னிசத்துக்கோர் தைலஞ்சொல்வேன்
இனியமா தளம்பூச்சார் துளசிச்சாறும்
வல்லானநொச் சிலைச்சாறு தும்பைச்சாறு
வகைநாலுக் கொவ்வோர்வகைக் காற்சேர்கூட்டி
கல்லான மிளகுமொரு பலமரைத்துக்
கலந்தெண்ணெய்ச் சேரொன்றிற் றைலஞ்செய்து
உல்லாச மாய்முழுகு பீனிசங்க
ளொன்ருது விபுக்களுரை யும்பொய்யாதே (எஎ)

(இ.ள்.)

மாதுளம்பூச் சாறு
துளசிச்சாறு
நொச்சிச் சாறு
தும்பைச்சாறு

இவைகள் வகைக்குக் கால்சேர் எடுத்து, மிளகு 1 பலமெடுத்துச் சேர்த்து அரைத்து நல்லெண்ணெய் 1 சேர் விட்டுக் குழப்பி அடுப்பின், மீதேற்றிப் பக்குவமாக எரித்து வடித்துத் தலைமுழுகிவரச் சகல பீனிசங்களும் தீரும்.

---

# 54. பீனிசத்துக்கு நசியம்.

குங்குமப்பூ வோர்கழஞ்சு தூக்கிவாங்கு
குணமான சீனியுமவ் வளவேகூட்டி
இங்கிதத்தண் ணீர்விட்டு மையைப்போல
வேயரைத்துப் பசுவின்நெய் யினிற்கலந்து
பொங்கவெரித் துப்பதத்தி லிறக்கிக்கொண்டு
புனிதமாய் நசியமிடு மூன்றுதுள்ளி
அங்கத்திற் பீனிசம்நி லாதுசந்தி
அந்தியும் பத்துதினம் விடாமற்செய்யே (எஅ)

(இ.ள்.)

குங்குமப்பூ 1 கழஞ்சு ($1\frac{1}{4}$ விராகனெடை)
சர்க்கரை ,,

இவ்விரண்டையும் தண்ணீர்விட்டு மைபோலரைத்துப் பசு நெய்யில் கலந்து பொங்குமளவு எரித்துப் பதத்தில் இறக்கிக் கொண்டு தினம் 3 துளிகள் வீதம் 2 வேளை மூக்கிலிடவும். 10 நாளைக்கு உபயோகிக்கவும். பீனிசங்கள் தீரும்.

# 55. பீனிசத்துக்கு மூழ்கத் தைலம்.

நல்லெண்ணெய் படிமுக்கால் பசுவின்பாலும்
நல்லபடி ரெண்டுபொன்னுங் கண்ணியுடே
சல்லாபச் சிறுகீரை யுடனேகையாந்
தகரைமூ வகைக்கியரைப் படியுங்கொண்டு
நெல்லியுட பருப்புசன்ன லவங்கப்பட்டை
நேர்க்கருஞ்சீ ரகமுங்கஸ் தூரிமஞ்சள்
நல்லமிள குடன்செங்கத் தாரிப்பட்டை
நறுஞ்சந்த ணஞ்செண்ப கப்பூத்தானே (எகூ)

அதிமதுரம் வெட்டிவேர் விலாமிச்சம்வேர்
ஆனபதி னொன்றில்வகைப் பலமுங்கூட்டி
இதுவெல்லா மிடித்துச்சூ ரணமதாக்கி
யேவடிக்கட் டிக்கொண்டெண் ணெயிற்கலந்து
இதமாக எரித்துத்தை லப்பதத்தி
லிறக்கிக்கோ ரோசனைகா சிடைதான் ரெண்டு
பதமாகத் தூள்பண்ணிப் போட்டுமூழ்கிப்
பார்மனுக்குப் பீனிசங்க ளெல்லாம்போமே (அ0)

(இ.ள்.)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | — $\frac{3}{4}$ படி |
| பசுவின்பால் | — 2 படி |

பொன்னுங்கண்ணிச்சாறு
சிறுகீரைச் சாறு
கையாந்தகரைச் சாறு
} இவை மூன்றுஞ் சேர்ந்து $\frac{1}{2}$ படி; இவைகளுடன்

| | |
|---|---|
| நெல்லிப்பருப்பு | செண்பகப்பூ |
| கஸ்தூரி மஞ்சள் | இலாமிச்சம் வேர் |
| சந்தனம் | கருஞ்சீரகம் |
| வெட்டிவேர் | செங்கதாரிப்பட்டை |
| சின்னலவங்கப்பட்டை | அதிமதுரம் |
| மிளகு | |

இம்மருந்துகள் பதினொன்றும் வகைக்கு ஒரு பலம் வீத

மெடுத்துச் சூரணம் செய்து வஸ்திரகாயம்பண்ணி எண்ணெ யிற் குழப்பி அடுப்பிலேறறிப் ப த ம ா க வடித்துக்கொண்டு, கோரோசனை 2 காசெடை சூரணித்துப் போட்டுத் தலையில் தேய்த்து முழுகிவரப் பீனிசந் தீரும்.

---

# 56. பீனிசத்துக்குச் சூரணம்.

அசமதாகஞ் சுக்கிந் துப்புக்காய
மபின்புழுங்க லரிசியாறு சரியாய்க்கூட்டி
நிசமான துளசியொரு பிடியிதெல்லாம்
நெடுஞ்சட்டி தனிற்பொறித்த ரைத்துத்தூளாய்
உசிதமாக வடிக்கட்டி வைத்துக்கொண்டு
ஒருவெரு கடிப்பிரமா ணங்கள்தானும்
பிசகாம லந்திசந்தி தின்றுபாரு
பீனிசங்கள் வாய்வும்போம் பிசகிடாதே (அக)

(இ-ள்)

ஓமம்
பெருங்காயம்
சுக்கு
அபின்
இந்துப்பு
புழுங்கலரிசி

இவைகளைச் சரி எடை யெடுத்து, துளசி ஒரு பிடியுஞ் சேர்த்துச் சட்டியிலிட்டு பொன் வருவலாக வறுத்துத் தூளாக இ டி த் து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்கொண்டு, வேளைக்கு வெருகடிப் பிரமாணம் காலை மாலை சாப்பிட, பீனிசங்களும் வாய்வுகளும் தீரும்.

---

# 57. நீர்ப்பீனிசம், வாய்ப்பீனிசம், சிருய்ப் பீனிசம், இரத்த பீனிசத்துக்குத் தைலம்.

செப்புநெருஞ் சிச்சாறு படிதானென்று
சேர்வில்வப் பழச்சோறு விளாங்காய்மாத்திரம்
தப்பிலா மிளகுவலம் புரிக்காய்க் கால்சேர்
தனையரைத்து யெண்ணெயொரு படியதன்னில்
ஒப்புடனே கலந்துயெரித் தேவடித்து
வுறுதியுடன் மூழ்கிவர வுலகிலோர்க்கு
இப்புவியி னீர்ப்பீனிசம் வாய்ப்பீனிச
மிரத்தப்பீ னிசஞ்சிருய்ப்பீ னிசமும்போமே (அஉ)

(இ.ள்.)

செப்புநெருஞ்சிச் சாறு — 1 படி
வில்வப்பழச்சோறு — ஒரு விளாங்காயளவு

எடுத்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| மிளகு — $\frac{1}{4}$ சேர் | } | இவ்விரண்டையும் |
| வலம்புரிக்காய் — $\frac{1}{4}$ சேர் | } | சாறுவிட்டரைத்து |

நல்லெண்ணெய் ஒருபடியிற் கலந்து, அடுப்பின்மீதேற்றிப் பக்குவமாக எரித்து வடித்துக்கொண்டு, தினந்தலைமுழுகி வர, வாய்ப்பீனிசம், சிராய்ப்பீனிசம், ரத்த பீனிசம் இவை தீரும்.

---

# 58. சகல பீனிசங்களுக்கும் மூழ்கத் தைலம்.

நல்லெண்ணெய் நாழிவிளக் கெண்ணெய்நாழி
நற்பசுவின் நெய்நாழி மிளகுநாழி
வல்லமிள கைப்பொடிக ளாக்கிரேகி
வாரமொன்று ரெண்டுவிசை யதிலேமூழ்கு
சொல்லமுடி யாதபீனி சங்கள்தீருஞ்
சோழநா டதைநீதி தவறுதாளும்

வல்லவனுஞ் சரபேந்திர னுணர்ந்தாராய்ந்த
வைத்தியமிது தப்பாமற் செய்துபாரே (அ௩)

(இ.ள்.)

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | — 1 நாழி | இவைகளைச் சேர்த்து |
| ஆமணக்கெண்ணெய் | — 1 நாழி | |
| பசுவின் நெய் | — 1 நாழி | |

மிளகு — 1 நாழியைத் தூளாக்கி

முன் சொல்லிய நெய், எண்ணெய் வகைகளில் குழப்பிச் சூரியபுடமாக வைத்து வாரத்திற்கு இருமுறை இதனுல் தலை முழுகிவர, எல்லாவகைப் பீனிசங்களும் தீரும்.

---

# 59. பீனிசத்துக்கு மூக்கடைப்புக்கு நசியம். காதடைப்புக்குங் குத்தலாம்.

தேங்காயொன்றைத் திருகிப்புளிக் கொட்டைத்தோல்
திறமாக வரைக்கால்சேர் நிறுத்துப்போட்டு
வாங்குமதி னொட்டியிலை துருசிகுன்றி
மாத்திரமின் னுன்குமரைத் துப்பிசறி
பாங்குரவி தனிற்ருனும் வைத்தாயாஞல்
பால்சுவரு மதைப்பிழிந்து வைத்துக்கொண்டு
தேங்கிடவே மூன்றுதுள்ளி நாசிதன்னில்
செய்நசிய மந்திசந்தி யினிலுந்தானே (அச)

அந்திசந்தி யேழுநாள் நசியஞ்செய்நீ
அவனியுள்ள மனிதருக்கு மங்கந்தன்னில்
வந்திடும்பீ னிசந்தீரு மதைத்தானே நீ
வாாகாது தனிற்குத்த வடைப்புத்தீரும்
இந்தநசி யத்திற்குப் பத்தியந்தா
னிதமான புகையிலையும் புளியாகாதே
நந்திசொன்ன முறையிதுதப் பாதுகாணும்
நாடிச்செய் நோயென்ப தும்நாடாதே (அரு)

(இ.ள்.)

ஒரு தேங்காயை யுடைத்துத் திருகி, அதனுடன் புளியங் கொட்டைத்தோல் 1/8 சேர் சேர்த்து; மதிளொட்டி இலை, துரிசு, இவை ஒரு குன்றியளவு எடுத்து, இந்நான்கையும் ஒன்ருகப் பிசறிக் கடும் வெயிலில் ஒரு பக்கமாகச் சாய்த்து வைத்தால் பால் வரும். அதைப் பிழிந்து வைத்துக்கொண்டு, தினம் காலை, மாலை 3 துளி வீதம் மூக்கிலிட்டு நஸ்யம் செய்யவும். இவ்வாறு 7 நாள் செய்யச் சகல பீனிசங்களுந் தீரும். காதிலிடக் காதடைப்புத் தீரும்.

**இதற்குப் பத்தியம் :—**

புளி, புகையிலை நீக்கவும்.

---

# 60. பீனிசத்துக்கு நசியம்.

## வெண்பா.

சர்க்கரையுங் குங்குமமுஞ் சாதிக்காய் மாதளம்பூ
மிக்கதொரு நெய்யோ டிவையைந்துஞ்—சிக்கனவே
தானெரித்து நாசியிலே தளரவே விட்டிட்டால்
பீனிசங்க ளென்பதுமே போம் (௬0)

(இ.ள்.)

சர்க்கரை
குங்குமப்பூ
சாதிக்காய்
மாதுளம்பூ

இந்நான்கு சரக்குகளையுமிடித்து நெய்யுடனே கூட்டிப் பதமாக எரித்து மூக்கில்விடப் பீனிசங்கள் தீரும்.

---

# 61. பீனிசத்துக்கு நசியம்.

இந்துப்பு மிளகு சுக்கு வாய்விளங்க
மினிய முள்ளிக்கத்தரியின் பழத்திேைடே
தந்திவேர் முருங்கைவேர் துளசிவேருந்
தன்னுடனே திப்பிலியுஞ் சரியாய்க்கூட்டி
இந்தமருந்தை யாவின் கோமியத்தை
யிட்டரைத்து நாலுபங்கு எண்ணெய்சேர்த்துத்
தந்திரமாய் நசியஞ்செய் பீனிசங்கள்
தரியாது துர்நாற்ற மெல்லாம் போமே (கூக)

(இ.ள்.)

| | |
|---|---|
| இந்துப்பு | துளசிவேர் |
| வாய்விடங்கம் | சுக்கு |
| முருங்கைவேர் | நேர்வாளவேர் |
| மிளகு | திப்பிலி |
| முள்ளுக்கத்திரிப் பழம் | |

இச்சரக்குகள் தனித்தனி சரி எடை யெடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டரைத்து விழுதிற்கு 4 மடங்கு நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பின்மேல் வைத்துப் பதமாக எரித்து வடிக்கவும்.

இத் தைலத்தினுல் நஸ்யமிடவும். துர்நாற்றமெல்லாந் தீரும்.

---

# 62. பீனிசத்தால் தலைநோவுக்கு மூழ்கத் தயிலம்.

கண்டங்கத் திரிவிரையு மெருக்கம்வேருங்
கடிதான கொடிவேலிப் புங்கம்வித்து
கண்டிடுமோ மஞ்செவ்விய மிவைகளாறுங்
கனமாக வகைக்கிரண்டு காசுங்கூட்டிக்
கண்டிதமாய்க் கோமியத்தை யள்ளியள்ளிக்
கல்வத்தி லிட்டரைத்து மருந்துதானுங்

கண்டநிறை யதுக்குநாற் பங்குஎண்ணெய்
கலந்துசிறு தீயிட்டு எரித்திடாயே (கூஉ)

எரித்துப்பதத் திறக்கியதை வடித்துக்கொண்டு
இவ்வுலகத் தோர்களுக்குப் பீனிசத்தால்
உரைக்கமுடி யாச்சிரத்தி னோயுற்றோர்க்கு
முபாயமாய் நசியஞ்செய் யந்திசந்தி
தரைக்குள்பத்து நாள்மூன்று துள்ளிகுத்து
தரியாது பீனிசங்கள் விலகுமீறுஞ்
சிரத்திநோ யுந்தீருந் தக்கோராய்ந்து
செய்யுமுறை நீயுமதைச் செய்திடாயே (கூங)

(இ.ள்.)

கண்டங்கத்திரி விரை
கொடிவேலி வேர்
ஓமம்
எருக்கம் வேர்
புங்கங்கொட்டை
சவ்வியம்

இவ்வாறு சரக்குகளையும் வகைக்கு 2 காசிடை வீதம் எடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்றாக அரைத்து அந்த விழுதிற்கு 4 மடங்கு சுத்தமான நல்லெண்ணெய் விட்டு அடுப்பின்மேல் வைத்துச் சிறு தீயிட்டு எரிக்கவும். பதங்கண்டு இறக்கி, பீனிசத்தினாலேற்பட்ட தலைவலிக்குத் தினந்தோறும் காலை, மாலை மும்மூன்று துளிவீதம் மூக்கில்வீட்டு நசியம் செய்யவும். 10 தினத்தில் பீனிசம் தீரும்.

---

## 63. பீனிசத்தினால்வரும் சிரோரோகம். நாசிகாரோகத்துக்கு நசியம்.

வெள்ளாட்டுப் பால்நாலு சேரதாகு
மெழிற்கையாந் தகரைச்சாறு சேரோநாலு

எள்ளெண்ணெய் சேரொன்று வாய்விளங்க
மினியகையாந் தகரைத்தூள் மதுரம்கோஷ்டங்
கள்ளமில்லாச் சுக்குமிந்த மருந்துமைந்துங்
காராட்டுப் பால்விட்ட ரைத்தெரித்து
உள்ளபடி மூன்றுநாள் நசியஞ்செய்நீ
யோடுமே சிரோரோக முண்மைதானே (௯௪)

(இ.ள்.)

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டுப் பால் | 4 சேர் | இவைகளுடன் |
| கையாந்தகரைச் சாறு | 4 சேர் | |
| நல்லெண்ணெய் | 1 சேர் | |

வாயுவிடங்கம்
சுக்கு
கையாந்தகரைத்தூள்
அதிமதுரம்
கோஷ்டம்.

இச்சரக்குகளை (1 வராகனெடை) எடுத்து வெள்ளாட்டுப் பால் விட்டு நன்ருக அரைத்து, மேற்சொல்லிய சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, அடுப்பிலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும். இத்தைலத்திஞல் 3 நாளைக்கு நஸ்யம் செய்யச் சிரோரோகங்கள் தீரும்.

---

## 64. பீனிசத்துக்கு நசியம்.

சாரணைவே ரிந்துப்பு மிளகுசீனி
சமஞக வெடுத்துநையத் தட்டியேநெய்
சாரமுள்ள முலைப்பாலுங் கூட்டிமூக்கு
தனில்மூன்று துள்ளியந்தி சந்தியுந்தான்
நேரமது பத்துக்கு நசியஞ்செய்தால்
நீர்ப்பாய்ச்சல் மூக்கடைப்புத் தினவுந்திரு

நேரமதே செய்முன்னோர் ஆய்ந்தறிந்த
நீதிவைத் தியத்தைநம்பிச் செய்திடீரே (கூரு)

(இ.ள்.)

சாறணைவேர்
சர்க்கரை
இந்துப்பு
மிளகு

இவைகளைச் சமமெடுத்து நன்ருக நசுக்கிப் பசுவின்நெய், முலைப்பால் இவ்விரண்டுடன் கூட்டித் துணியிலிட்டு மூக்கில் நஸ்யம் செய்யவும். இதனுல்

ஜலதோஷம், மூக்கடைப்பு, மூக்கில் அரிப்பு இவைகள் தீரும்.

---

## 65. இரத்தப் பீனிசம், சிருய்ப் பீனிசம், சலப்பீனிசம், சுக்கிலப்பீனிசத்துக்கு நசியம்.

குங்குமப்பூ மாதுளம்பூ வாய்விளங்கங்
கோஷ்டம்கை யாந்தகரை மஞ்சள்சுக்கு
இங்கிதத்திப் பிலிமதுரம் வகையெட்டொன்றுக்
கிதமாக வராகனிடை யொன்றுசேர்த்துப்
பொங்குமாப் பாலுழக்கு நெய்யுழக்கு
புனிதருகம் வேர்ச்சாறு முழக்குக்கூட்டி
இங்கிதெல்லாங் கலந்தடுப்பி லேற்றியேதான்
எரித்துப்பதத் திறக்கியதை வைத்திடாயே (கூசு)

பதத்திறக்கி நாசிதனி லந்திசந்தி
பத்துநாள் நசியமது செய்தாயானுல்
உதித்தரெத்தப் பீனிசத்தா லிரத்தம்வீழ்தல்
உரமான சிருய்வீழ்தல் சலங்கள்வீழ்தல்

கதித்தசுக்கிலப் பீனிசம டைப்புமெல்லாங்
கலந்தோடுந் தக்கோர்க ளாய்ந்தறிந்த
திதுதிறமாய்ப் பிரயோக மன்பினோடே
செய்துபார் பீனிசமெல் லாம்போந்தானே (சுஎ)

(இ.ள்.)

| | |
|---|---|
| குங்குமப்பூ | திப்பிலி |
| கோஷ்டம் | வாயுவிடங்கம் |
| சுக்கு | மஞ்சள் |
| மாதுளம்பூ | அதிமதுரம் |
| கையாந்தகரை | |

இச் சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துச் சூரணித்து,

| | |
|---|---|
| பசுவின் பால் | — 1 உழக்கு |
| பசுவின் நெய் | — 1 உழக்கு |
| அருகம்வேர்ச்சாறு | — 1 உழக்கு |

இவைகளுடனே யொன்று கலந்து, அடுப்பின்மேலேற்றிப் பதமாக எரித்து இறக்கவும். இதைத் தினந்தோறும் காலை, மாலை நஸ்யமாகச் செய்துவர, ரத்தபீனிஸம், ஜலபீனிஸம், சிராய்ப் பீனிஸம், சுக்லபீனிஸம், அடைப்பு முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு :—

செய்யுளில் எட்டு எனக்கூறப்பட்டிருப்பினும் 9 மருந்து வகைகளுள்ளன. வைத்ய அட்டவணை 93 நெ. சுவடியில் இம் முறையில் திப்பிலி நீக்கப்பட்டிருக்கிறது.

---

## 66. பீனிசம், நாசிகாரோகத்துக்குத் தைலம்.

இஞ்சிச்சாறு வெத்திலைச்சாறு நொச்சிச்சாறு
மினியகஞ்சாங் கோரைச்சா றுடனேபச்சை

ஞ்சள்சாறு துளசிச்சா றுங்கர்ப்பூர
வல்லிச்சார் வகையாறுக் குரியுரியாஞ்
சஞ்சலமில் லாததோ ரெள்ளெண்ணெய்
தானும்நா ழிக்கடைச்ச ரக்குமர
மஞ்சளேல மிலவங்கங் கஸ்தூரி
மஞ்சள்செண்ப கப்பூவுடன் கோஷ்டமே (கூஅ)

கோஷ்டமொடு கம்பிப்பி சினிந்துப்புக்
குண மதிமதுரங் கருஞ்சீரகம்
நாட்டம்பே ரரத்தைசித் தரத்தையும்
நல்வலம்புரிக்காய் சதகுப்பையுங் கூட்டுச்
சமினியமும் பதினைந்தில் குணமதாக
வகைக்குக் கழஞ்சது போட்டரைத்து
விழுது முன்சாறுடன் புதுகையாகக்
கலந்து நீகொள்வையே (கூகூ)

கொண்டடுப்பி னிலேற்றிச் சிறுகத்தீ
கொளுத்தியே யெரித்தே மெழுகுபதங்
கண்டமாத்தி ரமேவடித் துக்கொள்ளு
கலம்நோயின் வலுவின் விதமறிந்து
தண்டனிட்டுக் கணபதி பூசையுஞ்
செய்து மூழ்கு நசியமுங் கொண்டிடு
வண்டப் பீனிசம் நாசிகாரோகமு
மண்டிடாதுசொன் னேனிது வுண்மையே. (ஈ)

(இ-ள்.)

இஞ்சிச்சாறு
கஞ்சாங்கோரைச் சாறு
கற்பூரவல்லிச் சாறு
வெற்றிலைச் சாறு
பசுமஞ்சள் சாறு
நொச்சிச் சாறு
துளசிச்சாறு

இச்சாறு வகைகளை வகைக்கு $\frac{1}{2}$ படி எடுத்துச் சுத்தமான நல்லெண்ணெய் 1 படி விட்டு,

| | |
|---|---|
| மரமஞ்சள் | பேரரத்தை |
| கஸ்தூரிமஞ்சள் | சதகுப்பை |
| கம்பிப்பிசின் | கிராம்பு |
| கருஞ்சீரகம் | கோஷ்டம் |
| வலம்புரிக்காய் | அதிமதுரம் |
| ஏலக்காய் | சிற்றரத்தை |
| செண்பகப்பூ | வசம்பு |
| இந்துப்பு | |

இவைகளை வகைக்கு ஒரு கழஞ்செடுத்து நன்ருகச் சாறு விட்டரைத்து முன்சொன்ன சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றிச் சிறு தீயாக எரித்து, மெழுகு பதத்திலிறக்கவும்.

காலம், நோய்பலம், இவற்றையறிந்து, கணபதியைத் தியானித்துப் பூஜித்து இதனுல் தலைமுழுகவும். நஸ்யமுஞ் செய்யவும்.

பீனிசமும், நாஸிகா ரோகங்களும் தீரும்.

குறிப்பு :-

சமினியம்—வசம்பு

93 நெ. சுவடியில் 'சபிலியம்' என்று காணப்படுகிறது. இது என்ன சரக்கு என்பது விளங்கவில்லை.

---

# 67. நாசிகாரோகத்துக்கு நசியம் பண்ணத்தைலம்.

கண்டங்கத் திரிமுருங்கைப் பட்டையுந்திரி
கடுகமிந் துப்புத்தந்தி வேர்வசம்பு
வண்டுழாயெ னுந்துளசி யிவைகளேழு
வகைமருந்துந் தண்ணீர்விட் டரைத்துக்கொண்டு

கண்டமருந் துக்குநாற் பங்கெண்ணெய்
கலந்துமிரு துபாகமதாய் வடித்துக்கொள்ளு
மண்டையிற்பீ னிசங்களுக்கு நசியஞ்செய்நீ
வாராது துர்வாசங் களும்போந்தானே (௭௧)

(இ.ள்.)

கண்டங்கத்திரி
முருங்கைப்பட்டை
சுக்கு
திப்பிலி
மிளகு
இந்துப்பு
நேர்வாள வேர்
வசம்பு
துளசி

இம்மருந்து வகைகளைச் சமமெடுத்துக்கொண்டு அம்மியி லிட்டுத் தண்ணீர் விட்டரைத்து, மருந்துச் சரக்குகளுக்கு நான்கு பங்கு எண்ணெய் விட்டு, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து மெழுகு பதத்திலிறக்கவும்.

இத்தைலத்தை நஸ்யம் செய்துவரப் பீனசம், துர்வாசனை முதலியவைகள் தீரும்.

---

# 68. பீனிசத்துக்கு நெய்.

சீந்தில்வட்டுத் தூதுவளைச் சிவனார்வேம்பு நிலவேம்பு
போந்தபன்றிக் குறும்பனையும் பொன்னாங்காணி நிலக்கு
சேந்ததேவி யரவிந்தஞ் சித்தோர்மல்லி பேர்மல்லி [மிழ்வேர்
ஆய்ந்தமுற்றக் காசுழக்கு அதின்மேல்பால்விட் டுறுவதே
(௭௨)

ஊறிக்காய்ந்து ஐந்திரண்டா யுறவேவெந்து பிழிந்துவடித்
தாறிபோவ ததின்முன்னே அளந்துநறுநெய் நாழியூற்றிக்
கூறிட்டளவே நல்லெண்ணெய் குறையாதளவே யொக்கவிட்டு
வேறிட்டுப்பித் தும்வேப்பந் தோல்மீருமற் சாறுநீகூட்டே
(௯௩)

கூட்டீர் சுக்கு மிளகுதிப் பிலிகோட்டமேல மதிமதுர
மோட்டும் வசம்பு வெள்ளுள்ளி யுறுகற்கடக சிங்கிநெல்லி
வாட்டங்குன்ரு மலைகருவேல் மத்தக்கிராம்பு வசுவாசிக்
காட்டிற்பயிலுங் கிளியூறல் கண்டில்வெண்ணெயது
கொள்ளே (௯௪)

கொள்ளேகோல மோதகமுங் குலவுபச்சிலை கச்சோலம்
நள்ளேயூறிய சீரகமும் நற்சீரகமுங் கொத்தமல்லி
தள்ளாதொக்கக் குக்கிலொடு சடைமாஞ்சரத்தை ரோகணியும்
பின்னேகொண்டு வெந்தருந்தப் போமே பிரிந்துபீனிசமே
(௯௫)

(இ.ள்.)

| | |
|---|---|
| சீந்தில்கொடி | நிலக்குமிழ்வேர் |
| தூதுவளை | சகதேவி (நெய்ச்சட்டி) |
| சிவனார்வேம்பு | தாமரைக்கிழங்கு |
| நிலவேம்பு | சிற்றாமல்லி |
| நிலப்பனங்கிழங்கு | பேராமல்லி |
| பொன்னாங்காணி | கோரைக்கிழங்கு |

இவைகளைச் சமமெடுத்துப் பசுவின்பால் ஒரு உழக்குவிட்டு நன்ருக ஊறவைத்து அடுப்பின்மேல்வைத்து 2/5 ஆகும் வரை நன்கு வேகவைத்துப் பிழிந்து, அக்கஷாயம் ஆறிப்போகுமுன் பசுவின்நெய் 1 நாழி கூடவிட்டு, நல்லெண்ணெய் ஒரு நாழியுங் கூட்டிடவும். வேப்பம்பட்டைச் சாறும் 1 நாழி கூட்டிக்கொண்டு, கல்கத்திற்கு

சுக்கு
மிளகு
திப்பிலி
கோஷ்டம்
ஏலம்
அதிமதுரம்
வசம்பு
பூண்டு
கற்கடசிங்கி
நெல்லிவற்றல்
கருவேல்
கிராம்பு
ஜாதிப்பத்திரி
கிளியூரம்பட்டை
கண்டில் வெண்ணெய்
ஓமம்
பச்சிலை
கச்சோலம்
சீரகம்
கருஞ்சீரகம்
கொத்தமல்லி
குக்கில்
சடாமாஞ்சில்
சிற்றரத்தை
கடுகரோகிணி

இவைகளைச் சமமாக (வகைக்கு வராகனெடை) எடுத்துப் பால் விட்டரைத்து, மேல்சொன்ன நெய், எண்ணெய் இவைகளுடன் குழப்பிப் பதமாக எரித்து இறக்கவும். இந்நெய்யைத் துட்டளவு சாப்பிட்டுவரப் பீனிசம் தீரும்.

---

# 69. பீனிசத்துக்கு நசியமும் அதற்குப் பத்தியமும்.

### கலித்துறை.

இரதங்கெந்த கஞ்சாதி லிங்கமினிருதாரஞ சங்குமுரு
வருகுந் திருக்கம் பாஷாணம் வருவீர் வாழிப்பட்டிலிட்டுச்
சரகமதுவே திரியாக்கித் தறுகாநறுநெய் தனிற்கொளுத்தி
விரசம்பெறவே நாசிதனி லிடவேபீனிச வேரறுமே (௱௬)

### வேறு.

பத்தியங் கோழிமுட்டைப் பசும்பால்
முத்துநெய் முருங்கையிலை மாசிலா
அத்தியின் காயளவுடன் கொள்ளுக
நித்தநித்தம் நினைவுடனிப்படி (௱௭)

(இ.ள்.)

சுத்தம்செய்த பாதரசம்
,, சாதிலிங்கம்
,, குந்துருக்கம் (பூனைக்கண் குங்கிலியம்)
,, கெந்தகம்
மிருதார்சங்கு
வெள்ளைப்பாஷாணம்

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்ருகக் கறுக்கும்வரையரைத்துப் பின்பு மற்ற சரக்குகளை ஒவ்வொன்ருகப் போட்டு அரைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தையொரு பட்டுத்துணியில் பரப்பி, ஒரே சீராகச் சுருட்டிப் பசு நெய்யில் தோய்த்துக் கொளுத்தி அணைத்துவிடவும். இப்போது இதினின்று எழும்பும் புகையை முகரவும்.

**பத்தியம் :—**

கோழிமுட்டை, பசுவின்பால், ஆமணக்கெண்ணெய், முருங்கையிலை, அத்திக்காய் இவைகள் கூட்டி வரவும்.

---

## 70. பீனிசத்துக்குப் புகை.

வெத்திலைச்சாற்றில் மிளகையரைத் துப்போட்டு
மெல்லியவெள் ளைச்சீலை முழுங்கிழித்து
உத்ததுணி யதனிலதை யமுக்கிவைத்து
வொருநாள்போய் மறுனளி லெடுத்துலர்த்தி
நத்தியகுறட் டைப்பழத்தைக் கொண்டுவந்து
நன்ருகக் கண்திறந்து வதிலேதோய்த்துப்
பத்துநாள் வைத்தெடுத்து வுலர்த்திக்கொண்டு
பதனமாய் நீயுமதை வைத்திடாயே (௱அ)

வைத்துக்கொள் பீனசநோ யுற்றபேர்க்கு
வகையாக வந்திசந்தி யிரண்டுநேரம்

பத்துநாள் திரிசெய்து புகையைக்கொள்ளு
பலபீனி சங்களெல்லாம் பறந்துபோகும்
இத்தரணி மனுக்குமுப காரமாக
ஈசனருள் பெற்றசர பேந்திரபூபன்
நத்திவைத் தியநூலை யுணர்ந்தாராய்ந்த
நன்முறையி தென்றறியும் நாடுள்ளோரே (௱௬)

(இ.ள்.)

வெற்றிலைச் சாற்றினால் ( $\frac{1}{4}$ சேர் ) மிளகு $\frac{1}{2}$ பலத்தை யம்மிதனிலிட்டு நன்ருகக் குழம்பாகும்வரை அரைத்துக்கொள்ளவும். ஒரு வெண்மையான வெள்ளைத் துணியை ஒரு சாண் அகலமும் யொருமுழ நீளமுள்ளதாக யெடுத்து மேற்சொன்ன குழம்பில் நன்ருக முழுகும்படி தோய்த்துக்கொள்ளவும். இதை மறுநாளெடுத்துலர்த்தவும். மறுபடியும் குறட்டைப் பழத்தைக் கொண்டுவந்து அதன் கண்ணைத் திறந்து அதன் சாற்றில் மேல் சொன்ன, சீலையையிட்டுப் பத்து நாட்கள் வைக்கவும். பின்பு இதை உலர்த்திக்கொண்டு பத்திரப்படுத்தவும்.

பீனிச நோயுள்ளவர்கள், தினந்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும், ஷை துணியிலிருந்து திரிக்கப்பட்ட திரியைக். கொளுத்தி அதனின்று எழும்பும் புகையை முகர்ந்து வரவும் பலவித பீனிசங்களுந் தீரும். 10 நாள் உபயோகிக்கவும்.

## குறிப்பு :-

திரியை நன்கு புகையும்படிசெய்ய, அதை நெய்யில் தோய்த்துக்கொளுத்தி, அணைத்துவிட, அதனின்று புகையெழும்பும். ஒரு நாசியை நன்ருக அடைத்துக்கொண்டு மற்றொரு நாசியின் மூலமாக இதை உள்ளிழுக்கவும். இம்மாதிரி இரு நாசிகளிலும் 5 அல்லது 6 தடவை முகரவும்.

# 71. பீனிசத்துக்குப் புகை.

மரத்திலேயுலர்ந் தயெருக் கங்கொம்பைத்தான்
வகையாகச் சுட்டுவந்தக் கரியைத் தானும்
உரத்தபுதுச் சுண்ணும்பும் சமமாய்க்கூட்டி
உருக்கமுட னரைத்து வெள்ளைச் சேலேதன்னில்
நிரக்கவே தடவிப்பின்னு முலரவைத்து
நீண்டதிரி யாக்கியதை வைத்துக்கொண்டு
நெருப்பினிலே கொளுத்திப்புகை கொண்டாயானல்
நீங்கிடுமே பீனிசங்கள் நிசமாய்த்தானே (எய)

(இ-ள்.)

எருக்கஞ் செடியிலேயே யுலர்ந்த (எருக்கங்) குச்சிகளைக் கொண்டுவந்து, சிறுசிறு துண்டுகளாக்கி ஒரு சட்டியிலிட்டு நன்ருகக் கரியாகும்வரை வருத்துக்கொள்ளவும். இதற்குச் சமம் புதிதான (கல்) சுண்ணும்பைக்கூட்டிச் சிறிது ஜலம் சேர்த்து மைபோலரைத்துக்கொள்ளவும். இக்கல்கத்தையொருமுழ நீள முள்ளதும் ஒருசாண் அகலமுள்ளதுமான வெள்ளைத்துணியில் ஒரே சீராகத் தடவி நிழலிலுலர்த்திக்கொண்டு, சுருட்டி ஒரு திரியாகத் திரித்துக்கொள்ளவும். பீனச ரோகமுள்ளவர்கள் இத்திரியைக் கொளுத்தி அணைத்து, இதனின்றெழும்பும் புகையை இரு நாசிகளிலும் (காலை மாலை இரு வேளைகளிலும்) முகரவும், பீனிசங்கள் தீரும்.

---

# 72. பீனிசத்துக்குப் பொட்டணம்.

திப்பிலியு முருங்கைவித்து வாய்விளங்கஞ்
சேர்மிளகு மிவைசமமா யெடுத்துக்கொண்டு
தப்பிலாத் துணிதனிலே பொட்டணங்கட்டித்
தானதையும் மோந்திருந்தால் தலையின்பாரம்
ஒப்புடனே பீனிசத்தால் நீர்தான் வீழ்தல்
உடனேவிட் டோடுமது அரனர்பூசைக்

கற்புதனுஞ் சரபேந்திர னுணர்ந்த நீதி
யதுதப்பா திதைநீயுஞ் செய்துபாரே (௱௭௧)

(இ.ள்.)

திப்பிலி
முருங்கை விதை
வாயுவிடங்கம்
மிளகு

இந்நான்கு சரக்குகளையும் சமமெடுத்து இடித்து ஒரு மெல்லிய துணியில் முடிந்து அதை முகர்ந்துவரவும். இதனால் தலைபாரம், பீனிசம், நீர்ப்பாய்ச்சல் முதலியவை தீரும்.

---

# 73. நாசியால் ரத்தம் விழுகிறதற்கு நசியம்.

நாசியிலே யிரத்தம்வீழ் கிறதற்கு
நசியமொன்று கேளுவெள் ளாட்டுப்பாலும்
மாசிலாததே னுஞ்சர்க்க ரையிம்மூன்றும்
வகையாகச் சரிசேர்த்துக் கலந்துகொண்டு
காசினியில் மனிதருக்கு நசியம்பண்ண
கனத்தரத்தம் மூக்கினல் வீழ்தல்நிற்கும்
தேசிகனைப் பூசனைசெய் சரபோசேந்திரன்
தினமுமுணர்ந் தாராய்ந்த திதுதப்பாதே (௱௭௨)

(இ.ள்.)

மூக்கிலிருந்து ரத்தம் விழுந்தாலதற்கு மருந்தாவது:—

வெள்ளாட்டுப் பாலும், தேனும், சர்க்கரையும் சமனுகக் கலந்துகொண்டு (காலையிலும் மாலையிலும்) நசியமிடவும். தீரும்.

---

## 74. பீனிசத்திற்கு நசியம்.

சிறுக்கீரையு மூலைப்பாலையும்
நறுக்கி நசியஞ்செய்திட
உறுக்குமனுக் குறுபீனசம்
நிறுத்துமிது கைகண்டதே (௱௭௩)

## (பீனிசத்துக்கு)

நாமக்கோவை யிலைபிசைந்து நன்றுய்ந்தலையிற் றுரிதமுடன்
நேமத்துடனே யப்பிவைக்க நீ(ள்)பீனசத்தால் ரெத்தம்விழல்
சாமத்திரும லதுதீரும் தப்பாதிப்பார் தான்புகழும்
பூமிக்கரசன் சரபேந்திரன் பொருந்துமுறையீ தறிவீரே
(௱௭௪)

(இ.ள்.)

(1) சிறுகீரைச் சமூலத்தை மூலைப்பால் விட்டு நசுக்கிப் பிழிந்த சாற்றை நசியமிடப் பீனசந் தீரும்.

(2) நாமக்கோவை இலையை இடித்து, நன்ருகப் பிசைந்து தலையில் பத்தாகப் போட்டுவர, இரத்தபீனசம், சாமத்திற்குச் சாம முண்டாகுமிருமல் முதலியவை தீரும்.

---

## 75 மூக்கிலே இரத்தம் கட்டியாய் விழுகிறதற்கு மருந்து.

துளசிவேர் சிறுகீரை வேரிரண்டுந்
துய்யபசு வின்பாலி லரைத்துப்போட்டு
வளமுடனே மூன்றுநா ளந்திசந்தி
வாகாகக் குடித்திடரக் காம்பல்தன்னைத்
தெளிவுடனே தலையிலதைக் கட்டிப்பாரு
தீருமூக்கி னிலிரத்தக் கட்டிவீழ்தல்
களிப்பான முறையிதென்றே விபுக்களாய்ந்த
கருணையிதைப் புனிதமுடன் நீசெய்வாயே (௱௭௫)

(இ.ள்.)

1. துளசிவேர், சிறுகீரை வேரிவ்விரண்டையும் சமனெடுத்துப் பசுவின் பால்விட்டரைத்துத் தினமிருவேளை காலையிலும் மாலையிலுமாக மூன்று நாளைக்குப் பருகி வரவும்.

2. அரக்கு வர்ணமுள்ள ஆம்பல் மலரைத் தலையில் கட்டி வரவும். மூக்கிலிருந்து ரத்தம் கெட்டியாக விழுதல் நிற்கும்.

---

# 76. மூக்கினால் இரத்தம் வீழ்தற்கு வெங்காயச்சாறு நசியம்.

ஒத்தவெங் காயமொன்று வெற்றிலைக்காம்
    பொருசிறங்கை மிளகதுவு மூன்றுங்கூட்டி
வைத்துநறுக் கிநாசி தனிலேநசியம்
    வார்ப்பிறகு வெள்ளாட்டுப் புழுக்கையைத்தான்
ஒத்தூசி தனிற்கோர்த்து அந்திசந்தி
    யும்புகைகொள் ளதிலிரத்தம் நில்லாவிட்டால்
சத்துவமாய் மூன்றுநாள் பொறுத்தூமத்தஞ்
    சாறுநாசி யில்விடவு மிரத்தம்போமே (௱௰௬)

இ.ள்.)

| | |
|---|---|
| ஒற்றையாக இருக்கும் வெங்காயம் | ஒன்று |
| வெற்றிலைக் காம்பு | ஒரு சிறங்கை |
| மிளகு | சிறிது (மூன்று) |

இவைகளையொன்றுகூட்டி நசுக்கி மூக்கில் நஸ்யஞ்செய்யவும். பின்பு வெள்ளாட்டின் புழுக்கை (காய்ந்தது) யொன்றை யொரு ஊசியில் கோர்த்து, விளக்கில் கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையைத் தினம் காலை, மாலை இருவேளை மூக்கினால் கொள்ளவும். இதனாலும் இரத்தம் நில்லாவிடில், மூன்று நாட்கள் சென்றபின் ஊமத்தஞ் சாற்றை நாசியிலிடவும். இரத்தம் நிற்கும்.

---

# 77. பல்லில் நாவில் வரும் வியாதிக்கு மருந்து.

வெங்காய முள்ளித்தோல் போக்கியந்த
　　வெண்பருப்புஞ் சிறுபயத்தம் பருப்பும்நெய்யும்
தங்காமற் சீவியொக்கச் சமனுய்க்கூட்டித்
　　தானரைத்து வைத்துமுக்க ழஞ்சுவந்தி
யுங்கால மேதின்னப் பல்லில் நாவில்
　　உருகின்ற வியாதியெல்லாந் தீருந்தீருஞ்
சிங்காரத் துளசேந்திர னீன்றபாலன்
　　தீரன்சர பேந்திரனிர் ணயித்ததாமே. (௭௰௭)

(இ.ள்.)

தோலுரித்த வெங்காயம்
தோலுரித்த வெள்ளைப்பூண்டு பருப்பு
சிறு பயத்தம்பருப்பு
பசுவின் நெய்

இவைகளைச் சமமெடுத்து அம்மியிலிட்டரைத்து 3 கழஞ்சு வீதம் தினமும் காலையிலும் மாலையிலும் சாப்பிட
நாக்குரோகம், பல்ரோகமிவைகள் தீரும்.

---

# 78. பல் வியாதிக்குக் கொப்பளிக்க மருந்து.

இத்தரணியில் மானிடர் தங்களுக்
குத்தபல்லின் வியாதிவருகிடில்
கொத்தமல்லி யிடித்து நனையவே
வைத்துக் கொப்பளிக்க மாறுமுண்மையே (௭௰௮)

(இ.ள்.)

கொத்தமல்லி விதையை யிடித்துத் தண்ணீர்விட்டு ஊற வைத்து, மறுநாளதை யரைத்து வாயில் ஊற்றிக்கொண்டு

கொப்பளிக்கப் பல் வியாதிகளனைத்தும் மாறும்.

---

# 79. பல்லீறுகளின் வீக்கம், பல் வலிக்கு மருந்து.

ஆதித்த வாரமதிற் கருவூமத்த
மதின்வேரைப் பிடுங்கிபல்ல டியில்வைக்க
வாதித்த வலிவீக்கம் வாங்கும் வாங்கும்
மயங்காமல் நீயுமதைச் செய்துபாரு
ஓதித்தப் பாமலுணர் வாணர்தங்கள்
உளமறிந்து கொடைகொடுத்து முதன்மையான
சாதித்த மனமுள்ளோன் தஞ்சையாளுஞ்
சரபேந்திர னுணர்ந்ததிது தப்பாதின்றே (௱௰௬)

(இ.ள்.)

ஞாயிற்றுக்கிழமையன்று, கரு ஊமத்தஞ் செடியின் வேரைப் பிடுங்கிக்கொண்டுவந்து, பல்வலி இருக்குமிடத்தில் வைத்தால், பல்வலி, வீக்கம் முதலியவை மாறும்.

---

# 80. நாவிலெழு வியாதிகட்கு வாயிலடக்கு மருந்து.

சீனிமிள கேலம்பச் சிலைகூடத்
திப்பிலியில் வைத்துநிறை யாக்கிக்கொண்டு
நீ நிசமாய் நாரத்தங்காய்ச் சாறுவார்த்து
நேகவரைத் துத்தேனிற் கலந்துகொண்டு
தானிதை நீ நாவிலெழு வியாதிகட்குத்
தப்பாமல் வாயதனி லடக்கிப்பாரு
மானுவறிந் துணர்ந்துநிர் ணயித்ததிந்த
வகைவிபரப் படிநீயுஞ் செய்துபாரே (௱௨௰)

(இ.ள்.)

சர்க்கரை
மிளகு
ஏலக்காய்
பச்சிலை
திப்பிலி

இவைகளைச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டிடித்து நாரத்தங் காய்ச்சாறு விட்டு நன்றாக அரைத்துக்கொண்டு, தேன் சிறிது விட்டுக் கலந்துகொண்டு மாத்திரைகளாக்கி வாயிலடக்கிக்கொள் ளவும். நாவிலுண்டான வியாதிகள் தீரும்.

---

## 81. பற்களில், வாயில் வலி, வீக்கத்திற்குப் பூச்செண்ணெய்.

வாயிலெழும் வியாதிகட்குக் குணமதாக
மருந்தெண்ணெய் சொல்வேன்கே ளுறுதியாகத்
தாயகதிப் பிலிக்காய முத்தக்காசு
தான்றிக்காய் விழாலரிசி யிவைகளைந்தும்
நேயமுட னேசரியாய் நிறுத்துக்கொண்டு
நீரும்நா ழிவார்த்த ரைத்துக்காய்ச்சி
யேயதையும் நாழியா யிறக்கிநாழி
யெண்ணெய்கலந் தேமருகா லதையுங்காய்ச்சே (௱உக)

கா(ய்)ச்சு யெண்ணெய் நிற்கயெரித் தேவடித்துக்
கடவுளரை மறவாமற் பூசைசெய்து
பூச்சுமருந் தெண்ணெயிது பல்லில்வாயிற்
பொல்லாத வலிவீக்கங் கண்டிடத்தில்
தே(ய்)ச்சுவிடு யெண்ணெய்தனை ரெண்டுநேரந்
தினம்பத்து நாடனக்கு முறுதியாகப்
போச்சுதென்றென் வியாதியது தக்கோராய்ந்த
புதுமையிது வுறுதியுடன் செய்துபாரே (௱உஉ)

(இ.ள்.)

திப்பிலி
பெருங்காயம்
கோரைக் கிழங்கு
தான்றிக்காய்த் தோல்
விழாலரிசி

இவைகளைச் சரியெடை (1 பலம்) யெடுத்து, இடித்துத் தண்ணீர் 4 படிவிட்டு, ஒரு நாழியாகும்வரை காய்ச்சி, நல்லெண்ணெயொருநாழியிட்டு, மறுமுறை, அடுப்பின் மேலேற்றி எரித்து, வடிக்கவும். கடவுளைத் தியானித்து இத்தைலத்தை பல்லிலும், வாயிலும் தடவி வரவும். வலி, வீக்கம், இவைகளிருக்குமிடத்தில் இரண்டு நேரமும், 10 நாளைக்குப் பூசி வரவும். வியாதி தீரும்.

---

# 82. தந்தரோகத்துக்கு அரிமேதாதி யுருண்டை

கருங்காலிப் பட்டையுட னிருபதுக்குக்
கனமரக்கா லொன்றுதண்ணீர் விட்டுநாழி
யுருங்காய்ச்சி யெடுத்ததையும் வடித்துக்கொண்டு
வுற்பனமாங் கிராம்புகற் பூரம்வாசந்
தருஞ்சாதிக் காயுடனே கொட்டைப்பாக்குந்
தக்கோல மைந்திற்காற் பலமுங்கொண்டு
செருங்காம னன்ருகச் சூரணங்கள்
செய்துமதை வடிகட்டிக் கொண்டிடாயே (ளஉங)

கொண்டுமந்தக் கஷாயம்விட் டரைத்துநன்ருய்க்
குணமாக யிருபதுண்டை செய்துதானே
ருண்டைதனை வலிகண்ட விடத்திற்குள்ளே
யுறுதியுட னடக்கிகொள் தந்தரோகந்
துண்டமுக ரோகமுட னுதட்டுப்புண்ணுந்
துற்வாசம் நாக்குப்புண் ணுடன்தீருங்கை

கண்டமுறை மகாவிபுக்கள் நிச்சயித்த
கருணையிது தப்பாது செய்துபாரே (௱உ௪)

## (பாட பேதம்)

அரிமேதா தியுண்டை யொன்றுசொல்வே
னதைக்கேளு நினைவாக அவனியோரே
கருங்காலிப் பட்டைபலம் நூறதாகும்
கண்டிப்பாய்த் தண்ணீரு மரக்கால்நாலு
சரியாக விட்டுவொரு படியாய்க்காய்ச்சி
சாதிக்காய்க் கற்பூரங் கொட்டைப்பாக்கு
உரமான தககோலங் கிராம்பிவ்வைந்தி
லொவ்வொரு வகைக்குப்பலம் நாலுங்கூட்டே (௱உ௫)

வகைக்குப்பலம் நாலையுந்தான் சூரணித்து
வளமாக முன்சொன்ன கஷாயம்விட்டு
துகையுடனே யிருபதுண்டை செய்துலர்த்தித்
துரிதமுட னந்திசந்தி யொவ்வோருண்டை
சுகமாக வாய்தனி லடக்கிக்கொள்ள
தூர்வா சனையும்வாயிற் றந்தரோக
முகரோகம் நாக்குப்புண் ணுதட்டுப்புண்ணு
முடனேபோங் கைகண்ட முறையிதாமே (௱உ௬)

(இ.ள்.)

கருங்காலிப்பட்டை 20 பலமெடுத்து நசுக்கி, ஒரு மரக்கால் சுத்த ஜலம் விட்டடுப்பின்மேலேற்றி, 1 படியாகக் காய்ச்சி வடிக் கட்டிக் கொண்டு,

கிராம்பு
கற்பூரம்
சாதிக்காய்
கொட்டைப்பாக்கு
தக்கோலம்

இவைகளை வகைக்குக் கால் பலமெடுத்துச் சூரணஞ்செய்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, இதைக் கல்வத்திலிட்டுக் கஷாயத்தைச் சிறிது சிறிதாக விட்டு நன்றாக வரைத்துக்கொண்டு, 20 உருண்டைகளாகச் செய்துகொள்ளவும். உருண்டைகளை வலியுள்ள பக்கத்திலடக்கிக்கொண்டுவர, வாய்ப்புண்கள், உதட்டுப்புண், வாயில் கெட்ட நாற்றம், நாக்குப் புண்கள், இவைகள் தீரும். கைகண்டது.

பாடபேதச் செய்யுளில் கண்டபடி 100 பலங் கருங்காலிப் பட்டைக்கு 4 மரக்கால் ஜலம் விட்டு 1 படியாகக் காய்ச்சிக் கொண்டு, சரக்குகளை வகைக்கு 4 பலமெடுத்து ஷை கஷாயத்திஞல் அரைத்து 20 உருண்டைகளாகச் செய்துகொள்ளுதலும் நன்று.

வாய்ப்புண், நாக்குப்புண் இவைகள் பெரிதாகக் காணப்படில், இப்பெரிய உருண்டைகளை உபயோகிக்கவும்.

---

# 83. தந்தரோகம், சயமிருமல், சேத்துமக் காசம், சுவாசகாசம், மந்தாரகாசத் துக்குக் கல்நார் பற்பம்.

ஓங்கு கல்நார் பற்பமொன்று சொல்வேனன்று
யுறுதியுடங் கேள் மனுக்குமுதவியாகக்
கோங்கிலவம் பட்டையிடித் தோட்டில்வைத்துக்
குணமான கல்நாரை நடுவே வைத்துப்
பாங்குளவப் பட்டைதனை மேலும் வைத்துப்
பண்பாய்மற் றொருவோட்டால் மூடிவைத்துத்
தாங்கிடவே சேலைமண்ணுஞ் செய்துலர்த்தித்
தப்பாமற் கெஜப்புடமும் போட்டிடாயே (௱உ௭)

போடபற்பமா மிதையு மெடுத்துக்கொண்டுப்
புதியதே னதிற்கூட்டி யந்திசந்தி
யோடப்பத்து நாள்தின்று பாரிதற்கு
மூலந்தபல்லு மிறுகிடுமே சுவாசகாச

மோடவழி பார்க்குஞ்சய மிருமல்சேத்தும
முடனீளை யென்பதெல்லா முடனேதீரும்
பாடவல்லோர் திறமையறி சரபோசேந்திரன்
பார்த்துணர்ந்த வயித்தியத்தின் பலனைப்பாரே (௱உ-அ)

(இ.ள்.)

உயர்ந்த கல்நாரைக் கொண்டுவந்து, கழுநீரில் சுத்திசெய்து கொள்ளவும். ஒரு புது ஓட்டில் கோங்கிலவம்பட்டையை யிடித்துத் தூள் செய்துபோட்டு, அதன் நடுவில் கல்நாரை வைத்து மேலேயும் ஷை பட்டையின் தூளைப் போடவும். இதை மற்றொரு அகலினால் மூடிச் சேலைமண்செய்து, வெயிலிலுலர்த்தவும். பின்பு, இதைக் கஜபுடத்திலிடவும். இவ்வாறெடுத்த பற்பத்தைத் தேனிற் குழைத்துத் தினமிருவேளை, காலையிலும், மாலையிலுமாக, 10 நாளைக்குச் சாப்பிடவும்.

ஆடுகின்ற பற்களிறுகும். சுவாசகாசம், சயம், இருமல், கபத்தினாலேற்படும் ஈளை முதலியவைகளெல்லாந் தீரும்.

குறிப்பு :-

இப்பற்பத்தினாலே பற்களையும் துலக்கிவரலாம், 5 அரிசி யெடை வீதம் உள்ளுக்குச் சாப்பிடவும்.

---

# 84. பற்களினசைவு, ஈறுவிரணம், முகரோகம், துர்வாசனைக்கு அரிமேதாதித் தைலம்.

அரிமேதா தித்தைலந் தந்தரோக
மதுதீரச் சொல்வேன்கேள் நீயும்நல்ல
கருவேலம் பட்டைபலம் நூறு தண்ணீர்
கனமரக்கால் நாலுவிட்டோர் மரக்காலாக
வருமட்டுங் காய்ச்சியெண்ணெய் படியும்ரெண்டு
வார்த்துக்கடைச் சரக்குக்காட் டாத்திப்பூவுங்

கருங்காலிப் பட்டைமிள காலம்பட்டைக்
கர்ப்பூரம் கருந்தேக்கு அகருத்தானே (௱உ௯)

சாதிக்கா யதிமதுரம் லவங்கப்பத்திரி
சதகுப்பை காவிக்கோ ரைக்கிழங்குச்
சாதிப்பத் திரிதகரங் கிரந்திசுக்கு
தக்கோலம் நன்னாரி யிருபதுந்தான்
சாதகமாய் வகைக்குக்காற் பலமுங்கூட்டித்
தானேமுன் கடாயம்விட் டரைத்துக்கொண்டு
சாதுரிய மாகவெண்ணெ யிற்கலந்து
தப்பாம லடுப்பேற்றி யெரித்திடாயே (௱௩௰)

எரிதைலம் மெழுகுபதம் வருகும்போது
இறக்கிவடித் தேயிரண்டு நேரந்தானுஞ்
சரியாகத் தைலமரைப் பலமெடுத்துச்
சாப்பிடுபல் லசைவுமுக ரோகந்தந்த
விரணந்துர்க் கந்தங்க ளுடனேதீரும்
விமலர்பத மர்ச்சனைசெய் விபுக்களாய்ந்த
வரமிகுந்த தைலமிது செய்துபாரு
வாராதோர் நாளந்த வலிகள்தானே (௱௩௧)

(இ.ள்.)

கருவேலம்பட்டை 100 பலத்தைச் சிதைத்து, ஒரு முடாவி விட்டு, 4 மரக்கால் தண்ணீரூற்றி அடுப்பின்மேல் வைத்து, 1 மரக்காலாகச் சுண்டக் காய்ச்சியிதை வடிகட்டிக்கொள்ளவும். இதனுடன் சுத்தமான நல்லெண்ணெய் 2 படி கூட்டிக்கொள்ளவும் பின்பு,

| | |
|---|---|
| காட்டாத்திப்பூ | அதிமதுரம் |
| கருங்காலிப்பட்டை | லவங்கப்பத்திரி |
| மிளகு | சதகுப்பை |
| ஆலம்பட்டை | பூங்காவி |
| கற்பூரம் | கோரைக்கிழங்கு |
| கருந்தேக்கு | சாதிப்பத்திரி |
| சாதிக்காய் | கிரந்திதகரம் |

சுக்கு
தக்கோலம்
நன்னாரி
அகில்

இவைகளை வகைக்குக் கால் பலமெடுத்து, மேலே சொன்ன கஷாயம் விட்டரைத்துக்கொண்டு, கஷாயங் கூட்டிய எண்ணெயுடனே கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து, மெழுகுபதத்திலிறக்கவும். இதை வடிக்கட்டிக்கொண்டு, இரண்டு வேளையிலும் $\frac{1}{2}$ பலம் வீதமெடுத்து, உள்ளுக்குச் சாப்பிடவும். பல்லசைவு, முகரோகம், ஈறுகளிலேற்படும் புண்கள், துர்வாசனை முதலியவைகள் தீரும். பல்வலிகளும் ஏற்படாது.

---

# 85. பல்லசைவுக்கு உருண்டை.

அரப்பொடிநன் றுகச்சூ ரணங்கள் பண்ணி
யதையிரும்புப் பாத்திரத்தில் வறுத்துக்கொண்டு
உரமான தேன்விட்ட ரைத்துவுருண்டை
யுஞ்செய்து பல்லசைவி லொவ்வோருண்டை
யிருநேர மடக்கப்பல் லசைவும்நிற்கும்
யிதுவுங்கை கண்டமுறை யெனத்தெரிந்து
சரபோசி மகாராச னுலகோருக்காய்த்
தயவுடனே நிர்ணயித்த முறையிதாமே (௱௩௨)

(இ.ள்.)

சுத்தமான அரப்பொடியைச் சுத்திசெய்து, இரும்புப் பாத்திரத்தில் போட்டு, அடுப்பின் மேலேற்றி, நன்றாக வறுத்துக் கொள்ளவும். இதைக் கல்வத்திலிட்டுத் தேன்விட்டு நன்றாக அரைத்து, உருண்டை செய்துகொள்ளவும். பல்லசைவிற்குக் காலை மாலை யிரு நேரங்களிலும், வாயிலடக்கி வரவும். பல்லசைவு தீரும். கைகண்டது.

குறிப்பு :-

அரப்பொடியை சுத்திசெய் முறை :—

நல்லெண்ணெய் விட்டு நன்றாக ஊறவைத்து வறுத்துக் கொள்ளவும்.

---

## 86. பல்லசைவுக்கு மருந்து.

சிறியசெண்ப கத்தின்வே ரிலையுங்கூட
செம்முள்ளி வேரிலையும் நய்யத்தட்டி
உரிமையுடன் பல்லசைவி லந்திசந்தி
யுற்பனமா யடக்கப்பல் லசைவுசிக்கன
நிற்கும்பார் தனிநான்கு சாதியோர்கட்
கின்பன்சிவ கிருபைபெருக விப்பிரதாபம்
அறியன்ன தாதாபிர தானவள்ள
லரசன்சர பேந்திரனுண ரருளியதாமே (௱௩௩)

(இ.ள்.)

சிறு செண்பகமரத்தின் வேர்
செண்பக இலை
செம்முள்ளி வேர்
செம்முள்ளியிலை

இச்சரக்குகளைச் சமமெடுத்துப் பஞ்சுபோல் நசுக்கி, பல்லசைவிற்கு வாயிலடக்கவும். பல்லசைவு உடனே நிற்கும்.

---

## 87. தந்த அசைவிற்கு மருந்து.

பக்குவமாய் முக்காவே லையின்வேர்ப்பட்டை
பல்லசைவில் நறுக்கியதை யடக்கிப்பாரு
சிக்கெனவே பல்லசைவு நிற்குஞ்சோழத்
தேசமதை மனுநீதி தப்பாதாண்டு

முக்கியமா யுலகோருக் குபகாரமாய்
　　முதிர் வைத்திய சோதனைசெய் தினியதாக
சக்ரவர்த்தியிலுமுயர்ந்த சரபேந்திரன்
　　தம்முள்ளம் நிர்ணயித்த முறையிதாமே (௱௩௪)

(இ.ள்.)

முக்காவேளையின் வேர்ப்பட்டையை நசுக்கி ஆடுகின்ற பற்களிலடக்கிவரப் பல்லசைவு நிற்கும்.

---

# 88. பற்களின்வலி, பல்லரணைக்கு மருந்து.

பல்லரணைக் கோரௌஷதஞ் சொல்லக்கேளு
　　பார்மனுவுக் காயுள்ளி வசம்புகூட
நல்லநா யுருவிவே ரிலையுங்கூட
　　நறுக்கிவா யினிலடக்கு நாவினாலே
சொல்லுமா மணக்கெண்ணெய் முழங்காலில்தான்
　　தொட்டுத்தட விப்பொழுது முன்னேநின்றால்
வல்லபல் லிற்பூச்சியிருந் தாலும்விழும்
　　வலிவீக்கம் பல்லரணை போகுந்தானே (௱௩௫)

(இ.ள்.)

வெள்ளைப்பூண்டு
வசம்பு
நாயுருவி வேர்
நாயுருவி இலை

இவைகளை நசுக்கி வாயினிலடக்கிக்கொண்டு ஆமணக்கெண்ணெயை முழங்கால்களில் தடவிக்கொண்டு வெயிலில் நின்றால் பற்களிலிருக்கும் பூச்சிகள் விழும். வலி, வீக்கம், பல்லரணை போகும்.

---

# 89. பல்வலிக்குக் கொப்பளிக்க நீர்.

கருங்காலிப் பட்டைக்கரு வேலம்பட்டைக்
கானகத்தி லீருகொல்லிப் பட்டைமூன்றுஞ்
செருங்காமல் தட்டிக்கடுக் காயுமேழு
சேர்காசுக் கட்டியரைக் கால்பணந்தான்
வருங்களிப்பாக் குப்பத்து படிநீர்விட்டு
வளமாகக் காய்ச்சிதினங் கொப்பளிக்க
அரும்பல்லின் வலிநிற்கும் தக்கோராய்ந்த
அவனியுளோர்க் குபகார மாகத்தானே (௬௩௬)

சீரகமும் வேப்பம்பூ கொஞ்சங் கொஞ்சஞ்
சேருமொரு வராகனிடை யிந்துப்புத்தான்
பாருமிது மூன்றுமெலு மிச்சங்காய்தன்னில்
பத்தியே திணித்துபல்லுத் தேய்த்து முன்சொல்
சீருடைய கஷாயத்தைக் கொப்புளிக்கத்
தீரும்பல் வலியதுவுந் தப்பாமல்தான்
பாரிலே சிவகிருபை பெற்று வாழும்
பார்த்தன்சர பேந்திரனிர் ணயித்ததாமே (௬௩௭)

(இ.ள்.)

(1) கருங்காலிப் பட்டை
கருவேலம் பட்டை
காட்டு ஈருகொல்லிபட்டை

இம்மூன்றையிஞ் சமமெடுத்து (1 சேர்) நசுக்கி,

| | | |
|---|---|---|
| கடுக்காய் | — | 7 (சேர்) |
| காசுக்கட்டி | — | 1/8 பணவெடை |
| களிப்பாக்கு | — | 1/8 பணவெடை |

இவற்றையும் நசுக்கி, 10 படி தண்ணீர் விட்டு, ஒருபடியாகச் சுண்டக் காய்ச்சவும். இதனுல் தினந்தோறும் வாய்க்கொப்பளித்துவரப் பல்வலி நிற்கும்.

பணவெடை = $\frac{1}{10}$ விராகனிடை (பலம் சுமார் 3 குன்றுமணியெடை.)

(2) சீரகம் கொஞ்சம் (1 பிடி)
வேப்பம்பூ கொஞ்சம் (1 பிடி)
இந்துப்பு — 1 வராகனெடை

இம்மூன்றையுமிடித்து வைத்துக்கொண்டு ஒரு எலுமிச்சங்காய்க்குள் துவாரம் செய்து, அதில் திணித்துவைத்துக்கொள்ளவும். ஒருநாள் சென்றபின்பு இதனுல் பல்துலக்கிவந்து, மேற்கூறிய கஷாயத்தினுல் கொப்பளிக்கப் பல்வலி தீரும்.

---

# 90. பல்வலிக்கு மருந்து.

மகிழமரப் பட்டைதனைக் கொண்டுவந்து
வாய்தனிலே போட்டுநன் ருகமென்று
சகியாத வலியாகும் பல்லு தன்னிற்
ருனடக்கப் பல்லின்வலி யுடனே நிற்கும்
மகியாளுந் துளசேந்திர னீன்றசிந்தா
மணியெனவந் தருளுசர பேந்திரபூபன்
வகையான சாஸ்திரமு ணர்ந்தாராய்ந்து
மானிலத்துக் காகபிர மாணித்தாரே (௯௩அ)

(இ.ள்.)

மகிழமரப் பட்டையைக் கொண்டுவந்து பஞ்சுபோலிடித்து வாயில் போட்டு மென்றுவரத் தீராத பல்வலி தீரும்.

---

## 91. பல்வலி, பல்குத்துக்கு மருந்து.

கண்டங்கத் திரிவிரையை யுலர்த்திநன்றுய்க்
கல்வத்திற் பொடிசெய்து நல்லஎண்ணெய்
கொண்டுகலந் துகாலிற் றடவப்பல்லின்
குத்தும்வலி யும்நிற்கு மிதுவுந்தான்கை
கண்டமுறை யசுவனிதே வதைகள்சொன்ன
கருத்ததனைச் சோதித்து நிசத்தைத்தானே
கண்டுரைத்த விபுக்கள்நிச் சயித்ததிந்த
கருணையதை யுரிமையுடன் செய்துபாரே (௩௩௧)

(இ.ள்.)

கண்டங்கத்திரி விதையை யுலர்த்திக் கல்வத்திலிட்டுப் பொடித்து, நல்லெண்ணெயுடன் கலந்து முழங்காலில் தடவிவரப் பல்வலி, பல்குத்து முதலியவை நிற்கும். கைகண்டது.

---

## 92. பல்லசைவு, பல்ஞேவுக்கு மருந்து.

செழுமலர்க் கொன்றை யென்னும் நடுமரத்தின்
சிறந்த பட்டை தனைவெட்டிக் கொண்டுவந்து
செழுமையுடன் பாக்கினுடன் கலந்துநித்தம்
தின்றுபா ரதைப்போட்டுத் தண்ணீர்காய்ச்சி
யெழிலுடனே கொப்புளிக்கப் பல்லிஞேவு
இராதுகவி வாணர்களு கந்தாராய்த்தென்
றழகைநகர் தனைநீதி தப்பாதாளு
மண்ணல்சர பேந்திரனிச் சயித்ததாமே (௩௪௰)

(இ.ள்.)

கொன்றையின் பட்டையை வெட்டிக்கொண்டு வந்து, பச்சைப்பாக்குடனே கலந்து இடித்துத் தினந்தோறும் வாயிலிட்டு நன்றுக மென்றபின் வெந்நீரினல் கொப்பளித்து வரவும். பல்நோய் தீரும்.

---

# 93. பல்வலிக்கு, புழுவுக்குப் புகை.

கண்டங்கத் திரிவிரையு ழக்குத்தானுங்
கையில்வைத்தோர் சட்டிதனில் வகையதாக
வொண்டஅரைச் சட்டிநெருப் பிட்டுப்பின்னை
யோர்சட்டி கொண்டுவந்து நடுவிலேதான்
ரெண்டுதுட் டினளவுதுவா ரந்தானிட்டு
நேராக முன்சட்டி தனலிலேதான்
கண்டிதமாய்த் துட்டளவு யெண்ணெய்குத்தி
கண்டங்கத் திரிவிரையும் போட்டிடாயே (௱சக)

போட்டந்தத் துவாரமிட்ட சட்டிகொண்டு
புதுமையுடன் சுத்தியந்தப் புகைபோகாமல்
நாட்டமுடன் துணி கொண்டு வரம்பையெல்லாம்
நன்ருக மூடினதின் பிறகுசட்டி
ஒட்டையிலே வாயைவைத்துப் புகைபிடித்தா
லுடனேபல் லினிற்புழுவுஞ் செத்துவீழு
மாட்டமுள்ளப் பல்லசைவும் நிற்கும்பல்லி
னதின்வலியும் நிற்குமவிபு வுணர்ந்ததாமே (௱சஉ)

(இ.ள்.)

கண்டங்கத்திரி விதை ஒரு உழக்கு எடுத்துக்கொள்ளவும். ஒருகுழிவுள்ள சட்டியை யெடுத்து அதன் வாய்க்குப் பொருந்தும் மற்றெருசட்டியை யதன்மேல்க் கவிழ்த்துவைத்துச் சீலைமண்செய்யவும். இப்போது மேலே மூடப்பட்டிருக்கும் சட்டியின் மேல்பாகத்தில் கிரலளு நுழையுமளவு துவாரம் போடவும். இந்தவக்கையான சட்டியை குமுட்டி அடுப்பின் மேல் வைத்து, மேலுள்ள துவாரத்தின் வழியாக துட்டளவு நல்லெண்ணெய் ஊற்றி, கண்டங்கத்திரி விரையும் சிறிது போடவும். இப்போது மேல்சட்டியிலுள்ள துவாரத்தின் வழியாகப் புகை கிளம்பும். அச்சட்டியின் துவாரத்தில் வாயை

வைத்துப் புகையைப் பிடிக்கவும். பற்புழு இறந்து வெளிப்படும். பல்வலியும், பல்லசைவும் நிற்கும்.

---

# 94. பல்வலி, பல்வீக்கத்திற்குக் கொப்பளிக்க நீர்.

கருவேலம் பட்டைபிரப் பங்கிழங்குக்
காணகத்தின் வாகையுட் பட்டைமூன்றுஞ்
சரியாகத் துவைத்துத்தண்ணீர் சிவக்கக்காய்ச்சித்
தானுமந்தி சந்தியுந்தா னஞ்சாறேழ்நாள்
வரிசையுடன் கொப்பளித்தால் பல்லிநோடே
வலிக்கடுப்பெல் லாந்தீரும் வாங்கும் வீக்கம்
திரிமூர்த்திக் கொருமூர்த்தி யானவெங்கள்
சிவகிருபை பெறுபிரபு வுணர்ந்ததாமே (௱௪௩)

(இ-ள்.)

கருவேலம்பட்டை
பிரப்பங்கிழங்கு
காட்டுவாகைப்பட்டை

இவற்றைச் சமமெடுத்திடித்துத் (4 மடங்கு) தண்ணீர் விட்டு, அடுப்பின்மேலேற்றிச் சிவக்கக் காய்ச்சி வடிக்கட்டித் தினமும் காலையிலும் மாலையிலும், வாய்க்கொப்பளித்துவரப் பல்வலி, பல் கடுப்பு, வீக்கம் முதலியவை நிற்கும்.

---

# 95. பல்வலி, பல்புழுவுக்குப் புகை.

சட்டியிலே முக்கால்தண் ணீரைவிட்டுச்
சதிரான வெட்டரிவாள் நெருப்பிற்காய்ச்சி
சட்டமுடனே வைத்துமே கானகண்டங்
கத்தரிவிரையைப் போட்டுமுன் சொன்னதுவாரச்

சட்டியினுல் மூடித்துவா ரத்தின்தூமம்
தகைவான மாறுகாத தனிற்காட்டத்
திட்டமுடன் மூன்றுநாள் தன்னிலேதான்
தீரும்வலிப் புழுச்செத்து வீழுந்தானே (௱சச)

(இ.ள்.)

ஒரு வாயகன்ற புதுச் சட்டியில் (தாம்பாளத்தில்) முக்கால் பாகந் தண்ணீர் விட்டு வைக்கவும். அதன் நடுவில் ஒரு செங்கல்லை நிறுத்தி அதன்மேல், ஒரு வெட்டும் அரிவாளை நெருப்பிற் போட்டுப் பழுக்கக் காய்ச்சி வைக்கவும். அதில் கண்டங் கத்திரி விதையைப் போட்டால் புகை எழும்பும். மற்றொரு சட்டியி னடியில் துளைசெய்து, அதனுலிவற்றையெல்லாம் மூடிவிட துவாரத் தின் வழியாகப் புகை எழும்பும். இதை எந்தப் பக்கத்துப் பல் வலிக் கிறதோ அந்தப் பக்கத்திற்கு எதிர்ப்புறமுள்ள காதில் மூன்று நாளைக்குக் காட்டவும். பல்வலி நீங்கும், பல் பூச்சியும் செத்து வீழும். வலது புறப் பற்களில் வலியேற்பட்டால் வலது காதிற் பிடிக்கவும்.

---

# 96. பல்லசைவு, பல்வலிக்கு அடக்கிக்கொள்ள மருந்து.

மருக்காரைப்பழமும் செம்முள்ளி வேரும்வெயி
தனிலுலர்த் திப்பொடிகள் பண்ணிக்கொண்டு
சுருக்காக நல்லெண்ணெய் தன்னிலேதான்
சுடவைத்துப் பல்லதனி லடக்கிப்பாரு
பொருக்காத வலிநிற்கும் இறுகும் பல்லும்
பொய்யாது சிவகிருபை பெறுவசீரன்
தருக்காவ லன்சரபேந் திரபூபாலன்
ருனுணர்ந்த வைத்தியத்தின் றன்மைதானே (௱சரு)

(இ.ள்.)

மருக்காரைப் பழத்தையும், செம்முள்ளி வேரையும் வெயி லில் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணஞ் செய்து

கொள்ளவும். வேண்டும்போது, ஒரு கரண்டியில் சிறிது நல்லெண்ணெயூற்றி அதில் சிறிதளவு தூளைப்போட்டுக் கொதிக்க வைத்துப் பல்வலியிருக்கும் பக்கத்திலடக்கவும். பல்வலி நீங்குவதுடன் பற்களும் இறுகும்.

---

## 97. பல்லசைவுக்குக் கொப்பளிக்க நீர்.

பல்லிறுக மருந்துகருங் காலிப்பட்டை
பருத்தவெள்வே லம்பட்டை வசம்புகூட
வல்லவம்மி தனிற்றட்டித் தண்ணீர்தன்னை
வார்த்தூற வைத்துக்கலந் தங்கடுக்காய்
மெல்லியதா யரைத்துவெந்நீ ரிற்கலந்து
விருப்பமுடன் முன்சொல் தண்ணீருங் கூட்டி
வல்லபமாய்க் கொப்பளிபல் லிறுகும்பாரு
வலிதீரு மிம்முறையை நீசெய்வாயே (௱௪௬)

(இ.ள்.)

கருங்காலிப்பட்டை
வெள்வேலம்பட்டை
வசம்பு

இம்மூன்று சரக்குகளையுமம்மிதனிலிட்டு நசுக்கிச் சிறிது தண்ணீர்விட்டூறவைத்து, சமனளவு கடுக்காய்த்தோலும் கூட்டி யாவற்றையுமொன்ருகவரைத்து, வெந்நீருடன் கலந்து வாய்க் கொப்பளித்துவரவும். பற்கள் பலப்படும்.

---

## 98, பல்லசைவுக்கு மருந்து.

அரைப்பொடிகா சுக்கட்டி துத்தமூன்று
மதுடன்ரெண்டு காசிடைசேங் கொட்டைத்தைலம்

துருசுடன்விட் டரைத்துப்புளிக் கொட்டைமாத்திரம்
துப்புரவாங் கரண்டிதனிற் சுடவும்வைத்து
இருநேரம் நாலுநாள்ப் பல்லில் வைக்க
இறுகும்பல் லாராய்ச்சி மணியுங்கட்டி
துரைராசன் மனுநீதி தவரூச்செங்கோல்
தொட்டாளும் விபுவுணர்ந்த முறையிதாமே (ராசஎ)

(இ.ள்.)

இரும்புத்தூள்
காசுக்கட்டி
துத்தம்

இவை வகைக்கு 2 காசெடை எடுத்து, சேங்கோட்டைத் தைலத்தினலரைத்து, வைத்துக்கொண்டு வேண்டும்போது, புளியங் கொட்டைப் பிரமாணமவ்விழுதைக் கரண்டியிலிட்டுச் சுடவைத்து தினம் 2 வேளை வீதம் 4 நாளைக்குப் பற்களில் வைக்க அவை இறுகும்.

---

# 99. பல்லசைவுக்குப் பல்தேய்க்கத் தூள்.

சட்டியிலோ ருழக்குப்பால் விட்டு வுப்புச்
சதிராக வுழக்குவதிற் போட்டுப்பின்னும்
அட்டியிலாத் துருசுவரா கனிடைரெண்டு
அதைப்பொடிசெய் தேபோட்டு அடுப்பில்வைத்து
சுட்டபால் வத்திமண லாகுமந்தத்
தூளையெடுத் தந்திசந்தி பல்லுத்தேய்க்க
விட்டிடும்பல் லிறுகும்தஞ்சைச் சரபேந்திரன்
விசையன்பிர மாணித்த முறையிதாமே (ராசஅ)

(இ.ள்.)

ஒரு புதுச் சட்டியில் பசுவின் பாலை யோருழக்கிட்டு, அத்னுடன் ஒரு உழக்கு உப்புப் போடவும். பின்பு 2 வராகனெடை துருசைப் பொடி செய்து, அதில் போட்டு, அடுப்பின்மேல் வைத்துக் கொதிக்கவைக்கவும். பால் சுண்டி மணலாகும்வரை யெரிக்கவும். அந்தத் தூளைக்கொண்டு, காலையிலும் மாலையிலும் பல் தேய்த்துவரப் பற்கள் கெட்டிப்படும்.

---

# 100. பல்வலிக்கு மருந்து.

நிலந்தனிலே மனுக்கள்வெகு வாதையாக
நேரிட்டுக் கொடூரமா கியுமேயாடி
உலைந்தபல்லு மிறுகவோர் மருந்துசொல்வேன்
உண்மையதாய்க் கேள்கீழா நெல்லிவேரைத்
தவந்தவரு மல்மென்று வலித்திடத்திற்
ருனடக்க வலிதீருந் தருமநீதி
நலந்தருதென் தஞ்சைசர போசிராச
நரபதியின் னனுமதியிம் முறையதாமே (ராசகூ)

(இ.ள்.)

கீழாநெல்லி வேரை வாயிலடக்கி மென்று வலியிருக்குமிடத்தில் வைக்க வலிதீரும்.

---

# 101. பல்லசைவுக்குக் கொப்பளிக்க நீர்.

மருதமரப் பட்டையும்வெள் வேலம்பட்டை
மருக்காரை வேர்சிறுதேக் கைந்துந்தானுந்
துரிதமுட னறுக்கியதிற் குறுணித்தண்ணீர்
துணிவுடனே விட்டுநா லொன்ருய்க்காய்ச்சி

இருவேளை கொப்பளித்து வரநீபல்லி
　　னிடரான அசைவிறுகும் வலியும்நீங்கும்
அரியயனுங் காணுத அரனுர்பாத
　　மர்ச்சிக்குஞ் சரபேந்திரனு ணர்ந்ததாமே (௩௫௰)

(இ.ள்.)

மருதம்பட்டை
வெள்வேலம்பட்டை
மருக்காரைவேர்
சிறுதேக்கு

இவற்றையிடித்துக் குறுணி ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருகக் காய்ச்சவும். இக்கஷாயத்திஞல் தினமிருவேளை வாய் கொப்பளித்துக்கொண்டுவரப் பல்வலி நீங்கி, அவைகளிறுகும்.

குறிப்பு :-

செய்யுளில் 5 சரக்குகள் எனக் காணப்படுகிறது. அது பிசகு.

---

## 102. பல்லசைவு, பல்வலிக்கு மருந்து.

பல்லசைவும் பல்வலிக்கோர் மருந்துநன்ருய்ப்
　　பகர்வேன்மா சிக்காய்க்கஸ் தூரிமஞ்சள்
நல்லெண்ணெ யிற்கொதிக்க வைத்திறக்கி
　　நன்ருக வுள்வெளியிற் றடவிப்பாரு
பல்லின்வலி போகுமசை விறுகுமிந்த
　　பாரிற்சிவ கிருபைபெற்றுப் பண்பதான
செல்லத்தஞ்சை யாளுந்துள சேந்திரனீன்ற
　　தீரன்சர பேந்திரனிர்ண யித்ததாமே (௩௫௧)

(இ-ள்.)

மாசிக்காய்

கஸ்தூரிமஞ்சள்

இவ்விரண்டையும் வகைக்கு ($\frac{1}{2}$ பலம்) சமமாக வெடுத்துப் பொடித்து நல்லெண்ணெய் (1 சேரி) விட்டுக் காய்ச்சி யிறக்கவும். இதை வாய்க்குள்ளேயும், கன்னத்தில் வலி தெரியுமிடத்திலும் பூசிவரப் பல்வலி நீங்குவதுடன், பற்களும் கெட்டிப்படும்.

---

## 103. பல் வலிக்கு மருந்து.

வேளைவேர்க் கும்பியினில் வைத்துவுள்ளி
மெய்வசம்புங் கூட்டியே நறுக்கியந்த
நாளிற்பல் வலிக்குமிடத் தினிலடக்கு
நாடாது பார்வலியு மருவலார்கள்
வாளின்வலுக் கஞ்சியந்த நாட்டைவிட்டு
மறுதேசம் போய்ப்பிழைப்பர் வளமாந்தஞ்சை
யாளுசர போசிரா சாதிராச
னனுமதியிம் முறையதனைச் செய்துபாரே (௱௩உ.)

(இ.ள்.)

நல்வேளை வேர்

பூண்டு

வசம்பு

இவற்றைச் சமமெடுத்து நசுக்கி, வலிக்கும் பற்களுள்ள் புறத்திலடக்க வலி நீங்கும்.

---

# 104. பல்புழுவுக்கு, வலிக்கு மருந்து.

குப்பைமேனியுமென்ப தெல்லாம்முள்ளி
கூட்டிநறுக் கியுமெண்ணெ யுடன்கலந்து
அப்பவே வாயிலடக் கதினுற்பல்லு
மதிலிருக்கும் புழுவும்பல் வலியுந்தீருஞ்
செப்புமுறை தப்பாது மனுவுக்கியானந்
தின்படிசெங் கோல்நடத்தி முனிவராலே
ஒப்புடன்சொல் வைத்தியத்தை நாள்கள்தோறும்
முணர்ந்துசர பேந்திரனிச் சயித்ததாமே (ாருரு)

(இ.ள்.)

குப்பைமேனிச் சமூலம்
முள்ளி சமூலம்

இவைகளை நறுக்கி, நல்லெண்ணெயில் கலந்து, வாயிலடக்கிவரவும். பற்களிலுள்ள புழு வீழ்ந்து, பல்வலியும் சாந்தப்படும்.

குறிப்பு :—

முள்ளி = செம்முள்ளி.

---

# 105. பல்லசைவுக்கு, பல் வீக்கத்திற்குக் கொப்பளிக்க எண்ணெய்.

ஆயிலப்பட் டையும்புங்கம் பட்டைவேரு
மறுகளஞ்சு வகையொன்றுக் கரைத்துக்கொண்டு
நீயிப்ப டியுமெண்ணெ யரைச்சேர்விட்டு
நிச்சயமாய் வடித்துவைத்துக் கொண்டுவூத்தி
வாயிற்கொப் பளிபல்லு முரமாம்பல்லின்
வலிநிற்கும் பிசகாது வாணர் மீதில்
தாயிற்கொப் பானதயை யுள்ளவெங்கள்
சரபேந்திர னிர்ணயித்த தறிந்துபாரே (ாருச)

(இ.ள்.)

ஆயில்யப்பட்டை 6 கழஞ்சு
புங்கம்பட்டை 6 கழஞ்சு

இவற்றையம்மிதனிலிட்டு நன்ருகவரைத்து, நல்லெண்ணெ யரைச்சேரில் குழப்பிக்கொண்டு, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடிக்கவும். இவ்வெண்ணெயினுல் வாய்க் கொப்பளித்துவரப் பற்கள் பலப்படும். பல்வலியுந்தீரும்.

---

# 106. தந்தவாய்வு, தந்தவலிக்கு மருந்து.

சுக்குகடுக் காய்த்தோல்வால் மிளகுதிப்பிலி
சொல்லுமைந்துஞ் சூரணித்துத் தேனிற்ருனே
பக்குவமா யந்திசந்தி பத்துநாள்கொள்
பல்வாய்வும் வலியெல்லாம் தீரும்கங்கை
அக்குமணி பூண்டுதிரு வானைக்காவில்
ஆனையுரித் தருள்சிவனுர் அருளே பெற்ற
திக்குமனு வோர்கள்புகழ் சரபோசேந்திர
தீரன்நிர் ணயித்தமுறை நீசெய்வாயே. (௱௫௫)

(இ.ள்.)

சுக்கு
கடுக்காய்த்தோல்
வால்மிளகு
திப்பிலி

இவற்றைச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு தேனில் குழைத்துச் சாப்பிட்டு வரவும். தினம் காலை மாலை வீதம் 10 நாளைக்குச் சாப்பிடவும். பல்வாயு, பல்வலி தீரும்.

குறிப்பு :— 5 எனச் செய்யுளில் கூறப்பட்டிருப்பினும் 4 சரக்குகளே முறையிலுள்ளன.

---

# 107. பல்லசைவு, பல்கூச்சம் பல்வாய்வுக்குக் கொப்பளிக்க எண்ணெய்.

தேங்காய்ப்பால் நாழிபொடு தலைச்சாறு நாழி
திரிபலைபொன் னரிதாரம் தேவதாரம்
பாங்கான சதகுப்பை வெள்வேலம்பட்டை
பதமுள்ள அதிவிடையங் காசுக்கட்டி
நீங்காத கல்மதங் கம்பிப்பிசி னுந்தான்
நேரான குடசப்பாலை யின்வித்தோடே
தேங்கான காந்தங் குங்கிலிய மான
சேரவீ ராறுவகை சேர்த்துக்கொள்ளே

(௫௬)

கொள்ளுவகை யொன்றுக்கு முக்கழஞ்சு
கூட்டிடுநீ யிருநாழி யெண்ணெய்தன்னை
கொள்ளடுப்பி லேத்தியெரித் தேவடித்தே
கொண்டுவா யினிலடக்கிக் கொப்பளிக்க
உள்ளபல் லினசைவு பல்கூச் சம்பல்
வாய்வுடனே டுந்தத்துவக் கியான முணர்ந்த
வள்ளல் சன கனிகரா யுலகநீதி
வழுவாத சரபேந்திர னுணர்ந்ததாமே (௫௭)

(இ.ள்.)

தேங்காய்ப்பால் — நாழி 1
பொடுதலைச்சாறு — நாழி 1

இவற்றுடன்,

| | |
|---|---|
| கடுக்காய்த் தோல் | தாளகம் |
| நெல்லிவற்றல் | தேவதாரு |
| தான்றிக்காய்த்தோல் | சதகுப்பை |

| | |
|---|---|
| வெள்வேலம்பட்டை | கம்பிப்பிசின் |
| அதிவிடயம் | குடசப்பாலை வித்து |
| காசுக்கட்டி | காந்தம் |
| கல்மதம் | குங்கிலியம் |

இவைகள் வகையொன்றுக்கு 3¾ வராகனெடை யெடுத்து, நன்ருக அம்மிதனில் வைத்துத் தேங்காய்ப்பால் கூட்டி அரைத்து நல்லெண்ணெய் 2 நாழியுடனே குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கட்டவும்.

இத்தைலத்தை வாயில்விட்டுக் குழப்பிவரப் பல்லசைவு, பல் கூச்சம், பல்வாயு தீரும்.

---

# 108. பல்வலிக்குப் புகையும், கொப்புளிக்க நீரும்.

கண்டங்கத் திரியினெற்றெ டுத்துயெண்ணெய்
கலப்பித்து ஒருநாழி கழித்துத்தானே
கண்டபல்லின் வலியில்புகை யிலையைவைத்துக்
கருணையுடன் சுருட்டாகச் சுருட்டிக்கொண்டு
முண்டியந்த புகையதனைக் குடிநீநன்ருய்
முன்சொன்ன விலையில்தண்ணீர் விட்டுக்காய்ச்சிக்
கொண்டந்தி சந்தியும்நீ கொப்புளிக்கக்
குணமாகு மானுவுணர் முறையதாமே (ாருஅ)

(இ.ள்.)

(1) கண்டங்கத்திரியின் நெற்றை எடுத்து, அதனுடனே நல்லெண்ணெய் கலந்து ஒரு நாழிகை யூறவைத்துப் பின்பு, அவ் வெண்ணெயை வாயிலடக்கவும்.

(2) பல்வலியிருக்கையில் புகையிலையைச் சுருட்டி சுருட் டாகச் செய்து, பத்தவைத்து அப்புகையைக் குடிக்கவும்.

(3) புகையிலையைக் கஷாயஞ்செய்து காலையும் மாலையுங் கொப்பளிக்கவும். பல்வலி தீரும்.

---

## 109. பல்லசைவுக்குக் கொப்புளிக்க நீர்.

பழங்கிட்டங் கருங்காலி மரத்தினோடே
பட்டைவெள்வே லம்பட்டை மருக்காரைவேர்
விழுந்தண்ணீர் விட்டுநா லொன்ருய்க் காய்ச்சி
இரண்டுநேர முமதைக்கொப் பளித்தாயானல்
புழங்குபல்லு மிறுகுமுல குக்காய்முன்னோர்
போதித்த வைத்தியத்தைப் பொறுமையாக
செழுந்தஞ்சை யாளுசர பேந்திரபூபன்
தினமுணர்ந்த முறையதனைச் செய்துபாரே (௱௫௬)

(இ.ள்.)

நாள்பட்ட கிட்டம் (மண்டூரம்)
கருங்காலி மரப்பட்டை
வெள்வேலம்பட்டை
மருக்காரை வேர்

இவற்றை நசுக்கித் தண்ணீர் (4 மடங்கு) விட்டு, அடுப்பின் மேலேற்றி நாலிலொன்ருகக் காய்ச்சித் தினம் காலையும், மாலையும் கொப்பளிக்கப் பற்கள் பலப்படும்.

---

## 110. பல்புழு விழ மருந்து.

வெள்ளெருக்கம் வேர்ப்பட்டை கொட்டைப்பாசி
விதமான முளிமஞ்சள் மூன்றுந்தானே
உள்ளபடி சரியாகப் பொடிகள் பண்ணி
யும் புளியம் புருணிநெருப் பையுண்டாக்கி

அள்ளிமுன்சொல் பொடியதனை நெருப்பிற்போட்டு
அப்புகையை யுஞ்சகிக்கத் தக்கதாக
மெள்ளவே பல்லதினிற் பிடிக்கச் சொத்தை
மேவாதோர் புழுச்செத்து வீழுந்தானே (௱௬௰)

(இ.ள்.)

வெள்ளெருக்கம் வேர்ப்பட்டை
கொட்டைப் பாசி
மஞ்சள்

இம்மூன்றையுஞ் சமமெடுத்துத் தூள் செய்துகொண்டு, புளியம்பட்டைப் புரணியினாலுண்டான நெருப்பில், மேற்சொன்ன தூளைப் போடப் புகையெழும்பும். இதைப் பற்களில் படும்படி பிடித்துவரச் சொத்தைப் பல்பூச்சி சாகும்.

---

# 111. பல்வலி, பற்புழு, பல்லசைவுக்கு மருந்து.

நாயுருவி தன்னைமுக் காலுஞ் சுற்றி
நன்றாகக் கிழக்குமுக நின்று கும்பிட்
டாயும்வே ரைப்பிடுங்கி நறுக்கி வாயி
லன்பாக வடக்கிக்கொள் முழங்கால் தன்னில்
தாயகமா யெள்ளினுட யெண்ணெய் தன்னை
தடவியே வெய்யிலிலே தானிருக்க
ஊயுமொரு பூச்சிசெத்து வீழுங் கண்டாய்
உடனேபல் லிறுகும்வலிதீருந்தானே (௱௬௧)

(இ.ள்.)

நாயுருவிச் செடியை மூன்றுதரம் சுற்றிவந்து, கிழக்குமுக நோக்கிக் கும்பிட்டு, அதன் வேராமல் பிடுங்கி நசுக்கி, வாயிலடக்கிக்கொள்ளவும். முழங்கால்களில் சுத்தமான எள்ளெண்ணெயைத் தடவி வெயிலிலிருக்கவும். பற்பூச்சி செத்து விழும். பல்வலியுந் தீர்ந்து பற்களுமிறுகும்.

---

## 112. பல் சொத்தைக்கு மருந்து.

தூயதொரு பல்லதனிற் சொத்தையாகுந்
துடர்வலியுற் ருலதற்கு மருந்துகேளு
நாயுருவி வேருமிலை யும்நறுக்கி
நழுவுசொத்தைப் பல்லதனி லடக்கிக்கொண்டு
வாயதுவும் பேசாதே யிருந்தாயானல்
வலியவொரு புழுவும்புறப் படுமேபல்லில்
நோயதுவுந் தீருமிது கைகள்கண்ட
நுட்பமதைச் செய்துபார் தப்பாதின்றே (௱௬௨)

(இ.ள்.)

நாயுருவி வேரையும், இலையையும் நசுக்கி, அவற்றைச் சொத்தைப் பற்களிலடக்கிக்கொண்டு வாய் பேசாமலிருந்தால் பற்பூச்சி வெளிப்பட்டு வலியுந் தீரும். கைகண்டது.

---

## 113. பல் வீக்கம், பல்லசைவு, பல் புழுவுக்கு உருண்டை.

பெருங்காயஞ் சீனக்கா ரமுமேயன்ன
பேதியுடன் தேவதா ரமுமே சரளம்
மருந்தான வைந்துஞ் சரியாகக் கூட்டி
வல்லகருவே லைப்பட்டைக் கஷாயந்தன்னில்
வருந்தா மலரைத்துச்சில வுருண்டை பண்ணி
வாயினுே குறபல்லின் பக்கந்தன்னில்
அருந்தாம லடக்கிறுகும் பல்லின் வீக்க
மதுகரையும் புழுச் செத்து வீழுந்தானே (௱௬௩)

(இ.ள்.)

பெருங்காயம்
சீனக்காரம்

அன்னபேதி
தேவதாரு
சரள தேவதாரு

இச்சரக்குகளை யொன்றுகூட்டி இடித்துச் சூரணஞ் செய்து கருவேலம்பட்டைக் கஷாயம்விட்டு நன்றாக அரைத்து, உருண்டைகள் செய்து, வலியிருக்கும் பற்களில் அடக்கிவரப் பற்கள் இறுகும். வீக்கமும் தீர்ந்து, பல் புழுவும் வீழும்.

---

# 114. பல் நோய், பல் புழுவுக்கு மருந்து.

அன்னபே தியுமரிதாரமுமி ரண்டும்
    அதுசரியாய்க் கூட்டிவலிக் கின்றபல்லில்
உன்னிதமாம் பல்லில்பட வடக்கிப்பாரு
    வுடனேவொரு புழுச்செத்து விழும்நோய்தீரும்
அன்னதரு துளசமகா ராசனீன்ற
    அன்பனுல குக்கின்பன் அவனிதனிற்
சொன்னமொ ழிதவரு சரபோசேந்திர
    சுகுணனிர் ணயித்ததிது நீசெய்வாயே (ரா சுஃ)

(இ.ள்.)

அன்னபேதி
தாளகம்

இவ்விரண்டையு மொன்றுகூட்டி வலியுள்ள பற்களிலடக்கி வரப் புழு இறந்து வீழும். நோயுந் தீரும்.

---

## 115. சொத்தைப்பல், பல்பூச்சி, பல் வலிக்குப் புகை.

முளைத்தபேய்க் குமட்டிவேர்க் காய்ப்பூவு
முதிரிலிலை சமூலமுமே பிடுங்கிவந்து
இளைக்கவதை யுலர்த்திப்பொ டிகள்பண்ணிக்
கொண்டினிய புளியஞ்சிரு யனலையிட்டு
வளர்த்தியந்தத் தணலில்முன்சொல் பொடியைப்போட்டு
வாய்திறந்து வலித்தபல்லில் புகையைக்காட்டு
உளுத்தபல்லின் பூச்சிவிழும் வலியுந்தீரும்
உத்தமவா னுணர்ந்தமுறை யறிந்துசெய்யே (௱௬௫)

(இ.ள்.)

பேய்க்குமட்டியின் வேர், காய், பூ, இலை இவைகளுடன் சமூலமாகப் பிடுங்கி வந்து, நிழலிலுலர்த்திப் பொடி செய்து கொண்டு, புளியம்புரணியினாலேற்பட்ட நெருப்பில் முன் சொன்ன பொடியைப் போட்டு, அதிலிருந்தெழும்பும் புகையை வாயில் பிடிக்கவும். சொத்தைப் பல்லிலிருந்து புழுக்கள் வீழும். பல்வலியுந் தீரும்.

---

## 116. நாசியினாலே இரத்தம் விழுகிறதற்கு மருந்து.

அருகஞ்சாற் றிற்சீந்திற் றண்டையுந்தான்
அரைத்துமொரு ஏனத்திற் பிழிந்துகொண்டு
உருவான நாசிதன்னி லந்திசந்தி
உற்பனமாய்ப் பத்துநாள் விட்டாயானால்
வருமிரத்தம் வீழ்தலுமே உடனேநிற்கும்
மற்புதம னுக்கியான முணர்ந்திருந்த
திருவளரு மார்பன்வெற்றி யலங்கற்றேளன்
தீரன்சர பேந்திரனுணர் செய்கையீதே (௱௬௬)

(இ.ள்.)

அறுகம்புல் சாற்றினுல் சீந்தில் கொடியை அரைத்து, அதன் சாற்றையொரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, மூக்கினில் தினம் காலையிலும் மாலையிலும் நஸ்யமிடவும். இவ்வாறு 10 நாட்கள் விட்டால் ரத்தம் உடனே நிற்கும்.

---

## 117. நாசியாலே இரத்தம் விழுகிறதற்குக் குடிமருந்து.

ஆடாதோ டையிலைச்சாறு தன்னிலேதான்
அரைச்சேரிற் றேனுமரைப் பலமுங்குத்தி
தாடாண்மை யாய்மூன்று நாளும் கொள்ளுத்
தரியாதுமூக் கிரத்தமறு மொன்னலாரைக்
காடாளவிட்டு வொள்வேல் தன்னையுந்தான்
கைக்கொண்டு வெற்றிபெற்ற கருணைச்சோழ
நாடாளு மிறைதஞ்சன் கார்த்ததிபன்
நரபதியாஞ் சரபேந்திர னுணர்ந்ததாமே. (ாகூஎ)

(இ.ள்.)

½ சேர் ஆடாதொடையிலைச் சாற்றில் ½ பலந்தேனைவிட்டுக் குலுக்கித் தினம் காலையில் பருகவும். மூன்று நாள் செய்யவும். மூக்கிலிருந்து வருமிரத்தம் நிற்கும்.

---

## 118. நாசியால் வருகிற இரத்தக் கிருமிக்கு.

நாசியினிற் கிருமியது தோன்றி மெத்த
நாடிதின வதிகமாய் நளிருற்ருேற்குத்
தேசாலம் விழுதுடனே நளிருங்கூட
செய்யவிடத் தரைவேரின் பட்டைதானும்

ஆசைமிகு பசுநெய்யி லரைத்துநசிய
மதுசெய்வாய் பூச்சிசெத்து விழுந்தப்பாமல்
மோசஞ்செய் தினவுநிற்குந் தக்கோராய்ந்த
முறையிதுதப் பாதுடனே செய்துபாரே. (௱௬௮)

(இ.ள்.)

ஆலம் விழுதுடன் விடத்தேரை வேரின் பட்டையையும் கூட்டிச் சிறிது நெய் கலந்து நன்றாக அரைத்து, மூக்கில் நஸ்யமிடவும். பூச்சிகள் செத்துவிழும். தினவும் நிற்கும்.

---

## 119. மூக்கிலிரத்தம் விழுகிறதற்கு.

சமையாத மாங்கொட்டைப் பருப்புலர்ந்த
தாயமா தளம்பூவும் வெங்காயத்தோல்
தமையுமறு கம்வேரும் நாலுங்கூட்டி
அம்மிதனில் முலைப்பால்விட் டேநறுக்கி
சமையிரத்தம் விழும்நாசி தனிலேநசியந்
தப்பாம லந்திசந்திப் பத்துநேரம்
நிமையாமல் விடுமிரத்த முடனேநிற்கும்
நீநம்பி யிம்முறையைச் செய்துபாரே. (௱௬௯)

(இ.ள்.)

முற்றாத மாங்கொட்டைப் பருப்பு
வெங்காயம்
உலர்ந்த மாதுளம்பூ
அறுகம் வேர்

இன்னவைகையும் சிறிது முலைப்பால்விட்டு அம்மிதனிலரைத்து இரு நாசிகளிலும் தினமிருவேளை 5 நாள் நஸ்யஞ் செய்யவும். இரத்தம் நிற்கும்.

---

# 120. மூக்கினிலிரத்தம் விழுகிறதற்கு நசியம்.

மாங்கொட்டைப் பருப்பரைத்து யெலுமிச்சங்காய்
மாத்திரமுச் சந்தலையி லுள்ளங்கையி
லோங்கியே தப்பிவைசெவ் வலரிப்பூவை
[1]யுடன்கூட்டிப் பிழிந்துவந்தி சந்தியுந்தான்
பாங்குடனே மூன்றுதுள்ளி மூக்கினிற்றுன்
பத்துநாள் பிழிந்திடரத் தங்கள் நிற்கும்
நீங்களிதை யுறுதியுட னம்பிச்செய்தால்
நிலவரமா யிம்முறைதப் பாதுதானே. (௱எ௰)

(இ.ள்.)

மாங்கொட்டைப் பருப்பையரைத்து ஒரு எலுமிச்சங்காயள வெடுத்து உச்சந்தலையிலும் உள்ளங்கையிலுமப்பிவைக்கவும். செவ் வலரிப் புஷ்பத்தை நசுக்கிப் பிழிந்து அதன் சாற்றைத் தின மிருவேளை (காலை, மாலை) நாசியில் நஸ்யமிடவும். 10 நாளைக்குச் செய்யவும். ரத்தம் நிற்கும்.

[1] குறிப்பு:—

'உடன் கூட்டி' என்பதனுல் 'மாம்பருப்பையும் சேர்த்து' என்றும் பொருள்கொள்ள இடமிருக்கிறது.

---

# 121. நாசியால் ரத்தம் விழுகிறதற்கு நசியம்.

சுண்டையிலை வெள்ளுள்ளி பொன்னுங்காணி
சொல்லுசிறு கீரையுட னேயிந்நாலும்
கெண்டைவிழி மாதர்முலைப் பாலைவிட்டுக்
கேள்நறுக்கித் துணியில்வைத்து நசியஞ்செய்தால்
அண்டாது மூக்கில்ரத்தம் வீழ்தல்தானும்
அந்திசந்தி பத்துநாள் செய்துபாரு
கண்டான மதுரமொழி துளசபூபன்
காதலனுஞ் சரபேந்திரன் கருணையீதே. (௱எக)

(இ.ள்.)

சுண்டையிலை
பொன்னுங்காணி
வெள்ளுள்ளி
சிறுகீரை வேர்

இந்நான்கையும் அம்மிதனில் வைத்து முலைப்பால்விட்டு நசுக்கி ஒரு மெல்லிய துணியிலிட்டு இரு நாசிகளிலும் நஸ்யஞ் செய்யவும். தினமிருவேளை வீதம் 10 நாளைக்குச் செய்யவும். ரத்தம் விழுதல் நிற்கும்.

---

# 122. மூக்கினுல் சீழ்விழுதல், நீர் விழுதல் தலைத்திகைப்பு, முகரோகத்துக்கு ஆச்சியம்.

திருத்துழாய்ச் சாறுநாழி யாகும்நல்ல சீந்திற்சாறு முழக்குச்
சிறுவழுதலைப் பழச்சாறுழக் கீருள்ளிச் செழுஞ்சா றுழக்கதாகும்
உருத்துள்ள குங்கிலியம் பலம்நாலு மிளகுசுக்கோது
திப்பிலிவகைக்கு
மோர்பலஞ்சிற் றுமணக்கெண் ணெய்நாழி தனிலொக்கக்
கலந்துநன்றாய்
அரைத்துக்கரைத் தெரித்திறக்கிப் பதத்தில்வடித் தைலத்தை
நசியமதுசெய்
யதுக்குத்தலைத் திகைப்பறுஞ்சீ யுநீர்விழுத லண்டாது
முகரோகமும்
கருத்திற்சி வத்தினுட பதத்தைப்பணிப் பிறபல
கருணு கடாட்சயோக்கியன்
கனதைபெரு தஞ்சைநகர் தனையாளுஞ் சரபேந்திரன்
கருணைபிர மாணித்ததே. (ளஎஉ)

(இ.ள்.)

| | |
|---|---|
| துளசிச்சாறு | — 4 படி |
| சீந்திற்கொடிச்சாறு | — 1 உழக்கு |
| சிறுவழுதலைப்பழச்சாறு | — உழக்கு |
| பூண்டின் சாறு | — உழக்கு |

இந்நான்கு வகைச் சாறுகளையுமொன்றுகலந்து,

| | |
|---|---|
| குங்கிலியம் | — 4 பலம் |
| சுக்கு | — 1 பலம் |
| திப்பிலி | — 1 பலம் |
| மிளகு | — 1 பலம் |

இவைகளை ஷை சாறுவிட்டரைத்து, எல்லாவற்றோடும் ஆமணக்கெண்ணெய் ஒருநாழி, கூட்டிக் கலந்து, அடுப்பின்மீதேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும். இத்தைலத்தை மூக்கில் நஸ்யமிட,

மயக்கம், மூக்கிலிருந்து சீழ் வருதல், இரத்தம் வீழல், முக ரோகம் முதலியவை தீரும்.

---

# 123. நாசியினால் இரத்தம் விழுகிறதற்கு நசியம்.

இரத்தமது நாசியினால் வீழ்வதற்கு
இனியநசிய மொன்றி யம்பக்கேண்மோ
நிரத்தகுங் குமப்பூகஸ் தூரிகூட
நேராங்கோ ரோசனையுஞ் சரியாய்க்கொண்டு
முருக்கம்பூச் சாற்றினி லந்திசந்தி
மூக்கினிலே நசியஞ்செய் பத்துநாளும்
வருத்துமிரத் தமும்நிற்கும் தக்கோ ராய்ந்த
வகைவிபரப் படிநீயுஞ் செய்திடாயே. (௱௭௩.)

(இ.ள்.)

குங்குமப்பூ
கஸ்தூரி
கோரோசனை

இவற்றைச் சமமாகவெடுத்து, ஒரு மெல்லிய துணியில் முடிச்சாகக் கட்டிக் கல்யாண முருக்கம்பூச் சாற்றில் துவைத்து மூக்கில் நஸ்யமிடவும். இரத்தம் நிற்கும். தினமிருவேளை காலை மாலை யிருவேளையிலும் 10 நாளைக்குச் செய்யவும்.

---

## 124. மூக்குநீர்ப் பாய்ச்சலுக்கு உள்ளுக்குச் சித்தாமுட்டித் தைலம்.

சித்தமட்டி வேர்சீந்திற் றண்டினூடே
சிறுகீரை வேர்கோரைக் கிழங்குங்கூட
உத்தநில வேம்புதூ தளைநன்னாரி
ஓரிதழ்த்தா மரையமுக்கிரா வொன்பதுந்தான்
சத்துவமாய் வகைக்குமொரு பலமிடித்துத்
தண்ணீரு மாறுபடி விட்டுக்காய்ச்சி
யொத்தபடி யொன்றாக வடித்துப் பால்நெய்
யொவ்வோர்படி யரைப்படிநல் லெண்ணெய்கூட்டே.
(௱௭௪)

கூட்டிமேத் தஞ்சாறுதா னரைப்படியுங்
கொண்டுதிரி கடுகுசீ ரகமிந்துப்பு
கோஷ்டமதி மதுரமில வங்க மாறும்
குணமாக வகைக்குமோர் களஞ்சரைத்து
நாட்டமுடன் போட்டெரித்து வடித்துக்கொண்டு
நக்குவொரு துட்டிடையு மந்திசந்தி
தாஷ்டிகமாம் நீர்ப்பாய்ச்சல் நிற்குநிற்குந்
தப்பாது இப்போதே செய்துபாரே. (௱௭௫)

(இ-ள்.)

| | |
|---|---|
| சித்தாமுட்டி | தூதுவளை |
| சீந்திற்கொடி | நன்னாரி |
| சிறுகீரைவேர் | ஓரிதழ்த்தாமரை |
| கோரைக்கிழங்கு | அமுக்கிராக்கிழங்கு |
| நிலவேம்பு | |

இவைகளை வகைக்கு ஒரு பலமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, 6 படி தண்ணீர் விட்டு, அடுப்பின்மேலேற்றி ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சி,

| | |
|---|---|
| பசுவின் பால் | — 1 படி |
| ,, நெய் | — 1 ,, |
| நல்லெண்ணெய் | — $\frac{1}{2}$ ,, |
| ஊமத்தஞ்சாறு | — $\frac{1}{2}$ ,, |

இவற்றையுங் கூடவிட்டு

| | |
|---|---|
| சுக்கு | இந்துப்பு |
| திப்பிலி | கோஷ்டம் |
| மிளகு | அதிமதுரம் |
| சீரகம் | கிராம்பு |

இச்சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடையெடுத்துப் பால் விட்டரைத்து, சாறு கலந்த எண்ணெய் வகைகளுடனொன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதமாக இறக்கவும், இதனை ஒரு துட்டெடை வீதம், காலை மாலை நக்கிவர, மூக்கு நீர்ப் பாய்ச்சல் நீங்கிச் சரீரமும் புஷ்டியாகும்.

---

## 125. சலக்கோர்வைக்கு வங்கச்செந்தூரம்.

வங்கமது வேண்டியது நறுக்கிப் போட்டு
வகையான சட்டியதை யடுப்பில்வைத்து

சங்கினுட பொடிசிறுகச் சிறுகத்தானே
சதிராகத் தூவிவறுத் திடுகநல்ல
குங்குமம்போ லேயதுவும் நிறமுண் டாகுங்
குணத்திலெடுத் தேபரணி தன்னில்வைத்து
திங்குமிள குப்பொடியிற் கொண்டா யானல்
தீரும்நீர்க் கோர்வையது செய்துபாரே (௱எசு)

(இ.ள்.)

வெள்ளீயத்தை வேண்டிய அளவெடுத்துச் சுத்திசெய்து, அதை ஒரு புதுச் சட்டியில் போட்டு அடுப்பின்மீதேற்றி, சங்குப் பொடியைச் சிறிது சிறிதாகத் தூவி வருத்துவரக் குங்குமம் போன்ற நிறத்துடன் செந்தூரமாகும். இதையொரு ஜாடியில் பத்திரப்படுத்தி, மிளகுச் சூரணத்துடன் சாப்பிட நீர்க்கோர்வை நீங்கும்.

# 126. நாசியினீர்விழுதல், அடைப்புத் தினவுக்கு நசியம்.

சாரடைக் கிழங்கிந்துப்பு சாகுமில் மிளகுசீனி
கூறிய நறுநெய்தன்னிற் கொண்டிடு முலைப்பாலொக்க
வீறதாய் நையத்தட்டி விடுவது மூக்கில்நசியஞ்
சீறிய மூக்குநீரின் தினவுட னடைப்பும்போமே. (௱எஎ)

(இ.ள்.)

சாறணைக்கிழங்கு (வெள்ளை), இந்துப்பு, மிளகு, சீனி இவற்றை யிடித்து நெய்யில் குழைத்துச் சாப்பிடவும். இதையே முலைப் பாலுடன் நசுக்கி மூக்கில் நஸ்யமிடவும். மூக்கு நீர்ப்பாய்ச்சல், அரிப்பு, அடைப்பு இவைதீரும்.

## 127. நீர்ப்பீனசத்துக்குப் புகை.

கெந்தகமுந் துருசிரெண்டுஞ் சரியாய்க்கூட்டிக்
கேள்நறுக்கிக் கடுதாசி தனிலேயாதல்
சுந்தரம தானசே லையிலே யாதல்
சுருட்டியந்தத் திரியைத்தீ யினிற்கொளுத்தி
விந்தையுள்ள நாசிதன்னிற் புகையைக்கொள்ளு
விட்டுப்போம் நீர்ப்பீன சங்கள்தானும்
இந்தமுறை சரபேந்திர னுணர்ந்தா ராய்ந்த
திதுதப்பா துடனேநீ செய்துபாரே (௱௭௮)

(இ-ள்.)

கெந்தகம்

துருசு

இவ்விரண்டையும் சம எடை யெடுத்துப் பொடித்து ஒரு கடுதாசிலாவது அல்லது மெல்லிய துணியிலாவது ஒரே சீராகப் பரப்பிச் சுருட்டி, அத்திரியை விளக்கில் கொளுத்தி அதினின்றெழும்பும் புகையை மூக்கினில் கொள்ளவும்.

நீர்ப் பீனிசங்கள் தீரும்.

---

## 128. நீர்க்கோர்வைக்கு மருந்து.

இலைக்கள்ளி வேர்ப்பட்டைக் கோழிமுட்டை
யின்வெள்ளைக் கருவைவிட்டு அரைத்துச்சட்டி
யிலேபொரித்துத் தின்றுசலக் கோர்வைநிற்கு
மிதுதப்பா தெந்நாளுந் தருமநீதி
கலைக்கியான மறிநிபுணன் கற்றவர்க்குக்
கற்பகஞ்சற் குணம்நிறைந்த கருணைநாதன்
மலைக்கரசன் மருகன்சிவ பூசனைசெய்
மகாராசன் சரபேந்திர னுணர்ந்ததாமே. (௱௭௯)

(இ.ள்.)

இலேக்கள்ளி வேர்ப்பட்டையைக் கோழி முட்டையின் வெள்ளேக்கருவை விட்டரைத்துச் சட்டியில் பொரித்ததைச் சாப்பிடச் சலக்கோர்வை தீரும்.

---

# 129. சலதோஷத்துக்குக் கஷாயம்.

முன்னேவேர்ப் பாதிரிவேர்க் குமுளம்வேரு
முதிர்நெருஞ்சி வேர்தூது வளேயின்வேரும்
வன்னசித்த மல்லிகைவேர் பேராமல்லி
வாகைவேர் சிற்றமட்டி வேருங்கூட
உன்னிதமாங் கண்டங்கத் திரியின்வேரு
முற்பனமாம் வேர்கள்பத்தும் பலமோவொன்றும்
இன்னமுங்கோ ரைக்கிழங்குச் சிறுதேக்கோடே
யினியசீந்திற் றண்டுபற் பாடமாமே. (௱அ௰)

திப்பிலிகாஞ் சோரிகோஷ்ட மேழரைக்கால்
சேரோமம் பிரண்டைரெண்டு மரைப்பலந்தான்
ஒப்பிலாப் பேய்ப்பீர்க்கும் புரசம்வித்து
மொவ்வோர்பலஞ் சுக்குங்கால் பலமுங்கூட்டி
மெய்ப்புடனிம் மருந்துமிரு பத்திரண்டு
மிடித்துவப்போ தப்போதில் தூளேப்போட்டுச்
செப்புகஷா யஞ்சதுரப் பாகமாக்கித்
தினங்கொள்ளச் சலதோஷந் தீருந்தானே (௱அக)

(இ.ள்.)

| | |
|---|---|
| முன்னேவேர் | சித்தாமல்லிவேர் |
| பாதிரிவேர் | பேராமல்லிவேர் |
| குமிழம்வேர் | வாகைவேர் |
| நெருஞ்சில்வேர் | சித்தாமுட்டிவேர் |
| தூதுவளேவேர் | கண்டங்கத்திரிவேர் |

இவ்வேர் வகைகள் பத்தையும் வகைக்கொருபலமெடுத்து

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | பற்பாடகம் |
| சிறுதேக்கு | திப்பிலி |
| சீந்திற்கொடி | சிறுகாஞ்சோறி |
| கோஷ்டம் | |

இவைகள் வகைக்கு $\frac{1}{8}$ சேர் (1 பலம்)

| | |
|---|---|
| ஓமம் | — $\frac{1}{2}$ பலம் |
| பிரண்டை | — $\frac{1}{2}$ பலம் |
| பேய்ப்பீர்க்கு | — 1 பலம் |
| புரசம் வித்து | — 1 பலம் |
| சுக்கு | — $\frac{1}{4}$ பலம் |

இந்தச் சரக்குகளையுமொன்றுகலந்திடித்துத் தூளாக்கி, வேண்டும்போது சிறிது தூளுடன் 8 மடங்கு ஜலம் விட்டு, நாலில் ஒருபாகமாகக்காய்ச்சி, தினந்தோறும் பருகிவரச் சலதோஷம் தீரும்.

---

# 130. பீனசமொன்பதுக்கும் மூழ்கத் தைலம்.

சாதிக்காய்த் துருசுகடு குரோகணி
சாதிப்பத்திரி மனேசிலை யைந்துமே
நீதப்பா மலேவகைய துவொன்றுக்கு
நிசமதாகவு மும்மூன்று காசிடை
சோதிக்கிராம்பு கடுக்காயிது ரெண்டுஞ்
சொல்லுங் காசெடை யைந்ததுகூட்டிடு
ஓதுநெல்லிப் பருப்பு கொடுப்பைவே
ருடனெலிச்செவி வேர்நெல்லி வேரதே. (௱அஉ)

குப்பை மேனியின் வேர்சிறு கீரைவேர்
குணமதாக வகைக்குக்கால் சேரதாம்
ஒப்பு டன்கடைக் காட்டு மருந்ததையு
முறுதியாக நன்ருய ரைத்திடுமே
தப்பிலா நல்லெண்ணெ யொருபடி
தன்னுடன்கலந் தேயெரித் தேவடித்
தொப்புடன் ......... மூழ்கிடு பீனச
மொன்பதும்பறந் தோடிடு முண்மையே. (௱அரு)

(இ.ள்.)

சாதிக்காய்
துருசு
கடுகுரோகிணி
சாதிப்பத்திரி
மனேசிலே

இவ்வைந்து சரக்குகளேயும் வகைக்கு 3 காசெடையெடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| கிராம்பு | — | 5 காசெடை |
| கடுக்காய்த்தோல் | — | 5 ,, |
| நெல்லிப்பருப்பு | — | $\frac{1}{4}$ சேர் |
| கையாந்தகரை வேர் | — | ,, |
| எலிச்செவிப்பூண்டின் வேர் | — | ,, |
| நெல்லிமரத்தின் வேர் | — | ,, |
| குப்பைமேனி வேர் | — | ,, |
| சிறுகீரை வேர் | — | ,, |

இவைகளேயுமிடித்து அம்மியிலிட்டு நன்ருக அரைத்து விழுதாக்கி, நல்லெண்ணெய் ஒரு படியுடன் கலக்கி அடுப்பின்மேல் வைத்து, எரித்துப் பதமாக இறக்கவும்.

இதனுல் ஸ்நானம் செய்துவர 9 வகைப் பீனிசங்களும் தீரும்.

## 131. சலதோஷத்துக்குச் சூரணம்.

கருஞ்சீர கமஞ்சள் சரியாய்க் கூட்டிக்
கழற்சியுட பருப்பிரண்டு மெடுத்துக்கொண்டு
மருந்திதுவு மூன்றையுந்தான் பொடிகள்செய்து
மாநிலத்தின் மனிதருக்கு மந்திசந்தி
அருந்திடவே சலதோஷ முடனேதீரும்
ஆதிசிவன் பூசனைசெய் தருளே பெற்ற
திருந்தியதென் றஞ்சைசர போசிராச
செகபதியாய்ந் துணர்ந்தமுறை செய்துபாரே. (௱அசு)

(இ.ள்.)

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | — 1 பலம் |
| கழற்சிப்பருப்பு | — 2 பலம் |
| மஞ்சள் | — 1 பலம் |

இம்மூன்றையும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு சாப்பிட்டுவரச் சலதோஷந்தீரும். காலையிலும் மாலையிலும், சாப்பிடவும்.

---

## 132. பீனிசம், சிரோவாய்வுக்குச் சரபேந்திரகிருதம்.

### ஆசிரிய விருத்தம்.

சொற்பிந்த மானதோர் சிற்றும ணக்கம்வேர் துரித்முள்ள சிற்றமட்டித்
தோராத நீர்முள்ளி நன்னாரி தகரமுஞ் சுகசொண்டி வாய்விளங்கங்
கற்பித்த மானதோர் கொத்தமல்லி கோஷ்டமுங் களங்கமறு சித்தரத்தை
கலைவாண ருக்கிசை யிந்துப்ப திமதுரமுங் கழஞ்சுமோ ரொன்றுசரியாய்க்

கொ்ப்பிந்த மானதோர் சாறுகை யாந்தகரை குறுணிபா
லாவினெய்யுங்
குறுகவொரு படிவிடு பதமா யிறக்கியே குளிரவே
மூக்கினில்விட
[1]சர்ப்பிந்த கிருதமிது சிரோவாய்வு பீனசஞ் சகலநேத்
திரரோகமுந்
தலைவிட முறிந்துவிழி கமலமே(ம)ல ருஞ்சாத்தி ரப்பிர
காரமிதுவே (௱அரு)

[1]சர்ப் = Serf-o-ji. இவர் வமிசத்தில் ஆதியில் 'ஷரீப்ஷா' என்ற ஓர் முஸ்லிம் ஞானியின் அனுக்கிரஹத்தினல் இரண்டு குமாரர்கள் பிறந்தபடியால் அவர்களுக்கு ஷரீப்ஜி, ஷாஜி என்ற பெயர்கள் இடப்பட்டன. அதை அனுசரித்து இவருக்கும் இப் பெயர் இடப்பட்டது. இந்த = இந்திர.

(இ.ள்.)

| | |
|---|---|
| சிற்ருமணக்கு வேர் | வாய்விடங்கம் |
| சிற்ருமுட்டி வேர் | கொத்துமல்லி |
| நீர்முள்ளிசமூலம் | கோஷ்டம் |
| நன்ஞரி வேர் | சிற்றரத்தை |
| தகரை விரை | இந்துப்பு |
| சுக்கு | அதிமதுரம் |

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு ($1\frac{1}{4}$ வராகனெடை) வீத மெடுத்து,

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | — 1 மரக்கால் |
| பசுவின் பால் | — 1 படி |
| பசுவின் நெய் | — 1 படி |

இவற்றை எடுத்துக்கொண்டு, கையாந்தகரைச் சாறு விட்டு முதலில் சொல்லப்பட்ட சரக்குகளை அரைத்து விழுதாக்கி, ஒன்றுகலந்து, அடுப்பின் மீதேற்றி எரித்துப் பதத்தில் நெய்யையிறக்கவும். இது ஆறியபின், வேண்டும்போது வெந்

நீரிலுருகவைத்து, மூக்கில் நஸ்யமிடவும். இதனுல் சிரோவாய்வு, பீனஸம், பலவிதக் கண்ணோய்கள், தலையிலுள்ள விஷங்கள், விழிநோய்கள் இவை தீரும்.

---

# 133. வாதரோகம், பீனிசத்துக்குச் சூரணம்.

கடுகு ரோகணியுங் கற்கடக சிங்குங்
கனத்தபல மூன்றுகண்டங் கத்திரிவேர்
சடமாஞ்சி சிறுதேக் கிந்துப்பு நாலுஞ்
சரியாகப் பலமொன்று மிடித்ததூளை
வடிகட்டி வெருகடிச் சூரணத் தைத்தானும்
வகையான தேன்கூட்டி யந்திசந்தி
திடனே யுண்டுபார் வாதரோகந்
தீரும்பீ னசமெல்லாஞ் செய்துபாரே (௱அசு)

(இ.ள்.)

| | |
|---|---|
| கடுகுரோகணி | — 3 பலம் |
| கற்கடசிங்கி | — 3 பலம் |
| கண்டங்கத்திரிவேர் | |
| சடாமாஞ்சி<br>சிறுதேக்கு<br>இந்துப்பு | இவைகள் வகைக்கு 1 பலம் |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, வெருகடி (மூவிரல் செங்குத்தாகச் சேர்த்து எடுக்கும் அளவு) சூரணமெடுத்துத் தேனில் குழைத்துக் காலையிலும், மாலையிலும், சாப்பிட்டுவர வாதரோகம், பீனஸங்கள் முதலியவை தீரும்,

---

# 134. பீனிசம், சிரோவாயு, முதலிய மண்டை வியாதிகளுக்கு அஸன வில்வாதித் தைலம்.

அதனவில்வா தித்தைல மொன்று சொல்வே
னடவியின் வேங்கைச்சிருய்ச் சீந்திற்றண்டு
சதமான வில்வவேர் சிற்ற முட்டி
தன்வேர்வ கைநாலும் பலமோவெட்டு
இதமாக விடித்துத்தண் ணீருமரக் காலெட்டும்
மெள்ளமந் தாக்கினி யாகத்தான்
பதமாக யெட்டொன் ருகத்தானே
பன்னிரண்டு நாளதையுங் காய்ச்சிடாயே (௱அஎ)

காய்ச்சிப்பதி மூன்ருநாள் வடித்துக்கொண்டு
கடைமருந்து அமுக்கிருவேர்ப் பட்டையேலந்
தாச்சியில்லா அரத்தைசித்தா மட்டிவேர்த் தோல்
தற்கோல முத்தக்கா சிலாமிச்சு
சூச்சதிரி பலமதுகந் தேவதா ரஞ்சுக்கு
தாமரை வளையம் லவங்கபத்திரி
வாச்சிடுசெங் கழுநீரின் கிழங்கு மஞ்சள்
மரமஞ்சள் சடாமாஞ்சி யிலவங் கமும் (௱அஅ)

சித்தேலம் நன்ணரி வேர்கச் சோலஞ்
செண்பகப்பூச் சாதிக்காய் வெட்டிவேருஞ்
சத்தான பச்சிலையோ டிருபத் தாறுஞ்
சதிராக வகைக்குவரா கனிடைகொண்டு
முத்தாவின் பாலைவிட்டு வரைத்துக் கொண்டு
முதன்மையாய் நாழி யெண்ணெய்கூட்டி
சத்தேசப் படியிதையே கலந் தெரித்து
ஓலைப்பூ மடலுமண் ணுடன்போடே (௱அகூ)

அஞ்சுநாள் மந்தாக்கினி யிலேகாச்சி
யாருநாள் எடுத்துமேன் பொடியதாக
ரஞ்சிதக்கற் பூரமுடன் குங்குமப்பூ
நற்புனுகு மூன்றும்வரா கனிடைகூட்டி

யுஞ்சலதாய்த் தூள்பண்ணி யதிலேபோட்டு
வுற்பனமாய் மூன்றுநாட் கொருக்கால்மூழ்கு
விஞ்சையுட னசியஞ்செய் மூன்றுதுள்ளி
விதிப்படிசெய் திடத்தீரும் வியாதிகேளே (௱௯௰)

வாதபித்தஞ் சேற்றுமத்தாற் கழுத்தின்மேலே
வரப்பட்ட வியாதிகளுந் தலையின்நோவும்
காதடைப்பு மிரைச்சல்சிரோ வாய்வுமண்டை
கண்ணிலுள்ள நோவுகளும் நில்லாதோடும்
மேதினியில் சிவபூசை செய்துவெற்றி
மெத்தவுற்ற சத்தியவரிச் சந்திரவாக்கியன்
நீதிதவ ருமற்செங்கோல் நடத்துதஞ்சை
நிருபன்சர பேந்திரனுணர்ந் தாய்ந்ததாமே. (௱௯௧)

(இ.ள்.)

வேங்கைச்சிராய்
சீந்தில்தண்டு
வில்வவேர்
சிற்ருமுட்டிவேர்

இவைகளை வகைக்கு 8 பலமெடுத்துத் தண்ணீர் 8 மரக்கால் விட்டு, அடுப்பின்மேலேற்றி மந்தாக்னியாலெரித்து, 1 மரக்காலாகும் வரைச் சுண்டக் காய்ச்சவும். இதை 12 நாளைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எரித்து வரவேண்டும். பதின்மூன்ருந் தினத்தன்று இக்கஷாயத்தை வடிக்கட்டி இதனுடன்,

| | |
|---|---|
| அமுக்கிராவேர்ப்பட்டை | தான்றிக்காய்த்தோல் |
| ஏலக்காய் (பேரேலம்) | அதிமதுரம் |
| சிற்றரத்தை | தேவதாரு |
| சிற்ருமுட்டிவேர் | சுக்கு |
| தக்கோலம் | தாமரையிலைச்சுருள் |
| கோரைக்கிழங்கு | லவங்கப்பத்திரி |
| விளாமிச்சைவேர் | செங்கழுநீர்க்கிழங்கு |
| கடுக்காய்த்தோல் | மஞ்சள் |
| நெல்லி வற்றல் | மரமஞ்சள் |

சடாமாஞ்சில் செண்பகப்பூ
கிராம்பு சாதிக்காய்
ஏலக்காய் வெட்டிவேர்
நன்னாரிவேர் பச்சிலை
பூலாங்கிழங்கு

இச்சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துப் பசுவின்பால் விட்டரைத்துக்கொண்டு, சுத்தமான எள்ளெண்ணெய் 4 படி விட்டு, எல்லாவற்றையுமொன்று கலந்து, அடுப்பின் மேலேற்றி 5 நாளைக்கு மந்தமான அக்கினியாலெரிக்கவும். ஆறுவது நாளன்று பதமாக்கி, இறக்கி வடிக்கட்டிப் பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ, புனுகு இம்மூன்றும் வகைக்கொரு வராகனெடை வீதமெடுத்துத் தூளாக்கி எண்ணெயுடனே கலந்து மூடிவைத்து, மூன்று நாளைக்கொருமுறை தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும். 3 துளிகள் மூக்கிலும் நஸ்யமாக இடவும்.

வாத, பித்த, கப சம்பந்தத்தினாலுண்டான பலவித சிரோ ரோகங்களும், காதடைப்பு, இரைச்சல், தலைவாயு, மண்டை நோய், கண்ணோய்கள், முதலிய ரோகங்களும் தீரும்.

---

# 135. பீனசத்துக்கு மூழ்கத் தைலம்.

தாழைவிழுதுச் சாறுநெல்லிக் காய்ச்சாறு
சதாவேரிச் சாறுகையாந் தகரைச்சாறுஞ்
சூழவரி வரியாங்கற் றுழஞ்சாறுஞ்
சொற்சீந்திற் றண்டின்சாறு முசுமுசுக்கை
ஏழுவகைக் கோர்வகைக்கி நாழிச்சாறு
மெள்ளெண்ணெய் நானாழி யாவின்பாலும்
நாழியதிற் போடுகடை மருந்துகிராம்பு
நன்னாரி வேர்முத்தக் காசதாமே. (௱௬௨)

சாதிக்கா யதிமதுரம் புனுகுச்சட்டஞ்
சடாமாஞ்சில் குரோசானி யோமங்கோஷ்டம்
சாதிப்பத் திரிபூலாங் கிழங்கினூடே
தாமரையின் வளையம்நல்ல மல்லிகைப்பூ
ஓதுமிலா மிச்சம்வேர் வெட்டிவேரு
முற்பனமாஞ் செங்கழுநீர்க் கிழங்குங்கூட
சாதுரிய முந்திரிகைப் பழமகிளம்பூ
சந்தணஞ்செவ் வல்லிக்கொடி திரிபலையதாமே. (ராகூங)

இருபத்தோர் மருந்துவகைக் கழஞ்சுபால்வார்த்
தேயரைத்து யெண்ணெய்தனிற் கலந்தடுப்பில்
எரிமெதுவாய் எரித்திறக்கி வடித்துக்கொண்டு
ஈசன்மலர்த் தாள்போற்றி மூழ்கிப்பாரு
சிரநோவு பீனசமென் பதுவுந்தீருந்
தென்தஞ்சை நகராதி பதிகற்குூர்க்குத்
தருவெனவும் வளரன்ன தாதாவெற்றி
சரபேந்திர னிர்ணயித்த தைலம்மீதே. (ராகூச)

(இ-ள்.)

தாழைவிழுதுச்சாறு
நெல்லிக்காய்ச்சாறு
தண்ணீர்விட்டான்சாறு
கையாந்தகரைச்சாறு
வரிக்கற்றுழஞ்சாறு
சீந்தில்கொடிச்சாறு
முசுமுசுக்கைச்சாறு

இச்சாறுவகைகள் வகைக்கு 1 படி

சுத்தமான எள்ளெண்ணெய் 4 படி } இவைகளுடன்
பசுவின் பால் 1 படி }

| | |
|---|---|
| கிராம்பு | அதிமதுரம் |
| நன்னாரிவேர் | புனுகுசட்டம் |
| கோரைக்கிழங்கு | சடாமஞ்சி |
| சாதிக்காய் | குராசானி ஓமம். |

| | |
|---|---|
| கோஷ்டம் | முந்திரிகைப்பழம் (திராக்ஷை) |
| சாதிப்பத்திரி | மகிழம்பூ |
| பூலாங்கிழங்கு | சந்தனம் |
| தாமரையிலைச் சுருள் | செவ்வல்லிக்கொடி |
| மல்லிகைப்பூ | கடுக்காய்த்தோல் |
| விலாமிச்சம்வேர் | நெல்லிக்காய்த்தோல் |
| வெட்டிவேர் | தான்றிக்காய்த்தோல் |
| செங்கழுநீர்க் கிழங்கு | |

இம் மருந்து வகைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை யெடுத்துப் பசுவின்பால் விட்டரைத்துச் சாறு கூட்டிய எண்ணெய் வகையில் கலந்து, அடுப்பின்மீதேற்றி, மெதுவாக எரித்துப் பதத்திலிறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும். இதனைத் தலையில் தேய்த்து முழுகிவரவும்.

சிரோரோகமும், சகல பீனிசங்களுந் தீரும்.

---

# 136. பீனிசத்துக்கு மூழ்க ஆதண்டைத் தைலம்.

ஆதண்டைத் தைலமொன்று சொல்வேனந்த
ஆதண்டைச் சாறுபடி ரெண்டுகூட்டு
நீதப்பா மலெண்ணெய் படியோவொன்று
நிர்ணயமா மரத்தைபல மஞ்சுகொண்டு
பேதமில்லா மஞ்சளஞ்சு பலமாம்ரெண்டும்
பலமாக வரைத்ததையுங் கூட்டிப்போடே (ாகரு)

வடித்துக்கொண்டு நாலுநா ளைக்கொருக்கால்
மனதுநம்பித் தைலத்தைத் தேய்த்துக்கொள்ளு
திடத்துடனே சீயக்காய் தனையரைத்துத்
தேய்த்துவைந்து முழுக்குவெந் நீரில்மூழ்கு

பிடித்தபீ னிசமெதுவுந் தெறிகெட்டோடும்
　　பின்னொன்றும் பேசாதே செய்துபாரு
படித்தவர்கள் தாமறியுஞ் சரபேந்திரன்
　　பார்த்துணர்ந்த தைலமிது பார்நீதானே (௱௬௬)

(இ.ள்.)

| | |
|---|---|
| ஆதண்டைச்சாறு | — 2 படி |
| நல்லெண்ணெய் | — 1 படி |

இவைகளை யொன்றுகலந்து,

| | |
|---|---|
| சிற்றரத்தை | — 5 பலம் |
| மஞ்சள் | — 5 பலம் |

இது இரண்டையும் சாறுவிட்டரைத்து, ஷை எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின்மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கட்டவும். இதை 4 நாளைக்கொருமுறை தலையில் தேய்த்துக்கொண்டு, சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 5 முழுக்குகளிடவும். பீனஸங்களனைத்துந் தீரும்.

# 137. பீனிசத்துக்கு மூழ்க மூதண்டைத் தைலம். (நசியமும் பண்ண.)

மிளகுபல மிரண்டறுகங் பட்டைத்தூறு
　　மேபலமொன் ருங்கோரைக் கிழங்குதானும்
வளமான பொடிபலமொன் றெண்ணெய்நெய்யும்
　　வகைக்கரைப் படிகூட்டிக் கொள்முன்சொன்ன
மிளகதனை நறுக்கியே கலந்துநன்ருய்
　　வெய்யிலிலே புடமாக வைத்துவைத்து
அளவுடனே மூன்றுதுள்ளி நசியஞ்செய்நீ
　　அந்திசந்தி யும்பத்து நாளுந்தானே (௱௬௭)

நாலுநா ளைக்கொருக்கால் தைலந்தேய்த்து
நன்றாக மூழ்கிதற்குப் பத்தியந்தான்
பாலுமுத லெதுவுஞ்சாப் பிடலாமிந்தப்
பன்றியுட கறியொன்று மாகாதாகா
தோலமிடும் பீனசங்க ளுடனேதீரு
முத்தமர்க ளாய்ந்துணர்ந்த முறையிதாகும்
சீலமுடன் வகைவிபரப் படியேநீயுஞ்
செய்துபா ருடனேநோய் தீருந்தானே (௨௬௮)

(இ.ள்.)

| | |
|---|---|
| மிளகு | — 2 பலம் |
| அறுகம்வேர் | — 1 பலம் |
| கோரைக் கிழங்கு | — 1 பலம் |

இவைகளை வெயிலில் வைத்துக் காய்ந்தபின் இடித்து, நல்லெண்ணெய் $\frac{1}{2}$ படியும், நெய் $\frac{1}{2}$ படியுமெடுத்துக் கலந்து, அதனுடன் ஷை தூளையிட்டுச் சூரிய புடமாக வைக்கவும். இதை 3 துளிகள் வீதம் காலை மாலை யிரு வேளையிலும் நஸ்யமிடவும். 10 நாள் செய்யவும். 4 நாளைக்கொருமுறை யித்தைலத்தை தலையில் தேய்த்து மூழ்கிவரவும்.

இதற்குப் பத்தியம் :—

பசுவின் பாலை வேண்டியமட்டும் சேர்த்து வரவும். பன்றிக் கறி உதவாது. பீனஸங்கள் தீரும்.

---

## 138. பீனிசத்துக்கு மிளகுத் தைலம்.

நல்லெண்ணெய் தனில்மிளகு பலமோவொன்று
நாலிரண்டா யுடைத்துவதிற் போட்டுநித்தியம்
எல்லிரவி தனிற்புடமா யேழுநாள்வைத்
தெடுத்துமிள கின்தைல மெவருமூழ்கத்

தொல்லையுள பீனசங்க ளுடனேதீருஞ்
சொற்பிசகா துளசேந்திர னின்றபாலன்
வல்லபனுஞ் சரபேந்திர னுணர்ந்தாராய்ந்த
வைத்தியமிது நீயுமதை யறிந்துகொள்ளே (௱௬௬)

(இ-ள்.)

சுத்தமான நல்லெண்ணெயில் ஒருபலம் மிளகை ஒன்றிரண்டாக உடைத்துப் போட்டுத் தினந்தோறும் வெயிலில் வைத்து வரவும். இப்படி 7 நாளைக்குச் சூரிய புடமிடவும். பின்பு இதை யெடுத்துத் தலைமுழுகிவரப் பீனஸங்கள் தீரும்.

---

# 139. பீனிசத்துக்கு முழ்க மருந்து.

கரிசாரங் கண்ணிச்சாறு கால்சேர்தன்னில்
கனத்தபசுப் பாலரைக்கால் சேருங்கூட்டித்
துரிசாக அதிமதுர மிளகிரண்டுஞ்
சொல்லுமரை வராகனிடை தட்டிப்போட்டு
இரவிதனிற் புடமாக மூன்றுநாள்வைத்
தேமுழுகு மூன்றுநாட் கொருகால்தானும்
வருமனுவின் பீனசங்க ளுடனேதீரும்
மானுக்க ளாய்ந்துணர்ந்த வைத்தியமாமே (உா)

(இ-ள்.)

கரிசாலங்கண்ணிச்சாறு — $\frac{1}{4}$ சேர்
பசுவின்பால் — $\frac{1}{8}$ சேர்

இவைகளை யொன்றுகூட்டி

அதிமதுரம் $\frac{1}{2}$ வராகனெடை, மிளகு $\frac{1}{2}$ வராகனெடையு மெடுத்துத் தூள் செய்து பால் கூட்டிய சாற்றுடனே கலந்து, சூரிய புடமாக 3 நாளைக்கு வைத்திருக்கவும். பின்பு, இதை

யெடுத்து மூன்று நாளைக்கொருதரம் தலைமுழுகிவரவும். பீன ஸங்கள் தீரும்.

---

# 140. பதினெண் பீனசம், நீர்ப்பாய்ச்சல், மண்டைச்சூலை, காதிரைச்சல், தும்மல், தந்தசூலை, நேந்திரரோக முதலானதற்கு.

கஸ்தூரி மஞ்சள்பூ லாங்கிழங்குங்
கருஞ்சீர கமிளகு திப்பிலியோமம்
சத்தான பச்சிலைவால் மிளகுங்கூட
தாளிசபத் திரிகோரோ சனையுஞ்சுக்கு
முத்தேசம் பதினென்றும் வகைப்பலங்கா
லுடனேபண வெடையொன்று குங்குமப்பூ
கொத்தோடே நொச்சியுட கொழுந்தரைத்துக்
கொள்ளெலுமிச் சங்காயி னளவுதானே (௨௱௧)

ஆவின்நெய் ரெண்டுசேர் கொண்டுவந்து
அதிற்கலந்து தைலப்பதத் திறக்கிக்கொண்டு
ஆவலுட னேவடித்து நசியஞ்செய்தால்
அதற்குப்பதி னெட்டுபீ னசம்நீர்ப்பாய்ச்சல்
ஏவுமண்டைச் சூலைகா திரைச்சல் தும்மல்
இனியதந்தச் சூலைநேத் திரத்தின்ரோகந்
தாவியவீக் கங்கரப்பான் சேற்றுமத்தால்
தலைநிமிரும் பிடரிவலி தானும்போமே (௨௱௨)

(இ-ள்.)

| | |
|---|---|
| கஸ்தூரி மஞ்சள் | பூலாங்கிழங்கு |
| கருஞ்சீரகம் | மிளகு |
| திப்பிலி | ஓமம் |
| பச்சிலை | வால்மிளகு |
| தாளீசபத்திரி | கோரோசனை |
| சுக்கு | |

இச்சரக்குகளை வகைக்குக் கால்பலமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துக் குங்குமப்பூ 1 பணவெடை (1/10 விராகனிடை) போட்டு, கருநொச்சில் கொழுந்தையரைத்த விழுதொரு எலுமிச்சங்காயளவுமெடுத்து, பசுவின் நெய் 2 சேரிலே குழப்பியடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும். இந்நெய்யை நசியமிட 18 பீனிசங்கள், நீர்ப்பாய்ச்சல், மண்டைச்சூலே, காதிரைச்சல், தும்மல், தந்தசூலே, நேத்திர ரோகம், கரப்பான், வீக்கம், கபத்தினுலுண்டான பிடரி வலி முதலியவை தீரும்.

# 141. பீனிசத்துக்குப் புகை.

மூக்கினிற்பீ னிசத்துக்கோர் புகைசொல் வேன்கேள்
முதிர்ந்தகுப்பை மேனிச்சாறு பிழிந்துகொண்டு
தாக்கியமெல் லியதுணியிற் றுவைத்து வத்தைத்
தானுலர்த்திக் காய்ந்ததெருக்கங் குச்சிதன்னில்
தேக்கிடவே சுத்திவேப் பெண்ணெய் தேய்த்துத்
திரிகொளுத்தி நூத்துப்புகை மூக்கிற்கொள்வாய்
வாக்கியந்தப் பாதவிபு வாய்ந்துணர்ந்த
வகைவிபரப் படிசெய்பீ னிசங்கள் போமே. (உ௱௬)

(இ. ள்.)

குப்பைமேனிச் சாறு பிழிந்து, அதிலொரு மெல்லிய வெள்ளைத் துணியை நனைத்து நன்றாகக் காயவைக்கவும். இதையொரு எருக்கங்குச்சியில் சுற்றி வேப்பெண்ணெயில் தோய்த்துக் கொளுத்தவும். அதனின்று புகை யெழும்பும், அதை முகர்ந்து வரவும்.

பீனஸங்கள் தீரும்.

# 142. பீனிச, மண்டைவலி, நீர்விழுதலுக்கு மூழ்கத் தைலம்.

கையாந்த கரைச்சாருே படியூமத்தங்
　காய்ப்படிச்சா றெண்ணெய்த னிற்கலந்து
நையாத மிளகுகருஞ் சீரகந்தா
　ஞட்டுவகைக் கரைப்பலம்சா திக்காய்ரெண்டு
செய்யாறுங் கஸ்தூரி மஞ்சள்கெந்தி
　செஞ்சந் தனந்தகரம் நாகப்பூவு
மொய்யாரக் கடுகுரோக ணியுங்கோஷ்ட
　மொடுசெவ்வல் லிக்கொடிபச் சிலையதாமே. (உ௱௪)

ஈராறு வகையொன்றுக் கிரண்டுகாசின்
　னிடைதூள்செய் தெண்ணெய்தனிற் கலந்துநன்ருய்ப்
பேராக வெரித்துப்பதத் திறக்கிக் கொண்டி
　பின்னையொன்றும் பேசாதே யோர்நாள்தான்விட்
டோராநாள் வெந்நீரில் மூழ்கிப்பாரு
　உற்பனபீ னசமண்டை வலிகள்மூக்கி
னீரான தும்வீழும்பீனசங்கள்
　நிற்குந்தக் கோருணர்ந்த முறையிதாமே (உ௱௫)

(இ. ள்.)

| | | |
|---|---|---|
| கையாந்தகரைச்சாறு | — | 1 படி |
| ஊமத்தங்காய்ச்சாறு | — | 1 படி |
| நல்லெண்ணெய் | — | 1 படி |

இவைகளை யொன்றுகலந்து, அதனுடன்

| | |
|---|---|
| மிளகு | ½ பலம் |
| கருஞ்சீரகம் | ½ பலம் |
| ஜாதிக்காய் | 2 பலம் |
| கஸ்தூரி மஞ்சள் | 2 காசெடை |
| சந்தனத்தூள் | ,, |
| செஞ்சந்தனம் | ,, |

| | |
|---|---|
| கிரந்தி தகரம் | 2 காசெடை |
| சிறுநாகப்பூ | ,, |
| கடுகுரோகிணி | ,, |
| கோஷ்டம் | ,, |
| செவ்வல்லிக்கொடி | ,, |
| பச்சிலே | ,, |

இச்சரக்குகளே யிடித்துத் தூள்செய்து சாறு கூட்டிய எண்ணெயுடனென்று கலந்து அடுப்பின்மேல் வைத்தெரித்துப் பதத்திலிறக்கவும். இதை ஒருநாள்விட்டொருநாள் தலேயில் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்துவரப் பீனசம், மண்டைவலி, நீர்ப்பீனஸம் முதலியவைகளனைத்துந் தீரும்.

---

# 143. பீனிசத்துக்கு.

வன்னபுகை யொன்றுவெண் ணுகமூன்று
வராகனிடை சட்டியிலிட் டிருக்கும்போது
சொன்னபடி ரசமூன்று வராகன் போட்டு
சொகுசான வெத்திலேச்சா றுழக்கும்விட்டு
இன்னவித மிறக்கியே யாறவிட்டு
இரதமெடுத்தே மிருதார்சிங் கோர்வராகன்
உன்னிதமாஞ் சாதிலிங்க மோர்வராகன்
உடன்மூன்றுங் கல்வத்திற் பொடிசெய்வாயே, (உாகூ)

பொடிசெய்து வெள்ளியதோர் சேலேதன்னிற்
புனிதகையாந் தகரைச்சாறு தன்னிலேதான்
உடனனைத்தே நிழலுலர்த்தி யாறுபங்கா
யுறக்குழித்து முந்தூளேவைத்த தன்னில்
அடவுடனே திரியாக வுருட்டிக்கட்டி
யத்திரியைக் குப்பைமேனிச் சாறுதன்னிற்

திடமாக நனைத்ததையும் நிழலுலர்த்தித்
திரிக்கொளுத்தி யந்திசந்தி புகைகொள்வாயே. (உ௱எ)

இப்படியத் திரியாறு மூன்றுநாளைக்
கேபிடித்தே நாலுநா ளாறவிட்டு
சொற்படியே யந்திசந்தி இரண்டுநேரஞ்
சேராமல் மூவைந்து நாளைக்குந்தான்
தப்பிலா மூன்றுமுடா வினிலே வெந்நீர்
தான்காய்ச்சித் தலைபொறுக்க விட்டிடாய்நீ
யொப்புதவாய் முன்சொன்ன எண்ணெய்மூழ்கு
மோடும்பீ னசமென்ற நோய்கள்தானே. (உ௱அ)

(இ. ள்.)

3 வராகனெடை சுத்தியான சிறுகண் நாகத்தை யொரு புதுச்சட்டியிலிட்டு, அடுப்பின்மேலேற்றவும். அது உருகுந்தருவாயில் 3 வராகனெடை சுத்தியான பாதரசம் விட்டு, வெற்றிலைச் சாறும் ஒரு உழக்கு விடவும். இதைப்பின்பு, அடுப்பிலிருந்து இறக்கி ஆறவைக்கவும். இதைத் தூள்செய்து, அதனுடன் சுத்தி செய்த மிருதார்சிங்கி, சுத்தியான லிங்கம் இவ்விரண்டையும் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக்கொண்டு வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். ஒரு மெல்லிய துணியைக் கையாந்தகரைச் சாற்றில் தோய்த்து நிழலில் காய வைத்து. அத்துணியை 6 பாகங்களாகக் கிழித்து மேலே சொல்லிய தூளைச் சமமாகப் பரப்பி, 6 திரிகளாகச் சுருட்டவும். இத்திரிகளைக் குப்பைமேனிச் சாற்றில் நனைத்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும். இத்திரியைக் கொளுத்தி, அதிலிருந்து எழும்பும் புகையை முகரவும். இவ்வாறாகத் தினம் காலையிலும் மாலையிலும் திரியைக் கொளுத்திப் புகையை முகர்ந்து, 4 நாளைக்கு நிறுத்தி, மறுபடியும் 3 நாளைக்கு மற்றொரு திரியைக் கொளுத்தவும். 15 நாளைக்கு வெந்நீரில் ஸ்நானம் செய்துவரவும். முன் (142-வது முறையில்) சொன்ன எண்ணெயையும் தேய்த்து வரவும், பீனஸங்கள் தீரும்.

# 144. பித்ததோஷம், பீனிசதோஷம், கபாலதோஷம், மயக்கம், துர்வரட்சி முதலானதற்கு அமுதகலை யெண்ணெய்.

அமுதகலை யெண்ணெயொன்று சீந்திற்றண்டு
  மதுடன்சித்த மட்டியிரு வேலிநெல்லி
அமலுமிலா மிச்சையுமைந் தில்வகைக்கொன்றுக்
  கழகாகப் பலம்நாலு நறுக்கிப்போட்டு
அமுதசலம் பதக்குவிட்டு நாலிலொன்று
  யதைக்காய்ச்சி நாழி யெண்ணெய்விட்டு
அமுதமெனு மாப்பால்நா ழிவிட்டு
  அதிற்போடக் கடைச்சரக்கு வகைகள்கேளே (உ௱௬)

அதிமதுரங் கடுகுரோ கணியேலம்
  அகில்நாகப் பூவும்பச் சிலையுங் கோஷ்டம்
சதகுப்பை விழலரிசி கண்டில்வெண்ணெய்
  சந்தனங்கச் சோலம டவிக்கச்சோலம்
சீதமான சயிலேய மரத்தை சரள
  மிலுப்பைப்பூ பசுமஞ்சள் ஞாழல்பூவுஞ்
சதமான மலையினிரு வேலிமாஞ்சில்
  தக்கோலம் நறும்பிசினும் தான்றிக்காயே (உ௱௰)

இருவேலி வெட்பாலை யரிசிகிராம்பு
  மிலவங்கம் நீர்வள்ளிக் கிழங்குமேதை
முருகுமிகு புனுகுச்சட்ட மிலாமிச்சம் வேர்
  முந்திரிகைப் பழம்பச்சைக் கற்பூரந்தான்
தருதேவ தாரஞ்செண்ப கத்தின்மொட்டுச்
  சாதிக்காய்ச் செங்கழுநீர்க் கிழங்கினூடே
அரவிந்த வளையமுத்தக் காசுதானு
  மத்தியின்திப் பிலியுந்தா னரிசிதானே (உ௧௧)

நன்னாரி வேருக்கடு நெல்லிகூட
  நல்லசெவ்வல் லிக்கொடியுங் குங்குமந்தான்
இன்னூற்பத் தாறுவகை யொன்றுக்குத்தா
  னிருகழஞ்சி வகைக்குவெடுத் தரைத்துப்பாலில்

நன்ருகக் கலந்துபதத் திறக்கிக்கொண்டு
நம்குருவே யென்றுவடித் தேயெடுத்து
அன்ருட மந்திசந்தி யுள்ளிற்கொள்ள
அதிற்போகும் நோயின்வகை தன்னைக்கேளே. (உகஉ)

பித்தத்தால் வருந்தோஷந் தலையிற்கொண்ட
பீனசத்தின் தோஷங்கபா லத்திலுந்தான்
சுத்துகின்ற தோஷமுத லோடுதோஷந்
துர்வரட்சி மயக்கமுதற் றீருந்தீரும்
வித்துவசனர்க் கன்னசர போசேந்திரன்
விசையன்விகி தஞ்செய்த யெண்ணெயாமே (உகங)

(இ. ள்.)

சீந்தில்தண்டு
சிற்ருமுட்டி
வெட்டிவேர்
நெல்லிக்காய்
விலாமிச்சைவேர்

இவைகளை வகைக்கு 4 பலம் நறுக்கிப்போட்டு 2 மரக்கால் சுத்தஜலம் விட்டு $\frac{1}{4}$ பாகமாகக் காய்ச்சி, நல்லெண்ணெய், பசுவின் பாலிவ்விரண்டும் வகைக்கு 4 படி விட்டு, அதனுடன்

| | |
|---|---|
| அதிமதுரம் | கச்சோலம் |
| கடுகுரோகிணி | அடவிக்கச்சோலம் |
| ஏலக்காய் | சிற்றரத்தை |
| அகில்கட்டை | சரளதேவதாரு |
| சிறுநாகப்பூ | இலுப்பைப்பூ |
| பச்சிலை | பசுமஞ்சள் |
| கோஷ்டம் | ஞாழல்பூ |
| சதகுப்பை | வெட்டிவேர் |
| விழலரிசி | சடாமாஞ்சி |
| கண்டில் வெண்ணெய் | தக்கோலம் |
| சந்தனம் | நறும்பிசின் |

தான்றிக்காய் சாதிக்காய்
மலைவெட்டிவேர் செங்கழுநீர்க்கிழங்கு
வெட்பாலையரிசி தாமரைவளையம் (இலைச்சுருள்)
கிராம்பு கோரைக்கிழங்கு
இலவங்கப்பத்திரி யானைத்திப்பிலியினரிசி
தண்ணீர்விட்டான்கிழங்கு நன்னாரிவேர்
புனுகுசட்டம் கடுக்காய்த்தோல்
இலாமிச்சம் வேர் நெல்லிவற்றல்
முந்திரிக்கைப்பழம் சிலாஜது, பொற்றலைக்கையாந்
பச்சைக்கர்ப்பூரம் செவ்வல்லிக்கொடி [தகரை
தேவதாரு குங்குமப்பூ
செண்பகமொட்டு

இந்த 46 சரக்குகளையும் தனித்தனி 2 கழஞ்சு வீதமெடுத்துப் பசுவின் பாலிட்டரைத்து, சாறு கூட்டிய எண்ணெய் வகையுடனே குழப்பி, "குரவே நம:" என்று ஜபித்துக்கொண்டே அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்திறக்கவும். தினந்தோறும் இத் தைலத்தைக் காலையிலும் மாலையிலும் உள்ளுக்குச் சாப்பிடப் பித் தத்தினால் தலையிலுண்டாகுந் தோஷங்கள், பீனஸம், கபால தோஷங்கள், வறட்சி, மயக்கம் முதலியவைகள் தீரும்.

குறிப்பு :—

கடைசி செய்யுளில் 3 சீர்களே உள்ளன.

---

# 145. உடன்வந்த உண்ணுக்குக்கு மருந்து.

உண்ணுக்கு வளர்வதற்கு மருந்து வொன்று
உடன்வந்த வுண்ணுக்குக் கெருக்கம்பாலும்
எண்ணெய்ரெண்டில் ரெண்டுதுளி யுஞ்சாரித்து
இதைமூன்று நாளுமுச்சி யினிலே தேய்த்தால்
உண்ணுக்குத் தீருஞ்சர பேந்திரராச
னுணர்ந்தறிந்து நிச்சயித்த முறையதாகும்
நன்றாக நீநம்பிச் செய்துபாரு
நாடாது உண்ணுக்குப் போகுந்தானே (உகச)

(இ. ள்.)

எருக்கம்பால் 2 துளி, நல்லெண்ணெய் 2 துளி இவ்விரண்டையும் சேர்த்து 3 நாளைக்கு, தலையுச்சியில் தேய்க்கவும். உண்ணாக்குத் தீரும்.

---

# 146. நெடுநாள்வந்த உண்ணாக்குக்கு மருந்து.

நெடுநாள்வந்த வுண்ணாக்குத்தா
 னீகேளு யெருக்கம்பா லொன்றேதுள்ளி
அடவான சிறுவழுதலைப் பழச்சாறு
 அதுரெண்டுதுள்ளி நெல்லுமாத்திரஞ் சுண்ணம்
பிடு வெங்காயச்சாறு மிரண்டுதுள்ளி
 யிதுநாலுஞ் சாரித்து மூங்கில்பத்தை
தடவியுண்ணாக்கினி லன்றிவித்துப்பாரு
 தப்பாமல் உண்ணாக்குத் தீருந்தானே (உகரு)

(இ. ள்.)

| | |
|---|---|
| எருக்கம்பால் | —ஒரு துளி |
| சிறுவழுதலைப்பழச்சாறு | —2 துளி |
| கல்சுண்ணம்பு | —நெல்லுப்பிரமாணம் |
| வெங்காயச்சாறு | —2 துளி. |

இவை நான்கையு மொன்றுகலந்து, ஒரு குச்சியில் பஞ்சைக் கட்டி இதில்த் தோய்த்து உண்ணாக்கில் தடவிவரவும். நெடு நாளாக வந்த உள்நாக்கு தீரும்.

# 147. உண்ணுக்குக்கு மருந்து.

சுண்ணும்பு யவட்சார மெலுமிச்சஞ்சாறு
சொல்மூன்றுஞ் சாரித்து மூங்கில்பத்தை
நன்ருகத் தடவியுண்ணுக் கினிலேயண்ட
நாட்டுமிப்ப டிமூன்று நாளுந்தானும்
உண்ணுக்கு வியாதியென்ப துடனேதீரு
முலகுக்காய் உணர்ந்துணர்ந்து கண்டறிந்த
பண்ணுர்ந்த மொழிசரபேந் திரபூபாலன்
பாரினுக்காய் நிச்சயித்த முறையிதாமே (உகசு)

(இ. ள்.)

சுண்ணும்பு
யவட்சாரம்
எலுமிச்சஞ்சாறு

இம்மூன்றையு மொன்ருகக் கலந்து, குச்சியில் பஞ்சைச் சுற்றி அதில் தோய்த்து, உள்நாக்கில் 3 நாளைக்குத் தடவ, உள் நாக்குத் தீரும்.

---

# 148. (வேறு)

நல்லெண்ணெய் எருக்கம்பால் சரியாய்ச்சேர்த்து
நலமாக மத்தித்து உச்சிதன்னில்
வல்லமையாய் மூன்றுநாள் போடு புண்ணும்
வரிசைசிறு காஞ்சோறிபச் சரிசிமாவும்
நல்லவடை சுட்டுவந்தி சந்தி தின்னு
நடுவுச்சிப் புண்ணுறு முண்ணுக்கும்போம்
சொல்லியது தப்பாது விபுவுணர்ந்த
தொன்முறையை நீயதையுஞ் செய்துபாரே (உகஎ)

(இ. ள்.)

நல்லெண்ணெய்
எருக்கம்பால்

இவ்விரண்டையும் மத்தித்து, தலையுச்சியில் 3 நாளைக்குத் தடவவும். புண்ணாகிவிட்டால், சிறுகாஞ்சோறி வேரும் பச்சரிசி மாவுஞ் சேர்த்து வடை சுட்டுக் காலையும் மாலையுஞ் சாப்பிடவும். உச்சிப் புண்களாறும். உண்ணாக்குத் தீரும்.

---

## 149. உண்ணாவுக்கு மருந்து.

ஒட்டடைசுண் ணாம்புயவட் சாரமூன்று
வொருவெடையாய்த் தேங்காயின் கொட்டாங்கச்சி
சுட்டதைலம் விட்டரைத்து நன்றாய்த்
தொட்டுத்தடவிப் பாருண்ணாவும்
விட்டோடும் இம்முறைதான் முனிவோர்சொன்ன
விபரமதை நாள்தோறு முணர்ந்துணர்ந்து
அட்டதிக்கும் போற்றுஞ்சர பேந்திரதீரன்
அனுமதியால் நிச்சயித்த தறிந்து செய்யே (உ௪அ)

(இ. ள்.)

ஒட்டடை
சுண்ணாம்பு
யவட்சாரம்

இம்மூன்றையுஞ் சமனெடை எடுத்து, கொட்டாங்கச்சித் தைலம் விட்டு நன்றாக வரைத்து, ஒரு குச்சியில் பஞ்சைக் கட்டி யதில் தோய்த்து, உண்ணாக்கில் தடவிவர, உள்நாக்கு வளர்த்தி தீரும்

# 150. உண்ணுக்கு வளர்த்தி, முகரோகத்திற்கு, மூழ்க நிர்குன்டி எண்ணெய்.

நிர்க்குன்றித் தைலமிது நொச்சிலேச்சாறு
நேராக வரைப்படியுங் கருங்காலிச்சாறு
பக்குவமாம் படியரையா மணித்தக்காளி
பண்பிலேச்சா றரைப்படிய தாகுமிப்பால்
ஒக்கநல்லெண் ணெய்ப்படியி தற்குக்கற்க
மோதுவேன் வசம்புசிறு தேக்கினோடே
சுக்குத்திப் பிலிமுருங்கைப் பட்டைபொன்மு
சுட்டைசித்திர மூலமதி மதுரமாமே (உகக)

இந்துப்பு குங்குமப்பூ பெருங்காயத்தோ
டேலமுடன் வெண்கடுகிப் பதின்மூன்றுந்தான்
இந்தவகை யொன்றுக்கொவ் வோர்வராக
னிடையதனைப் பொடிபண்ணிப் போட்டுக்காய்ச்சி
யுந்தைலப் பக்குவத்தி லிறக்கி மூழ்கு
உண்ணுக்கு வளர்த்திமுக ரோகமெல்லாம்
பிந்திவிட் டோடும்பார் சிவனார்கிருபை
பெற்றசர பேந்திரனுணர் முறையதாமே (உஉ0)

(இ. ள்.)

| | |
|---|---|
| நொச்சியிலேச்சாறு | —½ படி |
| கருங்காலிச்சாறு | —½ படி |
| மணித்தக்காளிச்சாறு | —½ படி |
| நல்லெண்ணெய் | —1 படி |

இவற்றை யொன்று கலந்து,

| | |
|---|---|
| வசம்பு | சித்திரமூலவேர் |
| சிறுதேக்கு | அதிமதுரம் |
| சுக்கு | இந்துப்பு |
| திப்பிலி | குங்குமப்பூ |
| முருங்கைப்பட்டை | பெருங்காயம் |
| பொன்முசுட்டை | ஏலக்காய் |

வெள்ளைக்கடுகு

இச்சரக்குகளை வகையொன்றுக்கு ஒரு வராகனெடை யெடுத்துச் சூரணித்துச் சாறுகூட்டிய யெண்ணெயுடனென்று கலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எண்ணெய் காய்ச்சவும்' இதனல் தலைமுழுகிவர, உண்ணாக்கு வளர்ச்சி, வாய்ரோகம், இவை தீரும்.

---

# 151. உண்ணாவுக்கு மருந்து.

உவருமண் சுண்ணாம்பு ஒட்டடையும்
உற்பனவே லிப்பருத்திச் சாற்றைவிட்டு
கவனமா யரைத்துவுண்ணாக் குதனில்வைக்கக்
கனத்தவுண்ணாக் கதுவளரா தொருக்காலுந்தான்
அவனிதனக் குபகார மாகத்தானே
அருந்தவத்தோர் சொன்னமுறை யவைகளெல்லாந்
தவமதினாற் சிவகிருபை பெறுகெம்பீரச்
சரபேந்திர னிச்சயித்த முறையதாமே (உஉக)

(இ. ள்.)

உவர்மண்
சுண்ணாம்பு
ஒட்டடை

இம்மூன்றையுஞ் சமமெடுத்து வேலிப்பருத்திச் சாற்றினலரைத்து உண்ணாக்கில் தடவிவர உள்நாக்கு வளர்த்திதீரும்.

---

# 152. உதட்டுப் புண்ணுக்கு ஒடுவியிலை மருந்து.

ஒடுவியிலை யொட்டடையுற் ரும்பழச்சோ
றுடன்கையாந் தகரைமஞ்ச ளிவைகளைந்துந்

திடமுடனே யரைத்தரசங் குழம்பதாகச்
சேர்த்துவெண்ணெ யிற்கலந்து வுதட்டிற்பூச
வெடியுதட்டின் புண்ணாறும் நாளுக்குநாள்
மென்மேலுந் தண்டமிழி னின்பந்தன்னை
அடவுடனே யறிசரபேந் திரபூபால
னன்பாக வுணர்ந்தமுறை யறிந்துபாரே (உஉஉ)

(இ. ள்.)

பாலொடுவியிலை
ஒட்டடை
புற்றுஞ்சோறு
கையாந்தகரை சமூலம்
மஞ்சள்

இவ்வைந்து சரக்குகளையுமரைத்துக் குழம்பாகச் செய்து வெண்ணெயுடன் கலந்து வெடிப்புள்ள உதட்டில் பூசிவரப் புண்களாறும்.

குறிப்பு:-

பால் ஒடுவியிலை — கொடிப்பாலை இலை.

---

# 153. உதட்டின் வெடிப்புக்கும், பல் கிரந்திக்கும் பூச்சு மருந்து

இரதமுடன் கெந்தகமுஞ் சரியாய்க்கூட்டி
எருக்கம்பால் விட்டரைத்து வம்மிதன்னைத்
துரிதமுடன் கழுவிக்கொஞ்சம் நீர்விட்டந்நீர்
சுவறிடவே காய்ச்சியுதட் டின்வெடிப்பில்
வரிசையுடன் றடவுவெடிப் பாறும்பல்லின்
வன்கிரந்தி தீருமிந்த வையத்தோர்க்குக்
கருணைநிதி சரபேந்திர னுணர்ந்து
கைகண்ட திம்முறைநீ செய்துபாரே (உஉங)

(இ. ள்.)

பாதரஸம்
கெந்தகம்

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டரைத்து, எருக்கம் பால்விட்டு மைபோலாக்கி, கல்வத்தை சீக்கிரமேயலம்பி அத்தண்ணீரைக் காய்ச்சி, உதட்டு வெடிப்பில் பூசவும். வெடிப்புகள் ஆறும். பல் கிரந்தியுந் தீரும்.

---

# 154. உதட்டின் புண்ணுக்கும், வெள்ளைக்கும், புழுவுக்கும் பூச்சு.

அவுரியிலைச் சாற்றில்குன்றிப் பருப்பைத்தானும்
அரைத்துநித்திரை செய்யும்போ ததரத்திற்முன்
நவமாகத் தடவுதட்டின் புண்ணும் வெள்ளை
நாடாது புழுவிருந்தால் செத்துவீழும்
புவுலோக முதலான லோகமெங்கும்
புரந்தரனைப் போல்கீர்த்தி பெற்றயோகன்
தவந்தானே பெற்றுசிவ கிருபைபெற்ற
சரபேந்திர னிர்ணயித்த முறையதாமே (உஉ௪)

(இ. ள்.)

அவுரியிலைச்சாற்றில் குன்றிமணிம்பருப்பை யுரைத்துத் படுக்கு முன் தடவிக்கொண்டு படுக்கவும். உதட்டிண் புண், வெள்ளை முதலியவை நீங்கும். புழுவும் வீழும்.

---

# 155. (வேறு)

அக்கிராக் காரமுட னேகோஷ்டந்தான்
ஆனையுட தந்தமிவை சரியாய்க்கூட்டி
பக்குவமாமெலும்மிச்சம் பழச்சாறுவிட்டு
பதனமா யுரைத்துநித்திரை செய்யும்போது
சிக்கவுதட் டினிற்றடவ வெள்ளைதீருஞ்
சிவகிரு பையினுற் செங்கோல்நீதி
திக்கெல்லாம் புகழ்தஞ்சை சரபபூபன்
தினமுணர்ந்த வைத்தியத்தின் செய்கைதானே (உஉரு)

(இ. ள்.)

அக்கிராக்காரம்
கோஷ்டம்
யானைத்தந்தம்

இவற்றை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு சமனளவாக உரைத்து இரவில் படுக்கப்போகுமுன் உதட்டில் தடவிக் கொள்ளவும். உதடு வெள்ளை தீரும்.

---

# 156. உதட்டின் வெடிப்பு, வெள்ளைக்குப் பூச்சு மருந்து.

முலைப்பாலில் வில்வத்தின் குடுக்கையோட்டை
முதிரான சந்தணக்கல் தனிலுரைத்து
மலைப்பாக வெடித்தபுண்ணிற் றடவுவெள்ளை
வருமுதட்டி னிற்றடவு கண்டநேரம்
உலைப்பான வுதட்டின்புண் ணுறும்வெள்ளை
யோபத்துத் தினத்திற்புண் வெள்ளைதீருங்
கலைக்கியான மென்பதெல்லா மறிந்ததஞ்சைக்
காவலனுஞ் சரபேந்திரனுணர்ந்ததாமே (உஉசா)

(இ. ள்.)

வில்வக்குடுக்கை யோட்டை மூலைப்பாலுடன் சந்தனக் கல்லி லிழைத்து உதட்டில்போட, உதடு வெடிப்பு, புண் தீரும். 10 தினத்தில் வெள்ளையுந் தீரும்.

# 157. மயிர் வளர மருந்து.

அந்தரத்தா மரையதனை வைத்துக்கொண்டு
அதனிற்கொப் பரைசரியாய்ப் போட்டிரண்டுந்
தந்திரமா யிடித்துச்சாறு பிழிந்து கஞ்சாச்
சாறுசா றணைச்சாறுஞ் சரியாய்க்கூட்டி
யுந்திரமாய்த் தலைதனிலே தேய்த்துக்கொள்ளு
ஓர்மண்ட லத்தில்மயிர் முளைக்குந்தானே
யிந்தமுனி வோர்கள்சொன்ன மார்க்கமாகும்
இதையுணர்ந்து மானுபிர மாணித்தாரே (உஉஎ)

(இ. ள்.)

ஆகாயத்தாமரையைச் சமூலமெடுத்து, அதற்குச் சமனெடை கொப்பரை சேர்த்திடித்துச் சாறுபிழிந்து இதற்குச்சமன் கஞ்சாச்சாறும், சாறணைச்சாறும் கூட்டித் தலையில் தேய்த்துக் கொள்ளவும். ஒரு மண்டலத்தில் (45 நாள்) மயிர் முளைக்கும்.

# 158. மயிர் உதிருகிறதற்குச் சித்திரகாதித் தைலம்.

சித்திரகா தித்தைலம் அத்திவேருஞ்
சீர்கொடிவே லியின்வேரும் பீர்க்கம்வேரும்
பத்திரமாந் தண்ணீர்விட் டரைத்துக்கொண்டு
பாரில்விளை யெள்ளெண்ணெ யொருசேர்கூட்டு

சுத்தசலஞ் சேர்நாலுங் கலந்துகாய்ச்சி
சுருங்கவே நீர்சுண்டத் தைலமாகும்
இத்தையும்நீ முழுகுமயி ருதிர்ந்திடாது
இதுசரபேந் திரனுணர்ந்த முறையதாமே (உ௨அ)

(இ. ள்.)

அத்திவேர்
கொடிவேலி வேர்
பீர்க்கம் வேர்

இம்மூன்றையுந் தண்ணீர் விட்டரைத்துக் கொண்டு, சுத்தமான நல்லெண்ணெய் 1 சேர் விட்டு, சுத்த ஜலம் 4 சேர் விட்டு அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாகக் காய்ச்சி யிறக்கவும். இதைத் தலையில் தேய்த்துவர மயிருதிராது முளைக்கும்.

---

## 159. உதிர்கிற மயிர் வளர சாசித்தயிலம்.

சாசித்தைலஞ் சாதிமொட்டுஞ்
சார்ந்தவலரிக் கொடிவேலி
பாசப்புங்கம் விரைநாலும்
பலமதரையாம் வகையொன்று
தேசச்தெண்ணெய் சேரொன்றிற்
றிறமாய்க் காய்ச்சி வடித்துக்கொள்
கேசத்துதிரு மயிர்வளர
கெடமாய் சிரசிற்றடவுவதே (உ௨௯)

(இ. ள்.)

சாதிமொட்டு
அலரி
கொடிவேலி
புங்கங்கொட்டை

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து, இடித்துச் சூரணஞ் செய்து, நல்லெண்ணெய் 1 சேரிலிட்டு, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி வடிக்கவும். இதைத் தலையில் தடவிவர உதிரும்மயிர் நின்று மயிர் வளரும்.

---

# 160. நரை, திரை மாற.

கையாந்தகரை ரசம்பிழிந்து
  கசடில் சுத்த சலங்கூட்டி
நெய்யேயொரு துள்ளியும் போட்டு
  நிசமாய் மத்தித்தோர் நாள்கொள்
மெய்யே மிகுந்த கெட்டியுமாம்
  விதமா யீரேழ்நாள் கொள்ளி
லொய்யாரக்கண் கறுக்கிருபத்
  தோர்நாள் கொள்மெய் யழகாமே (உ௲௰)

ஆமேமூன்று திங்களுந்தா
  னதுதப்பாமற் கொண்டிடிலே
போமே நரையுந் திரைமாறும்
  பொய்யா முனிவர் சொன்னவுரை
யாமேவேதா கமமுதலா
  யறிந்தசரபேந் திரபூபன்
ருமேயுணரிம் முறையதனை
  தப்பாமற்செய் யிப்போதே (உ௲௧)

(இ. ள்.)

கையாந் தகரைச் சாறெடுத்துப் பிழிந்து, சுத்த ஜலம் விட்டுப் பசுவின் நெய் ஒரு துளியும் விட்டுக் குலுக்கி யொருநாள் (வாரம்?) சாப்பிட சரீரம் பலப்படும். இவ்விதமாக 14 நாளைக்குச் சாப்பிடக் கண்கள் கறுக்கும்; 3 வாரம் சாப்பிடச் சரீரம் அழகாகும்; 3 மாதங்கள் சாப்பிட்டால் நரை, திரை, மாறும்.

# 161. நரை, திரை மாறக் கரந்தைக் கற்பம்.

கரந்தைசமூ லமும்பிடிங்கிச் சூரணித்துக்
கடவுள்தனை தியானித்தே யிளவெந்நீரில்
நிரந்தரமா யோர்திங்கள் கொள்ளப்பாலி
னீதப்பா மற்றேனி லொருமாதங்கொள்
சிறந்தசர்க் கரையதனி லோர்மாதங்கொள்
திறமான பசுநெய்யி லொருமாதங்கொள்
தரந்தரமாய்க் கொள்ளநரை திரைகள்மாறுந்
தப்பாது விபுவுணர்ந்த முறையுந்தானே (உகஉ)

(இ. ள்.)

கரந்தையைச் சமூலமாகப் பிடுங்கி நிழலிலுலர்த்தி, இடித்து வஸ்திர காயஞ்செய்து, கடவுளை வேண்டி, மூவிரல் கொள்ளுமளவு தூளெடுத்து வெந்நீரில் 1 மாதஞ் சாப்பிடவும். பாலில்லொரு மாதமும், தேனிலொரு மாதமும், சர்க்கரையிலொரு மாதமும், பசுவின் நெய்யிலொரு மாதமுஞ் சாப்பிட்டுவர நரை, திரை மாறும்.

குறிப்பு:-

'கரந்தை' என்று சொல்லப்பட்டிருப்பதால், சிவகரந்தை விஷ்ணுகரந்தை, கொட்டைக்கரந்தை, இவைகளில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம்.

---

# 162. காயகற்பம்.

வேப்பிலை கையாந்தகரை கரந்தை நொச்சில்
மெய்யசமதாகவிலை ஐந்துந்தானே
தாப்பிரியத் தோடுலர்த்தி யிடித்து வந்தி
சந்திவெருகடிப் பிரமாணங் கொள்ளு
ஆப்பசுப்பா லுஞ்சோறு முண்ணுகாய
மதுபோதித் தநரையுந் திரையுமாறும்
வாய்ப்பிதுகா யகற்பஞ் சரபபூபன்
மனதுணர்ந்த திதைநீயுஞ் செய்துபாரே (உகங)

(இ. ள்.)

வேப்பிலை
கையாந்தகரை
கரந்தை
நொச்சி
ஓமவல்லி இலை

இவ்வைந்தையுஞ் சமனெடுத்து நிழலிலுலர்த்தி, இடித்துச் சூரணஞ் செய்து, தினம் காலை, மாலை வெருகடிப் பிரமாணம் உட்கொள்ளவும். பால் சாதம் சாப்பிடவும். தேகம் பொன் மேனியாகி நரை, திரை மாறும்.

---

# 163. தலைமயிர் சுருட்டை செம்பட்டைக்குத் தைலம்.

சிவந்தால முகிள்சவரிக் கொத்தினூடே
சேர்கையாந் தகரையல ரியிலைநான்கும்
நவந்தானே யாகவரைத் துப்பிரமாணம்
நல்லானைப் பல்லிடித்து எண்ணெய் விட்டு
எவந்தானுங் காய்ச்சிவடித் தலைக்கு இட்டால்
இதற்கு மயிர் சுருட்டையுஞ்செம் பட்டைபோகுந்
தவந்தானே செய்துசிவ கிருபை பெற்ற
சரபேந்திர னிர்ணயித்த முறையதாமே (உ௩௪)

(இ. ள்.)

சிவப்பான ஆலமொட்டு
சவுரிக்கொத்தான்
கையாந்தகரை
அலரியிலை

இன்னான்கு சரக்குகளையும், நேகவரைத்து, அதற்குச் சமன் யானைப்பல்லை யிடித்த சூரணம் சேர்த்து எள்ளெண்ணெய் விட்டுக் காய்ச்சி வடிக்கவும். தலையில் தடவிவர மயிர் சுருட்டை,

செம்பட்டை யிவை போகும்.

---

## 164. மயிர் வளர.

ஆமலகப் பழச்சாறு மெருமைப்பாலு
மதுவகைக்கு யிருநாழி யெண்ணெய் நாழி
நீமயங்கா மல்கலப்பிப் பதமாய்க் காய்ச்சி
நித்தநித்த மயிரிலே தடவிச்சீவு
ஆமிதுதேய்த் துத்தலையு முழுகினாலே
அழகான மயிர்வளருஞ் சூடெல்லாம்போம்
நேமமது தப்பாது தஞ்சையாளும்
நிருபனுணர் முறையிதைநீ செய்துபாரே (உ௬௫)

(இ. ள்.)

நெல்லிக்கனிச்சாறு
எருமைப்பால்

இவை வகைக்கு 2 படி, நல்லெண்ணெய் 1 படி இவற்றை யொன்று கூட்டி யடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்தில் வடித்துத் தலையில் தடவிச் சீவிவந்தாலோ, அல்லது, தலை முழுகினாலோ மயிர் வளரும். தேகக் காங்கையுந் தீரும்.

---

## 165. மயிர் வளர, மயிர் சுருட்டைக்குப் பழந்தின்னும் வௌவால் தைலம்.

வேளான்செய் குன்றுச்சட் டியிலேயெண்ணெய்
வெண்சேரீரேழ் சேரும்விட்டோர் மஞ்சள்தேறும்
நாளான பழந்தின்னி வெளவாலொன்று
நன்றாகப் பிடித்தெவண்ணெய் தனிலேபோட்டு

மீளாமற் சட்டியிட்டுப் படியமூடி
வெடிப்பில்லா மல்மண்ணைத் தடவிக் கொண்டு
மாளாத எருக்குப்பை தன்னைத் தோண்டி
யன்பாக நாற்பதுநாள் புதைத்திடாயே (உ௬௬)

நாற்பதுநா ளானபின்பு எடுத்துக்கொண்டு
நன்மயிருச் சுருட்டைக்கு ஆதிவாரம்
தாப்பிரியத் துடன்றேய்த்துப் பத்துநாழி
தானிருந்து ஒன்றைவிட்டோர் நாளுமூழ்கு
வாய்ப்புடனிப் படிப்பத்து விசையு மூழ்கில்
மயிர்வளருங் கோழியிற கதினுறேய்நீ
மூப்புடனே மயிர்சுருட்டை யெல்லாந்தீரு
முள்ளங்கை கொண்டுயெண்ணெய் தேய்த்திடாதே
(உ௬௭)

தேய்த்திட்டால் மயிர்முளைக்கும் வெகுசயித்தியஞ்
சேருமயிர்ப் புழுவெட்டு முதலாய்ப் போகும்
ஆத்தியணி சடைமுடியார் அருளே பெற்ற
அருந்தவத்தோர் பலநூலி லருமையாக
சாத்திரத்தின் படியிதையும் நாள்கள் தோறுந்
தானுணர்ந்து நிசங்கண்டு தமிழினுலே
சாத்துசர பேந்திரனிர் ணயித்த
தன்மையிது வுண்மையுடன் செய்துபாரே (உ௬௮)

(இ. ள்.)

ஒரு குழிவுள்ள சட்டியில் நல்லெண்ணெய் 14 சேர் விட்டுப் பழந்தின்னி வௌவால் ஒன்றைப் பிடித்து ஒரு தேறு மஞ்சளுடன் கூட்டியதை எண்ணெயில் போடவும். சட்டிக்குத் தகுந்த மூடியினுல் படிய மூடி சீலமண் செய்து, எருக்குப்பைக் குழியில் 40 நாளைக்குப் புதைத்துவிடவும்.

பின்பு இதையெடுத்துக்கொண்டு, மயிர் சுருட்டையுள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமை தினம் தேய்த்துப் பத்து நாழிகை யூறி ஸ்நானம் செய்யவும். இவ்வாறு ஒன்றைவிட்டொருநாள் 10 தடவை முழுகவும். மயிர் வளரும். கோழி யிறகினுல் தேய்க்கவும். கை

யினுல் தேய்த்துக் கொள்ளக்கூடாது. அவ்வாறு தேய்த்துக் கொண்டாலுள்ளங் கையில் மயிர் முளேக்கும். அதிகக் குளிர்ச்சியு முண்டாகும். புழுவெட்டுத் தீரும்.

7 OCT 1974

## 166 மயிருதிர்கிறதற்கு.

சேங்கொட்டை முள்ளிக்கத் தரியின்வித்து
செய்யமுள் ளங்கிவித்திவ் வகைகள்மூன்றும்
பாங்குடனே யிடித்துப் பொடி பண்ணித் தேனிற்
பண்புடனே நன்ருகக் கலந்துகொண்டு
ஓங்குமயி ருதிருகிற விடத்திற்பூச
உள்ளபடி யந்திசந்தி யிரண்டு நேரம்
தேங்குமயிர் வளரும்பார் தக்கோராய்ந்த
திறமையிது மகிமையுட னீசெய்வாயே (உ௲கூ)

(இ. ள்.)

சுத்திசெய்த சேராங்கொட்டை
முள்ளுக்கத்திரி விதை
முள்ளங்கி விதை

இம்மூன்றையும், கல்லுரலிலிட்டிடித்துத் தூள் செய்துகொண்டு, தேனிலொரு வெருகடியளவெடுத்து மயிருதிர்கிற இடத்தில் தேய்க்கவும். தினமிரு வேளே பூசவும். மயிர் உதிர்வது நிற்கும்.

## 167. மயிர் கறுக்க.

சீந்தியிலேச் சங்கிலேயுங் கொட்டைப்பாசி
சேர் மூன்று மரைத்துத்தலே யினிலேதப்பு
பாந்தமுட னிம்மருந்தை யரைத்துத்தானே
பசுமோரிற் கொள்ளு மயிர்க் கறுக்கும்பாரு

ஆய்ந்தறிந்து அருந்தவர்கள் சொன்னமார்க்க
மதையுணர்ந்து நாள்தோரு மறிவினாலே
வாய்ந்தசித்தா மணியெனவுந் தஞ்சையாளு
மகாராசன் சரபேந்திர னருளிதாமே (உ௬௰)

(இ. ள்.)

சீந்தில் இலை
முட்சங்கனிலை
கொட்டைப்பாசி

இம்மூன்றையும், அரைத்துத் தலையில் அப்பவும். இம் மருந்தை பசுவின் மோரிற் கலந்து உள்ளுக்கும் சாப்பிடவும். மயிர் கறுக்கும்.

---

## 163. நரை, திரை, மாற.

எட்டியின்கொட் டையைப்பாலில் போட்டவித்து
எடுத்துவைத்துக் கொண்டுதின மிரண்டுவேளை
சட்டமாய்ப்பண விடைவெத்தி லையிற்கொள்ளு
தானேநரை திரைமாறுந் தப்பாமற்றான்
அட்டதிசை யதினுமன்பத் தாறுதேசத்
தரசர்பணி பதனுலகுக் கன்புமுள்ள
இட்டமிகு தஞ்சையையாள் சரபதீர
னிதையுணர்ந்து நிச்சயித்த முறையதாமே (உ௬௧)

(இ. ள்.)

எட்டிக் கொட்டையைப் பசுவின் பாலில் போட்டு அவித்துக் கழுவி எடுத்து வைத்துக்கொள்ளவும். இதைத் தினந்தோறும் இருவேளை (காலை மாலை) ஒரு பணவெடை வீதம் வெற்றிலையிற் சாப்பிடவும். நரை, திரை மாறும்.

---

# 169. நரை, திரை மாற.

நெல்லிக்காய்ச் சாறுகையாந் தகரைச்சாறும்
நேராக வகைக்குநாற் படியதாகும்
வல்லிரும்பின் அரப்பொடியோ பலமேரெண்டு
வாகான விளக்கெண்ணெய் படியிரண்டு
நல்லெண்ணெய் படியிரண்டுங் கூட்டிக்காய்ச்சி
நன்மெழுகு பக்குவத்தி லிறக்கிக்கொள்ளு
சொல்லுகொக்கி னிறகாகில் வெள்ளைக்கோழி
துய்யவிற காகிலதைத் தோய்த்துப் பாரே (உசஉ)

தோய்த்துப்பார் இறகதுவுங் கறுத்ததானல்
தொட்டெடுத்துக் கடவுளரைத் தோத்தரித்து
வாய்த்ததென்று மூன்றுநாட் கொருகால்மூழ்கு
மானிடர்க்கு வந்தநரை திரைமாறும்
கூத்துளதுங் காளியுட ளுடிக்கங்கை
குழந்தைமதி யறுகரவு கொண்றைதும்பை
ஆத்தியணி சிவகிருபை பெருவசீரன்
அண்ணல்சர பேந்திரனுணர் முறையதாமே (உசந)

(இ. ள்.)

நெல்லிக்காய்ச்சாறு
கையாந்தகரைச்சாறு

இவ்விரண்டும் வகைக்கு 4 படி, இதனுடன்

இரும்பு அரப்பொடி —2 பலம்
ஆமணக்கெண்ணெய் —2 படி
நல்லெண்ணெய் —2 படி

இவற்றை யொன்று கலந்து, அடுப்பின்மேல் வைத்துப் பக்குவமாய் மெழுகு பதத்திலிறக்கவும். கொக்கினிறகையோ, கோழியினிறகையோ இத்தைலத்தில் தோய்த்தால் அது கறுத்துவிடும். கடவுளைத் தியானித்து மூன்று நாளைக்கு ஒரு தடவை

தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும். நரை, திரை மாறும்.

---

# 170. நாசியில் தண்ணீர் வீழ்தல் பீனிசம், கபால சூலைக்கு.

நல்லெண்ணெய் பசுவின்பா லெலுமிச்சஞ்சாறு
நாலுழி வகைக்கவுரி துளசிச்சாறும்
வல்லசங்கம் பழச்சாறு மூன்று சாற்றில்
வகைக்குவொரு நாழிச்சாறு கூட்டிக்கொள்ளு
சொல்லுகற்க மதிமதுரங் கோஷ்டங் கிராம்பு
சுக்காத்திப் பூவுமிலா மிச்சம்வேரும்
நல்லசந் தனமிளகு சாதிக்காயும்
நன்னாரி வேர்சாதிப் பத்திரிதானே (உசச)

பத்திரியும் நாகப்பூ வுடனேமுந்திரிப்
பழமுடன்திப் பிலியகிலும் வெட்டிவேரு
முத்தம்கோ ரைக்கிழங்கு சங்கம்வேரி
னுடனேபதி னெட்டும்வகைக் கோர்பலந்தான்
பத்திரமா யாப்பால்விட் டரைத்துத்தானே
பார்சாறு மெண்ணெய்விழு துங்கலந்து
சித்திரமா யடுப்பேத்திச் சிறு தீயிட்டுத்
திறமான தைலப்பதத் திறக்கிடாயே (உசரு)

பதத்திறக்கி யதைவடித்துக் கொண்டுநீயும்
பத்தியா யாதிசிவன் பாதம்போற்றி
அதைத்தலையிற் றேய்த்துப்பய றிட்டுமுழ்கு
அன்பாக மூன்றுநாட் கொருக்கால்தானே
இதத்திலிதற் குத்தீரும் வியாதிமூக்கி
னிற்றண்ணீர் வீழ்தல்கபா லத்தின்சூலை
கதித்தகபா லவாய்வு பீனிசங்கள்
கடிந்தோடு மானுவுணர் முறையதாமே (உசசா)

(இ. ள்.)

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | —4 நாழி | |
| பசுவின் பால் | — | ,, |
| எலுமிச்சஞ்சாறு | — | ,, |
| அவுரிச்சாறு | —1 நாழி | |
| துளசிச்சாறு | — | ,, |
| சங்கம்பழச்சாறு | — | ,, |

இவற்றை யொன்றுகூட்டி,

| | |
|---|---|
| அதிமதுரம் | நன்னாரிவேர் |
| கோஷ்டம் | சாதிப்பத்திரி |
| கிராம்பு | சிறுநாகப்பூ |
| சுக்கு | முந்திரிப்பழம் |
| ஆத்திப்பூ | திப்பிலி |
| இலாமிச்சம்வேர் | அகில்கட்டை |
| சந்தனம் | வெட்டிவேர் |
| மிளகு | கோரைக்கிழங்கு |
| சாதிக்காய் | சங்கம்வேர் |

இச்சரக்குகளை வகைக்கு ஒரு பலமெடுத்துத் தூள் செய்து பசுவின் பாலிட்டரைத்து, சாறு கூட்டிய எண்ணெயுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிச் சிறு தீயாக எரிக்கவும். 2 நாள் கழித்து பதத்திலிறக்கவும். கடவுளைத் தியானித்துத் தைலத்தைச் சிரசில் தேய்த்து, பயற்று மாவைக்கொண்டு கழுவவும். இவ்வாறு 3 முறை செய்யவும். இதனால், மூக்கிலிருந்து நீர் வடிதல், கபால சூலை, கபால வாயு, பீனஸங்கள் இவை தீரும்.

---

# 171. கபால வாயுவுக்கு மூழ்க யெண்ணெய்.

ஆடுதீண்டாப் பாளையதை யுலர்த்திக்கொண்டு
அதையிடித்துத் தூளாக்கி வெள்ளைப் பூண்டோ

டாடுநல் லெண்ணெயதிற் போட்டுக் காய்ச்சி
நன்றாக மூன்றுநாட் கொருக்கால் மூழ்கு
சூடுளதுங் கபாலவாய் வெல்லாந் தீருஞ்
சுப்பிரதீ பக்குருசி லுசிதசோழ
நாடுநகர் தஞ்சையையாள் சரபபூபன்
நன்றாக நிர்ணயித்த முறையதாமே (உசஎ)

(இ. ள்.)

ஆடுதீண்டாப் பாளையைச் சமூலமாக உலர்த்திக்கொண்டு கல்லுரலிலிட்டிடித்துத் தூளாக்கி, சம எடை வெள்ளைப் பூண்டை யுஞ்சேர்த்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, மூன்று நாளைக் கொருதடவை தலை முழுகவும். கபால வாயு தீரும்.

---

# 172. கபாலத்தினவு, மயிர்வெட்டுக்கு மூழ்க எண்ணெய்.

கையாந் தகரைச்சாறு சேரோ நாலு
கனத்த எள்ளெண்ணெய் சேரொன்றுங் கூட்டி
மெய்யான குன்றிமணிப் பருப்பைத்தானு
மிதமாகப் பலமொன்றை முன்சொல் சாற்றை
ஒய்யார மாகவும்விட் டரைத்துப்போட்டு
உடனேயதைக் காய்ச்சிநன்றாய் மூழ்கிப்பாரு
பொய்யாது தினவுகபா லத்தின்வியாதி
போகுமயிர் வளரும்விபு வுணர்ந்ததாமே (உசஅ)

(இ.ள்.)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | —4 சேர் |
| சுத்தமான நல்லெண்ணெய் | —1 சேர் |

இவைகளை யொன்று கலந்து, குன்றிமணிப் பருப்பு, 1 பலத்தை முன் கூறிய சாற்றினாலரைத்து, சாறு கலந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்தி

லிறக்கவும். இதனல் தினந்தோறும் தலை முழுகிவரக் கபால வியாதி களனைத்தும் குணமாவதுடன் மயிரும் வளரும்.

---

## 173. வாதசோணிதம், பித்தம், தலைவலி, கபாலசூலை, நாசி வியாதிக்கு முழ்க எண்ணெய்.

சீந்திற்றண் டதுநூற்றைம் பதுபலந்தான்
சேர்த்திடித்துத் தூணிநீர் விட்டுக்காய்ச்சிப்
பாந்தமுடன் குறுணியதா யிறக்கியெண்ணெய்
பண்பாக நாழுழி கூட்டிக்கொண்டு
சாந்தகமாய்க் கற்கவகை யிலாமிச்சம்வேர்
சடாமாஞ்சிற் கோஷ்டமட விக்கச்சோலம்
சேர்ந்தகண்டில் வெண்ணெயுடன் புனுகுசட்டஞ்
சேவகன்பூ டடன்செஞ்சந் தனமுமாமே (உசஅ)

சந்தனங்கச் சோலமிரு வேலிசரளஞ்
சாதிக்காய் கற்பூர மிலுப்பைப்பூவு
முந்திரிகைப் பழங்கொட்டிக் கிழங்குங்கூட
முத்தக் காசுடனே பச்சிலை நாகப்பூ
கந்தமிகுங் குங்குமம் பாதாளமூலி
கடுகுரோ கணிசாத்திர வேதிகூட
விந்தைமிகு சாறடைவேர் தேவதார
மிலவங்க மரத்தையும்நன் ஞாரிவேரே (உருப)

வேராமது வகையிருப தொன்பதுக்கு
மிவையோரோ ரொன்றுக்கு நாற்களஞ்சு
ஊரவரைத்துக் கரைத்துவடுப் பேத்தித்தீயை
உபாயமா யெரித்துத்தை லப் பதத்தில்
மாறிடா மல்வடித்து முழ்கிதற்கு
வாதசோ ணிதம்பித்தத் தலைநோக்காடு
ஏறுகபா லச்சூலை மூக்கின் வியாதி
யிவைபலவுந் தீரும்விபு வுணர்ந்ததாமே (உருக)

(இ. ள்.)

சீந்தில்கொடி 150 பலத்தை நறுக்கிக் கல்லுரலிலிட்டிடித்து 4 மரக்கால் தண்ணீர் விட்டடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகச் சுண்டக் காய்ச்சவும். இதனுடன், நல்லெண்ணெய் 4 படி விட்டுக் கலந்து,

| | |
|---|---|
| இலாமிச்சம்வேர் | கொட்டிக்கிழங்கு |
| சடாமஞ்சில் | கோரைக்கிழங்கு |
| கோஷ்டம் | பச்சிலை |
| அடவிக்கச்சோலம் | சிறுநாகப்பூ |
| கண்டில் வெண்ணை | குங்குமப்பூ |
| புனுகுசட்டம் | ஆடுதீண்டாப்பாளை |
| சேவகனர் பூண்டு | கடுகுரோகிணி |
| சந்தனம் | சாத்திரவேதி |
| கச்சோலம் | சாறடைவேர் |
| வெட்டிவேர் | தேவதாரு |
| சரளதேவதாரு | கிராம்பு |
| சாதிக்காய் | பேரரத்தை |
| பச்சைக்கர்ப்பூரம் | நன்னரி |
| இலுப்பைப்பூ | செஞ்சந்தனம் |
| முந்திரிப்பழம் | |

இச்சரக்கு வகைகளை, ஒவ்வொன்றும் 4 கழஞ்சு வீதமெடுத்துக்கொண்டு தண்ணீர் விட்டுரவைத்து, நன்றாக அம்மியிலிட்டரைத்துக் கஷாயம் கூட்டிய எண்ணெயில் குழப்பி, அடுப்பின் மேலேற்றிச் சிறுக எரித்துப் பதமாக எரிக்கவும். இதனால் தினம் தலை முழுகிவர வாதரத்தம், பித்தம், தலைநோய், கபால சூலை, மூக்கு வியாதி முதலிய ரோகங்கள் தீரும்.

## குறிப்பு:-

"வாதரத்தம்" என்பது ரத்த தோஷத்தினால் ஏற்படும் வியாதி. இதில் அரிப்பு, எரிவு, வலி, தோலில் வர்ணபேதம், மறத்துப்போதல் இவை உண்டாகும்.

கண்டில் வெண்ணெய் என்ற சரக்கு மலையாள மருந்து சரக்காகும்.

# 174. சிரோவாய்வு, கபாலசூலை, பித்தம், மூக்கினீர்ப் பாய்ச்சல், பீனிசத்துக்கு.

தேசிச்சார் படிநாலுந் துளசிச்சாறுஞ்
சேர்சங்கம் பழச்சாறு மவுரிச்சாறு
நேசத்தோ டரைப்படிச்சாறு வகைக்குக்கொள்ளு
நிசமான வெண்ணெயொரு படியுங்கூட்டு
வாசச்சா தியின்பத்திரி வெட்டிவேரு
மதிமதுரங் கற்கடசிங் கத்திப்பூவும்
தேசத்தின் கோஷ்டமிலா மிச்சம் வேருஞ்
சிறுநாகப் பூகோரைக் கிழங்குஞ் சுக்கே (உருஉ)

சுக்குகிராம் பகில்முந்திரிப் பழத்தினூடே
சுகந்தசந் தனஞ்சாதிக் காய்ச்சங்கம்வேர்
பக்குவமாம் நன்னாரி வேருந்திப்பிலி
பண்பான மிளகுபத் தொன்பதுந்தான்
தக்கவகை யொன்றுபல மொன்று பாலிற்
றூனரைத்துப் போட்டுவந்த விழுதைத்தானே
ஒக்கவே கலந்தடுப்பி லேத்தி நன்றாய்
உருக்கமுடன் எரித்துமதை வடித்திடாயே (உருங)

வடித்தெடுத்து மூன்றுநாட் கொருக்காற்றேய்த்து
வன்பயறு தேய்த்துக்கொண் டிளவெந்நீரில்
திடமுடனே மூழ்கிதற்குத் தீரும் வியாதி
சிரவாய்வு கபாலத்தின் சூலைகூட
தடித்தபித்த மூக்கினீர்ப் பாய்ச்சல் பீனி
சங்களெல்லாந் தீருமது தப்பாதிப்போ
படித்தவர்கள் தாமறியுஞ் சரபதீரன்
பார்த்துணர்ந்த தைலமிது நேர்த்தியாமே (உருச)

(இ. ள்.)

| | |
|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | —4 படி |
| துளசிச்சாறு | —1 சேர் |
| சங்கம்பழச்சாறு | —$\frac{1}{2}$ படி |

அவுரிச்சாறு —½ படி

இவற்ருேடு நல்லெண்ணெய் ஒரு படியுஞ்சேர்த்து

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | கற்கடசிஞ்சி |
| விளாமிச்சம்வேர் | சுக்கு |
| முந்திரிப்பழம் (திராக்ஷை) | சங்கம்வேர் |
| வெட்டிவேர் | கிராம்பு |
| சிறுநாகப்பூ | நன்னரி |
| செஞ்சந்தனம் | கோஷ்டம் |
| அதிமதுரம் | அகில் |
| கோரைக்கிழங்கு | திப்பிலி |
| சாதிக்காய் | மிளகு |

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்துப் பால் விட்டரைத்து, இவ்விழுதைச், சாறுகலந்த எண்ணெயிற் குழப்பி, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடித்துக்கொள்ளவும்.

இவ்வெண்ணெயை 3 நாளைக்கு ஒரு முறை தேய்த்து, பயறு தேய்த்து இளவெந்நீரில் ஸ்நானம் செய்துவந்தால், சிரோவாயு, கபால சூலை, பித்தம், மூக்கில் நீர்ப்பாய்ச்சல், பீனிசம் இவை தீரும்.

---

# 175. குன்மமெட்டு, குஷ்டம், வாந்தி பித்தங் கிறுகிறுப்பு, உஷ்ணம், சோகை, பாண்டு, தசவாயு, கணம், கபாலசூலை, நீர் இவைகளுக்கு.

இரண்டுபடி சீரகம்நீர்ப் பதக்கிற் போட்டு
எட்டொன்ருய்க் காய்ச்சியெரித் தேவடித்து
நிரந்தரமாய் எள்ளெண்ணெய் படியேயொன்று
நேரான கார்போக வரிசிதானும்
இரண்டு பலங் கஷாயம் விட்டு அரைத்துப்போட்டு
மெழுகுபதத் தினில்வடித்துக் கொண்டுநீயும்

சிரந்தனிலே தேய்த்து மூழ்கிதற்குத்தானே
தீருகின்ற வியாதிகளைச் செப்பக்கேளே (உருரு)

தீருகின்ற வியாதிகுன்ம மெட்டுக்குட்டஞ்
செயலான வாந்தி பித்தங் கிறுகிறுப்புச்
சாருகின்ற உஷ்ணமுடன் சோகை பாண்டு
தசவாய்வு கணங்கபா லத்தின்சூலே
சேருகின்ற சிரத்தினீர்க் கட்டிதெல்லாந்
தீருமது தப்பாமற் செய்துபாரு
நேருகின்ற தைலந்தேய்த் திடுநாள்பத்திய
நிசமதுகண் டுணர்ந்துதக்கோ ருரைத்ததாமே (உருசு)

# பாடபேதம்.

பாரப்பா சீரகம் ரெண்டுபடிதான்
பதமாக இடித்துநீர்ப் பதக்கில் போட்டு
சீரப்பா எட்டொன்ருய்க் கஷாயம்வாங்கித்
தெளிவாக எள்ளெண்ணெய் படிதான்வாரு
காரப்பா கார்போகரிசி பலமிரண்டுக்
கஷாயமிட் டரைத்ததனைக் கலந்துகொண்டு
பேரப்பா மெழுகுபத மாகவாங்கி
யியல்பாக முழுகிவரக் குணத்தைக்கேளு (உருஎ)

(இ. ள்.)

சீரகம் 2 படியை 2 மரக்கால் ஜலத்திலிட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருகக் காய்ச்சிக் கஷாயத்தை வடிக்கட்டிக் கொண்டு அதில் சுத்தமான நல்லெண்ணெய் ஒரு படிவிட்டு, கார்போகரிசி 2 பலத்தைக் கஷாயத்திலலரைத்துக் கற்கஞ் செய்து கொண்டு, கஷாயம் கூட்டிய எண்ணெயுடனே குழப்பி யடுப்பின் மீதேற்றிப் பதத்திலிறக்கவும். இத்தைலத்தைச் சிரஸில் தேய்த்து வரக்

| | |
|---|---|
| குன்மம் | பித்தம் |
| குஷ்டம் | கிறுகிறுப்பு |
| வாந்தி | சோகை |

பாண்டு　　　　　　　　　கபாலசூலை
10 வித வாயு, ரோகங்கள்　　நீர்க்கட்டு

இவைகள் தீரும்.

---

# 176 மண்டை வியாதிக்கெல்லாம் முழுக எண்ணெய்.

நஞ்சறப்பாய்ந் தான்வேரைப் புன்னைக்காயி
　　னளவரைத்து நல்லெண்ணெய் தனிற்குழப்பி
ரஞ்சிதமா யெரித்துப்பத மாகக்காய்ச்சி
　　நடுற்றலையிற் தேய்த்துமுழு கிதுக்குத்தானும்
அஞ்சிவிடு மண்டையுட வியாதியெல்லா
　　மணுகாது சிவகிருபை யதினாலிந்தத்
தஞ்சைநகர் தனைநீதி தப்பாதாளுஞ்
　　சரபோசி மகாராச னருளிதாமே　　　　(உருஅ)

(இ. ள்.)

நஞ்சறப்பாய்ந்தான் வேரைத் தண்ணீர் விட்டரைத்துப் புன்னைக்காயளவெடுத்து, நல்லெண்ணெய் ஒரு சேரில் குழப்பி யடுப்பின் மேலேற்றிப் பதமாக எரிக்கவும். இதைத் தலையில் தேய்த்துவர மண்டை வியாதி தீரும்.

---

# 177. கபால வலிக்கு முழுக எண்ணெய்.

ஏரண்டவெண்ணெயுரி மிளகுழக்கு
　　இதமாகப் பொடிசெய்தெண் ணெயிலேபோட்டுப்
பாருங்கோ ரோசனையு மிருவராகன்
　　பதமாகப் பொடிசெய்தே போட்டுக்கொண்டு
யேரண்ட யோனிமுன்னே புடமாய் வைத்து
　　எரித்து வொரு கொதியிட்ட வுடனிறக்கி

சேருந்தை லமதையே வடித்தெடுத்துச்
செய்யும்வகை கேளுச்சி யினிலேதானே (உருக)

உச்சிதனி லேதேய்த்து நளினமாக
வுங்கழுத்துப் பிடரிநெறியிலும் பொருத்தி
அச்சமில்லா மல்மறுநா ளும்பொருத்தி
யருமையுட னிளவென்னீர் தன்னில்மூழ்கு
உச்சிதமாய்க் கபாலவலி யெல்லாந்தீரு
முடனிதுக்குப் பத்தியஞ்சிற் றுப்புக்கூட்டு
பச்சைநீ ராகாது புளிக்கசப்புப்
பாராதே யியலபுதக்கோ ருணர்ந்ததாமே (உ-சூய)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | —½ படி, இதனுடனே |
| மிளகு | —உழக்கு |
| கோரோசனை | — 2 வராகனெடை |

இவைகளைப் பொடிசெய்து போட்டு, 2 நாளைக்குச் சூரிய புடமாக வைத்துப், பின்பு அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்திலிறக்கவும். இத்தைலத்தை வடித்துத் தலையுச்சியிலும், கழுத்து, பிடரி முதலியவிடங்களிலும் வைத்து இளவெந்நீரில் ஸ்நானஞ் செய்துவரக் கபாலவலி தீரும். இரண்டு நாளைக்குச் செய்யவும்.

**பத்தியம்:**

சிறிது உப்பைக் கூட்டவும், பச்சைஜலமாகாது, புளிப்பு, கசப்புப் பதார்த்தங்களை நீக்கவும்.

---

## 178. தலைத்தினவு, அதற்பொடுவு, சூடு, மீன்சிலம்புபோலே யுதிர்தல், கடிவிஷந், தலைப்புற்று, மயிருதிர்தல், புழுவின் வெட்டுக்கு மூழ்க.

மகளியுளி சங்கவுரி துளசியோடே
வல்லெலுமிச் சம்பழமும் வகையோராறுஞ்

சுகமுடனே வகையொன்று நாழிச்சாறுஞ்
சொல்லெண்ணெய் நாழியதனிற் கலந்துகொண்டு
தகரங்கோ ரைக்கிழங்கு நாகப்பூவுஞ்
சாதிக்கா யிலாமிச்சல் லிக்கிழங்கு
அகிலுசெறு செண்பகப்பூச் சந்தனத்தோ
டதிமதுரந் தான்றிக்காய் கோஷ்டமாமே (உ௬௧)

கோஷ்டந்தா மரைவளைய மழிஞ்சில் வித்துக்
குணமிகுநெல் லிப்பருப்பு யிலவங்கத்தோடு
தாஷ்டிகமாஞ் செங்கழனீர்க் கிழங்குதானுந்
தக்கோலம் வகைகள்பதி னெட்டுந்தானுங்
கூட்டியொரு காசிடையு முசிதமான
குணமுள்ள எலுமிச்சம் பழச்சாறுவிட்டு
வாட்டமில்லா மலரைத்துத் தலையிற்றேய்த்து
வரிசையுட னென்றைவிட் டொருநாளு மூழ்கே (உ௬௨)

நாளுமொரு மண்டலம் நீ முழ்கிவந்தால்
நடுத்தலையின் றினவதற் பொடுகுமெத்த
நீளுமீன் சிலம்புபோ லுதிர்தல்சூடும்
நிஷ்டூரக் கடிவிஷமுந் தலையின்புற்றென்
னுளுமயிர் கடியுரதும் (?) புழுகின் வெட்டும்
நாடாது சிவகிருபையதினல் தஞ்சை
யாளுசர பேந்திரரா சாதிராசன்
அனுமதியிம் முறையதுவும் அறிந்துசெய்யே (உ௬௩)

(இ. ள்.)

புளியிலைச்சாறு
சங்கிலைச்சாறு
அவுரியிலைச்சாறு
துளசிச்சாறு
எலுமிச்சம்பழச்சாறு
மகளிச்சாறு

[மகளிச்சாறு என்பது மகளிக்கீரை என்ற ஒருவகைக் கீரையின்சாறு.]

இச்சாறு வகைகளைத் தனித்தனி ஒரு நாழி யெடுத்து, நல்லெண்ணெயொரு நாழியும் விட்டு.

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| நாகப்பூ | தான்றிக்காய் |
| சாதிக்காய் | கோஷ்டம் |
| இலாமிச்சைவேர் | தாமரை வளையம் (இலைச்சுருள்) |
| அல்லிக்கிழங்கு | அழிஞ்சிவிதை |
| அகில் | நெல்லிப்பருப்பு |
| செண்பகப்பூ | கிராம்பு |
| சந்தனம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| கிரந்திதகரம் | தக்கோலம் |

இவைகள் வகைக்கொரு காசெடை யெடுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி யெரித்துப் பதமாக இறக்கிக்கொண்டு, அத்தைலத்தினால் தினந் தலை முழுகிவர, தலைப்பொடுது, மீன் சிலம்புபோல் உதிருதல், சூடு, கடிவிஷம், தலைப்புற்று, பூழுவெட்டு முதலியவை தீரும்.

---

# 179. சிரோவியாதி, பீனிசங்களுக்கு ஆயிலெண்ணெய்.

சிரோவியாதி யென்பதற்கு ஆயிலெண்ணெய்
செய்யாயி னிலைச்சாறு நாழிதானும்
உரமான நல்லெண்ணெய் நாழிகூட்டு
உத்தசித்தா மட்டிவேர் வாய்விளங்கம்
பெருங்காயஞ் சித்தரத்தை தேவதாரம்
பலமான கோஷ்டஞ்செம் முள்ளிவேரும்
அருங்காளி னன்னாரி வேர்நாகப்பூ
அதிமதுரம் வசம்புசடா மாஞ்சில்தானே (உசுச)

மாஞ்சில்சை லேயமுளி மஞ்சள்மேதை
வருதிப்பிலி யின்மூலம் பதினாறுந்தான்
வாஞ்சையுடன் வகைக்குவரா கனிடைகூட்டி
வாப்பால்விட் டரைத்து கலந்தெரித்து

சாஞ்சிருக்க மூன்றுதுள்ளி நசியஞ்செய்நீ
தான்செய்திதை மூன்று நாட்கொருகால் மூழ்கு
பாஞ்சுவிடத் தாரைவிடு பீனிசங்கள்
பலமான தலைவியாதி யெல்லாம் போமே (உசுரு)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆயில்யயிலைச்சாறு | —1 நாழி |
| செய்யாணிலைச்சாறு | —1 நாழி |
| நல்லெண்ணெய் | —1 நாழி இவைகளுடன் |
| சித்தாமுட்டிவேர் | சிறுநாகப்பூ |
| வாயுவிடங்கம் | அதிமதுரம் |
| பெருங்காயம் | வசம்பு |
| சிற்றரத்தை | சடாமாஞ்சில் |
| தேவதாரம் | சிலாஜது |
| கோஷ்டம் | மஞ்சள் |
| செம்முள்ளிவேர் | பொன்னுங்காணிவேர் |
| நன்னாரிவேர் | திப்பிலிமூலம் (கண்டந்திப்பிலி) |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை கூட்டிப் பசுவின் பால் விட்டரைத்து, சாறு கூட்டிய எண்ணெயுடனே குழப்பி, அடுப்பி லேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இத்தைலத்தைத் தின மொவ்வொரு நாசியிலும் 3 துளிகள் வீதம் நஸ்யஞ்செய்து 3 நாளைக் கொரு தடவை மூழ்கிவரப் பீனஸங்கள், தலை வியாதி முத லானவை தீரும்.

---

## 180. மண்டை வியாதிக்கு மூழ்கப் பெருங்குறுந் தெண்ணெய்.

பெருங்குறுந்தி னிலைச்சாறு சேரோவொன்று
பேசுமெள் ளெண்ணெயது சேரோவொன்று
அருங்கானில் விளையாயி னிலைத்தூள்தானும்
அதுவரைக்கால் படியாங்குங் கிலியந்தானுந்

திருந்தவே மூன்றுவகைக் கும்பலங்கால்
சேர்த்திடித்துக் கலந்தடுப்பி லேத்திமெள்ள
பெருந்தீயு மிடாமலெரித் தேபதத்தில்
பேதகமில் லாமலதை வடித்திடாயே (உ௬௬)

வடித்திட்டு மூன்றுநாள் தலையிலேதான்
வார்த்தாரை நாலுநா ழிகையினமட்டும்
திடத்துடனே மஞ்சள்கொள்ளு மிளகுதானுஞ்
சேர்த்துப்பொடி செய்ததையுந் தேய்த்துக்கொண்டு
துடித்திடா திளவெந்நீர் தன்னில்மூழ்கி
சொல்லுமெண்ணெய் தேய்த்துண்ணு புளிப்புகைப்பு
கடுத்தபுகை யிலையாகா திதற்குமண்டை
காணும்வியா தியுந்தீருங் கண்டுபாரே (உ௬௭)

(இ. ள்.)

| | |
|---|---|
| பெருங்குறுந்தினிலைச்சாறு | —1 சேர் |
| நல்லெண்ணெய் | —1 சேர் |
| ஆயில்யமர இலைத்தூள் | —$\frac{1}{8}$ படி |

இவைகளை யொன்றுகலந்து

| | |
|---|---|
| குங்கிலியம் | — $\frac{1}{4}$ பலம் |
| *மஞ்சள் | — ,, |
| *மிளகு | — ,, |

இவைகளையுமொன்று சேர்த்திடித்துத் தூள் செய்து, சாறு கலந்த எண்ணெயுடனே குழப்பி யடுப்பிலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதைத் தினந்தோறும் 4 நாழிகை தலையில் வைத்திருந்து, மஞ்சள், கொள்ளு, மிளகு இம்மூன்று சரக்குகளையும் பொடி செய்து தலையில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். இவ்வாறு 3 நாளைக்குச் செய்யவும். சிரோ ரோகங்கள் தீரும்.

---

*இச்சரக்குகள் செய்யுளில் கூறப்படவில்லை. 93 நெ. சுவடியில் கூறப்பட்டிருக்கிறது.

பத்தியம் :

கசப்பு, புளிப்பு, புகையிலை இவைகளைத் தள்ளவும்.[1]

## 181. உச்சியிடி தலைக்குத்துக்கு.

உச்சியிடி தலைக்குத்துக் கோர்பிரயோக
மோதக்கேள் கவனமுட னுண்மையாக
நொச்சிலைச்சாறு வெந்நீர்விட் டரைத்துக் கொண்டு
நுணுக்கமுட னுழியந்தச் சாற்றைவிட்டு
உச்சிதத்திப் பிலியுழக்கு மிளகுழக்கு
முறுதியுட னரைத்துவேப் பெண்ணெயாகில்
இச்சையுள்ள நல்லெண்ணெ யாகில்நாழி
இதைக்கூட்டி யடுப்பிலதை யேத்திடாயே (உசுஅ)

ஏத்தியெரித் தேவடித்துக்கொண்டுநீயும்
இதமாக மூன்றுநாட் கொருக்கால்தானே
தேய்த்துமறு நாளில்மூழ்கி துவுமூன்று
திரமுழுகிப் பாரிதற்குத் தீரும் வியாதி
சாத்துதலைக் குத்துவுச்சி யிடியுந்தீருந்
தப்பாமற் சிவகிருபை யதினுல்க்ஷத்திரிய
கோத்திரத்தில் வருசரபேந் திரனுணர்ந்த
குணமான எண்ணெயிது நீ செய்வாயே (உசுக)

(இ. ள்.)

நொச்சியைக் கொண்டுவந்து கல்லுரலிலிட்டு வெந்நீர் விட்டிடித்தசாறு [2]1 நாழியெடுத்து இதனுடன் வேப்பெண்

---

[1]93 நெ. சுவடியில் உப்பையும் புளியையும் நீக்கவும் என்றிருக்கிறது.

[2]93 நெ. ல் $\frac{3}{4}$ படி என்றுள்ளது.

ணெயோ, நல்லெண்ணெயோ ஒரு நாழி கூட்டவும். திப்பிலி 1 உழக்கு, மிளகு 1 உழக்கு இவைகளை நொச்சிச் சாற்றினு லரைத்துச் சாறு கலந்த எண்ணெயுடன் குழப்பி, அடுப்பிலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும். இத்தைலத்தை மூன்று நாளைக்கொரு முறை தேய்த்து, மறுநாள் முழுகவும். இவ்வாறு 3 முறை செய்யவும். இதனுல் தலைக்குத்து, உச்சியிடி இவை தீரும்.

---

# 182. பித்தம், பயித்தியத்துக்கு மூழ்க யெண்ணெய்.

பொன்னுங்கா ணிகையாந் தகரையூடே
புவியின்வளர் தண்ணிவிட்டான் கிழங்குந்தானும்
நன்னுரி வேர்பேரா முட்டியோடே
நலமான சங்கிலையு முத்தக்காசும்
யின்னேழு வகையதற்குப் பலமொன்றேதா
னிதமாகச் சேர்த்திடித்துத் தூளதாக்கி
சொன்னேம்தூ ணித்தண்ணீர்விட்டுக்காய்ச்சி
சுகமாக வொருபடியாய் வடித்திடாயே (உஎ0)

வடியதுக்குச் சந்தனமு மகிலின் கட்டை
வாகாக வகைக்குப்பல மூன்றதாகும்
துடியுடனற் சீரகஞ்செங் கழுநீர்க் கோஷ்டஞ்
சொகுசான சாதிக்காய் கிராம்பு மாஞ்சில்
அடவுடைய நாகப்பூ தேவதாரம்
அதிமதுரம் வகைக்குப்பல மொன்றதாகும்
திடமுடைய வாய்விளங்கம் மரத்தின் மஞ்சள்
திப்பிலி விளாலரிசி மஞ்சள்தானே (உஎக)

மஞ்சள்கஸ் தூரிமஞ்சள் வகையாறுக்கும்
வகையொன்றுக் கொவ்வோர்வராக னிடைகூட்டி
யுஞ்சகல மருந்துமரைத் தேகலந்து
ஒளிவுடைய ரவியிலிரு நாளும்வைத்து

சஞ்சலமி லாமல்தை லப்பதத்தில்
தானிறக்கி வடித்துவந்த எண்ணெய்தன்னை
அஞ்சலெனச் சிவனைமன திற்றியானித்து
அன்பாக மூன்றுநாட் கொருகால் மூழ்கே (உஎஉ)

அன்புடனே மூழ்குதலை யினிலுந் தேய்த்து
அடவுடைய சருவாங்கந் தனிலுந் தேய்த்து
இன்பமுள்ள சீயக்காய் இட்டு மூழ்கு
இதற்குத்தீ ரும்வியாதி யதனைக்கேளு
துன்பமது செய் பித்த பயித்தியந் தீருஞ்
சொன்னமுறை தஞ்சையையாள் சரபதீரன்
அன்புமுல கோருக்கா யுணர்ந்த மார்க்க
மதைநளின மாகவும்நீ செய்துபாரே (உஎஙு)

(இ. ள்.)

| | |
|---|---|
| பொன்னுங்காணி | பேராமுட்டி |
| கையாந்தகரை | சங்கிலை |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | |
| நன்னாரிவேர் | கோரைக்கிழங்கு |

இச்சரக்குகள் வகைக்கு ஒரு பலமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, 4 மரக்கால் ஜலம் விட்டு ஒரு படியாகும்வரை வற்றக் காய்ச்சவும். இதை வடிக்கட்டி,

சந்தனம் — 3 பலம்
அகில் கட்டை — 3 பலம்

| | |
|---|---|
| சீரகம் | சடாமாஞ்சில் |
| செங்கழுநீர்க்கிழங்கு | சிறுநாகப்பூ |
| கோஷ்டம் | தேவதாரம் |
| சாதிக்காய் | அதிமதுரம் |
| கிராம்பு | |

இவைகள் வகைக்கு ஒரு பலம்

| | |
|---|---|
| வாயுவிடங்கம் | விழலரிசி |
| மரமஞ்சள் | மஞ்சள் |
| திப்பிலி | கஸ்தூரி மஞ்சள் |

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்து எல்லாவற்றையு மொன்றுகூட்டிக் கஷாயத்திலைரைத்து, *நல்லெண்ணெய் 2 படி கூட்டிச் சூரிய புடமாக 2 நாளைக்கு வைத்துப் பின்பு அடுப்பிலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். கடவுளை நினைத்து 3 நாளைக்கொரு தடவை இதனால் ஸ்நானஞ் செய்யவும். சர்வாங்கமும் தேய்த்து சீயக்காயிட்டுக் குளிக்கவும்.

இதனால் பித்ததோஷம் தீரும்.

---

## 183. தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க எண்ணெய்.

தலைப்புற்று கபாலகுஷ்டந் தீரவெண்ணெய்
தானென்று பிராயிலைவே லிப்பருத்தி
யிலைகொன்றை யிலையுஞ்சிற் றிலையின் பாலை
யிந்நாலு சாறுவகைக்குப் படியே கூட்டு
மலையாம லூமத்தங் காயுமஞ்சு
வளமான கோமூத்திர மதனைவிட்டு
நிலையாகத் துவைத்துச் சாறு பிழிந்துகொண்டு
நிசமாங்கோ டகசாலை வேம்பாடல்லே (உஎச)

ஏலானயிலை யிரண்டுபிடி கொணர்ந்து
இதமாக வரைத்துவேப் பெண்ணெய் நாழி
மேலான நல்லெண்ணெய் நாழிமஞ்சள்
மிளகுகெந் தகமூன்றுங் கால்பலந்தான்
மாலாக வரைத்து வெண்ணெ யிற்கலந்து
வடித்துத்தலை மூழ்கக்கபா லத்தின் புற்றுச்
சாலான வீக்கமுடன் கபால குஷ்டந்
தான்தீரு மானுவுணர் முறையதாமே (உஎரு)

*செய்யுளில் காணப்படாவிடினும் 93 நெ. சுவடியிலுள்ளது.

(இ. ள்.)

பிராயிலை
வேலிப்பருத்தியிலை
கொன்றையிலை
சிற்றிலைப்பாலை

இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி. ஊமத்தங்காய் 5 எடுத்துப் பசுவின் மூத்திரம் விட்டு நன்ருக அம்மியிலிட்டரைத்துச் சாறு பிழிந்துகொண்டு,

வேம்பாடம்பட்டை
கோடகசாலை

இவ்விரண்டு வகையும் வகைக்கு ஒரு பிடியெடுத்து அரைத்து

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 நாழி |
| வேப்பெண்ணெய் | 1 படியும் விட்டு |

கெந்தகம்
மிளகு
மஞ்சள்

இம்மூன்றையும் வகைக்கு $\frac{1}{4}$ பலமெடுத்து மேற்கூறிய ஏதேனுமொரு சாற்றிலரைத்து, எண்ணெயுடன் கலந்து யாவற்றையு மொன்று கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும்.

இதனுல் தலை முழுகிவரக் கபாலப்புற்று, வீக்கம், கபால குஷ்டம் இவைகள் தீரும்.

---

## 184. தலைப்புற்று, கபால குஷ்டத்துக்கு மூழ்கத் தைலம்.

ஆரைகையாந் தகரைதூ தளேயெருக்கு
அவுரிமுடக் கொத்தான்சங் கிலையும்வேம்பும்

பாரிலுரை புளிசிற்ரு மணக்குநல்ல
    பசுமஞ்சள் தாழைவிழு திதுவீராறுங்
கூறுபழங் காடியைவிட் டிடித்த சாறு
    குணமாக நாஞழி யெண்ணெய் நாழி
சேருகிரு மிசத்துரு மஞ்சளோடே
    செடியான சுழலாவரை யின்வேர்தானே (உஎசு)

தாங்கு கடுக்காய் கார்போகரிசி நாவிற்
    றப்பாம லோர்பல மெள்ளெண்ணெய் நாழி
பாங்குடனே கலந்து எரித்துத் தைலமான
    பதத்திறக்கி மூன்றுநாட் கொருக்கால் மூழ்கு
ஓங்கு கபாலகுஷ்டந் தலையின் புற்று
    உடனேடுஞ் சிவகிருபை யதினுற் செங்கோல்
தாங்கி யுலகாளு சரபோசி ராசன்
    றன்னுள்ளம் நிச்சயித்த முறையதாமே (உஎஎ)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆரை | சங்கனிலை |
| கையாந்தகரை | வேம்பிலை |
| தூதுவேளை | புளியிலை |
| எருக்கு | சிற்ருமணக்கிலை |
| அவுரி | பசுமஞ்சள் |
| முடக்கொற்ருன் | தாழை விழுது |

இவைகளைக் கல்லுரலிலிட்டுப் பழங்காடி விட்டு, நன்ருக இடித்துப் பிழிந்த சாறு 4 நாழி

| | |
|---|---|
| நல்லெண்ணெய் 1 நாழி | |
| கிருமிசத்ரு (வாயுவிடங்கம்) | கடுக்காய்த்தோல் |
| மஞ்சள் | கார்போகவரிசி |
| சுழலாவாரைவேர் | |

இவைகளை வகைக்கு ஒரு பலமெடுத்துச் சாறு விட்டரைத்து நல்லெண்ணெய் ஒருநாழியும் விட்டு எல்லாவற்றையு மொன்று கலந்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இதை 3 நாளைக் கொருதடவைத் தலையில் தேய்த்து முழுகிவரக் கபால குஷ்டம், தலைப்புற்று, இவை தீரும்.

---

## 185. தலைப்புற்றுக் கபால குஷ்டத்திற்கு முழ்க எண்ணெய்.

வேப்பிலை தூதுளை யவுரியிலையுங்கூட
வேலியின் பருத்தியிலை பசுமஞ்சள்தான்
வாய்ப்பு திருகுகள்ளி வேராறுஞ் சீராய்
வகைசரியா யிடித்தசா றும்நாழி
தாப்பிரிய எள்ளெண்ணெய் நாழிவிட்டுத்
தப்பாம லேகார்த்தி கைக்கிழங்கு
மேப்பலமொன் றரைத்ததனிற் கரைத்துநன்றாய்
விட்டடுப்பி லேத்தியதை யெரித்திடாயே (உஎஅ)

எரித்துபதங் கண்டிறக்கி வடித்துக்கொண்டு
இயல்பாக மூன்றுநாட் கொருக்கால் மூழ்கு
அரிக்குமந்தத் தலைப்புத்து கபாலக்குஷ்ட
மதுதீருந் தப்பாமல் அருந்தவத்தோர்
உரைத்தமுறை யதைநெடுநா ளாகத்தானே
யுணர்ந்துணர்ந்து சரபேந்திர னுளமறிந்து
திரைக்கடல்சூழ் உலகோருக் குபகாரம்மாய்
செப்புமிந்த முறையதனைச் செய்துபாரே (உஎகூ)

(இ. ள்.)

| | |
|---|---|
| வேப்பிலை | வேலிப்பருத்தியிலை |
| தூதுவேளையிலை | பசுமஞ்சள் |
| அவுரியிலை | திருகுகள்ளிவேர் |

இவைகள் சமனெடுத்திடித்த சாறு — 4 நாழி
சுத்தமான நல்லெண்ணெய் — 1 நாழி விட்டு,

கார்த்திகைக் கிழங்கு (கலப்பைக்கிழங்கு) $1\frac{1}{2}$ பலமெடுத்து நன்றாக வரைத்து, சாறு கூட்டிய எண்ணெயுடனே குழப்பி

அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பதத்திலிறக்கவும். இதனை மூன்று நாளைக்கொரு தடவை தலையில் தேய்த்து முழுகிவரக் கபால குஷ்டம், தலைப்புற்று இவை தீரும்.

---

# 186. தலைத்தினவுக்குக், கபால குஷ்டத்திற்கு மூழ்க யெண்ணெய்.

ஊமத்தை யிலைச்சாறு நாழிக்குத்தான்
ஒக்கயெண்ணெய் நாழிகார் போகிப் பட்டை
யாமத்தின் விரைதகரை வேரின் பட்டை
யதின் விரையுஞ் சடைச்சிவேர்ப் பட்டை வித்தும்
பூமிக்கே வளருநில வாகைப் பட்டை
பூதியவித் தும்பட்டை நால்வித்து நாலும்
நாமத்தை யுண்மையுடன் சொல்லக்கேளு
நன்ருக வகைக்குக்கா சிடையும்ரெண்டே (உ அ0)

இரதமரி தாரம்துரி சுமிம்மூன்று
மேவகைக்கு வராகனிடை யொன்றதாகும்
அரைநீவெள் ளாட்டுப்பால் தன்னைவிட்டு
அடுப்பேத்திப் பதத்தில்வடித் தந்த எண்ணெய்
சிரமதனில் விட்டுமுழு கிதற்குச் சென்னித்
தினவுகபா லக்குஷ்டந் தீரும்பாரு
தரணியெலா மளந்தநெடு மாலாமெங்கள்
சரபேந்திர னிர்ணயித்த எண்ணெயாமே (உ அக)

(இ. ள்.)

| | | |
|---|---|---|
| ஊமத்தையிலைச்சாறு | — | 1 நாழி |
| நல்லெண்ணெய் | — | 1 நாழி |

| | |
|---|---|
| கார்போகிப் பட்டை | தகரை விதை |
| கார்போகரிசி | சடைச்சிவேர்ப் பட்டை |
| தகரைவேர்ப் பட்டை | சடைச்சி விதை |

நிலவாகைப் பட்டை
நிலவாகை விதை

இவைகளை வகைக்கு 2 காசெடை யெடுத்துக் கொள்ளவும்.

பாதரஸம்
தாளகம்
துரிசு

இவை வகைக்கு *ஒரு வராகனெடை.

இச்சரக்குகளனைத்தையும் வெள்ளாட்டுப் பால் விட்டு நன்ருக வரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இதனுல் தலை முழுகிவரக் கபால குஷ்டந் தீரும். கைகண்டது.

---

# 187. தலைவலிக், கழுத்திசிவு, கண்ணெரிவுக்கு மூழ்க எண்ணெய்.

மூக்கூட்டு எண்ணெயா மணக்கெள்வேம்பு
மூன்றெண்ணெ யுஞ்சரியா யொவ்வோர் சேரு
மொக்கபொன்னுங் கண்ணிசிறுக் கீரைரெண்டு
மொவ்வொருசே ரோமஞ்சீ ரகமுசுமு
சுக்கைவே ராதண்டைப் பட்டை பூண்டு
சொல்லவங்கப் பட்டையுடன் சங்கப்பட்டை
தக்கவசம் புக்கரியும் வேப்பம்பட்டை
சதிரான கரிப்பானும் வகைகள் பத்தே (உஅஉ)

பத்துவகை யொன்றுக்கு வராகன் மூன்று
பதமாக வரைத்தெண்ணெய் தனிற்கலந்து

*93 நெ. சுவடியில் காசெடை என்று காணப்படுகிறது.

சத்துவமாய் வேடுகட்டி ரவியில்வைத்துத்
தானெரித்துமூழ்குசீ யக்காய்காய்ச்சி
சத்துதலை வலிகழுத்தி னிசிவுகண்ணிற்
ரேராத யெரிவுவொருத் தலைநோய்தீரும்
இத்தரணி தனிற்கடவுள் கிருபைபெற்ற
இறைவன் சரபேந்திரனுணர் எண்ணெயாமே

(உ௮௫)

(இ. ள்.)

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய்<br>வேப்பெண்ணெய்<br>நல்லெண்ணெய் | } | இவை வகைக்கு ஒரு சேர் |
| பொன்னங்காணிச்சாறு<br>சிறுகீரைச் சாறு | } | வகைக்கு ஒரு சேர் |

| | |
|---|---|
| ஓமம் | லவங்கப்பட்டை |
| சீரகம் | சங்கம்பட்டை |
| முசுமுசுக்கை | வசம்பு சுட்டகரி |
| ஆதண்டைப்பட்டை | வேப்பம்பட்டை |
| பூண்டு | கையாந்தகரை |

இச்சரக்குகள் வகைக்கு 3 வராகனெடை யெடுத்துச் சாறு விட்டரைத்து, சாறு கலந்த எண்ணெயுடன் குழப்பி வேடு கட்டி 3 நாளைக்குச் சூரிய புடம் வைத்துப் பின்பு, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இதனால் தலை முழுகி வரவும். சீயக் காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

தலைவலி, கழுத்தினிசிவு, கண்ணெரிச்சல், தலை நோய் முதலியவை தீரும்.

---

## 188. ஒருத்தலை நோய்க்கு மூழ்க எண்ணெய்.

ஏலமில வங்கமுடன் செண்பகப்பூவு
மிசைவான வதிமதுரம் அவுரிவேருங்

கோலமிக வலம்புரிக்காய் மிளகு பூண்டு
குணமான வெளிச்சைப்பிசின் ஒன்பதுந்தான்
சாலச்சரி யாய்க்கூட்டி நறுக்கியெண்ணெய்
தனிற்கலந்து எரித்துவைத்துக் கொண்டுநீயும்
ஓலமிடு வொருத்தலைநோய் தனக்குமூழ்கு
உடனேயந்த வலிபிடரி யிசிவும் போமே (உ அச)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஏலக்காய் | வலம்புரிக்காய் |
| கிராம்பு | மிளகு |
| செண்பகப்பூ | பூண்டு |
| அதிமதுரம் | வெளிச்சைப்பிசின் |
| அவுரிவேர் | |

இவைகளைச் சமனிடை (1 வராகனெடை) எடுத்து நசுக்கி நல்லெண்ணெயி (1 சேர்) லிட்டுக் காய்ச்சி வடிக்கவும். தலை முழுகிவர, ஒருத்தலைவலி தீரும். பிடரி இசிவுந் தீரும்.

---

# 189. ஒருத்தலைவலிக்கு மூழ்க யெண்ணெய்.

பேய்க்கொமட்டி வேருடன்பே யத்திவேரும்
பிசகாம லிரண்டுஞ்சரி யாகக்கூட்டி
தாக்குநல் லெண்ணெதனிற் குழப்பிக் காய்ச்சித்
தானெடுத்துத் தேய்த்துமுழு குவெந்நீரில்
வாக்குபிச காமல்கைப்புப் புளிப்புதள்ளு
வாராது வொருத்தலையின் வலியுந்தானும்
ஆக்கினைசக் கரஞ்செலுத்துஞ் சரபபூபன்
அனுமதியிம் முறையதனைச் செய்துபாரே (உஅரு)

(இ. ள்.)

பேயத்திவேர்
பேய்க்கும்மட்டிவேர்

இவ்விரண்டையுஞ் சமமெடுத்து நசுக்கிச் சுத்தமான நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப், பதமாக எரித்து வடிக்கவும். இதைத் தலையில் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

**பத்தியம்:**

கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

ஒருத்தலை வலிதீரும்.

---

## 190. ஒருத்தலைவலிக்கு நசியம்.

எருக்கமரப் பழுப்புமூன் றெடுத்துக்கொண்டு
இதிலாறு மிளகுவைத்துச் சுருட்டிநன்ருய்த்
துருத்துவுமிக் காந்தல்தனில் வெதும்புமட்டுஞ்
சொருகியெடுத் தேநறுக்கி யந்தச்சாறும்
ஒருத்தலையின் வலிப்பக்கம் விட்டுமற்ற
வொருபக்கம் நசியஞ்செய் மூன்றுதுள்ளி
வருத்தவலி போமந்தி சந்தியுஞ்செய்
வள்ளல்சர பேந்திரனுணர் நசியந்தானே (உ-அசுா)

(இ. ள்.)

எருக்கம் பழுப்பு மூன்றெடுத்துக்கொண்டு, மிளகு 6 (எண்ணிக்கையில்) வைத்துச் சுருட்டி உமிக்காந்தலில் வேகும்படி செய்து எடுத்து நசுக்கிச் சாறுபிழிந்து, அதை, எந்தப் புறத்தில் ஒருத்தலை வலியுண்டோ அதற்கெதிர்ப்புறத்து நாசியில் நசியஞ் செய்யவும். தினமிருவேளை காலையிலும் மாலையிலும் 3 துளிகள் யிடவும். வலிகள் தீரும்.

# 191. ஒருத்தலைவலி, இருத்தலை வலிக்கு நசியம்.

சுக்குத்தேர் சீந்திலிலை சரிநறுக்கிச்
சொகுசுடனே யந்திசந்தி மூன்றுதுள்ளி
பக்குவமாய் நசியஞ்செய் யொருபுறத்துப்
பருத்தவலி யாகில்மறு பக்கத்தேசெய்
தக்கவிரு புறமாகி யிரண்டுபக்கந்
தானசியஞ் செய்தலையின் நோவுந்தீரும்
இக்குவல யத்தினில்வாழ் சரபதீர
னிதமாக வுணர்ந்தமுறை யறிந்துபாரே (உஅஎ)

(இ. ள்.)

சுக்குத் துண்டைச் சீந்திலிலையுடன் நசுக்கியெடுத்த ஸ்வரஸத்தைத் தினம் மூன்று துளிகள் வீதம் காலையும் மாலையும் நஸ்யஞ் செய்துவரவும். வலதுபுறத் தலைவலியினால் இடது புறத்திலும் இடதுபுறமானால் வலது புறத்திலும் நஸ்யமிடுக. தலை நோய் தீரும். இருபுறத்துத் தலைவலியாகில் இரு நாசிகளிலும் நஸ்யஞ் செய்யவும்.

---

# 192. தலைவலிக்கு நசியம்.

தாவுதலை வலியதற்கு நசியமொன்று
சாற்றக்கேள் தினவதுவுந் தப்பாமற்றான்
கோவையிலைச் சாறுதன்னை (மா) யாறுபாகங்
கொண்டு(பி) விழி யிரண்டுபக்கம் வலியதானால்
ஆவலுட னிரண்டுபக்கம் பிழியதுக்கு
அணுகாது தலைநோயென் பதுகளெல்லாம்
காவலனாஞ் சரபோசி மகாராசன்றான்
கருத்துணர்ந்த வைத்தியமது கண்டுபாரே (உஅஅ)

(இ. ள்.)

கோவையிலைச் சாற்றை வலியிருக்கும் பக்கத்திற்கு மறு

பக்கமாக நஸ்யமிட ஒருத்தலைவலி தீரும். இரு புறமும் வலித்தால் இரு நாசிகளிலும் நஸ்யமிடவும்.

---

## 193. ஒருத்தலைவலிக்கு நசியம்.

செகத்தில்மனுக் கொருத்தலையின் வலிக்குநசியஞ்
செய்யவகை கேளுசித மாகவுந்தான்
அகத்தியிலைப் பழுப்புச்சாறு மாறுபாக
மாகப்பிழி மூன்றுதுள்ளி யந்திசந்தி
யகத்துமொருத் தலைவலியுந் தப்பாமற்றான்
அன்பான நசியஞ்செய் யுசிதமாக
இகத்தில்சிவ கிருபையினாற் செங்கோல்நீதி
யேநடத்துஞ் சரபேந்திர னருளிதாமே (உ௯௩)

(இ. ள்.)

அகத்திப் பழுப்பை யிடித்துச் சாறு பிழிந்து எந்தப் பக்கம் தலைவலியோ அந்தப் பக்கத்திற்கு மறு பக்கத்து நாசியில் 3 துளிகள் வீதம் நஸ்யமிடவும். தினம் இருவேளை காலை மாலை செய்யவும்.

---

## 194. ஒருத்தலை வலிக்குப் புகை.

எருக்கங்கோல் காய்ந்தகுழ லனல்கொளுத்தி
யேயந்தப் புகையதனை நாசியிற்கொ
ளொருத்தலையின் வலியதற்கு அந்திசந்தி
யும்புகைகொள் வலிநிற்கும் பிசகாமற்றான்
வருக்கமுள்ள கதலிபலா மாவின்றேறல்
வழிந்தோடிச் செந்நெல்வளர் தஞ்சையாளுந்
திருக்கள்வளர் மார்பன்சர போசிராசன்
சிந்தையுணர்ந் திந்தமுறை செய்துபாரே (உ௯௪)

(இ. ள்.)

எருக்கங் குழாயினெரு புறத்தை நெருப்பில் கொளுத்த மற்ற புறத்திலிருந்து புகை கிளம்பும். தினம் காலை மாலை அதை நாசியி லிழுக்க வலி நிற்கும்.

---

## 195 தலைவலிக்குப் புகை.

கருஞ்சீரகம் மிளகுடன் சாம்பிராணி
கஸ்தூரி மஞ்சளு மொட்டடையில் வைத்துந்
திருந்துமம்மி தனிலிட்டுத் தூளதாக்கிச்
சேலையொரு சாணீள மகலஞ்சாணில்
மருந்ததையும் வைத்துத்திரி யாய்ச்சுருட்டி
வன்னியிற் கொளுத்திப்புகை மூக்கிற்கொள்ளு
அருந்தவத்தோர் சொன்னமுறை வலியும் நிற்கும்
அன்பான விபுவுணர்ந்த புகையதாமே (உகூக)

(இ. ள்.)

கருஞ்சீரகம்
மிளகு
சாம்பிராணி
கஸ்தூரி மஞ்சள்
ஒட்டடை

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துத் தூள் செய்து, ஒரு சாண் நீளம் ஒரு சாண் அகலம் உள்ள ஒரு வெள்ளைத் துணியில் ஒரே சீராகத்தூவிச் சுருட்டி நூலைக் கொண்டு கட்டி நெருப்பில் கொளுத்திப் புகையை மூக்கில் கொள்ள ஒருத் தலைவலி நிற்கும்.

---

# 196. தலைவலிக்கெல்லாம் மூழ்க எண்ணெய்.

ஆதண்டைச் சாறுசேரொன்றுப் பால்சேரொன்
றுப்பாலும் நல்லெண்ணெய் சேர்தானென்று
சாதகமா மிளகுமுக்காற் பலமதாகுந்
தப்பாம லெலிப்புழுக்கை வராகனென்ப
தோதிவைகள் பொடித்துக்கலந் தடுப்பில் வைத்துத்
துரிதமுடன் எடுத்துமெழு குப்பதத்தில்
நீதமுட னிறக்கிவடித் தேயெடுத்து
நேராகச் செய்யும்வகை தன்னைக்கேளே (உகூஉ)

தன்னைக்கேள் மூன்றுநாட் கொருக்கால்மூழ்கு
தானேபதி னேருமுழுக்குத் தைலந்தேய்த்து
நன்னயப்பச் சைப்பயறு லிளவென்னீரில்
நன்றாக மூழ்கிதற்கு இச்சாபத்தியஞ்
சொன்னபடி தவறாமற் செய்துபாரு
துடராது தலைவலிகள் தீருந்தஞ்சை
மன்னர்சர போசிமகா ராசனிந்த
வகைப்படியே நிர்ணயித்த முறையதாமே (உகூங)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆதண்டைச் சாறு | 1 சேர் |
| பசுவின் பால் | 1 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

இவைகளை ஒன்று கூட்டி,

| | |
|---|---|
| மிளகு | $\frac{3}{4}$ பலம் |
| எலிப்புழுக்கை | 9 வராகனெடை |

இவைகளைப் பொடித்துச் சாறு கூட்டிய எண்ணெயில் போட்டு, அடுப்பின்மேல் வைத்து, எரித்து மெழுகு பதத்திலிறக்கவும். இத்தைலத்தை 3 நாளைக்கொரு தடவை வீதம் தலையில் தேய்த்து, பச்சைப்பயற்றினுல் வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். தலைவலிகள் தீரும்.

இச்சாபத்தியமாயிருக்கவும்.

---

## 197. தலைவலிக்கு மூழ்கத் தைலம்.

வெதுப்படக்கி யாதண்டை திராயும் நொச்சில்
மிகுமணத்தக் காளியிலை யைந்துசாற்றில்
பதத்தினிற்ரு னேயிடித்து வகைக்குச்சேர்கால்
பண்பான பழச்சாறு சேருங்காலே
யிதத்துடனே நல்லெண்ணெ யொருசேர் கூட்டு
யெழிலான வெள்ளுள்ளி வசம்பரத்தை
சதகுப்பை யிந்நாலு வகைக்குத்தானுந்
தப்பாம லிரண்டுவரா கனிடை சேரே (உகஙச)

சேரரைத்து விழுதாக்கிக் கலந்துகொண்டு
தீயதுவு மிட்டெரித்துப் பதமதாக
நீரதுக்குச் சுண்டுபதம் பார்த்திறக்கி
நீதலையிற் றேய்த்துதிரி நாளுமெண்ணெய்
சாரவிருந் தேநாலா நாளில்வெந்நீர்
தான்வார்த்து முழுகுதலை வலியும்நிற்கும்
பாரிதையும் நன்ருகத் தக்கோராய்ந்த
பலனென்றும் பொய்யாது செய்துபாரே (உகஙரு)

(இ. ள்.)

| | |
|---|---|
| வெதுப்படக்கியிலை | நொச்சில் இலை |
| ஆதண்டையிலை | மணத்தக்காளியிலை |
| திராயிலை | |

இவ்வகைகளை யிடித்துப் பிழிந்தசாறு வகைக்குச் சேர்கால்

எலுமிச்சம்பழச்சாறு $\frac{1}{4}$ சேர்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 சேர் இவைகளுடன் |
| பூண்டு | சிற்றரத்தை |
| வசம்பு | சதகுப்பை |

# 196. தலைவலிக்கெல்லாம் முழ்க எண்ணெய்.

ஆதண்டைச் சாறுசேரொன் ருப்பால்சேரொன்
ருப்பாலும் நல்லெண்ணெய் சேர்தானென்று
சாதகமா மிளகுமுக்கால் பலமதாகுந்
தப்பாம லெலிப்புழுக்கை வராகனென்ப
தோதிதுக்கள் பொடித்துக்கலந் தடுப்பில்வைத்துத்
துரிதமுட னெடுத்துமெழுகு பதத்தில்
நீதமுட னிறக்கிவடித் தேயெடுத்து
நேராகச் செய்யும்வகை தன்னைக்கேளே (உ௬௬)

தன்னைக்கேள் மூன்றுநாட் கொருகால் மூழ்கு
தானேபதி னேருமுழுக்குத் தைலந்தேய்த்து
நன்னயப்பச் சைப்பயரு விளவெந்நீரில்
நன்ருக மூழ்கிதற்கு இச்சாபத்தியஞ்
சொன்னபடி தவருமற் செய்துபாரு
துடராது தலைவலிகள் தீருந்தஞ்சை
மன்னர்சர போசிமகா ராசனிந்த
வகைப்படியே நிர்ணயித்த முறையதாமே (உ௬௭)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆதண்டைச்சாறு | — 1 சேர் |
| பசுவின் பால் | — 1 சேர் |
| நல்லெண்ணெய் | — 1 சேர் |

இவைகளை யொன்று கூட்டி,

| | |
|---|---|
| மிளகு | $\frac{3}{4}$ பலம் |
| எலிப்புழுக்கை | 9 வராகனெடை |

இவைகளைப் பொடித்துச் சாறு கூட்டிய எண்ணெயில் போட்டு, அடுப்பின்மேல் வைத்து, எரித்து மெழுகு பதத்தி லிறக்கவும். இத்தைலத்தை 3 நாளைக்கொரு தடவை தலையில் தேய்த்து, பச்சைப் பயறினல் கழுவி இளஞ்சூடான வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும்.

*இம்மருந்து முறைகள் பக்கம் 183, 184 ல் காணப்படுபவைகள் தான். தவறுதலாக மறுபடியும் அச்சடிக்கப்பட்டுளது.

இச்சாபத்தியமாயிருக்கவும். எல்லா வகைத் தலைவலியும் தீரும்.

---

## 197. தலைவலிக்கு முழ்கத் தைலம்.

வெதுப்படக்கி ஆதண்டை திராயும் நொச்சில்
மிகுமணத்தக் காளியிலை யைந்துசாற்றில்
பதத்தினிற்று னேயிடித்து வகைக்குச் சேர்கால்
பண்பான பழச்சாறு சேருங்காலே
யிதத்துடனே நல்லெண்ணெ யொருசேர் கூட்டு
எழிலான வெள்ளுள்ளி வசம்பரத்தை
சதகுப்பை யிந்நாலு வகைக்குத் தானுந்
தப்பாம லிரண்டுவரா கனெடைசேரே (உகஅ)

சேரரைத்து விழுதாக்கிக் கலந்துகொண்டு
தீயதுவு மிட்டெரித்துப் பதமதாக
நீரதற்குச் சுண்டுபதம் பார்த்திறக்கி
நீதலையிற் றேய்த்துதிரி நாளுமெண்ணெய்
சாரயிருந் தேநாலா நாளில்வெந்நீர்
தான்வார்த்து முழுகுதலை வலியும் நிற்கும்
பாரிதையும் நன்றாகத் தக்கோராய்ந்த
பலனென்றும் பொய்யாது செய்துபாரே (உகக)

(இ. ள்.)

| | |
|---|---|
| வெதுப்படக்கியிலை | நொச்சியிலை |
| ஆதண்டையிலை | மணத்தக்காளியிலை |
| திராயிலை | |

இவ்வகைகளை யிடித்துப் பிழிந்தசாறு வகைக்கு சேர் கால்

| | |
|---|---|
| எலுமிச்சம்பழச் சாறு | $\frac{1}{4}$ சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர், இவைகளுடன் |

பூண்டு
வசம்பு
சிற்றரத்தை
சதகுப்பை

இவைகள் வகைக்கு 2 வராகனெடை யெடுத்து மேற்கூறிய ஏதேனுமொரு சாறு விட்டரைத்து, விழுதாக்கிச் சாறு கூட்டிய எண்ணெயுடன் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து இறக்கவும். தினமும் தலையில் நன்ருகச் சோரும்படி தைலத்தைத் தேய்த்து நாலாவது நாளன்று வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். தலைவலி நிற்கும்.

---

# 198. மண்டை வியாதிக்கெல்லாம் மூழ்க எண்ணெய்.

கையாந்த கரைச்சாறு நாழியாப்பால்
கண்டிப்பா யிருநாழி வேப்பிலைச்சாறு
மெய்யாக இருநாழி யதனைக்கூட்டு
விரும்புசந் தனப்பொடியும் நாழிசேரு
ஒய்யார எண்ணெய் நாஞழிதன்னி
லொக்கவுஞ்சாறு விட்டெரித்துப் பதத்திறக்கிக்
கையாலே தேய்நாலு நாட்கொருக்கால்
கனத்தவெண்ணெய் தேய்த்திருந்து மற்ருநாளே

(கூ)

மத்தாஞள் சீயக்காய் தேய்த்து வெந்நீர்
வார்த்துமுழு கிப்படியு மாறுமாதம்
உத்தேசப் படிக்கிநீ மூழ்குகைப்பு
முற்றப்பு ளிப்பைத்தவிர் பெண்ணின்பக்கஞ்
சத்தாகி லும்மனது வைத்திடாதே
தலையிலுண்டாம் வியாதியெல்லாந் தீருமிந்த
விஸ்தார மானவுல கதற்காய்த் தஞ்சை
விபுவுணர்ந்த முறையதனை நயமாய்ச்செய்யே (கூக)

(இ. ள்.)

| | |
|---|---|
| கையாந்தகரைச்சாறு | —1 நாழி |
| பசுவின் பால் | —2 நாழி |
| வேப்பிலைச்சாறு | —2 நாழி |

இவைகளைக் கூட்டி

| | |
|---|---|
| சந்தனப்பொடி | 1 நாழியும் சேர்த்து |
| நல்லெண்ணெய் | 4 நாழியும் கூட்டி. |

யாவற்றையு மொன்றுகலந்து, அடுப்பிலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். நான்கு நாளைக் கொருதடவை யித்தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டு நன்ருக ஊறியபின் மறு நாளைக்குச் சீயக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். இம்மாதிரி 6 மாதஞ் செய்யவும்.

**பத்தியம் :**

கைப்பு, புளிப்பு, ஸ்திரீபோகம் இவைகளை நீக்கவும். தலையிலுண்டாகும் வியாதிகள் எல்லாம் தீரும்.

---

# 199. தலைப்பொடுகிற்குத் திரிபலை எண்ணெய்

தலைப்பொடுக தனுக்குத்திரி பலையினெண்ணெய்
தானுரைக்கக் கேள்கடுக்காய் தான்றிக்காயும்
வலுத்தவரப் பொடியுமா காளிக்கிழங்கு
வல்லநெல்லிக் காயுமிந்துப் புடனேமாஞ்சில்
நிலத்துகையாந் தகரையெட்டு வகைவராக
னெடைரெண்டு வீதம்நீர் விட்டரைத்து
மலைப்பில்லா நல்லெண்ணெய் சேர்தாஞென்று
வளமான சுத்தஜலஞ் சேரும்நாலே (௯௱௨)

சேருமுன்சொல் விழுதையெண்ணெய் தனிற்கரைத்துத்
தீயிட்டுக் காய்ச்சிப்பதத் திறக்கிக் கொண்டு

சீரணிந்த கடவுளரை மனதன்போடே
 தியானித்து மூன்றுநாட் கொருக்கால் மூழ்கு
பாருதலைப் பொடுகென்ப தூர்விட்டோடும்
 பாவலர்சொற் றிறமறிந்து பண்பாம் வெற்றித்
தாரணியும் வள்ளல்சர போசிராசன்
 றுனுணர்ந்த எண்ணெயும்நீ யுணர்ந்துபாரே (௩௱௩)

(இ. ள்.)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | மாகாளிக்கிழங்கு |
| நெல்லிக்காய்த்தோல் | இந்துப்பு |
| தான்றிக்காய்த்தோல் | சடாமாஞ்சில் |
| அரப்பொடி | கையாந்தகரை |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்து, அதனுடன் நல்லெண்ணெய் 1 சேரும் விட்டு, சுத்த ஜலம் 4 சேரும் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி யெரித்துப் பக்குவமாக வடிக்கவும். இதை 3 நாளைக்கொரு தடவை தலைமுழுகிவரத் தலைப்பொடுகு தீரும்.

---

## 200. கபாலச்சூலை, மார்பில் புண், ஈளை, இருமலுக்குப் புகை.

இரதத்தைக் குப்பைமேனிச் சாறதனைவிட்
 டேமுறித்து மனோசிலையுங் கெந்தகத்தோ
டரிதாரம் நாலுஞ்சரி யாகக்கொண்டு
 அரைத்துச்சீ லையிலூட்டி நிழலுலர்த்தித்
திரியாக நாலாறு யெட்டுபத்து
 செய்துகொண் டேமோருஞ் சோறுமுண்டு
அரிதான திரிகொண்டு அந்திசந்தி
 அன்பாகப் புகையதையுமுள் ளேயுண்ணே (௩௱௪)

உண்ணுகொருக் கைக்குழாய் துவாரந்தன்னி
லோர்நாலஞ் சாறுநா ளந்திசந்தி
யுண்ணுவுப்புப் புளிப்புகைப்பு தள்ளித்தானே
யுறுத்துக்கபா லச்சூலை மார்பிலுள்ள
புண்ணுறுமீ ளையிரும லும்போமிந்தப்
புதுமையதை நீதியுடன் றஞ்சையாளும்
அண்ணல்சர போசிரா சாதிராசன்
அனுமதியாமன நினைவாய்ச் செய்துபாரே (௩௱௫)

(இ. ள்)

சுத்தி செய்த பாதரசத்தைக் (1 வராகனெடை) கல்வத்தி லிட்டுக் குப்பைமேனிச்சாறு விட்டரைத்து அவைகளுடன் மனோசிலை, கெந்தகம், அரிதாரம், இவைகளையும் சுத்தி செய்து வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துப் பாதரஸ விழுதுடன் கூட்டி நன்றாக அரைத்துக்கொள்ளவும். இதை 1 சாண் நீள அகல முள்ள வெள்ளைத்துணியில் ஒரே சீராகத் தடவி நிழலிலுலர்த்தி 4 அல்லது 6 அல்லது 8 அல்லது 10 திரிகளாகத் திரித்துக் கொள்ளவும். பிணியாளன் மோர் சாதம் சாப்பிட்டு, பின், தினமும் காலையிலும் மாலையிலும் அத்திரியைக் கொளுத்தி அதனின்றெழும்புமப்புகையையொரு கொருக்காத் தட்டையின் துவாரம் மூலம் வரும்படியாகச் செய்து வாயினுலுறுஞ்சவும்.

**பத்தியம்:**

உப்பு, புளிப்பு, கைப்புச் சுவைகளைத் தள்ளவும்.

**தீரும் நோய்கள்:**

கபாலசூலை, மார்புப் புண், ஈளை, இருமல் முதலியவை.

---

## 201. கபால வாயுக்குப் புகை.

சட்டியிலே பெருங்காய மதனைப்போட்டுச்
சார்ந்தநல் லெண்ணெய்விட் டடுப்பிலேற்றித்

திட்டமாய்த் தீயிட்டு எரித்தாயானல்
　　தீச்சூடு பட்டுப்புகை யெழும்புமந்த
மட்டிலந்தப் புகையதனைப் பிடிமுகத்தில்
　　வாய்மூக்கு வழியாகப் புகையைக்கொள்ளு
விட்டிடுமே கபாலத்தின் வாயுவெல்லாம்
　　விபுவுணர்ந்த முறையிதுவாம் விரும்பிச்செய்யே

(௩௱௬)

(இ. ள்.)

ஒரு (இருப்பு) ச்சட்டியில் ஒரு துண்டு பெருங்காயத்தைப் போட்டு நல்லெண்ணெய் விட்டு அடுப்பின் மேலேற்றிச் சுமாராக நெருப்பிட்டு எரித்தால் அதிலிருந்து புகை எழும்பும். அப்புகையை மூக்கினாலும், வாயாலும் உட்கொள்ளவும். கபால வாயு நீங்கும்.

---

## 202. சிரோபாரம், சிரசு வலிக்கு மருந்து.

சிரப்பாரஞ் சிரசுவலி கண்டபேர்கள்
　　சிணத்திலுள்ளி வேளையிலை யுங்கொணர்ந்து
அரைத்துவெள்ளைச் சல்லாவி லூட்டிநீயு
　　மதைநிழலு லர்த்தியெடுத் ததைக்கிழித்துத்
திரித்துத்தீக் கொளுத்திப்புகை நாசியிற்கொள்
　　தினமந்தி சந்தியுமே தப்பாமற்ருன்
வருத்துதலை வலியென்ப துடனேதீரும்
　　வண்மையுட னுண்மையதாய்ச் செய்துபாரே (௩௱௭)

(இ. ள்.)

வெள்ளைப் பூண்டையும் வேளையிலையையும் கொண்டு வந்து கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து, ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத்துணியில் ஊட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இதை வேண்டும்போது கிழித்துத் திரி செய்து கொளுத்தி

அதிலிருந்து எழும் புகையை மூக்கினுலும் வாயினுலும் உட்கொள்ளவும். கபாலவாயு தீரும். தினம் 2 வேளை காலையிலும் மாலையிலுமுட்கொள்ளவும். தலைவலி தீரும்.

## 203. ஒருத்தலைவலிக்குப் புகை.

பெருங்காயங் கடுகுசீர கமூன்றுந்தான்
பிசகாமற் சரிகூட்டி யெலுமிச்சங்காய்
வருஞ்சாற்றில் நன்ருக வரைத்துச்சேலை
வட்டமதி லூட்டிநிழ லுலர்த்திவைத்துத்
திருந்தவே திரிசுருட்டி யுசிதமான
திரிகொளுத்திப் புகையைநா சியிலேகொள்ளு
வருந்தாம லொருத்தலையின் வலியுந்தீரு
மன்னன்சர பேந்திரனுணர் புகையதாமே (௩௱அ)

(இ. ள்.)

பெருங்காயம்
கடுகு
சீரகம்

இம்மூன்றையுஞ் சரியெடை யெடுத்து எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து, ஒரு வெள்ளைத்துணியில் ஒரே சீராகத் தடவி நிழலிலுலர்த்தவும். இதைத் திரியாகத் திரித்துக் கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையை மூக்கினுல் உறுஞ்சவும். ஒருத்தலைவலி தீரும்.

## 204. ஒருத்தலைவலிக்கு மருந்து.

ஒருத்தலையின் வலியதற்கு மருந்துவொன்று
ஓதக்கேள் தினவுடனே வுண்மையாக

திருத்து கீழாநெல்லி வேர்க்குத் தூபதீப
மதுகொடுத்து வேர்பிடுங்கிவந்து
கருத்தனேயே நம்பியந்த வேரைத்தானே
காதினிலேகட்டத் தலைவலிகள் தீருந்
திருத்துழாய் மார்பன்சர போசிராசன்
சிந்தையுணர்ந் திந்தமுறை செய்துபாரே (உ௱சு)

(இ.ள்.)

கீழாநெல்லிச் செடிக்குத் தூபம், தீபங்கள் காண்பித்து, அதன் வேரைப் பிடுங்கி வந்து, காதினில் கட்டவும். தலைவலி தீரும்.

---

## 205. ஒருத்தலைவலிக்குக் கர்ணபூரணம்.

அடருமொருத் தலைவலிக்கு மிளகிரண்டு
அவனிவள ரீருள்ளி வசம்புகூட்டி
மடவார்கள் முலைப்பாலா குதல் நீராதல்
வார்த்ததையும் நறுக்கித்துணி தன்னில்வைத்து
இடதுபுறம் நொந்தாலே வலப்புறத்தி
னின்செவியில் குத்துவலி யுடனே தீரும்
தடவிகட கெம்பீரக் களிர்நடத்துஞ்
சத்திரபதி சரபேந்திர னுணர்ந்ததாமே (உ௱எ)

(இ.ள்.)

இரண்டு மிளகு, ஈருள்ளி, வசம்பு, இவைகளை முலைப்பாலை விட்டாவது அல்லது சுத்த ஜலம் விட்டாவது அரைத்து மெல்லிய துணியில் வைத்து ஒருத்தலைவலியுள்ள பக்கத்துக்கு மறுபக்கத்துக் காதில் குத்தத் தலைவலி தீரும்.

---

# 206. தலைநோவுக்குக் காதிற்குத்த மருந்து.

வன்னமயி லேறிவருங் குகனைப் போற்றி
மானிடர்க்கு வொருத்தலையின் வலியும் வந்தால்
சின்னதும்பை யிலைவசம்பு மிளகுங் கூட்டிச்
சேர்த்து நறுக் கித்துணியில் போட்டுமெள்ள
உன்னிதமாய் வலதுபுறம் நொந்தால் மற்ற
வொருபுறத்துக் காதினிலே குத்திப்பாரு
சொன்னபடி தலைநோவுந் தீருந்தீருஞ்
சொற்றவரு விபுவுணர்ந்த முறையதாமே (உ௰க)

(இ. ள்.)

சிறுதும்பையிலை
வசம்பு
மிளகு

இவைகளைச் சேர்த்து நசுக்கி ஒரு துணியில் போட்டு தலை வலியிருக்கும் பக்கத்திற்கு மறுபக்கத்துக் காதில் பிழிய ஒருத் தலைவலி தீரும்.

---

# 207. ஒருத்தலைவலிக்கு உள்ளுக்கு மருந்து.

இக்குவல யத்தின்வளர் மானிடர்க்கு
மிடர்செய்யு மொருத்தலையின் வலிதனக்கு
சுக்கினுட தூளதனை யெருமை வெண்ணெய்
தோய்த்துக்கலந் துந்திசந்தி யஞ்சுநாட்கொள்
பக்குவமாம் புளிதள்ளு வலியும் நிற்கும்
பலமலர்கள் தூவிசிவ கிருபை பெற்று
திக்கெல்லாம் புகழ்சரபேந் திரபூபாலன்
சிந்தையுணர்ந் திம்முறைதான் செய்துபாரே (உ௰உ)

சங்கினுட யிலைமூன்று பாக்கின்மாத்திரந்
தானரைத்து நற்பசுவின் பாலிலூட்டி
இங்கிதமா யரைத்துவெலு மிச்சங்காய் மாத்திர

மினிப்பான நல்லவெல்லம் போட்டுக்கொண்டு
தங்குவன வாவின்பால் நாழிவிட்டுத்
தான்கொள்ளு மொருத்தலையின் வலியுந்தீரும்
சங்குவளர் வயல்சூழ்ந்த தஞ்சையாளுஞ்
சரபேந்திர னிர்ணயித்த முறையதாமே (௩௰௩)

(இ.ள்.)

(1) சுக்குத்தூளுடன் எருமை வெண்ணெய் கலந்து தினமும் காலையும் மாலையுமாக 5 நாளைக்குக் கொடுக்கவும். புளி நீக்கிப் பத்தியமாக இருக்கவும். தலைவலி நிற்கும்.

(2) சங்கிலை விழுது 3 பாக்களவு அரைத்துப் பசுவின் பாலில் கலந்துகொண்டு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் வெல்லம் போட்டுக்கொள்ளவும். பசுவின் பால் நாழி கூட்டிக்கொள்ளவும். ஒருத்தலைவலி தீரும்.

---

# 208. ஒருத்தலைவலி பீனிசங்கபாலவலிக்கு நசியம்.

மடந்தைமுலைப் பால்தன்னை யிஞ்சிதன்னில்
வார்த்துநறுக் கித்துணியிற் போட்டுக்கொண்டு
திடந்தவரு மல்மூக்கி லந்தி சந்தி
தினமூன்று துளிகுத்து தப்பாமற்றான்
துடர்ந்தவொருத் தலைவலிபீ னசங்கள் தீருஞ்
சொன்னபடி கபாலவலி தானுந்தீரும்
படர்ந்தசிவ கிருபைபெற்றுத் தஞ்சையாளும்
பார்த்தன்சர பேந்திரனுணர் வைத்தியமாமே (௩௰௪)

(இ.ள்.)

இஞ்சித் துண்டை முலைப்பால் விட்டு நசுக்கித் துணியிலிட்டு இரு நாசிகளிலும் தினம் இருவேளை 3 துளிகள் வீதம் பிழியவும். ஒருத்தலைவலி, பீனஸங்கள் தீரும்.

# 209. மூக்கடைப்பு, நீர்ப்பாய்ச்சல் மூக்குத்தினவுக்கு நசியம், தைலம்.

இந்துப்பு மிளகுசா றடைக்கிழங்கு
இதுமூன்றும் வெந்நீரி னையத்தட்டி
விந்தைபெருந் துணியிலதைக் கட்டிமூக்கில்
விடுநசிய மூக்கடைப்பு நீரின் பாய்ச்ச
லுந்தினவு தானடங்குந் தப்பாமற்றுன்
உண்மைசிவ கிருபையதா லுலகமாளுஞ்
சந்திரவத னச்சரபேந் திரனுணர்ந்த
தன்மையிது வுண்மையுடன் செய்துபாரே (௩௰௫)

சீந்தில்சிற்ரு முட்டிமுத்தக் காசுவோமஞ்
சிறுகீரை தூதுவளை யமுக்கிராவேர்
பாந்தமுள்ள வோரிலைத்தா மரைநன்ஞரி
பாரினில வேம்புடனே வகைகள் பத்துஞ்
சேர்ந்துவகை யொன்றுக்கோர் பலமிடித்துத்
திறமாகத் தூணிநீர் விட்டுக் காய்ச்சிச்
சார்ந்தகடா யங்களுமே குறுணியாகத்
தானிறக்கி யெண்ணெயிரு நாழிகூட்டே (௩௰௬)

கூட்டுநெய்யு முரியாப்பால் நாழிகற்கங்
கோஷ்டமுட னதிமதுரம் விளங்கமுள்ளி
நாட்டினுட சுக்குக்கருஞ் சீரகந்தான்
நற்சீரக மிளகுதிப் பிலியொக்கத்
தாஷ்டிகமா யொவ்வோர்வரா கனிடை கூட்டித்
தப்பாம லரைத்தெண்ணெய் தனிற்கலந்து
மூட்டியெரித் தேமூழ்கு மூக்கினீரு
மோடுமேமந் தாரகா சங்கள்போமே (௩௰௭)

(இ.ள்.)

(1) இந்துப்பு மிளகு
சா றடைக் கிழங்கு

இம்மூன்றையும் வெந்நீர் விட்டு இடித்து ஒரு சிறு முடிச்சாகக் கட்டி நாசிதுவாரங்களில் பிழிந்துவர மூக்கடைப்பு, நீர்ப்பாய்ச்சல், அரிப்பு, தினவு முதலியவை தீரும்.

| | |
|---|---|
| (2) சீந்தில்கொடி | சிற்றுமுட்டி |
| கோரைக்கிழங்கு | ஓமம் |
| சிறுகீரை | தூதுவேளை |
| அமுக்கிராக்கிழங்கு | ஓரிலைத்தாமரை |
| நன்னாரி | நிலவேம்பு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து 4 மரக்கால் ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாகச் சுண்டக் காய்ச்சவும். இதை வடிகட்டிக்கொண்டு, நல்லெண்ணெய் 2 படி விட்டு, பசுவின் நெய் $\frac{1}{2}$ படியும், பசுவின் பால் 1 படியுங் கூட்டி,

| | |
|---|---|
| கோஷ்டம் | அதிமதுரம் |
| வாயுவிடங்கம் | முள்ளி |
| சுக்கு | கருஞ்சீரகம் |
| சீரகம் | மிளகு |
| திப்பிலி | |

இவை வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துப் பால் விட்டரைத்துக் கஷாயம் விட்ட எண்ணெயுடனே கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும்.

இதனால் தலைமுழுகிவர நீர்ப்பாய்ச்சல், மந்தாரகாசங்கள் தீரும்.

---

## 210. மூக்கினீர்ப் பாய்ச்சலுக்கு நசியம்.

ஆவின்நெய் யுரியிரண்டு பணவிடைதா
னரிதான கஸ்தூரி குங்குமப்பூ
நாவிலுரை யுங்கோரோ சனைவிளங்க
மவ்வாறு வராகனிடை மூன்றுந்தானும்

ஆவலுட னேகல்வத் திட்டுத்தூளா
யாக்கிநெய்யிற் கொதிப்பித்து யந்திசந்தி
காவலர்சொற் படியேநீ நசியம் பண்ணு
கனமான மூக்கினீர்ப் பாய்ச்சல்போமே (௩௧அ)

(இ.ள்.)

| | |
|---|---|
| பசுவின் நெய் | —½ படி |
| கஸ்தூரி | —2 பணவெடை |
| குங்குமப்பூ | —2 பணவெடை |
| கோரோசனை | —3 வராகனெடை |
| வாயு விடங்கம் | —3 வராகனெடை |

இச்சரக்குகளைச் சுத்தமான கல்வத்திலிட்டுப் பொடித்து, நெய்யில் குழப்பி யடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும். இந்நெய்யை வேண்டும்போது வெந்நீரில் வைத்து உருக்கி நாசிகளில் 3 துளிகள் வீதம் நஸ்யமிடவும். நீர்ப்பாய்ச்சல் தீரும்.

---

## 211. மண்டைவலி, நீர்ப்பாய்ச்சல் பீனிசத்துக்கு நசியம்.

கடுகுரோ கணிவெளிச்சைப் பிசினுஞ்சுக்குக்
கடுகுதிப் பிலிவசம்பு யிதுகளாறும்
அடவுடனே வகைக்குவரா கனிடை கூட்டி
யாழாக்குத் தேன்தனி லெரித்தெடுத்துத்
திடமுடனே யொன்றைவிட்டோர் நாள்தன்னிற்
செய்நசியம் மூன்றுதுள்ளி யந்திசந்தி
இடமான மண்டைவலி மூக்கினீரு
மேகும்பீ னிசமென்ப தெல்லாந்தானே (௩௧௯)

(இ.ள்.)

| | |
|---|---|
| கடுக ரோகிணி | வெளிச்சைப்பிசின் |
| சுக்கு | கடுகு |
| திப்பிலி | வசம்பு |

இவைகளை வகையொன்றுக்கு 1 வராகனெடை எடுத்துப் பொடித்து, 1 ஆழாக்குத் தேனில் கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி வடித்துக்கொண்டு, இரண்டு நாளைக்கொரு தடவை இரு நாசிகளிலும் 3 துளிகள் வீதம் காலையிலும் மாலையிலும் நஸ்யஞ் செய்ய, மண்டைவலி, மூக்குநீர்ப்பாய்ச்சல் பீனிசங்களுந் தீரும்.

---

# 212. ஒருத்தலைவலிக்கு நசியம்.

அகிலமதி னரர்க்குமொருத் தலைவலிக்கு
அன்பான நசியமொன்று சொல்வேனல்ல
மகிழம்விரை யெலுமிச்சம் பழச்சாறன்னில்
வரிசையுட னரைத்துவலிப் பாரிசத்தில்
வகையுடனே துணியிலிட்டு அந்திசந்தி
அன்பாக மூன்றுதுள்ளி நசியஞ்செய் நீ
சகியாத வொருத்தலைநோய் தீரும்பாரு
தப்பாது மானுவுணர் முறையதாமே (கூஉ௰)

(இ.ள்.)

மகிழம்வித்தை எலுமிச்சைச்சாற்றிலுரைத்து ஒரு துணியில் வைத்து, காலை மாலை இருநேரங்களிலும் 3 துளிகள் வீதம் வலியுள்ள பாகத்து நாசியில் பிழியவும். ஒருத்தலைவலி குணமாகும்.

---

## 213. கபாலச்சூலைக்கு நசியம்.

நாயுருவி யின்கொழுந்து சீயக்காயி
ன்றகொழுந்து முலைப்பால தன்னிற்றட்டி
நேயமுட னசியஞ்செய் யந்திசந்தி
நித்தியமெட்டு நாடனுக்கு மூக்கிரண்டில்
தாயகமாங் கபாலத்தின் சூலைதீருந்
தப்பாமற் சிவகிருபை யதினுனீதி
நியாயமுடன் றஞ்சைநக ராளுமானு
நண்பன்சர பேந்திரனுணர் நசியமீதே (௩௨௧)

(இ.ள்.)

நாயுருவிக் கொழுந்து, சீயக்காய்க் கொழுந்து இவ்விரண்டையும் 1 எலுமிச்சங்காயளவெடுத்து, முலைப்பால் விட்டு நசுக்கி, காலை மாலை யிருநேரங்களிலும், இரு நாசிகளுக்குள்ளும் எட்டு நாளைக்கு நஸ்யமிடவும். கபாலச்சூலை தீரும்.

---

## 214. தலைவலி, கபாலசூலைக்கு நசியம்.

அதிமதுரம் வாய்விளங்கஞ் சுக்குக்கோஷ்ட
மன்பாங்கை யாந்தகரை யிவைகளைந்தும்
பதமுடனே சரியாகக் கூட்டிநல்ல
பசுவின்நெய் யினிலெரித்து வந்திசந்தி
யிதமுடனே யெட்டுநாள் நாசிதன்னி
லேநசியஞ் செய்தலையின் வலியுந்தீரு
மிதையுமலாற் கபாலத்தின் சூலைதீரு
மிறைவன்சர பேந்திரனுணர் நசியமாமே (௩௨௨)

(இ.ள்.)

| | |
|---|---|
| அதிமதுரம் | வாயுவிடங்கம் |
| சுக்கு | கோஷ்டம் |
| கையாந்தகரை | |

இவைகளைச் சரிகூட்டி அரைத்துப் பசுவின் நெய்யில் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதமாக யெரித்து இறக்கவும். இதனால் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நாசிகளில் நஸ்யமாக எட்டு நாளைக்குச் செய்யவும்.

தலைவலி, கபாலச் சூலை தீரும்.

---

## 215. தலைவலிக்கு நசியம்.

மங்கையர்பா லுடனல்ல வேளைவேரும்
வெங்காரஞ் சரிகூட்டி யரைத்துக்கொண்டு
பொங்கமுள்ள துணியதனில் வண்மையாகப்
பொட்டணமுங் கட்டிரெண்டு வேளையுந்தா
னுங்கவன மாகவஞ்சாறு நாடனக்கு
உண்மையுடன் மூன்றுதுள்ளி நசியஞ்செய் நீ
சங்கையிலாத் தலைவலியுந் தீருந்தஞ்சைச்
சரபேந்திர மகாராச னருளிதாமே (௩உ௩)

(இ.ள்.)

நல்லவேளை வேரும், வெங்காரமும் சேர்த்து முலைப்பால் விட்டுத்துவைத்து, ஒரு துணியில் பொட்டணமாகக் கட்டி காலை மாலை இரு வேளைகளிலும் 3 துளிகள் வீதம் நஸ்யஞ் செய்யவும். 5 அல்லது 6 நாளைக்குச் செய்யவும்.

தலைவலி தீரும்.

---

## 216. தலைநோய்க்கு நசியம்.

மருதம்விரை முலைப்பாலி லரைத்துக்கொண்டு
வண்மையுள்ள துணியினிற்பொட் டணமுங்கட்டி
துரிதமுட னந்திசந்தி யிரண்டுநேரந்
துள்ளியது அஞ்சுகுத்து நாசிதன்னிற்

சிரமதனி ஞேயுடனே தீரும்பாரு
சிவகிருபை யதுபெற்றுத் தஞ்சைதன்னை
அருளுடனே அரசாளுஞ் சரபபூபன்
அன்பாக வுணர்நசிய மது நீசெய்யே (௩௨௪)

(இ.ள்.)

மருதம் விரையை முலைப்பால் விட்டரைத்துக் கொண்டு துணியில் பொட்டணங்கட்டிக் காலை மாலை இரு வேளைகளிலும் 5 துளிகள் வீதம் நாசிகளில் பிழியவும்.

தலை நோய் தீரும்.

---

# 217. தலைவலி, தலைபாரத்துக்கு நசியம்.

வசம்புள்ளி நாய்வேளை யிலையுங்கூட்டி
மங்கைமுலைப் பால்விட்டு நறுக்கிச்சேலை
யிசவாகக் கிழித்துவதிற் கட்டிநித்திய
மிரண்டுவேளையு மெட்டு தினத்துக்குத்தான்
பிசகாம லஞ்சுதுளி நசியஞ் செய் நீ
பலத்ததலை வலிப்பாரம் நீங்குமிந்த
அசலமதிற் சிவபூசை செய்துமெத்த
வருள்பெற்ற சரபேந்திர னருளிதாமே (௩௨௫)

(இ.ள்.)

வசம்பு பூண்டு
நாய்வேளையிலை

இம்மூன்றையுஞ் சரியெடை யெடுத்து முலைப்பால் விட்டுத் துவைத்து, துணியில் முடிந்து காலையிலும் மாலையிலும் 5 துளிகள் வீதம் 8 நாளைக்கு நஸ்யமிடவும்.

தலைபாரம் தீரும்.

---

# 218. தலைவலிக்கு நசியம்.

சமுத்திராப் பழஞ்சுக்குச் சரியாய் நல்ல
        தையல்முலைப் பாலிலுரைத் துசிதமாக
விழைத்துநசி யஞ்செய்நீ யஞ்சுதுள்ளி
        நித்தியமந்தி சந்திரெண்டு வேளையுந்தான்
அமைந்ததலை வலியென்ப தெல்லாந்தீரு
        மதுதப்பா மனியுஞ் செய்துபாரு
உமைக்குமிடப் பாகமருள் சிவனார் கிருபை
        உற்றசர பேந்திரனுணர் நசியமாமே (௩௨௬)

(இ.ள்.)

சமுத்திராப்பழம் சுக்கு

இவ்விரண்டையும் முலைப்பாலில் இழைத்து இரு நாசிகளிலும் 5 துளிகள் வீதம் காலையிலும் மாலையிலும் நஸ்யமிடவும்.

தலைவலி தீரும்.

---

# 219. தலைவலிக்குப் பத்து.

அசமதாக முமெலுமிச் சம்பழச்சா
        றதனிலரைத் தேயிருப்புக் கரண்டிதன்னி
லிசவாகக் கொதிக்கவைத்து மூன்றுநாள்பத்
        தேபோடு வெச்செனவுஞ் சிரத்திலேயும்
பிசகாம னிற்குஞ்சிவ கிருபையென்றும்
        பெற்றுமனு விஞ்ஞான முணர்ந்துபோற்றித்
தசரதநந் தனன்போல் தஞ்சையாளுஞ்
        சரபேந்திர னிர்ணயித்த பத்திதாமே (௩௨௭)

(இ.ள்.)

ஓமத்தை எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்ருகவரைத்து, இரும்புக் கரண்டியில் கொதிக்கவைத்து 3 நாளைக்கு நெற்றியில் பத்துப்போடவும்.

தலை நோய் தீரும்.

---

## 220. தலைவலிக்குக் கட்டுமருந்து.

வேளையிலை யைக்கசக்கி நெற்றியில் வைத்து
    விரகுடனே கட்டுதலை வலியும்நிற்குங்
கேளுரெண்டு பக்கவலி யென்ருற்கட்டு
    கெடியாக விரண்டுபக்கந் தன்னிலேதான்
வாளையது பாய்பொன்னி சூழுஞ்சோழ
    வளநாட்டுக் குடையதுரை நாளிகேரப்
பாளைவிரிந் தேவாசங் கமழுந் தஞ்சை
    பார்த்தன்சர பேந்திரனுணர் வைத்தியமாமே (௩௨அ)

(இ-ள்.)

நல்ல வேளையிலையைச் சமூலமாகக் கசக்கி நெற்றியில் வைத்துக் கட்டவும். தலைவலி நிற்கும். இரண்டு பக்கவலி யென்ருலிருபக்கங்களிலும் கட்டவும்.

---

## 221. தலைவலிக்குப் பத்து.

சிறுக்கீரை வேர்நரளை யிலையிரண்டுந்
    திறமான சுண்ணும்பி னீரைவார்த்து
உறுக்கமுடன் வார்த்துதலை வலிக்குநெற்றி
    யுடன்பிடரி யதிற்பூசு வலியும் நிற்கும்
மறைத்தலைவ னுரைத்தபடி யிதுதப்பாது
    வண்மைசிவ கிருபைபெற்று தஞ்சையாளு
மிறைத்தலைவன் சரபோசி மகராசன்ரு
    னிதையுணர்ந்து நிர்ணயித்த வகையதாமே (௩௨௧)

(இ.ள்.)

சிறுகீரைவேர் ந ர ளை யி லை (புளிநரளை) இவ்விரண்டையும் சுண்ணும்பு நீர்விட்டு அரைத்து நெற்றி, பிடரி முதலிய பாகங்களில் பூசவும். தலைவலி நிற்கும்.

---

## 222. மண்டைச்சூலைக் குணம், அதற்கு மூழ்கத்தைலம், நசியம்.

மண்டைச் சூலைக்கு வருங்குணத்தைச் சொல்வேன்
வலுவான தலையரிப்புச் சொரியுங்கையும்
அண்டுவதுந் தெரியாது சிரசின் மூளை
யதுசுருங்கு முச்சிதலை வலியதாகுந்
துண்டமது வறளும்பல் கொழுக்கும் வாயைத்
துறக்கவொட்டா மல்வெகுவலியதாகுங்
கண்டமுடன் பிடரியது நடுக்குஞ்சென்னி
கதித்துநிமிர்ந் தால்வலிக்கும் நாசியாலே (௩௩0)

நாசியாலு மோர்பருத்திக் கொட்டைபோல
நழுவிவிழுஞ் சலநாசி தெறிக்குமீறில்
மாசிரத்தம் விழும்புண்ணு மெத்தநெஞ்சு
வலியாகு முடம்பதுவும் வறளுமிஞ்சில்
நாசியினுல் நீர்ப்பாயுங் கடுக்குமிந்த
நலங்கெட்ட வியாதிகளுக் கெண்ணெயொன்று
தேசுநிறை சரபேந்திரன் சாத்திரத்தைத்
தினமுணர்ந்து நிர்ணயித்த திதைநீ கேளே (௩௩௧)

எலுமிச்சம் பழச்சாறு நாழிநல்ல
யெண்ணெயிரு நாழிமிள கழிஞ்சிற்கொட்டை
நலமிச்ச மானவெங் காயமிஞ்சி
நற்கோட்டம் வகையஞ்சுக் கோர்பலந்தான்

சொலும்பழச்சாறு விட்டரைத்துக் கரைத்துக்கொண்டு
துரிசாக வேடுகட்டி நாலுநாளும்
வலிமிச்ச ரவிதனிலே புடமதாக
வைத்துபின்பு எடுத்தடுப்பி லேற்றிடாயே (௩௩௨)

ஏத்தியெரித் தேகடுகு திரளும்போது
இறக்கிவடித் தேகலசத் தெடுத்து வைத்து
ஆத்தியணி கடவுள்தனை மனதிலன்பா
யனுஷ்டித்து எண்ணெயிட்டுச் சாயங்காலம்
தேய்த்துச்சீ யக்காயி விளவெந்நீரில்
தினமுழுகு முன்சொல்வியாதி களுந்தீரும்
போத்திசிவ கிருபைபெறு சரபோசேந்திரன்
பூமியுள்ளோர்க் கின்னமொரு நசியந்தானே (௩௩௩)

நசியமது அலரிச்சா றுரியதாகு
நற்பசுவின் நெய்நாழி கண்டங்கத்திரி
உசிதமுடன் பிழிந்தசா றுரிகஸ்தூரி
ஒப்பான பணவெடையு மிரண்டதாகும்
இசவாங்கோ ரோசனையுங் குங்குமப்பூ
இதிரெண்டும் வகைக்குவரா கனிடைகூட்டிப்
பிசகாமல் முன்சொல்சாறு விட்டரைத்துப்
பேதகமி லாமலதைக் காய்ச்சிடாயே (௩௩௪)

காச்சியிளந் தீயிட்டு மிளகுபக்குவங்
கண்டவுடன் வடித்தெடுத்து வைத்துக்கொண்டு
வாச்சுதென்று கடவுள்தனை தியானஞ்செய்து
வாயிலே அவல்போட்டுக் கொண்டு விந்தத்
தாச்சியிலா நெய்யதனை நிறுத்துநாசி
தன்னிலே யஞ்சுதுளி யந்திசந்தி
போச்சுதென்றன் மண்டைச்சூ லையுந்தான்றஞ்சைப்
புரவலன் நிர்ணயித்த நசியமாமே (௩௩௫)

(இ.ள்.)

## மண்டைச்சூலைக் குறி குணங்களாவன:-

தலையில் அரிப்பு, கையினால் சொரிவதுகூடத் தன்னை யறியாமல் செய்யச்சொல்லும். சிரஸின் மூளை சுருங்கும். தலைவலி, தேகவறட்சை, பல்கூச்சம், வாயைத் திறக்கமுடியாத வலியு முண்டாகும். கழுத்து, பிடரி இவ்விடங்களில் நடுக்கலுண்டாகும். குனிந்து நிமிர்ந்தால் மூக்கில் வலிக்கும். நிமிர்ந்தால் நாசி யிலிருந்து பருத்திக் கொட்டைபோல் சளி விழும். புண்களேற் பட்டு இரத்தமும் விழும். நெஞ்சுவலி உண்டாகி உடம்பு வறட்சியுமேற்படும். மூக்கொழுகுதல், வலி முதலிய குணங் களேற்படும்.

## இதற்கு மருந்து:-

| | |
|---|---|
| எலுமிச்சம் பழச்சாறு | 1 நாழி |
| நல்லெண்ணெய் | 2 படி |

| | |
|---|---|
| மிளகு | அழிஞ்சில் விதை |
| வெங்காயம் | இஞ்சி |
| கோஷ்டம் | |

இவைகள் வகைக்கு ஒரு பலம். இவைகளை எலுமிச்சம் பழச் சாறுவிட்டு நன்றாக வரைத்து, சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, ஒரு வெள்ளைத் துணியினால் வேடு கட்டி 4 நாளைக்குச் சூரிய புடம் வைக்கவும். பின்பு இதை யெடுத்து, அடுப்பின் மேலேற்றி எரித்துக் கடுகு திரளும்போது மெழுகு பதத்திலிறக் கவும். இதை வடிகட்டிக்கொண்டு கலசத்தில் பத்திரப்படுத்தவும். இவ்வெண்ணெயைக் காலையில் தேய்த்துக்கொண்டு சாயங் காலத்தில் சீயக்காயிட்டு வெது வெதுப்பான வெந்நீரில் தினமும் ஸ்நானஞ் செய்யவும். மேலே சொன்ன வியாதிகளைத்துந் தீரும்.

## நசியம்:-

| | |
|---|---|
| அலரிச்சாறு | $\frac{1}{2}$ படி |
| பசுவின் நெய் | 1 படி இவைகளுடன் |
| கண்டங்கத்தரிச்சாறு | $\frac{1}{2}$ படி |

| | |
|---|---|
| கஸ்தூரி | 2 பணவெடை |
| கோரோசனை | 1 வராகனெடை |
| குங்குமப்பூ | 1 வராகனெடை |

இவைகளை அலரிச்சாறு (அரளி) விட்டரைத்து நெய்யுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி மெழுகு பதமாக வடித்துக்கொள்ளவும். வாயில் அவல் போட்டுக்கொண்டு இந்த நெய்யை நாசியில் 5 துளிகள் வீதம் காலை மாலை யிருவேளைகளிலும் நஸ்யஞ் செய்யவும்.

மண்டைச்சூலை தீரும்.

---

## 223. வாயுவுக்கு உருண்டை.

இந்துப்புக் கடுகுரோ கணிவெள்ளுள்ளி
யிசைவான பெருங்காய மிதுகள்நாலுந்
தந்திரமாய்ப் பச்சையது கூட்டிக்கொள்ளு
சாந்தசீ ரகமுங்கருஞ் சீரகமோமஞ்
சுந்தரமா மிளகுநாய்க் கடுகுதிப்பிலி
சுக்குடனே வேழையும்நீ வறுத்துக்கொண்டு
அந்தமுள்ள யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
அரைத்துக்கழற் சிக்காயி னளவுதானே (௩௩௬)

கள(ழ)ர்ச்சிக்கா யின்னளவே யுண்டைசெய்து
கையில்வைத்துக் கொண்டுவாய்வ துக்குத்தானும்
வளக்கமுள்ள சுக்குக்கடா யத்திற்கொள்ளு
வாயுவெல்லாந் தீருஞ்சிவ கிருபையாலே
முளக்கும்பே ரிகைடம்மா ரத்திஞேடே
முரசுபல வாத்தியமாய்ப் பரிக்கநல்ல
வளக்களிறு மேற்பவனி வருசிங்கார
மகாராசன் சரபேந்திர னுணர்ந்ததாமே (௩௩௭)

(இ. ள்.)

| | |
|---|---|
| இந்துப்பு | கடுகரோகிணி |
| வெள்ளைப்பூண்டு | பெருங்காயம் |

(இவைகளைப் பச்சையாகவும்)

| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| ஓமம் | மிளகு |
| நாய்க்கடுகு | திப்பிலி |
| சுக்கு | |

(இவைகளை வறுத்துக்கொண்டும்)

எல்லாவற்றையுமொன்ருகக் கல்லுரலிலிட்டிடித்துத் தூளாக்கிப் பின் எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்ருக அரைத்துக் கழற்சிக்காயளவு உருண்டை செய்துகொள்ளவும். சுக்குக் கஷாயத்தில் சாப்பிட வாயுவெல்லாந் தீரும்.

---

# 224. வாய்க்கோணல், கபால வலிப்புக்கு மருந்து.

ஆவாரம்பட்டை விழுதியின் வேர்ப்பட்டை
ஆயில்பட்டைவுகாய்ப்பட்டை யிலுப்பைப்பட்டை
நாவாலு முரையைந்து பட்டையுந்தான்
நலமாகச் சரிகூட்டித் தட்டிக்கொண்டு
ஈவாய்முக் குறுணிதண்ணீர் விட்டுக்காய்ச்சி
யிதுவுமரைப் பானைதண்ணீ ரிறக்கிக்கொண்டு
நீவாய்ப்பாய்த் துணியிட்டு வடிக்கட்டிக்கொள்
நிச்சயமாய் மறுபடியுங் காய்ச்சிடாயே (ருருஅ)

காச்சுழக்கா னதின்பின்னி றக்கிக்கொள்ளு
கைப்பாக மாகவெத் திலையிலேதான்
பூச்சுவொரு துட்டுக்கா சளவு நீயும்
புசியிரண்டு வேளையுந்தான் வாயின்கோணல்

போச்சுதென்றே இருபதுநாள் தன்னிலேதான்
பொல்லாத கபாலவலிப் புடனேதீரும்
வாச்சசிவ கிருபையினால் வெற்றி பெற்ற
மகாராசன் சரபேந்திர னுணர்ந்ததாமே (௩௩௯)

(இ. ள்.)

| | |
|---|---|
| ஆவாரம்பட்டை | விழுதிவேர்ப்பட்டை |
| ஆயில்பட்டை | உகாய்ப்பட்டை |
| இலுப்பைப்பட்டை | |

இவைகளைச் சரியெடை எடுத்து, இடித்து, 3 மரக்கால் தண்ணீர் விட்டு $1\frac{1}{2}$ மரக்காலாகும்வரை அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். இதை மறுபடியும் அடுப்பின் மேலேற்றி உழக்காக வற்றக் காய்ச்சிக்கொண்டு, இந்த கஷாயத்தை ஒரு துட்டளவு எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலுஞ் சாப்பிடவும். 20 நாளில் வாய் கோணலும் கபால வலியும் தீரும்.

---

## 225. மண்டை யூனத்துக்கு நசியம்.

முத்தினதாய்ப் பெரிதாக நாலுதேங்காய்
மூடியெட்டுந் திருகுமெத்த மெல்லிசாக
சத்துளதாய்ப் புளிக்கொட்டை தோலும்பச்சை
தானெடுத்து யிடித்துவந்தத் தூளைத்தானே
வத்திரகா யம்பண்ணி யுழக்குரெண்டும்
வகையாகப் பிசைந்தீயம் பூசுந்தட்டில்
மெத்தெனவே மெல்லிசா கப்பரப்பி
வெய்யிலிலே வைக்கநெய்யு முருகுந்தானே (௩௪0)

தானதையும் பக்குவத்திற் கையினாலே
தான்பிசைந்து கெட்டியுள்ள புடவைதன்னால்
ஊனமில்லா மல்வடிகொண் டதற்குக் கூட்டு
முற்றவகை கேள்புழுகு வராகன் முக்கால்

நாணமுள சவாதுமரை வராகன்கூட்டு
நல்லகஸ்தூ ரியுங்கால்வ ராகனுகும்
நீநயமாங் குங்குமப்பூ வராகனென்று
நிச்சயகோ ரோசனையும் வராகனென்றே (௩௪௧)

ஏலான இவ்வைந்து முன்சொற்றயிலத்
திட்டுகலந் தேயிரண்டு மூக்கதன்னில்
மாலாக வஞ்சுதுள்ளி யந்திசந்தி
வகையாக நசியஞ்செய் மண்டையூன
மேலான வியாதிகளும் தீரும்பாரு
வித்துவசம்பிர தாயமறி விபுணன்தஞ்சை
மாலான துளசேந்திரன் வரத்தில்வந்த
வள்ளல்சர பேந்திரனுணர் நசியமாமே (௩௪௨)

(இ. ள்.)

நன்ருக முற்றிய தேங்காய் 4 எடுத்து உடைத்துத் திருகவும். இதனுடன் புளியங்கொட்டைத் தோல் ஒரு உழக்கு போட்டு இவ்விரண்டையுஞ் சேர்த்து இடித்து வஸ்திர காயஞ்செய்துகொள்ளவும். இதையொரு ஈயத் தட்டில் மெல்லியதாகப் பரப்பி வெயிலில் வைக்க அதனின்று நெய் வடியும். இதைப் பக்குவமாகக் கையினுல் பிசைந்து ஒரு புடவையில் வடித்துக்கொள்ளவும். இதனுடனே

| | | |
|---|---|---|
| புனுகு | $\frac{3}{4}$ | வராகனெடை |
| சவ்வாது | $\frac{1}{2}$ | ,, |
| கஸ்தூரி | $\frac{1}{4}$ | ,, |
| குங்குமப்பூ | 1 | ,, |
| கோரோசனை | 1 | ,, |

இவைகளை முன்சொன்ன தைலத்துடனே கலந்து நாசிகளில் 5 துளிகள் வீதம் காலையிலும் மாலையிலும் நஸ்யஞ்செய்யவும்.

மண்டை வியாதிகள் தீரும்.

# 226. வாயுவிஞல், பித்தத்தால் உஷ்ணத்தால் தலைவலிக்கு நஸ்யம்.

நாயுருவி விரையைச்சூ ரணமதாக்கி
நல்லெண்ணெயிற் போட்டுக் கலந்துகொண்டு
தாயகமா யந்திசந்தி யிரண்டுநாளுந்
தானேநசி யஞ்செய்நீ தப்பாமற்ருன்
வாயுவிஞல் பித்தத்தா லுட்டிணத்தால்
வந்ததலை வலிகளெல்லாந் தீரும்பாரு
தாயினுநற் றயவுடைய நண்பன்றஞ்சை
சரபேந்திர னிர்ணயித்த நசியமாமே (௩௪௩)

(இ. ள்.)

நாயுருவி விதையைச் சூரணமாக்கி நல்லெண்ணெயிலிட்டுக் கலந்துகொண்டு காலையிலும், மாலையிலுமாக நஸ்யஞ்செய்ய

வாத, பித்த, உஷ்ணம் இவைகளினுலேற்பட்ட பலவித தலை நோய்களுந் தீரும்.

---

# 227. தலைவலிக்குப் பத்து.

காடிசரி நல்லெண்ணெய் சரியாய்க்கூட்டிக்
கலந்துபுளி யம்பழச்சாறு விட்டுக்காய்ச்சி
நாடிபதங் கண்டிறக்கி வடித்துக்கொண்டு
நன்ருகப் பூசுவலி கண்டிடத்தில்
ஓடிவிடுந் தலைவலிக ளென்பதெல்லா
முற்றசிவ கிருபையிஞல் நூல்கள்கற்றுப்
பாடிவரும் புலவர்தர மறிவிற்பன்ன
பார்த்தன்சர பேந்திரனுணர் நசியந்தானே (௩௪௪)

(இ. ள்.)

காடி
நல்லெண்ணெய்
புளியம்பழச்சாறு

இவைகளைச் சரியளவெடுத்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமாக இறக்கவும். இதை வலியுள்ள இடத்தில் பூசிவரத் தலைவலி தீரும்.

---

## 228. ஒருத்தலைவலிக்கு நசியம்.

வெங்காய மரைத்துநல் லெண்ணெய்தன்னில்
விட்டுநெருப் பினிலேவெச் செனவும்வைத்து
தங்காம லொருத்தலையின் வலியின்பக்கந்
தானந்தி சந்திபத்து நாளுந்தானும்
பொங்காரு நாசிதனில் நசியஞ்செய்நீ
போகுமொருத் தலைவலிக ளென்பதெல்லாஞ்
சிங்காரத் துளசமகா ராசனீன்ற
தீரன்சர பேந்திரனுணர் நசியமாமே (௲சரு)

(இ. ள்.)

வெங்காயம் (பாக்களவெடுத்து) நன்ருக அம்மியிலிட்டரைத்து நல்லெண்ணெயில் ($\frac{1}{4}$ சேரில்) கலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கவும். இதைத் தினந்தோறும் ஒருத் தலைவலி யிருக்கும் நாசியில் காலையிலும் மாலையிலும் 10 நாளைக்கு நஸ்யமிடவும். தலைவலிகள் தீரும்.

---

## 229. தலைவலிக்கெல்லாம் புகை.

வெள்ளெருக்குக் காய்ந்தகழி நெருப்பிலிட்டு
விற்பனமாய் நாசிதனிற் புகையைக்கொள்ளு

முள்ளதலை வலியெல்லாம் அகற்றும்பாரு
வுற்றசிவ கிருபையினு லுலகமாளும்
தெள்ளுதமிழ் வாணர்கவித் திறமைநன்றுய்ச்
சித்தத்தி லறியும்விற் பன்னனெங்கள்
வள்ளல்சர போசிமகா ராசனிந்த
வையகத்துக் காகவும்நிர் ணயித்ததாமே (௩௪௬)

(இ. ள்.)

தானேயுலர்ந்த வெள்ளெருக்கங் குச்சியை நெருப்பிலிட்டுக் கொளுத்தி அதனின்றெழும்பும் புகையை நாசிகளில் கொள்ளவும். தலைவலி தீரும்.

---

# 230. சிரோ வியாதிக்கெல்லாம் கடாயம்.

வேப்பமரச் சல்லிவேர்க் கொம்புதிப்பிலி
மேலான சீந்திற்றண் டுடனேகோஷ்டம்
வாய்ப்புள்ள நிலவேம்பு தேவதாரம்
வழுதலைவே ரெட்டுவகைக் கோர்கழஞ்சு
தாப்பிரிய மாயரைநா ழுழிநீரிற்
ருன்கலந்து யெட்ருென்ருய்க் காய்ச்சிக்கொண்டு
சாப்பிடுநீ சிரவியாதி யெல்லாந்நீருந்
தஞ்சையையாள் விபுவுணர்ந்த கடாயமாமே (௩௪௭)

(இ. ள்.)

| | |
|---|---|
| வேப்பமரச்சல்லிவேர் | கோஷ்டம் |
| சுக்கு | நிலவேம்பு |
| திப்பிலி | தேவதாரம் |
| சீந்தில்தண்டு | வழுதலைவேர் (கத்திரி) |

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்செடுத்து, இடித்து தண்ணீர் 4 நாழி விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றக் காய்ச்சவும். இதைச் சாப்பிட, சிரோவியாதி தீரும்.

## 231. தலைவலிக்கு முகர மருந்து.

பஞ்சதனில் நவச்சார மூட்டியேயோர்
    பரணிதனி லேயடைத்து வைத்துக்கொண்டு
கொஞ்சமாய்ப் பருத்திக்கொட் டைப்பிரமாணம்
    குணமான பரணிதனில் வைத்திருந்த
பஞ்செடுத்துச் சுண்ணும்பு விரலிற்கொஞ்சம்
    படத்தடவி மத்தித்து முகந்துபார்க்க
அஞ்சிவிடுந் தலைவலிக ளென்பதெல்லா
    மன்பான மானுவுணர் முறையதாமே (௩சஅ)

(இ. ள்.)

ஒரு கட்டி நவசாரத்தின்மேல் சிறிது பஞைச் சுற்றி ஒரு பரணியில் அடைத்து வைத்திருக்கவும். வேண்டும்போது இப் பஞ்சில் பருத்திக்கொட்டையளவெடுத்துச் சுண்ணும்பு பூசிய விரலினல் நன்ருகத் தடவி மத்தித்து முகர்ந்து பார்க்கவும்.

தலைவலிகள் தீரும்.

---

## 232. தலைவலிக்கு நசியம்.

சீயக்கா யுள்ளிவசம் பிதுகள்மூன்றுஞ்
    சேயிழையின் முலைப்பாலில் நறுக்கிக்கொண்டு
மாயத்தா லந்திசந்தி நசியஞ்செய்நீ
    பத்துநா ளஞ்சுதுள்ளி யுசிதமாக
நீயிதைப்பார் தலையின்வ லிகளெல்லாம்
    நிற்குமே தப்பாமலே மனுவிக்கி
யானத்தின் படிதஞ்சை நகரையாளும்
    நரபதியாஞ் சரபேந்திர னுணர்ந்ததாமே (௩சகூ)

(இ. ள்.)

சீயக்காய்

வெள்ளைப்பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் முலைப்பால் விட்டு நன்ருக நசுக்கி யொரு வெள்ளைத் துணியிலிட்டுத் தினமும் காலையிலும் மாலையிலும் 5 துளிகள் வீதம் இரு நாசிகளிலும் நஸ்யமிடவும். தலைவலிகள் நிச்சயமாகத் தீரும்.

---

## 233. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

வேப்பெண்ணெய் தனிலுள்ளி வசம்புங்கூட
வெள்ளைக்காக் கணம்வேருஞ் சரியிரும்பின்
ஆப்பைதனில் விட்டெரித்து ஒருத்தலைநோ
யதற்குநசி யஞ்செய்நீ யஞ்சுதுள்ளி
வாய்ப்புடனே யந்திசந்தி நாலஞ்சாருநாள்
வகையுடனே செய்யவொருத் தலைநோயுங்
கூப்பிடா தோடுமிது செய்துபாரு
குற்றமிலா மானுவுணர் நசியமாமே (நருடு)

(இ. ள்.)

வெள்ளைப்பூண்டு
வசம்பு
வெள்ளைக்காக்கணம் வேர்

இவைகளைச் சமமெடுத்து வேப்பெண்ணெயுடன் கலந்து, ஒரு இரும்புக் கரண்டியில் விட்டு, அடுப்பின்மேல் வைத்து எடுத்துப் பக்குவமாக யிறக்கி காலையிலும் மாலையிலும் 5 துளிகள் வீதம் 4, 5, அல்லது 6 நாள் நஸ்யமிடவும்.

ஒருத்தலைவலி தீரும்.

---

# 234. சலதோஷத்துக்குருண்டை.

விடத்தரிஸெ ஆவாரை யிஸெயின்வித்து
மிடித்துத்தூ ளாக்கியொரு பானைதன்னில்
திடத்தெருமை மோரைவிட்டு வேடுகட்டித்
தீயிட்டுக் காயவைத்துத் தூளைத்தானே
தடித்ததுணி தனிற்கட்டி வேட்டின்மேலே
தான்வைத்து வதுவெந்த பிறகுதானு
மெடுத்துவைத்து மோர்முறிந்தக் காலதுதன்
னிலேயிதையுங் கூடப்போட் டரைத்துக்கொள்ளே (௩௫௧)

அரைத்தெலுமிச் சங்காயி னளவுதானே
யதையுருட்டி நிழலுணர்த்திப் புதுப்பாண்டத்தில்
உரைத்தபடி வைத்துக்கொண் டெருமைப்பாலி
லுரைகுத்துந் தயிரினிலோ ருருண்டைதன்னைக்
கரைத்துள்ளுக் குக்கொண்டால் சலதோஷங்கள்
கடிந்தோடுந் தப்பாமற் கண்டுபாரு
சிரத்தினுட வலிநீங்கு முசிதசோழ
தேசமதை யாளும்விபு வுணர்ந்ததாமே (௩௫௨)

(இ. ள்.)

விடத்தேரிஸெ
ஆவாரையிஸெ
ஆவாரை விதை

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துத் தூள்செய்து, ஒரு பானையில் போட்டு எருமை மோர்விட்டு, வெள்ளைத் துணியினுல் வாய்க்கு வேடுகட்டி, அடுப்பின் மேலேற்றி மோர்வற்ற எரிக்கவும். மறுபடி இத்தூளையே ஒரு தடித்த துணியில் போட்டு முடிந்து, வேட்டின்மேல் வைத்து வெந்தபின்பு இதை நன்ருக அரைத்து எலுமிச்சங்காயளவெடுத்து உருண்டைகள் செய்து நிழலில் காய வைத்து ஒரு புதுப்பானையில் வைத்துக்கொண்டு, உறைக்குற்றிய எருமைத் தயிரில் ஒரு உருண்டையைக் கரைத்து, உள்ளுக்குச் சாப்பிடவும்.

சலதோஷங்கள் நீங்கி, தலைவலியும் தீரும்.

---

# 235. பித்தத்தால் தலை திரும்புகிறதற்கு தலைவலிக்கு மருந்து.

பொன்னாங்காணி யின்வேரு மிளகிரண்டும்
புதியபசு வின்பாலி லரைத்துக்கொள்ளச்
சின்னாபின் னப்பட்டுப் பித்தத்தாலே
திரும்புதலை வலிதீரு மென்றுமுன்னோர்
சொன்னா ரைதத்தஞ்சை நகரையாளுஞ்
சுகுணதுளஜ சேந்திர னருள்தீரன்
இன்னாளி லதையுணர்ந்து சரபபூபன்
இதமாக வுலகுக்கா யுரைத்ததாமே (௩௫)

(இ. ள்.)

பொன்னாங்காணி வேர்
மிளகு

இவ்விரண்டையும் புதிதாகக கறந்த பசுவின் பாலிலரைத்துச் சாப்பிடப் பித்தத்தாலேற்பட்ட தலைவலி தீரும்.

---

# 236. காய்ச்சல், குளிர், தலைவலி செறியாக்குன்மம், பேய்க்கு மாத்திரை.

சுக்குள்ளி மிளகுதிப் பிலியுங்காயஞ்
சொன்னவைந்துஞ் சரியாயூ மத்தஞ்சாறு
பக்குவஞ்செய் குப்பைமேனி திருகுகள்ளி
பழச்சாறு வகைநாலுக் கொவ்வோர் சாமம்
எக்கியரைத் துண்டைசெய்து நிழலுலர்த்தி
இதைக்காய்ச்சல் குளிர்க்குப்பை மேனிச்சாத்தில்
தக்கவுரைத் திடுசெறியாக் குன்மமானாலுந்
தலைவலிக்கு முலைப்பாலி லிட்டிடாயே (௩௬)

இடுபேய்க்கி யெலும்பிச்சம் பழச்சாத்தில்தான்
　　இப்படிக்கி யனுபானந் தப்பாமற்செய்
விடுமிந்த வியாதியெல்லாம் நீங்கும்பாரு
　　மெய்யான சிவகிருபை தன்ஞலிந்தப்
படியதனில் மிகுகீர்த்தி பெரும்பிரதாப
　　பராக்கிரம முற்றருளு மலங்கற்ரேளன்
வடிவுபெரு துளசேந்திர னீன்றபாலன்
　　வண்மைசர பேந்திரனுணர் மாத்திரையாமே

(௩௫௫)

(இ. ள்.)

சுக்கு
பூண்டு
மிளகு
திப்பிலி
பெருங்காயம்

இவைகளைச் சரியெடையெடுத்து நொறுக்கிக் கல்வத்திலிட்டு குப்பைமேனிச்சாறு; திருகுகள்ளிச்சாறு, ஊமத்தஞ்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இச்சாறு வகைகளில் முறையே ஒவ்வொரு ஜாமம் அரைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். குளிர் காய்ச்சலாஞல் குப்பைமேனிச் சாற்றில் சாப்பிடவும். தலைவலிக்கும், செறியாக் குன்மத்திற்கும் முலைப்பாலில் இடவும். பேய், பிசாசுகளுக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் சாப்பிடவும். இந்நோய்களனைத்துந் தீரும்.

---

## 237. ஒருத்தலைவலிக்குப் பத்து.

உத்தமதா ளியினிலைவெங் காயமொன்று
　　வுரைவசம்புஞ் சிறுநீர்வார்த் தரைத்துப்பூச
சுத்தமதா யொருத்தலையின் வலியுந்தீருஞ்
　　சொன்ஞர்முன் ஞேரந்த முறையதன்னை

கத்துகடல் சூழுலகிற் கீர்த்திபெற்ற
கடவுள்சிவ பூஜைசெய்து தவமேபெற்ற
சத்திரபதி சரபோசி மகாராசேந்திரன்
ருனுணர்ந்த பத்துநீ செய்துபாரே (௩௫௬)

(இ. ள்.)

உத்தமதாளி (உத்தாமணி)யிலை, வெங்காயம், வசம்பு இம் மூன்றையும் உலகமறியாப் பிள்ளையின் சிறு நீரினலரைத்து தலைவலியிருக்குமிடத்தில் பூசவும். அது தீரும்.

---

# 238. ஒருத்தலைவலிக்கு நசியம்.

கையாந்த கரைச்சாத்தில் சமுத்திராப்பழங்
கையினுற் றேய்த்துவந்தச் சாறதன்னை
வொய்யார மாகவுமே நசியஞ்செய்நீ
யொருத்தலையின் வலியென்ப துடனேதீரும்
மெய்யாக விதைச்சொன்னேர் முன்னேரந்த
விதிதனையே நாள்தோறு முணர்ந்துணர்ந்து
செய்யாறும் வளதஞ்சை நகரையாளுந்
தீரன்சர பேந்திரனுணர் நசியமாமே (௩௫௭)

(இ.ள்.)

கையாந்தகரைச் சாற்றுடன் சமுத்திராப்பழத்தின் சாற்றை யுஞ் சமபாகமெடுத்துக் கலந்து இரு நாசிகளிலும் நஸ்யமிடவும். ஒருத்தலைவலி தீரும்.

**பத்தியம்:**

சமுத்திராப்பழம்—இது எலுமிச்சை நிகருள்ளது. 5 கீற்றை யுடையதாகவுமிருக்கும். இது கிழக்கு தீபாந்திரங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

---

# 239. ஒருத்தலைவலிக்கு நசியம்.

திரிகடுகுஞ் சமுத்திராப்பழம் ரெண்டுந்
திறமான நொச்சியிலைச் சார்தன்னிற்றேய்த்து
வரிசையுட னசியஞ்செய் அஞ்சுதுள்ளி
வஞ்சாறு நாளந்தி சந்தியுந்தான்
ஒருத்தலையின் வலியெல்லாந் தீரும்பாரு
வுலகினுக்காய் தஞ்சைநகர் தன்னையாளும்
அரசன்சர போசிமகா ராசனிந்த
அற்புதமா நசியத்தை யருளினரே (௫௫அ)

(இ. ள்.)

சுக்கு
திப்பிலி
மிளகு
சமுத்திராப்பழம்

இவைகளைச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு நொச்சியிலைச் சாற்றினுல் நன்ருக வரைத்து தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் 5 துளி வீதம் 5 அல்லது 6 நாட்கள் இரு நாசிகளிலும் நஸ்யமாகவிடவும். ஒருத்தலைவலி தீரும்.

---

# 240. ஒருத்தலைவலிக்கு நஸ்யம்.

இந்துப்புச் சமுத்திராப் பழம்ரெண்டு
மிதமான கோமூத்திர மதனிற்றேய்த்து
அந்திசந்தி பத்துநாள் நசியஞ்செய்நீ
யணுகாது ஒருத்தலையின் வலிகள்தானும்
பந்துசன போஷகராங் கவிவல்லோரை
பரிபாலனஞ் செய்வள்ளல் பண்பாந்தஞ்சை
சந்திரமுக துளசேந்திர னீன்றபாலன்
சரபேந்திர னிச்சயித்த நசியமாமே (௫௫௧)

(இ.ள்.)

இந்துப்பு
சமுத்திராப்பழம்

இவ்விரண்டையுஞ் சமமெடுத்துக் கல்வத்திலிட்டுப் பசு மூத்திரம்விட்டு காலையிலும் மாலையிலும் 5 துளி வீதம் 10 நாளைக்கு நஸ்யஞ் செய்யவும். ஒருத்தலைவலி தீரும்.

---

## 241. ஒருத்தலைநோய்க்கு முழ்க எண்ணெய்.

ஆமணக்குமுகி ழெலிமிச் சம்பழச் சாறுதனி
லரைத்தெண்ணெய் தனிற்குழப்பிக் கொதிக்கவைத்து
நீமனதோ டேதேய்த்து வைத்திருந்து
நிசமாக மறுநாள்வெந் நீரில்மூழ்கு
நேமணக்குத் தப்பாம லொருத்தலைநோய்
நிற்கும்பார் சிவகிருபை யதினாலிந்த
பூமணத்தா ரணிபுயனுந் தஞ்சையாளும்
பூபாலன் சரபேந்திர னருளிதாமே (௩௬௰)

(இ.ள்.)

ஆமணக்குமொக்கை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக அரைத்து ($\frac{1}{2}$ பலம்) நல்லெண்ணெயி (1 சேர்)ல் குழப்பி யடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து வடிக்கவும். இதைத் தலை நோயுள்ளவர் தலையில் தேய்த்துக்கொண்டு மறுநாள் வெந்நீரில் ஸ்நானஞ் செய்யவும். ஒருத்தலைவலி தீரும்.

---

## 242. ஒருத்தலைநோய்க்குப் புகை.

ஏலமதைப் பொடிசெய்து சீலைதன்னி
லேயிட்டுந் திரித்துவிளக்கிற் கொளுத்தி

ஆலமுண்ட கண்டர்பதந் தன்னைப்போற்றி
அன்பாகப் புகையதனை யந்திசந்தி
சாலமகிழ்ந் தேபுகையை மூக்கிற்கொள்ளு
தப்பாமற் பத்துநா ளொருத்தலைநோய்
ஓலமிட்டே யோடுந்தஞ்சை நகரையாளு
முற்றவிபு வுணர்ந்தபுகை யதுதப்பாதே (௩.சூ.௧)

(இ.ள்.)

ஏலக்காயின் அரிசியை நன்றாகப் பொடிசெய்து ஒரு சிறிய வெள்ளைத் துணியில் முடிந்து திரிசெய்து விளக்கில் கொளுத்தி கடவுளை தியானித்து, காலையிலும் மாலையிலும் அப்புகையை மூக்கில் கொள்ளவும். 10 நாளில் ஒருத்தலைவலி தீரும்.

---

## 243. ஒருத்தலைவலிக்கு நசியம்.

நாயுருவி யின்வேரை யரைத்துக்கொண்டு
நல்லெண்ணெய் தனிற்கலந்து நீதானேயு
பாயமுட னசியஞ்செ யந்திசந்தி
யுற்பனமா யஞ்சுதுள்ளி தப்பாமற்றுன்
சாயுமொருத் தலைநோயுந் தீரும்பாரு
தப்பாமற் சிவகிருபை தன்னாலுந்தான்
நீயுமிதைச் செய்துபார் தஞ்சையாளு
நிருபன்சர பேந்திரனுணர் நசியமாமே (௩.சூ.௨)

(இ.ள்.)

நாயுருவி வேரைக் கொண்டுவந்து, அம்மியிலிட்டரைத்து, ($\frac{1}{2}$ பலம் விழுதெடுத்து) நல்லெண்ணெயில் (1 சேர்) குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து, தினமும் காலையிலும் மாலையிலும் 5 துளிகள் வீதம் நாசிகளில் இடவும். தலைநோய் தீரும்.

---

# 244. நேத்திரத்தில் புண்ணுக்கு மருந்து.

நேத்திரத்திற் புண்ணிருந்தா லதற்குமஞ்சள்
நேராகச் சீவியே யெருக்கம்பாலே
யூத்தியே யூறவைத்து நாளஞ்சாறுநா
ளுலர்த்தியே தேய்த்துவிழி தன்னிற்போட்ட
மாத்திரத்திற் புண்ணுறுங் கயிலைமேவு
மகாதேவ ரருளாலே முன்னோர்சொன்ன
சாத்திரத்தை நெடுநாளா யுணர்ந்தாராய்ந்த
சரபோசி மகாராச னருளிதாமே (௩௪௩)

(இ. ள்.)

மஞ்சளின் (வரளி) மேலுள்ள புறணியை நீக்கி, அது முழுகு மளவு எருக்கம்பால்விட்டு நன்றாக ஊறவைக்கவும், 4 அல்லது 5 அல்லது 6வது நாள் எடுத்து நிழலிலுலர்த்திக்கொண்டு, அதைத் தண்ணீரிலிழைத்துக் கடுகளவு கண்களில் போடவும். நேத்திரத்திலுள்ள புண்கள் ஆறும்.

இம்மருந்தைச் செய்து, 4 மாதஞ்சென்று உபயோகிக்க வேண்டும்.

---

# 245. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

கடல்சூழும் புவியதனில் மானிடர்க்குக்
கடுசான வொருத்தலை நோய்தனக்கு
அடப்பம்விரை தனையரைத்து மங்கையின்பால்
அதிற்கலந்து அந்திசந்தி பத்துநாளுந்
திடத்துடனே யஞ்சுதுள்ளி நசியஞ்செய்நீ
தீருமொருத் தலைநோயுந் தப்பாமற்றான்
தடக்களிறு மேற்பவனி வருகெம்பீர
சரபேந்திர னிர்ணயித்த நசியந்தானே (௩௪௪)

(இ-ள்.)

அடப்பம் விதையை (வாதுமைப் பருப்பை) முலைப்பாலிலிழைத்துத் தினமும் காலை மாலை யிருவேளைகளிலும் 5 துளிகள் வீதம் 10 நாளைக்கு நஸ்யமிடவும். ஒருத்தலைவலி தீரும்.

---

## 246. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

பொன்னுங்கா ணிதன்னை வாய்பேசாமற்
பிடுங்கிவந்து நறுக்கியந்தச் சாறதன்னை
நன்றாக நசியஞ்செய் நாலஞ்சாற்நாள்
நலமாக வந்திசந்தி நாலுதுள்ளி
யென்றுசொன் னேனென்று தேலோகத்
திருக்குமனுக் கொருத்தலைநோ யுடனேதீரு
மன்றுளிற் றமிழ்வளர்த்த பாண்டியனே
ரண்ணல்சர பேந்திரனுணர் நசியந்தானே (உசரு)

(இ-ள்.)

பொன்னுங்காணியைச் சமூலமாக வாய்பேசாமற் பிடுங்கிவந்து கல்லுரலிலிட்டு நசுக்கிப் பிழிந்து, அதன் சாற்றை நான்கு துளிகள் வீதம் தினமும் காலையிலும் மாலையிலுமாக 4 அல்லது 5 அல்லது 6 நாட்களோ இரு நாசிகளிலும் நஸ்யஞ் செய்யவும். தலைநோய்கள் (ஒருத்தலைவலி) தீரும்.

---

## 247. ஒருத்தலைவலிக்கு நசியமும் பத்தும்

சுரிமூலிவேர் கோமூத்தி ரத்தினன்றாய்ச்
சுகமாக வரைத்தந்தி சந்தியுந்தான்
சரியாக எட்டுநாள் நசியஞ்செய்நீ
தப்பாம லொருத்தலையின் வலியுந்தீரும்

உரைவேரை வசம்புமிள குடனரைத்து
வுற்றநெற்றி தனிற்பூசத் தீரும்நோயும்
அரியயனுங் காணுத பரமர்பாத
மலர்ச்சிக்கும் விபுவுணர்ந்த திதுதப்பாதே (௩௬௬)

(இ.ள்.)

சுரிமூலி (ஈச்வரி மூலி அல்லது பெருமருந்து) வேரைக்கொண்டு வந்து பசுமூத்திரம்விட்டு அரைத்துத் தினமிருவேளை வீதம் 8 நாளைக்கு நஸ்யஞ் செய்யவும். ஒருத்தலைவலி நிச்சயமாகத் தீரும்.

(2) ஷை வேரை, வசம்பு, மிளகு இவற்றுடன் சேர்த்து தண்ணீர் விட்டு நன்ருக அரைத்து நெற்றியிலும் பூசவும், தலை நோய் தீரும்.

---

# 248. தலைநோய்க்குக் கண்ணிலிட மருந்து.

செப்புநெருஞ் சியின்வேரைக் கொண்டுவந்து
சீரான நீரிலுரைத் தேநோய்ப்பக்கம்
உற்பனமாய்க் கண்ணிலிட வொருத்தலைநோ
யோடுமிது வந்திசந்தி யிரண்டுநேர
மிப்புவியில் மனிதருக்காய் முன்னோர்சொன்ன
வியல்பான சாத்திரத்தை யுணர்ந்துணர்ந்து
விற்பனமாய் நிதானித்தத் தஞ்சையாளும்
விபுசொல்முறை தப்பாமற் செய்துபாரே (௩௬௭)

(இ.ள்.)

செப்பு நெருஞ்சியின் வேரைக் கொண்டுவந்து, தண்ணீர் விட்டிழைத்து நோயுள்ள பக்கத்திலுள்ள கண்ணிலிடவும். தினம் காலையிலும் மாலையிலுமிடவும். ஒருத்தலைவலி தீரும்.

# 249. தலைநோய்க்கு நசியம்.

செவ்வகத்தி யிலையதனை நறுக்கிச்சாற்றைச்
சீருடனே வொருத்தலைநோய் வலியின்பக்க
மெவ்வுரையுங் கேளாதே யந்திசந்தி
யிரண்டுநே ரமுநசியஞ் செய்துபாரு
கவ்வுமொருத் தலைநோயுந் தீரும்லோகக்
கடவுள் கிருபையினாற் கடலுஞ்சூழ்ந்த
இவ்வுலகிற் றஞ்சைநகர் தன்னையாளு
மிறைவன்சர பேந்திரனுணர் நசியந்தானே (௩சுஅ)

(இ-ள்.)

செவ்வகத்தியிலைச்சாற்றை யெடுத்து ஒருத்தலைவலியுள்ள பக்கத்து நாசியில் தினம் காலையிலும் மாலையிலுமாக நஸ்யஞ் செய்துவர ஒருத்தலைநோய் தீரும்.

---

# 250. ஒருத்தலைநோய், மூக்கிலிரத்தம் விழுகிறதற்குப் புகை.

மஞ்சளுடன் கடுகுரோ கணிவசம்பு
வகைமூன்றுஞ் சரிகூட்டிப் பொடியதாக்கி
யுஞ்சேலை தனில்வைத்துத் திரித்துக்கொண்டு
யுற்பனமாம் விளக்கினிலே கொளுத்திக்கொண்டு
சஞ்சலமி லாமலந்தப் புகையைக்கொள்ளு
தவறாமல் மூக்கிரத்த மொருத்தலைநோ
யஞ்சுமுயர் தஞ்சையையாள் விபுவுணர்ந்த
அருமையுள்ள புகையிதுவே செய்துபாரே (௩சுகூ)

(இ-ள்.)

மஞ்சள்
கடுகுரோகிணி
வசம்பு

இம்மூன்றையுஞ் சமமெடுத்துத் தூள்செய்து, ஒரே சீராக ஒரு வெள்ளைத் துணியில் பரப்பித் திரியாகத் திரித்துக்கொள்ளவும். இதையொரு விளக்கில் கொளுத்திக்கொண்டு அதிலிருந்து எழும்பும் புகையை முகரவும். மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகுதல், ஒருத் தலைவலி, இவை தீரும்.

---

## 251. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

பொன்னுங்கா ணியின்வேரைப் பிடுங்கிவந்து
பூவைமுலைப் பாலைவிட்டு நறுக்கியேதா
னன்றுக மூன்றுநா ளிரண்டுநேரம்
நசியஞ்செய் யஞ்சுதுளி யொருத்தலைநோய்
சின்னுபின் னப்பட்டு வோடுமந்த
சிவகிருபை யதினலே செய்துபாரு
வொன்னுர்கள் வகுடமுடி சிதரவெட்டு
முற்றதஞ்சை மானுவுணர் நசியமாமே (௩௭௰)

(இ.ள்.)

பொன்னுங்காணி வேரை முலைப்பால்விட்டு நசுக்கித் தினமிரு வேளை 5 துளிகள் வீதம் மூன்று நாளைக்கு நஸ்யம் செய்யவும். ஒருத்தலை நோய் குணமாகும்.

---

## 252. ஒருத்தலை நோய்க்கு நசியம்.

பாரதனில் மனுக்குவொருத் தலைநோய்வந்தால்
பெரும்பூச ணிக்காயை நறுக்கிச்சாற்றைச்
சாரமுள்ள ஆதித்த வாரந்தன்னிற்
றப்பாம னசியஞ்செய் யந்திசந்தி
கோரஞ்செய் யொருத்தலைநோய் தீரும்பாரு
கொற்றவர்கள் பணியதஞ்சை நகரையாளும்

தாரணியும் புயன்சரபோ சேந்திரதீரன்
ருனுணர்ந்தது நசியமிது செய்துபாரே (உ௫க)

(இ.ள்.)

பெரும் பூசனிக்காயை நசுக்கியதன் சாற்றை ஞாயிற்றுக் கிழமையன்று தப்பாமலிருவேளையிலும் நஸ்யம் செய்யவும். ஒருத் தலைவலி தீரும்.

---

## 253. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

சமுத்திராப் பழமெலும்பிச் சம்பழச்சாறு
தனிலரைத்து வலித்தபுறந் தன்னிலேதான்
அமத்திந சியஞ்செய்நீ நாலுதுள்ளி
யஞ்சுநா டன்னிலொருத் தலைநோய்தீருஞ்
சமத்துடனே செய்கடவுட் கிருபைதன்னாற்
தஞ்சைனகர் தனையாளுந் தர்மராச
னமைத்ததிந்த முறையதனைச் செய்துபாரு
அண்ணல்சர பேந்திரனுணர் நசியமாமே (உ௫உ)

(இ.ள்.)

சமுத்திராப்பழத்தை எலுமிச்சம்பழச் சாற்றினிலரைத்து ஒருத் தலைவலியுள்ள பக்கத்து நாசியில் 4 துளிகள் வீதம் 5 நாளைக்கு நஸ்யஞ்செய்யவும். தலைவலி தீரும்.

---

## 254. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

வடக்கேபோந் தேற்றும்வேர்ப் பிடிங்கியுள்ளி
வசம்புவகை மூன்றுஞ்சரி யாகக்கொண்டு
முடுக்கான முலைப்பாலி லந்திசந்தி
மூன்றுநாள் நசியஞ்செய் யொருத்தலைநோ

யெடுக்காது நோய்தீருங் கயிலைமேவு
யீசருட கிருபையினாற் றஞ்சைதன்னை
மிடுக்காக வாண்டுமனு நீதிதப்பா
விசையன்தஞ்சை விபுவுணர்ந்த நசியந்தானே (௩எ௩)

(இ-ள்.)

வடக்கு நோக்கிப்போகும் தேற்றானின் வேரைப் பிடுங்கிவந்து அதற்குச்சரி எடை, வெள்ளுள்ளியும், வசம்பும் கூடச் சேர்த்து, முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துத் தினமும் காலையிலும் மாலையிலும் 3 நாளைக்கு நஸ்யம் செய்யவும்; ஒருத்தலைவலி தீரும்.

---

# 255. ஒருத்தலைநோய், சுளுக்கு, கண்ணோய், பேய், விப்புருதி, முகமறியா வீக்கத்துக்கு மோதிரம்.

சங்குசிறுப் புள்ளடிநொச் சிலிலைக்கள்ளி
சாற்றும்வேர் நாலுஞ்சரி யாகக்கொள்ளு
இங்கிதக்கொட் டைக்கரந்தை விடத்தேர் கள்ளி
இதமான செவ்வரளி துடரி ஐந்தும்
பொங்கமுடஞ் சரிகள்ளி வறளுங்கூட்டு
புதியமரு தமரத்தோ லிவைகளெல்லாஞ்
சங்கையுள்ள வெள்ளாட்டுப் பாலுழக்குத்
தானேவிட் டரைத்துவந்த பாலிற்றானே (௩எ௪)

பாலிலே யதைக்கரைத்துக் கொண்டே தானோர்
பானைதனி லிட்டிரும்பின் மோதிரத்தைச்
சாலவே போட்டடுப்பி லேத்தித் தீயைத்
தானெரிநீ யுபாயமுடன் தீயைத்தானே
பாலதுவுஞ் சுண்டிவரும் போதுநீயும்
பார்த்தெடுநீ மோதிரத்தைப் பதனமாகச்

சோலிசெயு மொருத்தலேனுய் வலியின்பக்கந்
தொட்டுவொத்த வலியெல்லாந் தீருந்தானே (௩எரு)

தீரும்பார் சுளுக்கு கண்ணேய் பேயும்விப்புருதியு
முகமறியா வீக்கத்துக் கொத்தியொத்தி
பாருநீ மூன்றுநே ரத்துக்குத்தான்
பறக்குமிந்தனேயெல்லாம் பண்பதாகச்
சீருஞ்செல் வமுமருளுங் கைலேமேவுஞ்
சிவகிருபை தன்னுலே சிறந்தவெற்றித்
தாரும்நவ ரத்தினமணி குலவுத்தோளான்
சரபோசி மகாராச னருளிதாமே (௩எசு)

(இ.ள்.)

சங்கு
சிறுபுள்ளடி
நொச்சிவேர்
இலேக்கள்ளி

இவைகளின் வேரைச் சமமாக எடுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| கொட்டைக்கரந்தை | செவ்வரளி |
| விடத்தேரி | துடரி |
| கள்ளி | மருதமரப்பட்டை |

இவைகளேயும் சமம்கூட்டி, எல்லாவற்றையும் கல்லுரலி லிட்டிடித்து, வெள்ளாட்டுப்பால் ஒரு உழக்கும் கூடவிட்டு நன்ருக அரைத்து அந்தப்பாலிலேயே குழப்பிக்கொண்டு ஒரு பானேதனி லூற்றவும். அதிலொரு இருப்பு மோதிரத்தையிட்டு அடுப்பின் மேலேற்றிச் சிறு தீயாகயெரிக்கவும். பால் சுண்டினவுடன் மோதிரத்தை யெடுத்துக்கொண்டு கழுவிக்கொள்ளவும். ஒருத்தலே நோயுள்ளவர்கள் இம்மோதிரத்தால் வலியிருக்கும் பக்கத்தில் தேய்க்கவும். நோய் தீரும்.

சுளுக்கு, கண்ணேய்கள், பேய், முகமில்லாத வீக்கம், இவைகளுக்கு இதை தினம் 3 வேளேக்கு ஒற்றிவரவும். இந்நோய்கள் தீரும்.

# 256. ஒருத்தலைவலிக்கு நசியமும், பத்தும்.

ஈசுரமூ லியின்வேரை கோசலத்தி
லேயரைத்து நசியஞ்செய் யந்திசந்தி
ஓசையுட னொருத்தலைநோய் தீருமவ்வே
ருடன்மிளகு வசம்புநீ ராலரைத்துப்
பூசுநெற்றி வலிப்புறத்தில் வலிகளெல்லாம்
போகுஞ்சிவ கிருபையினாற் றவமேபெற்றத்
தேசுமிகு துளசேந்திர னீன்றபுத்திரன்
செல்வன்சர பேந்திரனுணர் நசியம்பத்தே (௩௭௭)

(இ-ள்.)

(i) ஈ சு வ ர மூ லி (பெருமருந்து)யின் வேரைக் கொண்டு வந்து பசுமாட்டு மூத்திரத்தில் அரைத்துத் தினம் காலையிலும் மாலையிலும் மூக்கில் நஸ்யமிடவும். ஒருத்தலைவலி தீரும்.

(ii) அவ்வேருடனே, வ ச ம் பு, மிளகு முதலியவைகளையும் கூட்டித் தண்ணீரினாலரைத்து, வலியுள்ள பக்கத்து நெற்றியில் பூச வலிகள் தீரும்.

---

# 257. ஒருக்காலுந்தீராத ஒருத்தலைநோய்க்குப் புகை.

ஒருத்தலைநோய் நெடுநாட்போ காதிருந்தா
லுரைக்கக்கேள் மூக்கன்பாம் பின்சதையுத்
திருத்துகுள விந்தமஞ்சள் காஞ்சிரங்கொட்டை
சேர்மூன்றுஞ் சரியாகச் சூரணித்து
வருத்தாமல் வெள்ளியதோர் துணியில்கட்டு
வகையாகத் திரித்துநீ வைத்துக்கொள்ளு
உருக்கமுட னதுவென்னு ளிருக்கும் பாரு
வொருதிரியை நோவுவந்த பேர்க்குத்தானே (௩௭அ)

எண்ணெய்தனிற் றேய்த்துவிளக் கிற்கொளுத்தி
யிப்புகையை மூன்றுநால் முறையுந்தானே

வண்ணமிகு நாசியிலே புகையைக் கொள்ளு
வலுத்தவொருத் தலைநோயுந் தீருங்கண்டாய்
அண்ணுமுத லொருத்தலைநோ யென்பதுந்தான்
அணுகாது சிவகிருபை யதினாற்றஞ்சை
யண்ணல்சர பேந்திரனுணர் முறையதாகு
மன்பாக நீயுமதைச் செய்திடாயே (௩எசு)

(இ.ள்.)

மூக்கன் பாம்பின் சதை;
மஞ்சள்
காஞ்சிரங்கொட்டை (எட்டி)

இம்மூன்றையுஞ் சமமெடுத்துச் சூரணித்து, ஒரு சாண் நீள அகலமுள்ள வெள்ளைத்துணியில் ஒரே சீராகத் தூவித் திரியாக்கிக் கொள்ளவும். தலைவலி வந்தபேர்கள் இத்திரியை நல்லெண்ணெயில் தோய்த்து விளக்கில் கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையை 3 அல்லது 4 தடவை நாசிகளில் கொள்ளவும். தீராத ஒருத்தலைவலி தீரும்.

---

## 258. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

குப்பைமேனி வேருள்ளி வசம்பு மூன்றுங்
கூட்டிநறுக் கிச்சாறை யந்திசந்தி
யுற்பனமா நசியஞ்செய் யஞ்சு துள்ளி
யுடனேயொருத் தலைநோயுந் தீரும் பாரு
செப்பியதொன் றும்பொய்யா திதையும் நீயும்
செய்துபார் சிவகிருபை தன்னாலிந்த
அற்புதமாந் தஞ்சைநகர் தன்னையாளு
மண்ணல்சர பேந்திரனுணர் நசியமாமே (௩அ௰)

(இ.ள்.)

குப்பைமேனிவேர்
பூண்டு
வசம்பு

இம்மூன்றையும் நசுக்கி ஒரு வெள்ளைத்துணியிலிட்டு, முடிச்சாகக்கட்டி, இரு நாசிகளிலும் தினம் காலையிலும் மாலையிலுமாக 5 துளிகள் வீதம் இதன் சாற்றைப் பிழியவும். ஒ ரு த் த லை வ லி தீரும்.

# 259. ஒருத்தலைநோய்க்கு நசியம்.

நெய்யிலே பேய்ப்புடல்வேர் தன்னைப்போட்டு
நேராக வெரித்துவதைத் தானே நசியஞ்
செய்யவே யொருத்தலைநோ யென்பதெல்லாம்
தீரும்பார் பத்துநா டன்னிலேதான்
அய்யனறு முகன்றந்தி முகனையீன்ற
வமலனரு ளாற்றஞ்சை நகரை யாளுஞ்
செய்யதுள சேந்திரனருள் சுபுத்திரனை
தீரன்சர பேந்திரனுணர் நசியமாமே (௩அக)

(இ.ள்.)

பேய்ப்புடல் வேரை நெய்யிலிட்டுச் சிவக்கும்படி பொரிக்கவும். பின்பு வேரை எடுத்துவிட்டு நெய்யைப் பத்திரப்படுத்தி இதை நஸ்யமிடவும். 10 நாட்களில் ஒருத்தலைவலி தீரும்.

# 260. தலைவலிக்கு முகர மருந்து.

அலரியிலை யுங்கருஞ்சீ ரகமும்நல்ல
வம்மிதனில் நறுக்கியொரு துணியிற்கட்டி
நலமுடைய கையில்வைத்து முகந்துக்கொள்ள
நசல்செய்யுந் தலைவலியு முடனேதீருங்
கலகலெனக் காற்சிலம்பு பூண்டசெல்வி
கன்னியுமை யிடப்பாகக் கடவுள் பாதம்
பலநாளு மறவாமற் றஞ்சையாளும்
பார்த்தன்சர பேந்திரனுணர் முறையதாமே (௩அஉ)

(இ,ள்.)

அரளியிலை கருஞ்சீரகம்

இவ்விரண்டையும் அம்மியிலிட்டு நசுக்கி ஒரு துணியில் முடிந்துகொண்டு கையில் வைத்து அப்போதைக்கப்போது முகர்ந்துவரத் தலைவலி தீரும்.

---

## 261. தலைவலிக்குப் புகை.

சந்தன மிலாமிச்சம் வேரினோடே
சதிரான பெருங்காய மூன்றுங்கூட்டி
சுந்தரிநற் பாலிலரை சேலைதன்னிற்
துரிசாகத் தடவிதிரி செய்துக்கொண்டு
விந்தைபெரு நல்லெண்ணெய் தன்னிற்றோய்த்து
விளக்கினிலே கொளுத்திபுகை மூக்கிற்கொள்ளு
யெந்தவிதம் வந்ததலை வலியும்போகு
மெழிற்றஞ்சை யாளும்விபு வுணர்ந்ததாமே (ங அங)

(இ.ள்.)

இம்மூன்றையுஞ் சமமாக எடுத்துக் கல்வத்திலிட்டு முலைப் பால் விட்டரைத்து ஒரு துணியில் அவ்விழுதையொரே சீராகத் தடவிக்காயவைத்து, திரியாகச் செய்துகொள்ளவும். இதை நல்லெண்ணெயில் தோய்த்து விளக்கில் கொளுத்தி அதிலிருந்து எழும்பும் புகையை நாசிகளில் கொள்ளவும். எவ்விதத் தலைநோயும் தீரும்,

---

## 262. தலைவலிக்கு வேறு.

கடலடம்பு வெள்ளடம்பு பிலனித்தண்டு
கானகோவைத் தண்டிவைகள் நாலுந்தானே
அடவுடனே சமனுகத் தரித்துப்பானை
யதிலிட்டுத் தண்ணீர்விட்டு அனலில்வைத்துத்

திடமுடனே யிறக்கியே வேதுகொள்ளு
 தினமிரண்டு வேளையுந்தான் மூன்றுநாளும்
பிடியுடனே கபாலவலி நேத்திரசூலை
 பலமான தலைவலியும் போகுந்தானே (௩அச)

(இ.ள்.)

கடலடம்பு
வெள்ளடம்பு
பிலனித்தண்டு
கோவைத்தண்டு

இவைகளைச் சமனாக எடுத்து இடித்து ஒரு பானையில் போட்டுத் தண்ணீர் விட்டு, அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சி இறக்கவும். இதிலிருந்து எழும்பும் ஆவியை தினம் இரண்டு வேளைக்கு வேது பிடிக்கவும். 3 நாளைக்குச் செய்யவும்.

கபாலவலி, நேத்திரசூலை, தலைவலி முதலியவைகள் தீரும்.

---

## 263. தலைவலிக்குப் பூசுமருந்து.

அருகம்வேர் பசுவின்பால் விட்டரைத்து
 அதைப்பூசு புருடனுக்கு இடதுபக்க
மரிவையற்கு வலதுபக்கந் தன்னிற்பூசு
 அடர்ந்ததலை நோயென்ப துடனேதீருந்
திருவிருக்கு மணிமார்பன் றேவர்கோமான்
 செகபதியாந் துளசேந்திரன் செல்வனானோன்
றருவிருக்குங் கரதலத்தான் சரபபூபன்
 றானுணர்ந்த பத்திதுவும் நீயுஞ்செய்யே (௩அரு)

(இ.ள்.)

அருகம் வேரைப் பசுவின்பால் விட்டரைத்து புருடனுக்கு தலைவலியானால் இடதுபுறத்து நெற்றியில் பூசவும். ஸ்திரீக்குத் தலைவலியேற்பட்டால் வலதுபுறத்தில் பூசவும்.

தலைவலி உடனே தீரும்.

# 264. தலைவலி, கபாலசூலை சிரோரோகத்துக்கு மூழ்க யெண்ணெய்.

வாதமடக்கிச் சாறுநொச் சிச்சாறேடே
மாவலிங்கைச் சாறுமரைப் படிதான் மூன்றுஞ்
சாதகமா மணக்கெண்ணெய் நல்லெண்ணெய்தான்
சாற்றும்வேப் பெண்ணெய்வகைப் படியுங்காலா
மோதும்வெள் ளாட்டின்பால் படியேதானு
மொன்றரையாங் கற்கம்வாய் விளங்கந்திப்பிலி
சாதுரிய மரமஞ்சள் மிளகுசுக்கு
சமமதாமா றும்வராக னிடையைந்தே (௩அசு)

இடைசரியா யுலர்த்திப்போ டிடித்துத்தூளா
யெண்ணெய்தனி லேகலந்து அடுப்பிலேற்றி
அடவுடைய எண்ணெய்நிற்கப் பதமாய்க்காய்ச்சி
அதைவடித்து வைத்துக்கொண் டவனியோர்க்கு
உடம்புமுதற் றலையெல்லா மெண்ணெயிட்டு
ஒன்றுவிட்டோர் நாள்தேய்த்து வைத்திருந்து
திடமுடைய இளவெந்நீ ரிட்டுமூழ்கு
சிரோரோக மென்பதெல்லாந் தீருந்தானே (௩அஎ)

தீருமே தலைவலிகள் கபாலசூலை
சிரோபார மென்பதெல்லா முடனே வாங்கும்
பாரிதற்கு மாங்கிஷமா காதுவுப்புப்
பலமான புளியுங்கைப் பாகாதென்றே
சீருடைய வறிஞர்சொன்ன முறையதன்னைத்
தினந்தோறு மாராய்ந்து அறிவினாலே
பாரில்மிகு கீர்த்திபெரு சரபோசேந்திர
பார்த்தனிதை நிர்ணயித்த பண்பதாமே (௩அஅ)

(இ.ள்.)

வாதமடக்கிச்சாறு நொச்சிச்சாறு
மாவலிங்கச்சாறு

இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ படி

ஆமணக்கெண்ணெய் படி $\frac{1}{4}$ வேப்பெண்ணெய் படி $\frac{1}{4}$
நல்லெண்ணெய் ,, $\frac{1}{4}$ வெள்ளாட்டுப்பால் ,, $\frac{1}{2}$

இவைகளை யொன்று கலந்து

வாயுவிடங்கம் திப்பிலி
மரமஞ்சள் சுக்கு
மிளகு

இச்சரக்குகளை வகைக்கு 5 வராகனெடையெடுத்து, உலர வைத்துக் கல்லுரலிலிட்டிடித்துத் தூள் செய்து, சாறுகூட்டிய எண்ணெயுடனே கலந்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி இறக்கவும். இதை வடிக்கட்டி யெடுத்துக்கொண்டு, தலை, உடம்பு முதலிய பாகங்களில் தேய்த்துக்கொண்டு, இளவெந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

இரண்டு நாட்களுக்கொருமுறை தலைமுழுகவும். சிரோரோகங்களனைத்தும் தீரும். கபாலசூலை, சிரோபாரம் இவை போகும்.

இதற்குப் பத்தியம்:— மாமிசம், உப்பு, புளி, கசப்பு முதலியவை நீக்கவும்.

---

# 265. ஒருத்தலைநோய்க்குக் குத்துமருந்து.

ஒருத்தலைநோ யின்றனக்குக் குணத்தைக்கேளு
ஒருபாரி சத்தினெறி யிசிவாய்த்தானே
பொருக்கமுடி யாதுகண்ணும் விழிக்கக்கூடாப்
பொல்லாத வலிவெகுவாய் வாதைசெய்யும்
வருத்துமொன்றின் மேலும்நினை வில்லாமற்போம்
வாய்க்கசனஞ் செல்லாது மயங்கும்புத்தி
தருக்கிறைவன் சரபோசி மகாராசன்றுன்
சமத்தாக விதற்குரைத்த மருந்தைக்கேளே (௩அகூ)

மருந்துகேள் வெள்வெங்கா யப்பூண்டொன்று
வதைத்துவதைச் சேலைதனிற் பொட்டணங்கட்டி
வருத்துஇடப் புறம்வலித்தால் வலதுபக்கம்
வலதுபுறம் வலித்தாலே யிடதுபக்கம்

திருத்தியகா திற்கொடு மாறித்தானே
திடமாகக் காதினிலே குத்துநன்று
யிருத்துசாய்ந் திருந்தபடி யேதானீயு
மிருகாது வலிவெகுவா யாகுந்தானே (௩௯0)

ஆகுமுடம் புவேர்க்கு மெற்றவாதை
யாயிருக்கும் பொறுக்கமட்டு மிருந்துநீதான்
வேகமதி கமானு லதற்கு மாற்று
விளம்புகிறேன் மங்கைமுலைப் பாலைத்தானே
சாகிருதை யாய்முன்பு தானேவைத்துத்
தன்னையுட னேகாதிற் குத்துநன்றுய்ப்
போகுமொருத் தலைநோய்கள் முன்புவுள்ளி
பிழிந்தபோ தேகீழே யிருந்தகாதே (௩௯௧)

காதினிலே நீருவரு மந்நீரைத்தான்
கைவிரல்ந கத்தாலே வாங்கிப்போடு
சாதகமா யிதைச்செய்நீ தப்பாமற்றுன்
றபோதனர்க ளுரைத்ததுல ருக்காயிந்தப்
போதனைசெய் வைத்தியத்தை நாள்கள்தோறும்
புத்தியினு லுணர்ந்ததுள சேந்திரனீன்ற
காதலனுஞ் சரபோசி மகாராசேந்திரன்
கருத்தினு னிச்சயித்த முறையதாமே (௩௯௨)

(இ.ள்.)

ஒருத்தலைவலியின் குறிகுணம்:—

ஒருபாகத்து நெற்றி பொறுக்கமுடியாதபடி வலிக்கும். கண்களை விழிக்கமுடியாமல் வலி துன்புறுத்தும். நினைவு தடுமாறும் சாப்பாடு செல்லாது. புத்தி அடிக்கடி மயங்கும். இதற்கு

மருந்து:-

வெள்ளை வெங்காயம் (பூண்டு) ஒரு பல்லை நசுக்கி யொரு புதுத்துணியில் பொட்டணமாகக் கட்டி இடது புறத்தலை நோவெனில் வலது காதிலும், வலதுபுறத் தலைவலியாகில் இடது காதிலும் பிழியவும். பின்பு, பொறுக்கும்வரை சாய்ந்தபடியிருக்கவும். உடம்பு வேர்க்கும், உடம்பையும் அலட்டும். வாதை தாங்காமல்போனுல் முலைப்பாலைச் சித்தமாக வைத்திருந்து அதைக் காதினுள்ளூற்றவும். ஒருத்தலைநோய் தீரும். உள்ளிச்

சாற்றை யூற்றியபின், காதிலிருந்து வரும் நீரை நகத்தினுலெடுத்துத் தெரித்துவிடவும். இம்மாதிரியாகச் செய்துவரவும்.

---

# 266. பெருந்தலைவலிக்குப் பத்து.

பெருந்தலைநோய்க் கொருமருந்து சொல்லக்கேளு
பேசாம லொருமனதா யிருந்துகொண்டு
எருக்கம்வே ருங்கடுகு நேகத்தானே
கல்வத்தி லிட்டரைத்துத் தலையிற்றப்ப
உரத்ததலை வலிதீரு மருந்தவத்தோ
ருரைத்தமுறை யதைத்தஞ்சை நகரையாளுந்
துரந்தரனுய் நீதிசெலுத் துங்கம்பீரத்
துரைகள்சிகா மணியுணர்ந்த பத்திதாமே (௩௯௩)

பொன்னுலகோர் முனிவருல ருக்காய்முன்னுல்
போதித்த வைத்தியத்தை யுணர்ந்துணர்ந்து
தென்னளகை துளசேந்திர னீன்றபாலன்
தீரன்சர போசிமகா ராசன்ருனுஞ்
சொன்னவுரைப் படிக்கிசிரோ ரோகம்நானூற்
ஞெருகவியுஞ் சிறப்பித்து வுசிதமாக
பன்னுதமிழா ற்காரைக் குறிச்சிவாழும்
பாவலன்வே லாயுதனும் பகருநூலே (௩௯௪)

(இ. ள்.)

ஏகாக்ர சித்தத்துடனே எருக்கம் வேரையும், கடுகையும் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு நன்ருக வரைத்துக்கொண்டுத் தலையில் அப்பிவிடவும். மிகவாதை தரும். தலைவலி நிற்கும். சாக்கிரதையாக உபயோகப்படுத்தவும்.

சிரோரோகங்களுக்கான இம்முறைகளைத் தஞ்சை சரபோசி மகாராஜன் நிச்சயித்தபடி காரைக்குறிச்சி வேலாயுதப் பாவலர் செய்யுளாக அமைத்தார்.

குறிப்பு:-

சுவடியில் சில ஏடுகள் காணுமையால் பாடல்கள் 401-ல் 7 பாடல்கள் குறைந்துள்ளன.

முற்றிற்று.

# சிரோரோக வைத்திய முறைகளிலுள்ள மருந்துகளுக்கு அட்டவணை.

[அநேக இடங்களில் மருந்துகளுக்குப் பெயர் கூறப்படாமலிருப்பதால் அவைகளுக்குப் பொருந்தும் பெயர்களையிட்டுப் பிறைக்குறிகளும் (Brackets) இடப்பட்டிருக்கின்றன.]


| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (அகத்திப் பருப்புச் சாறு நஸ்யம்) (ஒருத்தலைவலிக்கு) ... | 181 |
| அக்கிராக்காராதி மருந்து (உதடு வெள்ளைக்கு) ... | 143 |
| (அசமோதாதிச்) சூரணம் (பீனஸத்திற்கு) ... | 54 |
| அசுவகந்தி எண்ணெய் (காது செவிடுக்கு) ... | 7 |
| அடப்பம் விதை நஸ்யம் (ஒருத்தலைநோய்க்கு) ... | 224 |
| அதன வில்வாதித் தைலம் (பீனிஸம், சிரோவாயு, முதலிய மண்டை வியாதிகளுக்கு) ... | 120 |
| (அதிமதுர) நெய் (தலைவலி, கபாலத்துக்கு நஸ்யம்) ... | 200 |
| அத்தி எண்ணெய் (சிர நோய், கண்ணோவு, செவி நோய், உடம்பு வற்றல், உடம்பு கடுப்பு, சலக் கழிச்சல், உஷ்ணத்திற்கு) ... | 17 |
| (அந்தரத் தாமரை)ச்சாறு மருந்து (மயிர் வளர) ... | 144 |
| அமுக்குராத் தைலம் (காது நோய்க்கு) ... | 19 |
| அமுதகலை யெண்ணெய் (பித்த ரோகம், கபால தோஷம், பீனசம், துர்வரட்சி முதலானதற்கு உள்ளுக்கு) ... | 133 |
| (அரப்பொடி) உருண்டை (பல்லசைவிற்கு) ... | 82 |
| (அரப்பொடி) மருந்து ஷை ... | 91 |
| (அரளி கருஞ்சீரகம்) முகர மருந்து தலைவலிக்கு முகர ... | 234 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| அரிமேதாதித் தைலம் (பற்களினசைவு, பற்களில் இரணம், முக ரோகம், துர்வாசனைக்கு | ... | 80 |
| அரிமேதாதி யுருண்டை (தந்த ரோகத்திற்கு) | ... | 77 |
| அருகம் வேர்ப் பூச்சு மருந்து (தலைவலிக்கு) | ... | 236 |
| அருகம் புல் நஸ்யம் (நாசியினுல் இரத்தம் விழுகிற தற்கு) | ... | 104 |
| (அலரித்தைலம்) (மண்டைக் குத்தலுக்கு நசியமிட) | ... | 205 |
| அவுரி இலைச்சாறு மருந்து (உதட்டின் புண்ணிற்கும், வெள்ளைக்கும், புழுவுக்கும் பூச்சு) | ... | 142 |
| (அழிஞ்சில்) வேர்த்தைலம் (பீனஸத்திற்கு மூழ்க) | ... | 51 |
| அன்னபேதிச் சூரணம் (பல் நோய், பல் புழுவிற்கு) | ... | 103 |
| (ஆடாதோடைச்சாறு) மருந்து (நாசியால் இரத்தம் விழுகிறதற்கு குடிமருந்து) | ... | 105 |
| (ஆடு தீண்டாப்பாளை)த் தைலம் கபால வாயுவிற்கு மூழ்க) | ... | 155 |
| (ஆதண்டை) த் தைலம் (பீனசத்திற்கு மூழ்க) | ... | 124 |
| (ஆதண்டை) த் தைலம் (தலைவலிக்கெல்லாம் மூழ்க) | ... | 183 |
| ,, தைலம் (வேறு) | ... | 183 |
| (ஆமலக) த் தைலம் (மயிர் வளர) | ... | 149 |
| (ஆமணக்கம் புஷ்பச்சாறு) மருந்து (காதிரைச்சல் புழுவிற்கு) | ... | 31 |
| (ஆம்பல் மலர்) மருந்து (மூக்கிலிருந்து இரத்தம் கட்டியாய் விழுகிறதற்கு) | ... | 72 |
| ஆயில்ய எண்ணெய் (பல்லசைவு, பல் வீக்கத்திற் குக் கொப்பளிக்க) | ... | 96 |
| ஆயில்ய எண்ணெய் (சிரோ வியாதி பீனசங்களுக்கு) | ... | 165 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (ஆலம் விழுது) நெய் (நாசியால் வருகிற இரத்தக் கிருமிக்கு நஸ்யம்) | ... | 105 |
| (ஆலம் மொட்டாதித்) தைலம் (தலைமயிர் சுருட்டை, செம்பட்டைக்கு) | ... | 148 |
| ஆலம்பட்டைத் தைலம் (காதில் சீழ் வருகிற தற்கு) | ... | 26 |
| (ஆலம் பட்டை)க் குழம்பு (வாய்க்கோணல், கபால வலிப்பிற்கு) | ... | 209 |
| (ஆவாரை விடத்தேரி) உருண்டை (சலதோஷத் திற்கு) | ... | 217 |
| (இஞ்சிச் சாறு) மருந்து (காது வலிக்கு) | ... | 34 |
| (இஞ்சிச் சாறு) நஸ்யம் (ஒருத்தலைவலி, பீனஸம், கபால வலிக்கு நஸ்யமிட) | ... | 195 |
| (இஞ்சித்) தைலம் (பீனஸம், நாஸிகா ரோகத் திற்கு) | ... | 62 |
| (இலைக்கள்ளி) வேர்ப்பட்டை மருந்து (நீர்க் கோர்வைக்கு) | ... | 113 |
| (இந்துப்பாதி) உருண்டை (வாயுவிற்கு) | ... | 208 |
| (ஈச்வரமூலி) நஸ்யம் (ஒருத்தலைவலிக்கு) | ... | 225 |
| ஈச்வர மூலிப் பத்து ஷை (வேறு) | ... | 225 |
| (உத்தாமணிப்) பத்து ஷை | ... | 219 |
| (உவர்மண்) உருண்டை (உண்ணுக்கிற்குத் தடவ) | ... | 140 |
| (ஊமத்தை)ப் புகை (பீனிசத்திற்கு) | ... | 43 |
| (ஊமத்தை) மருந்து (பல்லீறுகளின் வீக்கம், பல் வலிக்கு) | ... | 75 |
| (ஊமத்தையிலை) எண்ணெய் (தலைத்தினவு, கபால குஷ்டத்திற்கு மூழ்க) | ... | 186 |
| (எட்டிக்கொட்டை)க் கல்பம் (நரை திரை மாற) | ... | 152 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (எருக்கிலை) எண்ணெய் (காதில் சீழ் வடிகிறதற்கு) | ... | 24 |
| எருக்கிலைச் சாறு மருந்து (காது வலிக்கு) | ... | 32 |
| எருக்கம் வேர்க்கடுகு பத்து (பெருந்தலைவலிக்கு) | ... | 240 |
| (எருக்கம் பழுப்பு) நசியம் (ஒருத்தலைவலிக்கு) | ... | 179 |
| (எருக்கங்கோல்) புகை (ஒருத்தலைவலிக்கு) | ... | 181 |
| (எருக்கங்கோல்) புகை (பீனிசத்திற்கு) | ... | 70 |
| (எருக்கம்பால்) எண்ணெய் (உடன்வந்த உள் நாக்கிற்கு உச்சியிலிட) | ... | 135 |
| (எருக்கம்பால்) தொடு மருந்து (நெடுநாள் வந்த உள் நாக்கிற்கு) | ... | 136 |
| (எலுமிச்சைத்) தைலம் (நாசியில் நீர் ஒழுகுதல், பீனிசம், கபால சூலைக்கு) | ... | 154 |
| (எலுமிச்சைத்) தைலம் (சிரோ வாயு, கபால சூலை, பித்தம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், பீனிசத்திற்கு வேறு) | ... | 159 |
| (எலுமிச்சை) எண்ணெய் (ஒருத்தலைவலிக்கு) மூழ்க) | ... | |
| (எலுமிச்சை) எண்ணெய் (மண்டைச்சூலைக்கு) | ... | 205 |
| (எலுமிச்சை) எண்ணெய் (தலைவலிக்கு மூழ்க) | ... | 184 |
| (எலுமிச்சை) மருந்து (காதில் சீழ் வடிதலுக்கு) | ... | 27 |
| (ஏலாதிச்) சூரணம் (பீனிசம், சிரப்பயித்தியம், குஷ்டம், சங்கிராணி சூலைக்கு) | ... | 49 |
| ஏலாதிப்புகை (ஒருத்தலைவலிக்கு முகர) | ... | 222 |
| ஏலாதித்தைலம் (ஒருத்தலை நோய்க்கு மூழ்க) | ... | 177 |
| (ஒடுவியிலை) மருந்து (உதட்டுப் புண்களுக்கு) | ... | 140 |
| (ஓமாதி)ப் பத்து (தலைவலிக்கு) | ... | 203 |
| (கடலடம்பாதி) வேது (தலைவலிக்கு) | ... | 235 |

| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (கடுகரோகிணி)த் தேன் (மண்டை வலி, நீர்ப் பாய்ச்சல், பீனசத்திற்கு நசியமிட) ... | 197 |
| (கடுகரோகிணி) எண்ணெய் (காது செவிட்டிற்கு) ... | 5 |
| (கடுகு) எண்ணெய் (காது செவிட்டிற்கும், காதிரைச்சலுக்கும்) ... | 12 |
| (கடுகரோகிணி யாதி) ச் சூரணம் (வாதரோகம், பீனிசத்திற்கு) ... | 119 |
| (கடுக்கா) யெண்ணெய் (காது செவிட்டிற்கு) ... | 7 |
| (கண்டங்கத்திரி) எண்ணெய் (பல்வலி, பல் குத்தல் முதலியவைகளுக்கு முழங்காலில் தடவ) ... | 87 |
| (கண்டங்கத்திரி) விதைப் புகை (பல் வலிக்கு, புழுவிற்கு) ... | 88 |
| (கண்டங்கத்திரி) விதைப் புகை (பல் வலி, பல் புழுவிற்கு) வேறு ... | 89 |
| (கண்டங்கத்திரி)ப் புகை (பல் வலிக்கு) ... | 99 |
| (கண்டங்கத்திரியாதித்) தைலம் (பீனசத்தால் தலை நோய்க்கு மூழ்க) ... | 58 |
| (கண்டங்கத்திரியாதி) எண்ணெய் (நாசிகாரோகத்திற்கு நஸ்யம் பண்ண) ... | 64 |
| (கரந்தை)க் கல்பம் (நரை, திரை மாற) ... | 147 |
| (கருவேலம்பட்டைத்) தைலம் (சிரநோய், கண்ணோய், செவி நோய், கடுப்பு, உடம்பு வற்றல், சலக் கழிச்சலுக்கு) ... | 15 |
| (கருவேலம்பட்டைக்) கஷாயம் பல் வலிக்கு, பல் வீக்கத்திற்குக் கொப்பளிக்க) ... | 88 |
| (கருங்காலிக்) கஷாயம் (பல் வலிக்குக் கொப்பளிக்க) ... | 85 |
| (கருங்காலிப்பட்டை) நீர் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க) ... | 91 |

| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (கருஞ் சீரகாதி)ப் புகை (தலைவலிக்கு) ... | 182 |
| (கருநொச்சி) நெய் (பதினெண் பீனிசம், நீர்ப் பாய்ச்சல், மண்டைச்சூலை, காதிரைச்சல், தும்மல், தந்த சூலை, நேத்திர ரோகம் முதலானதற்கு) ... | 128 |
| (கருஞ்சீரகாதிச்) சூரணம் (சல தோஷத்திற்கு) ... | 117 |
| (கலப்பைக் கிழங்கு) எண்ணெய் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) ... | 174 |
| கல்நார் பற்பம் (தந்த ரோகம், சயம், இருமல், சேத்தும காசம், சுவாச காசம், மந்தார காசத்திற்கு) ... | 79 |
| காக்கைமாரிப் பருப்பு எண்ணெய் (காதில் ஈ புகுந்தால்) ... | 30 |
| காடிக் குழம்பு (தலைவலிக்குப் பத்து) ... | 212 |
| (கீழாநெல்லி)க் குளிசம் (ஒருத்தலை வலிக்கு) ... | 192 |
| (கீழாநெல்லி) மருந்து (பல் வலிக்கு) ... | 93 |
| (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) ... | 48 |
| (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) வேறு ... | 52 |
| (குங்குமாதி) நஸ்யம் (பீனிசத்திற்கு) வேறு ... | 57 |
| (குங்குமாதி) நெய் (இரத்த பீனிசம், சிராய் பீனிசம், சலப்பீனிசம், சுக்கில பீனிசத்திற்கு நசியமிட) ... | 61 |
| (குங்குமாதி) நஸ்யம் (நாசியினால் இரத்தம் வீழ்வதற்கு) ... | 109 |
| (குங்குமாதி) நெய் (மூக்கினீர்ப் பாய்ச்சலுக்கு நசியமிட) ... | 197 |
| (குடூச்யாதி) தைலம் (வாத சோணிதம், பித்தம், தலைவலி, கபாலசூலை, நாசி வியாதிகளுக்கு மூழ்க) ... | 157 |
| (குதிரை லெத்தி) எண்ணெய் (செவியடைப்பிற்கு) ... | 5 |

| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (குப்பைமேனி) எண்ணெய் (காதில் சீழ்வருகிறதற்கு) ... | 25 |
| (குப்பைமேனி) மருந்து (பல் புழுவிற்கு, வலிக்கு) ... | 26 |
| (குப்பைமேனிச்சாறு) புகை (பீனிசத்திற்கு) ... | 129 |
| (குப்பைமேனியாதி) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) ... | 233 |
| குரட்டைப்பழப் புகை (பீனிசத்திற்கு) ... | 41 |
| (கெந்தகாதிப்) புகை (நீர்ப்பீனிசத்திற்கு) ... | 113 |
| (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்திற்கு மூழ்க) ... | 119 |
| (கையாந்தகரைத்) தைலம் (பீனிசம், மண்டை வலி நீர் விழுதலுக்கு மூழ்க) வேறு ... | 130 |
| (கையாந்தகரைக்) கல்பம் (நரை திரை மாற) ... | 146 |
| (கையாந்தகரைத்) தைலம் (கபாலத்தினவு, மயிர் வெட்டிற்கு மூழ்க) (வேறு) ... | 156 |
| (கையாந்தகரைத்) தைலம் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) ... | 172 |
| (கையாந்தகரை) எண்ணெய் (மண்டை வியாதி களுக்கெல்லாம் மூழ்க) ... | 187 |
| (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்திற்கு மூழ்க) (வேறு) ... | 53 |
| (கையாந்தகரை) எண்ணெய் (பீனிசத்தினால் நீர் விழுதல், தும்மலுக்கு) ... | 47 |
| (கொத்தமல்லி) மருந்து (பல் வியாதிகளுக்குக் கொப்பளிக்க) ... | 74 |
| (கொன்றைப்பட்டை) மருந்து (பல்லசைவு, பல் நோய்களுக்குக் கொப்பளிக்க) ... | 87 |
| (கோடகசாலை) எண்ணெய் (காதில் சீழ் விழுகிற தற்கு) ... | 23 |
| (கோவையிலை) ப்பத்து (பீனிசத்திற்கு) ... | 72 |
| (கோவையிலை) ச்சாறு நஸ்யம் (தலைவலிக்கு) ... | 180 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (சங்கிலை) மருந்து (ஒருத்தலைவலிக்கு உள்ளுக்கு) | ... | 149 |
| (சடைச்சி) எண்ணெய் (காது செவிடு, வலி, வாயு முதலியவை தீர) | ... | 8 |
| (சமுத்திராப்பழ) நசியம் (தலைவலிக்கு) | ... | 203 |
| (சமுத்திராப்பழ) நசியம் (ஒருத்தலைவலிக்கு) (வேறு) | ... | 220 |
| (சமுத்திராப்பழ) நசியம் (ஒருத்தலைவலிக்கு) வேறு | ... | 221 |
| (சமுத்திராப்பழ) நசியம் (ஒருத்தலைவலிக்கு) வேறு | ... | 221 |
| (சமுத்திராப்பழ) நசியம் (ஒருத்தலைவலிக்கு) வேறு | ... | 229 |
| (சம்பை முள்ளி) மருந்து (பல்லசைவிற்கு வாயிலடக்க) | ... | 83 |
| (சந்தனாதிப்) புகை (தலைவலிக்கு) | ... | 235 |
| (சரபேந்திர) கிருதம் (பீனிசம், சிரோவாய்விற்கு) | ... | 117 |
| சாசித் தைலம் (உதிரும் மயிர் வளர) | ... | 145 |
| (சாதீபலாதி) தைலம் (பீனசம் ஒன்பதிற்கும் மூழ்க) | ... | 115 |
| (சாரணை வேர்) நஸ்யம் (பீனசத்திற்கு) | ... | 60 |
| (சாரணைக்கிழங்கு) நஸ்யம் (நாசியில் நீர் விழுதல், அடைப்பு, தினவிற்கு) | ... | 112 |
| (சாரணைக்கிழங்கு) நஸ்யம் (மூக்கடைப்பு, நீர்ப் பாய்ச்சல், மூக்குத்தினவிற்கு நஸ்யம்) | ... | 196 |
| (சித்ரகாதி)த் தைலம் (மயிர் உதிருகிறதற்கு) | ... | 114 |
| (சிறுகீரைப் பத்து) (தலைவலிக்கு) | ... | 204 |
| (சிறுகீரை) நஸ்யம் (பீனஸத்திற்கு) | ... | 72 |
| சிற்றாமுட்டித் தைலம் (மூக்குநீர்ப் பாய்ச்சலுக்கு உள்ளுக்கு) | ... | 110 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| சிற்ருமணக்கெண்ணெய் (காதில் சீழ் விழுதலுக்கும், செவிட்டிற்கும்) | ... | 28 |
| (சீந்திலிலைத் தேய்) மருந்து (மயிர் கறுக்க) | ... | 151 |
| (சீந்தில் கொடி)த் தைலம் (மூக்கடைப்பு, நீர்ப் பாய்ச்சல், மூக்குத் தினவிற்கு) | ... | 196 |
| (சீந்தில்) நெய் (பீனசத்திற்கு) | ... | 65 |
| (சீயக்காய் கொழுந்து) நஸ்யம் (தலைவலிக்கு) | ... | 215 |
| (சீரகாதி) தைலம் (குன்மம் 8, குஷ்டம், வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, உஷ்ணம், சோகை, பாண்டு, தசவாயு, கணம், கபால சூலை, நீர் இவைகளுக்கு) | ... | 160 |
| (சுக்காதி) நஸ்யம் (ஒருத்தலைவலி, இருத்தலைவலிக்கு) | ... | 180 |
| (சுக்காதி) மருந்து (ஒருத்தலைவலிக்கு, உள்ளுக்கு) | ... | 194 |
| (சுக்காதி) உருண்டை (காய்ச்சல், குளிர், தலைவலி, செரியாக்குன்மம், பேய்க்கு) | ... | 218 |
| (சுக்காதி)ச் சூரணம் (பீனிசத்திற்கு) | ... | 39 |
| (சுக்காதி)ச் சூரணம் (தந்தவாயு, தந்தவலிக்கு) வேறு | ... | 97 |
| (சுண்டையிலை) நஸ்யம் (நாசியால் இரத்தம் விழுகிறதற்கு) | ... | 107 |
| (சுண்ணும்பு)த் தொடுமருந்து (உள் நாக்கிற்கு) | ... | 137 |
| (சுண்ணும்பு)த் தொடுமருந்து (உள் நாக்கிற்கு) (வேறு) | ... | 137 |
| (சுண்ணும்பு) மருந்து (உள் நாக்கிற்குத் தடவ) | ... | 138 |
| (செவ்வகத்தியிலை) நஸ்யம் (தலை நோய்க்கு) | ... | 227 |
| (சேராங்கொட்டைத்) தேய்மருந்து (மயிர் உதிர்தல் நிற்க) | ... | 151 |
| (தசமூலாதி) கஷாயம் (சலதோஷத்திற்கு) | ... | 114 |
| தசமூல எண்ணெய் (காது செவிட்டிற்கு) | ... | 11 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| தசமூல தைலம் (காது குத்தல், இரைச்சலிற்கு) | ... | 38 |
| (தாழை விழுது)த் தைலம் (பீனிசத்திற்கு மூழ்க) | ... | 122 |
| திரிபலையெண்ணெய் (தலைப் பொடுதிற்கு) | ... | 188 |
| திரிகுடாதித் தைலம் (காதில் சீழ் வடிகிறது, காதுமந்த நோய், கபாலக் குரிசிலுக்கு) | ... | 14 |
| (திப்பிலியாதி)ப் பொட்டணம் (பீனிசத்திற்கு) | ... | 70 |
| (திப்பிலியாதி) பூச்சு எண்ணெய் (பற்களில், வாயில் ஏற்படும் வலி, வீக்கத்திற்கு) | ... | 76 |
| (தும்பையிலைப்) பிழிமருந்து (தலைநோய்களுக்குக் காதில் குத்த) | ... | 194 |
| (துளசிவேர்) மருந்து (மூக்கிலே இரத்தம் கட்டியாய் விழுகிறதற்கு) | ... | 72 |
| (துளசி) எண்ணெய் (மூக்கினால் சீழ் விழுதல், நீர் விழுதல், தலைத்திமைப்பு, முக ரோகத் திற்கு ஆச்சியம்) | ... | 108 |
| (தேங்காய்ப் பால்) நஸ்யம் (பீனிசம், மூக்கடைப்பு, காதடைப்பிற்கு) | ... | 56 |
| தேங்காய்ப்பாலெண்ணெய் (மண்டையூனத்திற்கு நஸ்யம்) | ... | 210 |
| தேங்காய்ப்பாலெண்ணெய் (பல்லசைவு, பல் கூச்சம், பல் வாய்வுக்குக் கொப்பளிக்க) | ... | 98 |
| (தேற்றும் வேர்) நசியம் (ஒருத்தலைநோய்க்கு) | ... | 229 |
| (நண்டுச்சாறு) மருந்து (காது செவிடிற்கு) | ... | 32 |
| (நஞ்சறப்பாய்ந்தான்) எண்ணெய் (மண்டை வியாதிகளுக்கெல்லாம் மூழ்க) | ... | 162 |
| (நவச்சார) முகரும் மருந்து (தலைவலிக்கு முகர) | ... | 215 |
| (நாகணந்தி)ப் புகை (பீனிசத்திற்கு) | ... | 131 |
| (நாயுருவிச்சாறு) மருந்து (காது சீழுக்கு) | ... | 30 |

| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (நாயுருவிச்சாறு) மருந்து (பல்வலி, பல் புழு, பல்லசைவிற்கு) ... | 101 |
| (நாயுருவி) மருந்து (பல் சொத்தைக்கு) ... | 102 |
| (நாயுருவிச்) சாறு நஸ்யம் (கபாலச் சூலைக்கு) ... | 200 |
| நாயுருவி விதைத் தைலம் (வாதத்தால், பித்தத்தால், உஷ்ணதிக்கத்தாலுண்டான தலை வலிக்கு நஸ்யமிட) ... | 212 |
| (நாயுருவி) எண்ணெய் (ஒருத்தலைவலிக்கு நஸ்யமிட) ... | 223 |
| (நாய்வேளையாதித்) தைலம் (பீனிஸம் 18-க்கும்) ... | 44 |
| நிர்குண்டித் தைலம் (உள் நாக்கு வளர்ச்சி, முகரோகத்திற்கு மூழ்க) ... | 139 |
| (நெரிஞ்சிவேர்) பிழிமருந்து (தலைநோய்க்குக் கண்களிலிட மருந்து) ... | 226 |
| நொச்சியெண்ணெய் (செவியடைப்பிற்கு) ... | 4 |
| நொச்சியெண்ணெய் (காது செவிடிற்கு) (வேறு) ... | 10 |
| நொச்சியெண்ணெய் (காதுவலிக்கு) வேறு ... | 36 |
| நொச்சியெண்ணெய் (உச்சியிடி, தலைக்குத்திற்கு) வேறு ... | 168 |
| பருத்திப் பிஞ்சு எண்ணெய் (காதில் சீழ் விழுகிறதற்கு) ... | 29 |
| பழந்தின்னி வௌவால் தைலம் (மயிர் சுருட்டைக்கும், மயிர் வளரவும்) ... | 149 |
| (பாம்புவஸாதிப்) புகை (ஒருக்காலுந்தீராத ஒருத்தலை நோய்க்கு) ... | 232 |
| (பிரமியிலைத்) தைலம் (தலைப்புற்று, கபால குஷ்டத்திற்கு மூழ்க) ... | 171 |
| பிருங்காமலக தைலம் (நரை, திரை மாற) ... | 153 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (புகையிலைப்) புகை மருந்து (பல் வலிக்கு) | ... | 99 |
| புகையிலைக்கஷாயம் (பல்வலிக்குக் கொப்பளிக்க) | ... | 99 |
| புளியாரைத் தைலம் (காதிரைச்சல் சீழுக்கு) | ... | 21 |
| (புளியிலை) யெண்ணெய் (தலைத்தினவு, பொடுது, சூடு, மீன் சிலம்புபோலுதிர்தல், கடிவிஷம், தலைப்புற்று, மயிருதிர்தல், புழு வெட்டிற்கு மூழ்க) | ... | 163 |
| (பூசிணிச்சாறு) நஸ்யம் | ... | 228 |
| (பெருங்காய) உருண்டை (பல் வீக்கம், பல்லசைவு, பல் புழுவிற்கு) | ... | 102 |
| (பெருங்காய எண்ணெய்) (காதில் சீழ்வடிதல் நிற்க) | ... | 28 |
| (பெருங்காய)ப் புகை (கபாலவாயுவிற்கு) | ... | 190 |
| (பெருங்காய)ப் புகை (ஒருத்தலைவலிக்கு) வேறு | ... | 192 |
| பெருங்குருந்தெண்ணெய் (மண்டை வியாதிக்கு மூழ்க) | ... | 166 |
| (பேய்க்கொம்மட்டி)ப் புகை (சொத்தைப்பல், பல் பூச்சி, பல் வலிக்கு) | ... | 104 |
| (பேய்க்கொம்மட்டி) எண்ணெய் (ஒருத்தலைவலிக்கு மூழ்க) | ... | 178 |
| (பேய்ப்புடல் நெய்) (ஒருத்தலை நோய்க்கு நஸ்யமிட) | ... | 234 |
| பொன்னுங்காணித்தைலம் (பைத்தியத்திற்கு மூழ்க) | ... | 169 |
| (பொன்னுங்காணிச்சாறு) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) | ... | 225 |
| (பொன்னுங்காணிச்சாறு) நஸ்யம் (ஒருத்தலை நோய்க்கு) வேறு | ... | 228 |
| (பொன்னுங்காணி) மிளகு (பித்தத்தால் தலை திரும்புகிறதற்கு, தலை வலிக்கு) | ... | 218 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (மகிழமரப்) பட்டை மருந்து (பல்வலிக்கு) | ... | 86 |
| (மகிழ வித்து) நசியம் (ஒருத்தலைவலிக்கு) | ... | 199 |
| (மஞ்சள்) மருந்து (நேத்திரத்தில் புண்ணிற்கு) | ... | 224 |
| (மஞ்சளாதி)ப் புகை (ஒருத்தலை நோய், மூக்கில் இரத்தம் விழுகிறதற்குப் புகை) | ... | 227 |
| (மரிசாதி) வடகம் (நாவிலெழு வியாதிகட்கு வாயிலடக்க) | ... | 75 |
| மருக்காரைப் புகை (பீனிஸத்திற்கும், துர் நாற்றத்திற்கும்) | ... | 42 |
| (மருக்காரைப்பழ) மருந்து (பல்லசைவு, பல் வலிக்கு அடக்கிக்கொள்ள) | ... | 90 |
| (மருதம்பட்டைக்) கஷாயம் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க) | ... | 93 |
| மருதம் வித்து நஸ்யம் (தலை நோய்க்கு) | ... | 201 |
| மருள் எண்ணெய் (காது மந்தம், வாயுவிற்கு) | ... | 12 |
| (மண்டூராதி) கஷாயம் (பல்லசைவிற்குக் கொப்பளிக்க நீர்) | ... | 100 |
| (மாங்கொட்டை) நஸ்யம் (மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு) | ... | 106 |
| (மாங்கொட்டையாதி) பத்தும், நஸ்யமும் (மூக்கில் இரத்தம் விழுகிறதற்கு) | ... | 107 |
| (மாசிக்கா) யெண்ணெய் (பல்லசைவு, பல் வலிக்கு மேல் பூச) | ... | 94 |
| (மாதுளம்பூ)த் தைலம் (பீனிசம் சகலத்திற்கும்) | ... | 51 |
| (மிளகுத் தைலம்) (பீனிஸம் பதினெட்டிற்கும் நஸ்யமிட) | ... | 39 |
| (மிளகுத் தைலம்) (பீனஸத்திற்கு) | ... | 126 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (மிளகு கோரோசனை)த் தைலம் (கபால வலிக்கு மூழ்க) | ... | 162 |
| (மிளகாதிப் பிழி) மருந்து (ஒருத்தலைவலிக்குக் கர்ணபூரணம்) | ... | 193 |
| முக்கூட்டெண்ணெய் (செவியடைப்பு, தலைநோய் செவியிரைச்சல், மந்தக்காய்ச்சல் முதலானதற்கு) | ... | 2 |
| முக்கூட்டெண்ணெய் (சகல பீனிசங்களுக்கும் மூழ்க) வேறு | ... | 55 |
| முக்கூட்டெண்ணெய் (தலைவலி, கழுத்திசிவு, கண்ணெரிவிற்கு மூழ்க) | ... | 176 |
| (முக்காவேளை) மருந்து (தந்த அசைவிற்கு வாயிலடக்க) | ... | 83 |
| (முத்தெருக்கன் செவிச்சாறு) மருந்து (காதில் புழுவிற்கு) | ... | 33 |
| (முருங்கையிலை) மருந்து (காது செவிடிற்கு) | ... | 9 |
| முள்ளி எண்ணெய் (காதில் நோய்க்கும் சீழ் விழுகிறதற்கும்) | ... | 20 |
| முள்ளி எண்ணெய் (காதின் நோய்க்கும், சீழுக்கும்) | ... | 22 |
| (முள்ளுக் கத்திரி)த் தைலம் (பீனிசத்திற்கு நசியமிட) | ... | 58 |
| மூதண்டத்தைலம் (பீனிசத்திற்கு மூழ்கவும், நஸ்யமிடவும்) | ... | 125 |
| மோதிரம் (ஒருத்தலை நோய், சுளுக்கு, கண்ணேய் பேய், விப்பிருதி, முகமறியா வீக்கத்திற்கும்) | ... | 230 |
| (ரஸாதி)ப் புகை (பீனிசத்திற்கு) | ... | 43 |
| (ரஸாதி)ப் புகை (பீனிசத்திற்கு நஸ்யமாக உபயோகிக்க பத்தியத்துடன்) வேறு | ... | 67 |

| மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| (ரஸாதி)ப் புகை (கபாலச்சூலே, மார்பில் புண், ஈளை, இருமலிற்கு) வேறு ... | 189 |
| (ரஸாதிக்) களிம்பு (உதடு வெடிப்பிற்கும், பல் கிரந்திக்கும் பூச) ... | 141 |
| (வசம்பு, வேளை) நஸ்யம் (தலேவலி, தலேபாரத்திற்கு) ... | 202 |
| வங்கச்செந்தூரம் (சலக்கோர்வைக்கு) ... | 111 |
| வலம்புரிக்காய் நெய் (காது வலிக்கு) ... | 37 |
| வாதமடக்கி முக்கூட்டெண்ணெய் (தலேவலி, கபாலச்சூலே, சிரோரோகத்திற்கு மூழ்க) ... | 237 |
| (வில்வாதி)த் தைலம் (நீர்ப்பீனிசம், வாய்ப்பீனிசம், சிருய்ப்பீனிசம், இரத்தப் பீனிசத்திற்குத்தைலம்) ... | 55 |
| (வில்வக் குடுக்கைப்) பூச்சு மருந்து (உதட்டின் புண், வெடிப்பு, வெள்ளேக்கு) ... | 143 |
| (விளாம்பழச்சாறு) மருந்து (காதுவலிக்கு) ... | 34 |
| (வெங்காய) நஸ்யம் (மூக்கினுல் இரத்தம் வீழ்வதற்கு) ... | 73 |
| (வெங்காயச்சாறு) மருந்து (பல்லில், நாவில் வரும் வியாதிகட்கு) ... | 74 |
| (வெங்காய) எண்ணெய் (ஒருத்தலேவலிக்கு நஸ்யம்) ... | 213 |
| (வெற்றிலேச்சாறு மிளகுப்) புகை (பீனிசத்திற்கு) ... | 68 |
| (வெள்ளாட்டுப் பால்) தைலம் (பீனிசத்தால் வரும் சிரோரோகம், நாஸிகாரோகத்திற்கு நஸ்யமிட) ... | 59 |
| (வெள்ளாட்டுப் பால்) நஸ்யம் (நாசியால் இரத்தம் விழுகிறதற்கு) ... | 71 |
| (வெள்ளெருக்கம்பட்டைக்) கஷாயம் (பல்புழு விழ மருந்து) ... | 100 |

| மருந்துகளின் பெயர் | | பக்கம் |
|---|---|---|
| (வெள்ளெருக்கம்) புகை (தலைவலிக்கெல்லாம்) | ... | 213 |
| (வெள்ளைப்பூண்டுச் சாற்று)த் திரி (சிரோ பாரம், சிரஸ் வலிக்கு) | ... | 191 |
| (வெள்ளைப்பூண்டு நாயுருவி) மருந்து (பற்களில் வலி, பல்லரணைக்கு) | ... | 84 |
| (வெள்ளைப்பூண்டு)த் தைலம் (ஒருத்தலைவலிக்கு நஸ்யமிட) | ... | 216 |
| (வெள்ளைவெங்காயச்சாறு) மருந்து (ஒருத்தலை நோய்க்குக் குத்த மருந்து) | ... | 238 |
| (வேப்பிலைப் பஞ்சாங்க) காயகல்பம் | ... | 147 |
| (வேம்பாதி)க் கஷாயம் (சிரோ வியாதிக்கு) | ... | 214 |
| (வேர்க்கொம்பு) எண்ணெய் (காது வலிக்கு) வேறு | ... | 13 |
| (வேர்க்கொம்பு) எண்ணெய் (காது வலிக்கு) வேறு | ... | 35 |
| வேர்க்கொம்புத் தைலம் (காது செவிடிற்கு) | ... | 6 |
| வேளை எண்ணெய் (காதில் சீழ்விழுதல், குத்தலுக்கு) | ... | 23 |
| (வேளை) மருந்து (பல்வலிக்கு வாயிலடக்க) | ... | 95 |
| (வேளை) மருந்து (தலைவலிக்கு நஸ்யம்) | ... | 201 |
| (வேளை)க் குளிசம் (தலைவலிக்குக் கட்ட) | ... | 204 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| IV | 6 | சிகித்ஸை சய்யா விட்டாலும் | சிகித்ஸை செய்யாவிட்டாலும் |
| V | 4 | கர்ண கோபம் | கர்ணசோபம் |
| VIII | 13 | கண்விருப்பதாலும் | கண்விழிப்பதாலும் |
| XIII | 8 | கருப்பஞசாறு | கருப்பஞ்சாறு |
| XV | 12 | ஆகரோகங்கள் 11 | ஆகரோகங்கள் 10 |
| XXVI | 15 | முகபாவத்தில் | முகபாகத்தில் |
| XXXI | 5 | பிடித்தத்துடனே | பித்தத்துடனே |
| 17 | 23 | அரசலுமாவின் | அரசாலம்மாவின் |
| 18 | 11 | சுன்னவைத்து | செனவைத்து |
| 32 | 7 | நறுக்கியிதை | நசுக்கியிதை |
| 36 | 24 | காரிசாரங்கண்ணிச்சாறு | கரிசாரங்கண்ணிச்சாறு |
| 63 | 13 | புதுகையாகக் | புதுமையாகக் |
| 90 | 15 | வலது | இடது |
| 129 | 13 | காய்ந்ததெருக்கங் | காய்ந்தெருக்கங் |
| 139 | 2 | நிர்குன்டி | நிர்குண்டி |
| 142 | 19 | குன்றிமணிம்பருப்பை | குன்றிமணிப்பருப்பை |
| | 20 | உதட்டிண் புண் | உதட்டின் புண் |
| 149 | 23 | பிடித்தெவண்ணெய் | பிடித்தெண்ணெய் |
| 158 | 24 | எரித்துப் | ச்சிறுக |
| 180 | 7 | விரண்டுபக்கந் | விரண்டுபக்கந் |
| 220 | 22 | பத்தியம் | குறிப்பு |
| 226 | 4 | மலர்ச்சிக்கும் | மர்ச்சிக்கும் |
| 229 | 2 | ருணுணர்ந்தது | ருணுணர்ந்த |
| 235 | 13 | வது வரிக்குப்பின். "சந்தனத்தூள், இலாமிச்சம் வேர் பெருங்காயம்" என்று சேர்த்துக்கொள்ளவும். | |

7 OCT 1974